இலங்கை
எழுத்தாளர்கள்,
ஊடகவியலாளர்கள்
கலைஞர்களின்
விபரத்திரட்டு

தொகுதி -15



# இவர்கள்
# நம்மவர்கள்

## - பாகம் 05 -

- கலாபூஷணம் புன்னியாமீன் -

இலங்கை
எழுத்தாளர்கள்,
ஊடகவியலாளர்கள்
கலைஞர்களின்
விபரத்திரட்டு

தொகுதி -15

# இவர்கள் நம்மவர்கள்

## பாகம் 05

- கலாபூஷணம் புன்னியாமீன் -

வெளியீடு:
**சிந்தனை வட்டம்**
த.பெ.இல: 01, பொல்கொல்லை,
ஸ்ரீலங்கா.
e-mail: pmpuniyameen@yahoo.com
310 / 2009

இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு
தொகுதி - 15 : 'இவர்கள் நம்மவர்கள்' பாகம் 05

ஆசிரியர் : பீ.எம். புன்னியாமீன்
பதிப்பு : 1ம் பதிப்பு - 11.11.2009
வெளியீடு : *சிந்தனை வட்டம்.*
14 உடத்தலவின்னை மடிகே, உடத்தலவின்னை,
ஸ்ரீலங்கா.
அச்சுப்பதிப்பு : சிந்தனை வட்டம் அச்சீட்டுப் பிரிவு
14 உடத்தலவின்னை மடிகே, உடத்தலவின்னை,
ஸ்ரீலங்கா.
கணனிப் பதிப்பு : **எஸ்.எம்.ரமீஸ்தீன்**
அட்டை முகப்பு : கனிவுமதி
விலை : 300/- £ 5.00

**Ilangai Eluththalarkal, Oodahaviyalalarkal, Kalaingarkal Viparaththirattu. Vol - 15: EVARKHAL NAMMAVARKHAL - 05**

Subject : Brief History of Twenty Five Srilankan Writers, Journalists and Artists.

Author : P.M. Puniyameen.
Printers & Publishers : **Cinthanai Vattam**
CV Publishers (Pvt) Ltd,
14, Udatalawinna Madige,
Udatalawinna 20802, Sri Lanka.
Edition : 1st Edition 11.11.2009
Language : Tamil
Type Setting : **S.M. Rameezdeen**
ISBN : 978-955-1779-17-7
Cover : Khanivu Mathy
Price : 300/- £ 5.00

**© P.M. Puniyameen, 2009**

All Rights Reserved. No part of this Documentation may be reproduced or utilised, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the author.

புத்தக அச்சீடு தொடர்பான
வழிகாட்டல்களையும்,
அறிவுரைகளையும் எனக்குத்
தந்து வெளியீட்டுத்
துறையில் சாதனைகளை
நிகழ்த்த என்னுள்
அத்திவாரமிட்ட



அமரர்
**டபிள்யு.எல்.**
**ராஜரட்ணம்**
**அவர்களுக்கும்**


---

இலக்கியத் துறையில்
என்னுடைய நூல்களை
வெளியிட ஓர்
ஆரம்பத்தை
ஏற்படுத்தித் தந்த

**மர்ஹூம்**
**எஸ்.எம்.ஹனிபா**
**அவர்களுக்கும்**



# இந்நூல்
# சமர்ப்பணம்



# பதிப்புரையும், சில மனப்பதிவுகளும்.

*அன்புள்ள வாசகநெஞ்சங்களே!*

சிந்தனைவட்டத்தின் 310ஆவது வெளியீடாக 'இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத் திரட்டு' நூற்றொடரில் 15வது தொகுதியாக "இவர்கள் நம்மவர் கள்" பாகம் 05ஐ உங்கள் கரங்களில் தவழவிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். இந்நேரத்தில் முதற்கண் இறைவனுக் கும் அடுத்ததாக சிந்தனை வட்டத்தின் அபிமான வாசக நெஞ்சங்களான தங்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இச்சந்தர்ப்பத்தில் தனிப்பட்ட ரீதியில் எனது 156ஆவது நூலாக இந்நூல் இருப்பதையிட்டு மகிழ்ச்சியடைந்தாலும்கூட, எனது வெளியீட்டுப் பணியில் எனக்கு அத்திவாரமிட்ட இரண்டு பெருந்தகைகள் இன்று எம்முடன் இல்லையென்பது மனதளவில் பாரிய வேதனையைத் தருகின்றது.

முதற்கண் இந்த இரண்டு பெருந்தகைகளினதும் ஆத்மாக்கள் சாந்தியடைய இறைவனை இருகரமேந்திப் பிரார்த் தித்துக் கொள்கின்றேன்.

இந்த இயந்திர மயமாக்கப்பட்ட நவீன யுகத்தில் எமது சமுதாயத்தில் நன்றி மறப்பதென்பது ஒரு சாதாரண விடயமாக மாறிவிட்டது. தற்போது செய்யும் உதவியைக்கூட பெற்றுக் கொண்டு சில நிமிடங்களிலேயே எம்மவர்களின் சிலர் மறந்து விடுவார்கள். எமது எழுத்தாளர்களிலும் பலர் அப்படித்தான். குறிப்பாக 1990களில் நான் பல புதிய எழுத்தாளர்களுக்கு களமமமைத்துக் கொடுத்து அவர்களின் ஆக்கங்களை புத்தக வடிவில் வெளியிட்டுள்ளேன். இன்று அவர்களில் பலர் பெரிய எழுத்தாளர்கள். இக்கால கட்டத்தில் அவர்களால் வழங்கப்படும் பேட்டிகளில் மற்றும் சில உரையாடல்களில் தனது இலாபம் கருதிய நன்றியறிதல்களைத் தெரிவிக்கின்றார்களே தவிர, தான் கடந்துவந்த ஆரம்பப் பாதையை முற்றுமுழுதாக மறந்தே விடுகின்றார்கள். இவ்விடயத்தில் நான் பெயர் குறிப்பிடுவதாயின் எனது அனுபவத்தை வைத்து பல எழுத்தாளர்களைக் குறிப்பிட முடியும். ஆனால், தவிர்ந்து கொள்கின்றேன். அவர்களின் வளர்ச்சியில் மனநிறைவடைகின்றேன்.

இப்படிப்பட்ட ஆதங்கத்தைக் கொண்ட எனக்கு என் வெளியீட்டுத்துறையில் எனக்கு அத்திவாரமிட்டவர்கள் என்றடிப்ப டையில் அண்மையில் காலமான ஈ.பி.ஐ. கல்வி நிலைய அதிபரும் 'பாரதியம்' சஞ்சிகை ஆசிரியருமான அமரர் டபிள்யு. எல். ராஜரட்ணம் அவர்களையும், கல்ஹின்னை தமிழ்மன்ற இயக்குநரும் நாடறிந்த எழுத்தாளரும், பன்னூலாசிரியருமான மர்ஹூம் அல்ஹாஜ் எஸ்.எம். ஹனிபா அவர்களையும் நினைவு கூராவிடின் நிச்சயமாக நானும் நன்றி மறந்தவனாகவே இருப்பேன்.

அமரர் டபிள்யு.எல். ராஜரட்ண(ம்)

அமரர் டபிள்யு. எல். ராஜரட்ணம் அவர்களை அநேகர் ஒரு கல்வி நிறுவன அதிபராகவும், விஞ்ஞான, கணித ஆசிரியராகவுமே அறிந்திருப்பர். ஆனால், அவரொரு இலக்கிய ஆர்வளர், ஒரு கவிஞர், ஒரு சஞ்சிகை ஆசிரியர் என்பதை அநேகர் தெரிந்திருக்க நியாயமில்லை. ஏனெனில், அவர் கல்வித் துறையில் காட்டிய முழுமையான ஆர்வத்தின் ஒரு குறிப்பிட்ட வீதத்தைக்கூட, இலக்கியத்துறையில் தொடர்ச்சியா கக் காட்டவில்லை.



1980களில் இறுதிப்பகுதியில் J.V.Pயின் நெருக்கடிகள் உச்சகட்டத்திலிருந்த காலத்தில் அவருடனான இணைப்பு எனக்கு ஏற்பட்டது. அதாவது, அக்கால கட்டத்தில் நானுமொரு டியுசன் ஆசிரியர் என்ற வகையில் எனது G.A.Q, B.A வகுப்புகளை கண்டி ரஜபிஹில்ல மாவத்தையில் அமைந்திருந்த YMMA மண்டபத்தில் நடத்திக் கொண்டிருந்தேன். YMMA மண்டபம் அமைந்திருந்த இடம் கண்டியில் சற்று ஒதுக்குப் புறமாக இருந்தது. J.V.Pயின் நெருக்கடிகள் காரணமாக அவ்விடத்தில் வகுப்பைத் தொடர்ந்தும் நடத்துவது உசிதமல்ல என சில பெற்றோர் என்னிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க வகுப்பு இடத்தை மாற்றும் நோக்கில் 1988ஆம் ஆண்டு நான் அப்போதைய E.P.I அதிபராக இருந்த ராஜரட்ணம் அவர்களுடன் தொடர்பு கொண்டு கதைத்தேன். இது தான் எம்மிருவருக்கிடையிலான முதல் சந்திப்பாக இருந்தது. அவர் எவ்வித மறுப்பையும் தெரிவிக்கவில்லை. உடனே எனது மாணவர்களை இலக்கம் 115, டி.எஸ். சேனநாயக்க வீதி புஸ்பதான மண்டபத்தில் அமைந்திருந்த அவரின் வகுப்பில் மாற்றுவதற்கு இடம் தந்தார்.

எனவே நிலமையை அறிந்து உதவி செய்யக்கூடிய அவரின் மனோநிலை என்னை வெகுவாகக் கவர்ந்தது. அந்தக் கவர்ச்சியால் அவருடன் நெருங்கிப் பழகலானேன். பின்பு குடும்ப நண்பர்களானோம். ஆரம்பத்தில் எனது க.பொ.த. உயர்தர அரசியல் வகுப்புகளை மாத்திரம் E.P.I க்கு மாற்றி பின்பு 1990ஆம் ஆண்டில் எனது G.A.Q, B.A வகுப்புகளையும் E.P.I க்கு மாற்றினேன். தற்போது மத்திய மாகாணத்தில் G.A.Q, B.A தனியார் வகுப்புகளில் தமிழ்மொழி மூலமாக முன்னணியில் EPI இருக்கின்றது. இந்த வகுப்புகளின் ஆரம்பம் இவ்வாறு எதேச்சயாக இடம்பெற்றதே.

கண்டியில் நான் வகுப்புக்களை நடத்திக் கொண்டிருந்த நேரத்தில் கொழும்பு கொட்டாஞ்சேனை மற்றும் பம்பலபிட்டிய

E.P.I. கிளைகளிலும் வகுப்புக்களை நடத்துமாறு அவர் என்னிடம் கேட்டுக் கொண்டார். நானும் அதனையேற்று கொழும்பிலும் வகுப்புக்களை நடத்த ஆரம்பித்தேன். அக்கால கட்டங்களில் E.P.I. கல்வி நிறுவனம் ஒரு பிரபல்ய நிலையமாக கொழும்பிலும் விளங்கியது. எனது 'டியுசன்' வாழ்க்கையிலும் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது.

இக்கால கட்டங்களிலே மாணவர்களை நோக்காகக் கொண்டு நான் புத்தகங்கள் எழுத ஆரம்பித்தேன். அச்சந்தர்ப்பத்தில் கணனிப்படுத்தப்பட்டப் பிரதிகளை ஓப்செட் அச்சின் மூலம் அச்சிடும் பணி ஓரளவு அறிமுகமாகிக் கொண்டிருந்தது. கொழும்பில் வகுப்புகளை செய்துவிட்டு ஞாயிறு இரவுகளில் அங்கு நான் தங்கியிருப்பேன். ராஜரட்ணம் அவர்கள் ஞாயிறு கண்டி வகுப்புக்களை முடித்துவிட்டு ஞாயிறு இரவு கொழும்புக்கு வந்துவிடுவார். இச்சந்தர்ப்பத்தில் நாமிருவரும் ஒரே அறையில் தங்கியிருப்போம். இந்த நேரத்தில் தான் பாடப் புத்தகங்கள் எழுத வேண்டும் என்ற ஆர்வத்தை என் மனதில் அவர் வெகுவாக விதைத்தார். அது மாத்திரமல்ல, மாணவர்களுக்கு இலகுவாக எவ்வாறு போதனை செய்யலாம். போதனை செய்யும் விடயங்களை எவ்வாறு எளிய நடையில் மாணவர்களுக்கு அச்சுருவில் வழங்கலாம் போன்ற பல்வேறு உபதேசங்களைத் தந்ததுடன், அச்சீட்டு கலையில் தொடர்புபட்ட பல நண்பர்களுடன் தொடர்புகளையும் ஏற்படுத்தித் தந்தார். இவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்ட நண்பர்களில் அமுதாஸ், ஜீவா போன்றவர்கள் அச்சீட்டுத்துறையில் எனக்கு பல உதவிகளை செய்தனர். அதேநேரத்தில் ராஜரட்ணம் அவர்களும் அச்சீட்டுக்கான நிதியுதவிகள் தேவைப்பட்ட நேரத்தில் எனக்கு எவ்வித அச்சமுமின்றி தந்துதவினார்.

இது மாத்திரமல்லாமல், அச்சிடப்படக்கூடிய புத்தகங்களை விற்பனை செய்யக்கூடிய ஏற்பாடுகளையும் தானே முன் நின்று செய்து தந்தார். பிற்காலத்தில் எனது புத்தகங்களை விநியோகிப்பதில் 'பூபாலசிங்க புத்தகநிலையம்' விசாலமான ஆதரவினை நல்கியது. பூபால புத்தக நிலையத்துடனும் அதன் அதிபர் ஸ்ரீகரன்சிங் அவர்களுடனும் எனக்கு உறவை ஏற்படுத்

தித் தந்ததில் ராஜரட்ணம் அவர்களின் பங்களிப்பு முக்கிய மானது. இவ்வாறு அச்சீட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நேரத்தில் புத்தகத்தை முழுமையாக ஒரு அச்சகத்துக்குக் கொடுக்காமல் கணனிப்படுத்தலை ஒரு இடத்தி லும், அச்சிடலை ஒரு இடத்திலும் மேற்கொண்டு பின்பு அவற்றை நாமே பைண்டிங் செய்வோம். கொழும்பில் கொட்டாஞ் சேனை E.P.I. கட்டிடத்திலே இதற்கான ஏற்பாடுகளை செய்து தந்தார். E.P.I.யில் அக்காலத்தில் பணியாற்றிய மூர்த்தி என்பவர் எனக்குப் பெரிதும் ஒத்துழைப்பாக இருந்தார். இவ்வாறு கட்டம் கட்டமாக வெவ்வேறு இடங்களில் அச்சீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டமையினாலும் நாமே புத்தகங்களை கட்டியதனா லும் அடிப்படை செலவு எனக்கு வெகுவாகக் குறைந்தது. இந்த நுணுக்கங்கள் அனைத்தையும் எனக்குக் கற்றுத் தந்து வழிநடத் தியவர் ராஜரட்ணம் அவர்களே. அன்று அவரால் காட்டப்பட்ட அந்த இலகு வழிகளின் மூலமாகத் தான் இன்று வரை நான் புத்தகங்களை எழுதிக் கொண்டும், வெளியிட்டுக் கொண்டும் இருக்கின்றேன்.

இவ்விடத்தில் இன்னுமொரு உண்மையை நான் மனம் திறந்து கூறவே வேண்டும். எனது இளம் பராயத்திலும் சரி, நான் திருமணம் முடித்த காலகட்டத்திலும் சரி, பொருளாதார ரீதியாக மிகவும் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு உட்பட்டிருந் தேன். எனது பொருளாதார சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ள எனக்கு மூலமாக விளங்கியது அக்காலகட்டத்தில் டியுசன் வகுப்புக்களே. ராஜரட்ணம் அவர்களுடன் இணைந்ததன் பின்பு பொருளாதார அடிப்படையில் என்னால் முன்னேறக்கூடிய வழி வகைகள் உருவாகின. இயற்கையாக எனது பேச்சு சற்று திக்கலான பேச்சாகும். நான் சாதாரணமாக கதைக்கும்போது வேகமாகவே கதைப்பேன். இதனால் சிலநேரங்களில் நான் என்ன கதைக்கின்றேன் என்று என்னை சார்ந்தவர்களுக்கே விளங்குவதில்லை. இது இயற்கையான என்னுடைய ஒரு பலவீனம். இந்த நிலை வகுப்புகளை நடத்தும்போது எனக்கு பாதிப்பை ஏற்படுத்தியது. இதை உணர்ந்து கொண்ட ராஜரட்ணம் எனது வகுப்புக்களில் இருந்து என் விரிவுரைகளை நன்கு அவதானித்து நான் விடும் தவறுகளை எழுதி வைத்து பின்பு என்னுடன்

கலந்துரையாடுவார். விரிவுரையின்போது நான் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், என் பேச்சின் வேகத்தை நான் எவ்வாறு குறைத்துக் கொள்ள வேண்டும் என்று எனக்கு ஆலோசனை களை வழங்குவார்.

சில சந்தர்ப்பங்களில் அவரால் வழங்கப்பட்ட ஆலோச னைகளுக்கமைய அவர் முன் நான் விரிவுரைகளை தனிப்பட்ட முறையில் நடத்திக் காட்டியுமுள்ளேன். அச்சந்தர்ப்பத்தில் நான் விடும் தவறுகளை மீண்டும் எடுத்துக் காட்டுவார். ராஜரட்ணம் அவர்களின் அந்த நேரடி ஆலோசனையின் காரணமாகவே பிற்காலத்தில் மாணவர் மத்தியில் என்னால் சிறந்த முறையில் விரிவுரைகளை வழங்க முடிந்தது. இதன் காரணமாக நூற்றுக்க ணக்கான மாணவர்கள் எனது விரிவுரை வகுப்புகளிலும், கருத்த ரங்குகளிலும் பங்கேற்றதனால் படிப்படியாக பொருளாதார ரீதியில் என்னால் முன்னேறக் கூடிய வாய்ப்பு உருவானது.

நான் வகுப்புக்களை நடத்த ஆரம்பித்த காலகட்டத்தில் நான் வசித்துவந்த வீடு பல உடைவுகளைக் கொண்டிருந்தது. மழை காலங்களில் என்ன நடக்குமோ என்ற அச்சத்துடனே நாங்கள் வீட்டில் வாழ்ந்து வந்தோம். சுவர்களில் மூங்கில்களி னால் முக்குகளை வைத்து இருந்த சந்தர்ப்பங்களும் இருந்தன. ஒரு முறை எமது வீட்டுக்கு வந்தபோது இவற்றைக் கண்ட ராஜரட்ணம் நான் வீட்டைக் கட்ட வேண்டும் என்பதில் அதிக ஆர்வத்தை என்னுள் ஏற்படுத்தினார். (என் வீடு கட்டல் பணிக்கு எனது கிராமத்தைச் சேர்ந்த சகோதரர் N.P. நஜீமொஹிதீன் பல வழிகளிலும் உபதேசங்களைக் கூறி என்னிடம் ஏச்சும் பட்டு அந்த முயற்சி கைகூட ஒத்துழைத்ததை இவ்விடத்தில் நான் நினைவுகூர்ந்தே ஆக வேண்டும்.) எவ்வாறோ E.P.I. வகுப்பின் மூலமாகக் கிடைத்த வருமானத்தை வைத்தே எவ்வித வங்கிக் கடன்களோ, கடன்களோ இன்றி வீட்டைக் கட்டி முடித்தேன். இதற்கு எனக்கு பக்கபலமாக இருந்தவர்களுள் ராஜரட்ணம் அவர்களும் ஒருவரென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆக, என் வாழ்க்கையில் பொருளாதாரத்துறையில் பாரிய மாற்றங்கள் ஏற்படுவதற்கு உளப்பூர்வமாக ஒத்து

ழைத்த ராஜரட்ணம் அவர்களுக்கு நான் என்றும் நன்றிக் கடன்கூறக் கடமைப்பட்டுள்ளேன். ஒரு மனிதனிடத்தில் சில தவறுகள் இருக்கலாம். தவறுகளை மாத்திரம் நாம் வைத்துக் கொண்டு ஒரு மனிதனை எடைபோடக்கூடாது. ஏனெனில், அந்த மனிதனின் பல நல்ல பக்கங்களும் இருக்கவே செய்யும். நான் ராஜரட்ணத்தின் நல்ல பக்கங்களை மாத்திரமே நோக்கு கின்றேன். இதன் காரணத்தினாலேயே அவர் என்றும் என்னுள் உயர்ந்தவராக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

1958.08.07ஆம் திகதி பிறந்த ராஜரட்ணம் பிறப்பால் ஒரு பௌத்தர். இவர் தந்தை பெயர் வீரகொடி லியனகே. ஆனால், தமிழ் சூழலில் வாழ்ந்ததினால் தனது ஆரம்பக் கல்வியை கண்டி இந்து தமிழ் வித்தியாலயத்திலும், பின்பு கண்டி சில்வஸ்டர் கல்லூரியிலும் பெற்றார். 1980ஆம் ஆண்டில் 'குமுதினி'யை தனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்ட இவருக்கு திலகா, சுபாஷினி, தமயந்தி, தினேஷ் ஆகிய நான்கு அன்புச் செல்வங்கள் உளர். சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்த ராஜரட்ணம் 2008 ஒக்டோபர் மாதம் 08ஆம் திகதி எம்மைவிட்டும் பிரிந்தார்.

ராஜரட்ணம் என்னைப் போல பலர் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைவதற்கு காரணகர்த்தாவாக இருந் துள்ளார். நிச்சயமாக அவர் செய்த நற்காரியங்கள் என்றும் நினைவுகூரப்படும்.

## அல்ஹாஜ் எஸ்.எம். ஹனிபா

இலங்கையில் சிரேஷ்ட எழுத்தாளரும், ஊடகவியலா ளரும், வெளியீட்டாளரும், பன்னூலாசிரியருமான சட்டத்தரணி அல்ஹாஜ் எஸ்.எம். ஹனிபா அவர்கள் கடந்த 2009.05.29ஆம் திகதி இறையடி எய்து விட்டார். இலங்கையில் முன்னணி தமிழ் நூல் பதிப்பகங்களில் ஒன்றான கல்ஹின்னை தமிழ் மன்றத்தின் ஸ்தாபகரும், உரிமையாளருமான இவர், 100க்கும் அதிகமான நூல்களை வெளியிட்டுள்ளார்.

அன்னாரின் மறைவுச் செய்தி மூன்று தினங்கள் கடந்தே எனக்குத் தெரியவந்தது. தலைநகரிலுள்ள எமது எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், நண்பர்கள் சிறிய சிறிய விடயங்களுக்குக்கூட கடிதம் என்றும், மின்னஞ்சல் என்றும், SMS என்றும் தொடர்புகொண்டாலும்கூட, இது போன்ற விடயங்களை அறிவிக்காமை வேதனைக்குரிய ஒரு விடயமே.

இவ்விடத்தில் ஒரு சிறிய விடயத்தை மனந்திறந்து குறிப்பிடல் வேண்டும். ஒரு எழுத்தாளன் என்ற அடிப்படையில் இன்று நான் 150 புத்தகங்களை எழுதி வெளியிட்டாலும்கூட எனது இலக்கிய நூல்கள் வெளிவருவதில் ஏதோ ஒரு வகையில் எனக்கு உத்வேகத்தைத் தந்தவர் அல்ஹாஜ் எஸ்.எம். ஹனிபா அவர்களே. 1979ஆம் ஆண்டில் என் முதல் சிறுகதைத் தொகுதி "தேவைகள்" எனும் தலைப்பில் வெளிவந்த பின்பு சுமார் ஏழாண்டுகள் எந்தவொரு புத்தகத்தையும் நான் வெளியிடவில்லை. அதற்குரிய வசதிகளும் என்னிடம் இருக்கவில்லை.

இந்நிலையில் அப்போதைய மாளிகாவத்தை வை.எம்.எம்.ஏ.யின் செயலாளர் நாயகம் அஸ்ரப் ஹாசிம் அவர்களினால் எஸ்.எம். ஹனிபாவிடம் நான் அறிமுகம் செய்து வைக்கப்பட்டேன். எமது முதல் அறிமுகத்துடனே எனது இரண்டாவது நூலான "நிழலின் அருமை"யை கல்ஹின்னை தமிழ்மன்றத்தின் 28ஆவது வெளியீடாக வெளியிட அல்ஹாஜ் எஸ்.எம். ஹனிபா ஒப்புக்கொண்டார். 1986 மார்ச்சில் அப்புத்தகம் வெளிவந்தது. அவரின் சுறுசுறுப்பும், பழகும் சுபாவமும், விருந்தோம்பும் பண்பும், அவரின் தமிழ் இலக்கியப் பணிகளும் என்னை வெகுவாகக் கவர்ந்ததினால் அவரைப் பற்றிய ஒரு ஆய்வினை மேற்கொள்ள நான் முடிவெடுத்தேன். இதன் விளைவாக 1987ஆம் ஆண்டு "இலக்கிய உலா", "இலக்கிய விருந்து" ஆகிய இரண்டு நூல்களை நான் எழுதினேன். "இலக்கிய உலா" அல்ஹாஜ் எஸ்.எம். ஹனிபா அவர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளை உள்ளடக்கியது. இந்நூலின் முதலாவது பதிப்பு 1987ஆம் ஆண்டு மே மாதம் வெளிவந்தது.

சென்னை மில்லத் பப்ளிகேஷன்ஸ் இந்நூலை வெளியிட்டது. "இலக்கிய விருந்து" அதுகாலம் வரை தமிழ்மன்றம் வெளியிட்ட 30 நூல்களைப் பற்றிய ஆய்வு நூலாக அமைந்தது. இந்நூல் கல்ஹின்னை தமிழ்மன்றத்தின் 30வது வெளியீடாக 1977 ஏப்ரல் மாதம் வெளிவந்தது. இதே காலகட்டத்தில் இந்தியா அல்பிாஸி பப்ளிசர்ஸ் வெளியீடாக எனது "அடிவானத்து ஒளிர்வுகள்" நாவல் வெளிவரவும் பூரண ஒத்துழைப்பினை அல்ஹாஜ் எஸ்.எம். ஹனிபா அவர்களே வழங்கினார்.

இவ்வாறாக இரண்டாண்டுகளுக்குள் என்னுடைய 04 புத்தகங்கள் அச்சாவதற்கு ஒத்துழைத்ததுடன், அச்சீட்டுத்துறை யிலும், வெளியீட்டுத்துறையிலும் பல்வேறுபட்ட நுணுக்கங்களை எனக்கு வழங்கினார். அவரால் வழங்கப்பட்ட ஆரம்ப ஒத்துழைப்பு ஆலோசனைகளுமே என்னை இந்த நிலைக்கு உயர்த்தியுள்ளது. (எஸ்.எம்.ஹனிபா அவர்கள் பற்றிய விரிவான குறிப்புகள் இதே புத்தகத்தில் பின்னால் இணைக்கப்பட்டுள்ளன.)

எனவே,

இப்புத்தகத்தை மேற்குறிப்பிட்ட இரண்டு பெருந்தகை களுக்கும் சமர்ப்பிப்பதில் உளநிறைவடைகின்றேன்.

அன்புடன்

*கலாபூஷணம் பீ.எம். புன்னியாமீன்*
*(முகாமைத்துவப் பணிப்பாளர்*
*- சிந்தனைவட்டம்)*

**11.11.2009**

இப்புத்தகத்தில் இடம்பெற்றுள்ள
அனைத்துக் கட்டுரைகளும்

ஞாயிறு
தினக்குரல்
THINAKKURAL
An Independent Weekly Voice in Tamil

இல் பிரசுரமானவையாகும்.


**இலங்கை எழுத்தாளர்கள்,**
**ஊடகவியலாளர்கள்,**
**கலைஞர்களின் விபரத்திரட்டு**
**தொகுதி- 01 முதல்**
**தொகுதி- 14 வரை**
**இணையத்தளத்தில் படித்திட.**

www.noolaham.org

இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு

# இவர்கள் நம்மவர்கள்

தொடர் பதிவில்
இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட
இலங்கையில் வாழக்கூடியவர்களும்,
புலம்பெயர்ந்து வாழ்பவர்களுமான
எழுத்தாளர்கள்,
ஊடகவியலாளர்கள்,
கலைஞர்கள்
தங்கள் விபரங்கள் இடம்பெற விரும்பினால்
தயவுசெய்து பின்வரும் முகவரியுடன்
தொடர்புகொண்டு விபரத்திரட்டு பதிவாக்கப்
படிவங்களைப் பெற்றுக் கொள்ளவும்.

**P.M. PUNIYAMEEN**
**NO: 14, UDATALAWINNA MADIGE**
**UDATALAWINNA.20802**
**SRILANKA**
**Tel: 0094-812493746 /0094-812493892**

**Email;**
**pmpuniyameen@yahoo.com**

# ஏற்கெனவே பதிவானோர்:

## இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு- தொகுதி 1

முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் விபரம் : பாகம் 1

| | |
|---|---|
| பதிவு 01 ஏ.யூ.எம்.ஏ. கரீம் | பதிவு 02 எஸ்.எம்.ஏ. ஹஸன் |
| பதிவு 03 அன்பு முகையதீன் | பதிவு 04 ஐ.ஏ. றஸாக் |
| பதிவு 05 முபீதா உஸ்மான் | பதிவு 06 எச். ஸலாஹுதீன் |
| பதிவு 07 எம்.எச்.எம். அஷ்ரப் | பதிவு 08 எம்.எச்.எம். புஹாரி |
| பதிவு 09 அப்துல் கஹ்ஹார் | பதிவு 10 எஸ். முத்து மீரான் |
| பதிவு 11 எச்.ஏ. ஸகூர் | பதிவு 12 ஏ.எஸ். இப்றாஹீம் |
| பதிவு 13 எம்.ஐ.எம். தாஹிர் | பதிவு 14 எம்.ஜே.எம். கமால் |
| பதிவு 15 ஏ.எச்.எம். யூசுப் | பதிவு 16 நூருல் அயின் |
| பதிவு 17 எம்.ஸீ.எம். இக்பால் | பதிவு 18 ஆ. அலாவுதீன் |
| பதிவு 19 எம்.இஸட்.ஏ முனவ்வர் | பதிவு 20 சித்தி ஸர்தாபி |
| பதிவு 21 ஏ.எம்.எம். அலி | பதிவு 22 எம்.எச்.எம். ஹலீம்தீன் |
| பதிவு 23 என்.எஸ்.ஏ. கையூம் | பதிவு 24 எஸ்.எம். ஜவுபர் |
| பதிவு 25 ஏ.எல்.எம். சத்தார் | பதிவு 26 ஜே.எம். ஹாபீஸ் |
| பதிவு 27 ஏ.எச்.எம். ஜாபிர் | பதிவு 28 ஏ.எம். நஜிமுதீன் |
| பதிவு 29 எஸ்.எல்.ஏ. லத்தீப் | பதிவு 30 எஸ்.ஐ.எம்.ஏ. ஜப்பார் |
| பதிவு 31 மொஹம்மட் வைஸ் | பதிவு 32 எம்.எம். ஸப்வான் |
| பதிவு 33 ஹிதாயா ரிஸ்வி | பதிவு 34 என்.எம். அமீன் |
| பதிவு 35 மஸீதா புன்னியாமீன் | பதிவு 36 கே.எம்.எம். இக்பால் |

## இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு - தொகுதி 2

முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் விபரம் : பாகம் 2

| | |
|---|---|
| பதிவு 37 எம்.பீ.எம். அஸ்ஹர் | பதிவு 38 ஜிப்ரி யூனுஸ் |
| பதிவு 39 எம்.எஸ்.எம். அக்ரம் | பதிவு 40 ஏ.எச்.எம். மஜீத் |
| பதிவு 41 ஏ.ஏ. றஹ்மான் | பதிவு 42 எஸ். கலீல் |
| பதிவு 43 எம்.எம். ராஸிக் | பதிவு 44 கே. சுலைமா லெவ்வை |
| பதிவு 45 யூ.எல்.எம். ஹுவைலித் | பதிவு 46 ஏ.ஆர்.ஏ. பரீல் |
| பதிவு 47 சுலைமா சமி | பதிவு 48 ரஸீனா புஹார் |
| பதிவு 49 ஐ.எம். மாரூப் | பதிவு 50 செய்யித் முஹம்மத் |

பதிவு 51 ஏ.எஸ்.எம்.ரம்ஜான் பதிவு 52 அப்துல் லத்தீப்
பதிவு 53 எம்.எம்.ஜமால்தீன் பதிவு 54 ஏ. ஜபார்
பதிவு 55 முஹம்மது பௌஸ் பதிவு 56 சிபார்தீன் மரிக்கார்
பதிவு 57 மஷூரா சுஹூறுத்தீன் பதிவு 58 யூ. ஸெயின்
பதிவு 59 ஏ.எல்.எம். அஸ்வர் பதிவு 60 எம்.எம்.எஸ். முஹம்மத்
பதிவு 61 முஹம்மட் கலீல் பதிவு 62 எஸ்.எல்.எம். அபூபக்கர்
பதிவு 63 எம்.யூ. முஹம்மத் பஷீர் பதிவு 64 முஹம்மத் இஸ்மாஈல்
பதிவு 65 முஹம்மட் பைரூஸ் பதிவு 66 எம்.ஐ.எம். முஸ்தபா
பதிவு 67 றபீக் பிர்தௌஸ் பதிவு 68 புர்கான். பீ. இப்திகார்
பதிவு 69 எம்.எஸ்.எஸ்.ஹமீத் பதிவு 70 அப்துல் மலீக்
பதிவு 71 அப்துல் ஸலாம் பதிவு 72 எம்.எச்.எம். கரீம்
பதிவு 73 எம்.எஸ்.றம்ஸீன் பதிவு 74 அப்துல் அசன்
பதிவு 75 ஏ.எஸ்.எம். நவாஸ் பதிவு 76 முஹம்மத் ஹஸனி
பதிவு 77 எஸ்.எஸ். பரீட்

## இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு - தொகுதி 3

முஸ்லிம் எழுத்தாளர்கள்,ஊடகவியலாளர்கள்,கலைஞர்கள் விபரம்

: பாகம் 3

பதிவு 78 கல்முனை முபாறக் பதிவு 79 ஏ.எம். நஸீம்டீன்
பதிவு 80 மாத்தளைக் கமால் பதிவு 81 நூறுல் ஹக்
பதிவு 82 ஜமால்தீன் பதிவு 83 முஹம்மட் றபீக்
பதிவு 84 முஹம்மத் சுகைப் பதிவு 85 மு.மூ. விஜிலி
பதிவு 86 யூ.எல் ஆதம்பாவா பதிவு 87 ஏ.எம்.எம். ஸியாது
பதிவு 88 எம். நவாஸ் சௌபி பதிவு 89 முகுசீன் றயீசுத்தீன்
பதிவு 90 எம்.ஐ.எம். அன்சார் பதிவு 91 மஸ்ஹூது லெவ்வை
பதிவு 92 எம். அனஸ் பதிவு 93 எம்.கே.எம்.முனாஸ்
பதிவு 94 பாத்திமா பீபி பதிவு 95 ஸர்மிளா ஸெய்யித்
பதிவு 96 பாத்திமா சுபியானி பதிவு 97 மொஹம்மட் சியாஜ்
பதிவு 98 நிஸாரா பாரூக் பதிவு 99 பௌசுல் றஹீம்
பதிவு 100 ஏ.எல்.எம். புஹாரி பதிவு 101 ஏ.எப்.எம். றியாட்
பதிவு 102 யு.எல்.எம். அஸ்மின் பதிவு 103 அப்துஸ்ஸலாம் அஸ்லம்
பதிவு 104 எம்.ஏ. அமீனுல்லா பதிவு 105 நயிமுத்தீன்
பதிவு 106 எச்.எல். முஹம்மத் பதிவு 107 ஹூஸைன்
பதிவு 108 ஹய்ருன்னிஸா புஹாரி பதிவு 109 எஸ்.எல். லரீப்
பதிவு 110 அலி உதுமாலெவ்வை பதிவு 111 எம்.ஐ.எம். மஷ்ஹூர்
பதிவு 112 கிண்ணியா நஸ்புல்லாஹ்பதிவு 113 திருமதி பரீதாசாகுல் ஹமீட்
பதிவு 114 அரபா உம்மா

# இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு - தொகுதி 4

புலம்பெயர் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் விபரம்

: பாகம் 1

பதிவு 115 என். செல்வராஜா (ஐக்கிய இராச்சியம்)
பதிவு 116 நவஜோதி ஜோகரட்ணம் (ஐக்கிய இராச்சியம்)
பதிவு 117 த. ஜெயபாலன் (ஐக்கிய இராச்சியம்)
பதிவு 118 பத்மாஷணி மாணிக்கரட்ணம் (ஜெர்மனி)
பதிவு 119 வேதா. இலங்காதிலகம் (டென்மார்க்)
பதிவு 120 நகுலா சிவநாதன் (ஜெர்மனி)
பதிவு 121 நா.தெய்வேந்திரம் (வண்ணை தெய்வம்) (பிரான்ஸ்)
பதிவு 122 வை. சிவராஜா (ஜெர்மனி)
பதிவு 123 சுந்தரம்பாள் பாலச்சந்திரன் (ஜெர்மனி)
பதிவு 124 சு. சண்முகம் (சண்) (டென்மார்க்)
பதிவு 125 கீத்தா பரமானந்தன் (ஜெர்மனி)
பதிவு 126 அடைக்கலமுத்து அமுதசாகரன் (இளவாலை அமுது) (ஐ. இ)
பதிவு 127 இராசகருணா (ஈழமுருகதாசன்) (ஜெர்மனி)
பதிவு 128 கே.கே. அருந்தவராஜா (ஜெர்மனி)
பதிவு 129 கொண்ஸ்டன்ரைன் (ஐக்கிய இராச்சியம்)
பதிவு 130 அம்பலவன் புவனேந்திரன் (ஜெர்மனி)
பதிவு 131 பொ. சிறிஜீவகன் (ஜெர்மனி)
பதிவு 132 கலைவாணி ஏகானந்தராஜா (ஜெர்மனி)
பதிவு 133 வை. யோகேஸ்வரன் (ஜெர்மனி)
பதிவு 134 அன்ரனி வரதராசன் (ஜெர்மனி)
பதிவு 135 பொ. தியாகராசா (வேலணையூர் பொன்னண்ணா) (டென்மார்க்)
பதிவு 136 பொ. கருணாகரமூர்த்தி (ஜெர்மனி)
பதிவு 137 ஜெயாநடேசன் (ஜெர்மனி)
பதிவு 138 இ.மகேந்திரன் (முல்லைஅமுதன்) (ஐக்கிய இராச்சியம்)
பதிவு 139 றமேஷ் வேதநாயகம் (ஐக்கிய இராச்சியம்)

# இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு- தொகுதி 5

முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் விபரம்

: பாகம் 4

பதிவு 140 அஷ்ரப் - ஏ - ஸமத்
பதிவு 141 எம்.எம்.எம்.மஹ்றூப்
பதிவு 142 அன்பு ஜவஹர்ஷா
பதிவு 143 ஏ.எம். இஸ்ஸடீன்
பதிவு 144 எஸ்.எம். அறூஸ்
பதிவு 145 எம்.ஆர்.கே. மவ்பியா
பதிவு 146 எம்.யூ.எம். ஜிப்ரி
பதிவு 147 ஏ.எல்.எம். ஸுமிரி

பதிவு 148 எம்.எச்.எம். ஹாரித் பதிவு 149 அபூதாலிப்
பதிவு 150 த. மீராலெவ்வை பதிவு 151 எம்.எம்.எம். கலீல்
பதிவு 152 முஹம்மது பாறூக் பதிவு 153 யூ.எல். முஸம்மில்
பதிவு 154 பாயிஸா கைஸ் பதிவு 155 மொஹிதீன் அடுமை
பதிவு 156 எம்.பீ. ஹுசைன் பாருக் பதிவு 157 ஏ.எம்.எம். அத்தாஸ்

## இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு- தொகுதி 6

முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் விபரம் : பாகம் 5

பதிவு 158 எம்.எம். சாலிஹ் பதிவு 159 என்.எம். ஹனிபா
பதிவு 160 ஏ.எம். றசீது பதிவு 161 ஏ.எல்.எம். பளீல்
பதிவு 162 சுலைமான் புலவர் பதிவு 163 ஏ.எம். கனி
பதிவு 164 ஆ.மு. ஷரிபுத்தீன் பதிவு 165 எம்.ஏ. முஹம்மது
பதிவு 166 எம்.ஸி.எம். ஸுபைர் பதிவு 167 எம்.எச்.எம். ஷம்ஸ்
பதிவு 168 பீ.எம்.ஏ. சலாஹுத்தீன் பதிவு 169 வை. அஹ்மத்
பதிவு 170 ஏ.ஸீ. பீர்மொஹம்மட்

## இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு- தொகுதி 7

முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் விபரம் : பாகம் 6

பதிவு 171 நயீமா சித்தீக் பதிவு 172 ஏ. சித்தி ஜஹானறா
பதிவு 173 ஸாஹிரா நாஸிர் பதிவு 174 முகம்மது முர்சித்
பதிவு 175 எம். எப். ரிம்ஸா பதிவு 176 எம். எல். லாபீர்
பதிவு 177 ஹிபிஷி தௌபீக் பதிவு 178 என். எல். ரஷீன்
பதிவு 179 தமீம் அன்சார் பதிவு 180 ரஷீத் எம். றாஸிக்
பதிவு 181 ஏ.சி. றாஹில் பதிவு 182 செய்ன் தம்பி ஸியாம்
பதிவு 183. எஸ்.எம். சப்ரி பதிவு 184 எம். ஏ. அமீர் ரிழ்வான்
பதிவு 185 ஏ.ஆர்.ஏ. அஸீஸ் பதிவு 186 வை.எல்.எம். றிஸ்வி
பதிவு 187 எம்.எச். முஹம்மட் பதிவு 188 மொஹம்மட் அக்ரம்
பதிவு 189 மு.மீ. அமீர்அலி பதிவு 190 எஸ். நஜிமுதீன்
பதிவு 191 என்.பி. ஜுனைத் பதிவு 192 மல்ஹர்தீன்
பதிவு 193 றஹ்மான் ஏ.ஜெமீல் பதிவு 194 எம்.எல். இஸ்ஹாக்
பதிவு 195 எஸ்.எம்.எம்.நஸிறுதீன் பதிவு 196 றிஸ்வியூ முஹம்மத் நபீல்
பதிவு 197 எம்.எஸ்.எம்.ஸல்ஸபீல் பதிவு 198 முகமட் இமாம் ஹன்பல்
பதிவு 199 அ.கா.மு.றிஸ்வின் பதிவு 200 எம் .எம். கலீல்

## இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு- தொகுதி 8

முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் விபரம்

: பாகம் 7

பதிவு 201 என்.எம். நூர்தீன்
பதிவு 202 ஏ.எல். முகம்மட் முக்தார்
பதிவு 203 ஆரிப் அஜ்மீர்
பதிவு 204 ஏ. புஹாது
பதிவு 205 ஏ.எல். ஜுனைதீன்
பதிவு 206 எம்.பி.எம். காஸீம்
பதிவு 207 அப்துல் அஹத்
பதிவு 208 எம்.யூ.எம். சனூன்
பதிவு 209 மொஹமட் ரமலி
பதிவு 210 எச்.எம். ஷரீப்
பதிவு 211 அப்துல் ஸலாம்
பதிவு 212 மருதூர் அலிக்கான்
பதிவு 213 எம்.என். அப்துல் அஸீஸ்
பதிவு 214 எம்.ஐ.எம்.ஐ பாவா
பதிவு 215 எம்.எம். பகுர்தீன்பாவா
பதிவு 216 ஏ.சி. அகமது லெவ்வை
பதிவு 217 அப்துல் ரவூப்
பதிவு 218 எம்.ஐ. இம்தியாஸ்
பதிவு 219 ஏ.கே.எம். அன்ஸார்
பதிவு 220 எம்.ஐ.எம். பாரீஸ்
பதிவு 221 முஹம்மது அஸ்ஹர்
பதிவு 222 எஸ்.எம். உவைத்துல்லா
பதிவு 223 எம்.பி. அஹமட் ஹாறூன்
பதிவு 224 சுபைர் இளங்கீரன்
பதிவு 225 எம்.ரி. முகம்மது ஹுஸைன்

## இலங்கை எழுத்தாளர்கள்,ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு - தொகுதி 9

புலம்பெயர் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் விபரம்

பாகம் 2

பதிவு 226 வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்), (கனடா)
பதிவு 227 பொன்னரசி கோபாலரட்ணம், (நோர்வே)
பதிவு 228 பத்மன் பசுபதிராஜா, (ஜேர்மனி)
பதிவு 229 க. சக்திதாசன் (இணுவை சக்திதாசன்), (டென்மார்க்)
பதிவு 230 ஆ.மகேந்திரராஜா, (ஜேர்மனி)
பதிவு 231 வைத்தீஸ்வரன் ஜெயபாலன், (ஐக்கிய இராச்சியம்)
பதிவு 232 முகத்தார் எஸ். ஜேசுறட்ணம், (பிரான்ஸ்)
பதிவு 233 தர்மலிங்கம் இரவீந்திரன், (ஜேர்மனி)
பதிவு 234 செல்லத்தம்பி சிறீக்கந்தராசா (ஐக்கிய இராச்சியம்)
பதிவு 235 எம்.என்.எம். அனஸ் (இளைய அப்துல்லாஹ்) (ஐ. இராச்)
பதிவு 236 மட்டுவில் ஞானக்குமாரன், (ஜேர்மனி)
பதிவு 237 சகாதேவன் இராஜ்தேவன் (இராஜ் கண்ணா), (நோர்வே)
பதிவு 238 மனோன்மணி பரராஜசிங்கம், (ஜேர்மனி)
பதிவு 239 சீ. பன்னீர் செல்வம், (இந்தியா)
பதிவு 240 இராஜேஸ்வரி சிவராசா (ஜேர்மனி)

## இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு - தொகுதி 10

முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் விபரம்

பாகம் 8

| | | | |
|---|---|---|---|
| பதிவு 241 | யூ.எல். அலியார் | பதிவு 242 | ரஸ்மினா றாஸிக் |
| பதிவு 243 | கே.எல். அமீர் | பதிவு 244 | எஸ்.ஆர்.எம்.எம். முஹ்ஸி |
| பதிவு 245 | ஏ.ஜீ.எம். தமீம் | பதிவு 246 | மு.சு.அ. முகம்மது றாஸிக் |
| பதிவு 247 | பீ.எம். நியாஸ்தீன் | பதிவு 248 | எஸ்.எச். அமீர |
| பதிவு 249 | றுவைதா மதீன் | பதிவு 250 | எம்.ஏ.எம். செல்ல மரிக்கார் |
| பதிவு 251 | மஸாஹிரா இல்யாஸ் | பதிவு 252 | கே.எம். ஸவாஹிர |
| பதிவு 253 | எம்.எஸ். அஹ்மது பதுர்தீன் | | |
| பதிவு 254 | அப்துல் காதர் அஸீம் | பதிவு 255 | எம்.எஸ். நௌஷாட் |
| பதிவு 256 | முஹம்மது ஸித்தீக் | பதிவு 257 | எம்.ஏ. கபூர் |
| பதிவு 258 | ஏ.எல்.அலியார். | பதிவு 259 | எம்.ஸி.எம்.அஸ்வர். |
| பதிவு 260 | அல் – அஸூமத் | பதிவு 261 | லா.ஃபிர் ஸஹீட் |
| பதிவு 262 | இப்பன் சால்டின். | பதிவு 263 | அபூதாலிப் அப்துல் லதீஃப் |
| பதிவு 264 | ஜெய் றஹீம் சயீத் | பதிவு 265 | கே.ஏ. ஜவாஹர் |
| பதிவு 266 | எம்.எச்.பௌசுல் அமீர | பதிவு 267 | எம்.எம்.ஏ. லத்தீப். |
| பதிவு 268 | நூர்ஜான் மர்ஸூக் | பதிவு 269 | ஹம்ஸா ஆரீப் |
| பதிவு 270 | ஆமினா பேகம் பாரூக் | பதிவு 271 | நிஹாரா சபூர்தீன் |
| பதிவு 272 | ஜெய் குமாலா சவ்ஜா | பதிவு 273 | டோனி ஹஸன் |
| பதிவு 274 | எம்.எஸ். முஹம்மத் | பதிவு 275 | எம்.ஏ. புஹாரி |

## இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு - தொகுதி 11

# இவர்கள் நம்மவர்கள் - பாகம் 01

| | |
|---|---|
| பதிவு 276 | தம்பிஐயா தேவதாஸ் |
| பதிவு 277 | எஸ்.எச்.எம். ஜெமீல் |
| பதிவு 278 | அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை |
| பதிவு 279 | அந்தனி ஜீவா |
| பதிவு 280 | பாலா. சங்குப்பிள்ளை |
| பதிவு 281 | ஜே. மீராமொஹிதீன் |
| பதிவு 282 | வை. அநவரத விநாயகமூர்த்தி |
| பதிவு 283 | சாரல்நாடன் |
| பதிவு 284 | வீ.வீரசொக்கன் |
| பதிவு 285 | நாகலிங்கம் தர்மராஜா (அகளங்கன்) |

**இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு- தொகுதி 12**

## இவர்கள் நம்மவர்கள் -பாகம் 02

பதிவு 286 (குழந்தை) செபஸ்தியான் செபமாலை
பதிவு 287 பாலேஸ்வரி நல்லரெட்ணசிங்கம்
பதிவு 288 சந்திரகௌரி சிவபாலன் (ஜெர்மனி)
பதிவு 289 சாந்தி முஹியித்தீன்
பதிவு 290 கிச்சிலான் அமதுர் றஹீம்
பதிவு 291 வண. பிதா தமிழ்நேசன் அடிகளார்
பதிவு 292 சி.என். துரைராஜா
பதிவு 293 (மானா மக்கீன்) எம்.எம். மக்கீன்
பதிவு 294 சு. ஸ்ரீகந்தராசா( அவுஸ்திரேலியா)
பதிவு 295 ராஜா ஜென்கின்ஸ்
பதிவு 296 ச. முருகானந்தன்.
பதிவு 297 த. சந்திரசேகரன்
பதிவு 298 (அன்புமணி) இராசையா நாகலிங்கம்
பதிவு 299 கே. எம். பாருக்
பதிவு 300 சின்னத்தம்பி ரவீந்திரன்

**இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு- தொகுதி 13**

## இவர்கள் நம்மவர்கள் -பாகம் 03

பதிவு 301 செல்வி தங்கேஸ்வரி கதிராமன்
பதிவு 302 எம்.வை.எம். மீஆது
பதிவு 303 ஆ.மு.சி.வேலழகன்
பதிவு 304 க. இரத்தினசிங்கம்
பதிவு 305 சி. தர்மகுலசிங்கம்
பதிவு 306 கே.எம்.எம். காசீம்ஜி
பதிவு 307 ஞானசெல்வம் மகாதேவா (இந்தியா)
பதிவு 308 கந்தப்பன் செல்லத்தம்பி
பதிவு 309 இராசவல்லவன் இராசயோகன்
பதிவு 310 முருகர் செல்லையா

# இவர்கள் நம்மவர்கள் - பாகம் 04


பதிவு 311 சந்திரகாந்தா முருகானந்தன்
பதிவு 312 கோ. லோகநேசன்
பதிவு 313 வதிரி.இ.இராஜேஸ்கண்ணன்
பதிவு 314 வ. தம்பிமுத்து
பதிவு 315 மாரி. மகேந்திரன்
பதிவு 316 இராமசாமி பாலகிருஷ்ணன்
பதிவு 317 அமரர் சி. விஸ்வலிங்கம்
பதிவு 318 பொன்னம்பலம் சுகந்தன்
பதிவு 319 எம்.எஸ்.ஏ. மஜீத்
பதிவு 320 ஏ. முஹம்மத் சமீம்
பதிவு 321 ஏ.எம். முஸ்தகீம்
பதிவு 322 உஸ்மான் பைலா
பதிவு 323 முக்தார் ஏ. முஹம்மத்
பதிவு 324 ஏ.என்.எம். ஷாஜஹான்
பதிவு 325 எம்.ஏ.ஏ. ஹஸன்




# இவர்கள் நம்மவர்கள், பாகம் 05

## இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் கலைஞர்களின் விபரத்திரட்டு

## தொகுதி -15

## ஆய்வுப் படிமுறை

### எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் விபரத்திரட்டு

- **இலக்கியவாதிகள்**
  - **படைப்பிலக்கியம்**
    1) சிறுகதை
    2) கவிதை
    3) நாவல்
    4) நாடகம்
    5) ஏனையவை
  - **கட்டுரை**
    1) அரசியல்
    2) சமூகம்
    3) உலக அரங்கு
    4) விமர்சனம்
    5) ஏனையவை
- **ஊடகவியலாளர்கள்**
  - **செய்திப் பத்திரிகை**
    1) ஆசிரியர்கள்
    2) செய்தியாளர்கள்
    3) புகைப்படம்
    4) ஏனையவை
  - **சஞ்சிகை**
    1) ஆசிரியர்கள்
    2) செய்தியாளர்கள்
    3) செய்திக்கட்டுரையாளர்கள்
    4) ஏனையவை
  - **இலத்திரனியல் ஊடகம்**
- **கலைஞர்கள்**
  1) ஓவியம்
  2) நாடகம்
  3) திரைப்படம்
  4) ஏனையவை

# டாக்டர் ஞானசேகரன்



பதிவு
**326**

**எழுத்துத்துறை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், வெள்ளவத்தை கிராமசேவகர் பிரிவில் வசித்துவரும் டாக்டர் ஞானசேகரன் அவர்கள் நாடறிந்த ஒரு எழுத்தாளரும், சஞ்சிகையாசிரியருமாவார். 1941ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் திகதி தியாகராசா ஐயர் - வாலாம்பிகை தம்பதியினரின் புதல்வராக யாழ்ப்பாண மண்ணில் பிறந்த இவர், புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ் பாடசாலை, உரும்பராய் இந்துக் கல்லூரி, பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை மருத்துவக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார். தற்போது ஒரு டாக்டராக புசல்லாவையில் பணியாற்றி வருகின்றார். இவரின் அன்புப் பாரியார் ஞானலட்சுமி. இவர் இளைப்பாரிய ஆசிரியை. இத்தம்பதியினருக்கு இராஜேஸ்வரன், வசுந்தரா, பாலசந்திரன் ஆகிய அன்புச் செல்வங்களுளர்.

இவரது இளம் வயது முதல் இவர் ஓர் இலக்கியச் சூழலில் வளர்ந்தவர். தொல்காப்பியத்துக்கு உரை எழுதிய

வித்துவசிரோமணி சி. கணேசையர் இவரின் பூட்டனார். நல்லூரில் ஆதினம் அமைத்து தமிழுக்கும் சைவத்திற்கும் தொண்டாற்றிய சுவாமி நாதர் தம்பிரான் சுவாமிகள் இவரது தாய் மாமா. இவர்களைவிட இவரது உறவினர் பலர் பழந்தமிழ் இலக்கியங்களில் பரிச்சயம் உள்ளவர்களாக இருந்தனர். எந்தவொரு சம்பவத்தையும் பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்து எடுத்துக் காட்டுக்களுடன் விளக்கி இலக்கியச் சுவையுடன் பேசவல்ல பலர் இவரின் உறவினர்களாக இருந்தனர். இவர்களின் சிலர் கோவில்களில் புராண படனங்களுக்குப் பயன் சொல்வதில் வல்லமை பெற்றிருந்தனர். இதன் காரணமாக இவருக்கு இளம் வயதிலே பழந் தமிழ் இலக்கியங்களில் பரிச்சயம் ஏற்பட்டது. பாடசாலையில் கற்கும் காலத்திலிருந்தே இவரது தாயார் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்துள்ளார். அக்கால கட்டங்களில் கல்கி, ஆனந்தவிகடன், கலைமகள் போன்ற சஞ்சிகைகளை வாசிக்கத் தொடங்கிய இவர், கல்கி, அகிலன், சாண்டில்யன், ஜெயகாந்தன், மு.வ., புதுமைப் பித்தன் ஆகியோரின் படைப்புகளை ஆர்வத்துடன் வாசித்து வந்தார். இதனால் இவர்களைப் போல தானும் கதைகள் எழுத வேண்டும் என்ற ஆர்வம் இவருக்கு இளம் வயதிலேயே ஏற்பட்டது.

இந்தியாவிலிருந்து 'கண்ணன்' என்ற சிறுவர்களுக்கான சஞ்சிகையொன்று அக்காலகட்டத்தில் வெளிவந்து கொண்டிருந்தது. பள்ளிப் பராயத்தில் அச்சஞ்சிகைக்கு சிறு துணுக்குகள், வாசகர் கடிதங்கள் போன்றவற்றை அடிக்கடி எழுதி வந்தார். இவை பிரசுரமானதும் இவருள் எழுத வேண்டும் என்ற உத்வேகம் மேலும் மேலும் அதிகரித்தது.

இந்த அடிப்படையில் 1964ஆம் ஆண்டில் கலைச்செல்வி எனும் சஞ்சிகையில் "பிழைப்பு" எனும் தலைப்பில் இவரது முதலாவது சிறுகதை பிரசுரமானது. தொடர்ந்து பல சிறுகதைகளை இலங்கையில் வெளிவந்து கொண்டிருந்த வாரப் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் எழுதினார். இந்தியாவிலிருந்து வெளிவரும் தரம் வாய்ந்த தமிழிலக்கிய சஞ்சிகையான 'கலைமகளி'லும் இவரின் சில கதைகள் பிரசுரமாகியுள்ளன. இதுவரை 100க்கும் மேற்பட்ட சிறுகதைகள், கட்டுரைகள், நூலாய்வுகள் என இவர் எழுதியுள்ளார்.

டாக்டர் ஞானசேகரன் அவர்கள் இதுவரை ஒன்பது நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

01. **காலதரிசனம்** - 1973ல் வெளியானது. 12 சிறுகதைகள் அடங்கிய இச்சிறுகதைத் தொகுதிக்கு பேராசிரியர் க. கைலாசபதி முன்னுரை எழுதியிருந்தார். இம்முன்னுரையில் பேராசிரியர் நூலாசிரியர் தி.ஞானசேகரன் அவர்களைப் பற்றி குறிப்பிடும்பொழுது,"மன விகசிப்பும், கலைமெருகும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வகையில் வளர்ச்சிபெற்ற சிறுதை ஆசிரியர்" என்றார். (15.04.1973)

02. **புதிய சுவடுகள்** - 1977ல் எழுதிய முதல் நாவல் வெளியாகியது. வீரகேசரி அக்காலத்தில் ஒரு நாவல் போட்டியை நடத்தியது, அதற்கென எழுதப்பட்டதே இந்த நாவல். பின்னர் இந்நாவல் வீரகேசரிப் பிரசுரமாக வெளிவந்தது. இந்நாவல் அந்த ஆண்டுக்கான அரச சாகித்திய விருதினைப் பெற்றது. இந்நாவல் பற்றி பேராசிரியர் சு. வித்தியானந்தன் "ஆழமான சமுதாயப் பார்வையில் வீசி நிற்கும் இவரது நாவல் சுபிட்சமும், செழுமையும் நிறைந்த புதியதொரு காலத்தை தருசித்து நிற்கின்றது" (06.03.1978) என்றும், பேராசிரியர் க. அருணாசலம் "யாழ்ப்பாண மண்ணுக்கே சிறப்பாகவுரிய பிரச்சினையொன்றினை அதற்குரிய காரணிகளை அறிவுபூர்வமாக அணுகி உணர்ச்சிபூர்வமாக திட்டமிட்ட கதையும், சத்துடன் புதிய சுவடுகள் நாவல் படைக்கப்பட்டுள்ளது. சமுதாயத்தின் ஊழல்களையும், போலித்தனங்களையும், மாறிவரும் கருத்தோட்டங்களையும் இந்நாவல் சித்தரிக்கின்றது" (15.03.1980) என்றும் குறிப்பிட்டிருந்தனர்.

03. **குருதிமலை** – 1979ல் வீரகேசரிப் பிரசுரமாக வெளிவந்தது. அவ்வாண்டுக்கான சாகித்திய விருதினைப் பெற்றது. இதுவொரு மலையக நாவல். தான் மலையகத்தில் வைத்திய அதிகாரியாகத் தொழில் புரிந்ததால்

அங்கு பெற்ற அனுபவம் இந்த நாவலை எழுதத் தூண்டியுள்ளது. இந்நாவல் 'தகவம்' பரிசினையும் பெற்றுக் கொண்டது. 1986ல் ஈழத்தில் அதுவரை வெளிவந்த ஆக்க இலக்கியங்களில் நாவல் சார்ந்த சிறந்த நூல்களில் ஒன்றெனை இலங்கை இலக்கியப் பேரவையின் சான்றிதழையும் பெற்றது.

இந்நாவல் பற்றி கலாநிதி நா. சுப்பிரமணியம் 1988 மல்லிகை இதழில் பின்வருமாறு எழுதியிருந்தார். "கதைசொல்லும் முறையிலும், தொழிலாளருது பண்பாட்டுக் கோலங்களைக் காட்டும் முறையிலும் ஞானசேகரன் அவர்களது ஆற்றல் விதந்து பாராட்டத்தக்கது. இதுவொரு இலக்கியம் என்ற வகையில் மட்டுமன்றி மலையக மக்களின் ஒரு காலகட்ட வரலாற்று ஆவணம் எனத்தக்க தகுதியும் பெற்றுள்ளது. பேரினவாதத்திற்குப் பணியாத தமிழுணர்வின் முதற்கட்ட வெற்றிற்கு கட்டியம் கூறிநிற்கும் படைப்பு இது எனலாம்"

மதுரை அமெரிக்கன் கல்லூரி விரிவுரையாளர் செ. போத்திரெட்டி "குருதிமலை என் உள்ளத்தை பிணித்த உன்னத படைப்பு. அந்நாவலை 'அக்கரைத் தமிழ்' எனும் முதுகலைத் தாள் ஒன்றிற்கு பாடநூலாக வைக்க முடிவு செய்துள்ளோம்" என்றார். இந்த அடிப்படையில் 1992ல் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் எம்.ஏ. பட்டப் படிப்பிற்குப் பாடநூலாகத் தெரிவுசெய்யப்பட்டது. இந்நாவல் 3 பதிப்புக்களைப் பெற்றுள்ளது. மேலும், இந்நாவல் சிங்கள மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு சிங்கள வாசகர்கள் மத்தியிலும் எழுத்தாளரை அறிமுகம் செய்து வைத்துள்ளது.

04. லயத்துச்சிறைகள் (குறுநாவல்) - 1994ல் வெளிவந்தது. மலையக நாவல். 1995ல் சிறந்த நாவலுக்கான மத்திய மாகாண கலாசார அமைச்சின் சாகித்திய மண்டலப்பரிசு பெற்றது. இலங்கை இலக்கியப் பேரவையின் சிறந்த நாவலுக்கான சான்றிதழையும் பெற்றுள்ளது.

இந்நூல் பற்றி பேராசிரியர் எஸ். தில்லைநாதன் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார். "மலையக மக்கள் தங்களது எதிர்கால வாழ்க்கைக்குத் தயார் செய்துகொள்ள, தமது சொந்தக் காலிலே நிற்கவேண்டுமென்ற நிதர்சன உண்மையை இந்த 'லயத்துச் சிறைகள்' நாவல் வெளிப்படுத்துகின்றது. தோட்டப் பிரதேசத்திலேயே வாழ்ந்து அவர்களது யதார்த்தங்களை மிகத் தெளிவாக அறிந்தா இந்த நாவலை படைத்திருக்கிறார் நூலாசிரியர்? அவரது படைப்பாற்றல் பாராட்டுக்குரியது" என்றார்.

05. கவ்வாத்து – குறுநாவல் (1996) தேசிய கலையிலக்கியப் பேரவையும், சுபமங்களாவும் இணைந்து நடத்திய குறுநாவல் போட்டியில் பரிசுபெற்றது. 'விபவி' கலாசார மையத்தின் 1996ல் வெளிவந்த சிறந்த படைப்பிற்கான 'தங்கச்சங்கு' விருதும், சான்றிதழும் பெற்றது. மத்திய மாகாண சாகித்திய விருதினையும் பெற்றது.

இந்நூல் பற்றி பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார். "திரு. ஞானசேகரனின் இந்தக் குறுநாவல், மலையகப் பெருந்தோட்ட தமிழர் எதிர்நோக்கும் பிரச்சினையை நோக்குகிறது. அது தொழிற்சங்கங்களின் பயன்பாடு என்பதாகும். எந்தத் தொழிற்சங்க இயக்கம் அவர்களின் சமூக – பொருளாதாரத் தனித்துவங்களை உணர்ந்த அவர்களின் "நல்" வாழ்க்கைக்குப் போராடிற்றோ, இன்று அதே அந்த மக்களின் ஒற்றுமையின்மைக்கு வழிவகுக்கும் சமூகக் கருவியாக மாறியுள்ள நிலைமையை இந்தக் குறு நாவலிலே காண்கிறோம்.

மலையகப் பெருந்தோட்டத் தமிழர்களை எதிர்நோக்கி நிற்கும் (இன்றைய) மிகப் பெரிய சவால் இது... இந்தப் பிரச்சினையின் ஒரு வெட்டுமுகத்தை ஒரு வன்மையான முனைப்புடன் இந்தப் படைப்புத் தரு கின்றது" என்றார்.

இப்புத்தகத்தில் இடம்பெற்றுள்ள குறுநாவல்களுள் 1995ஆம் ஆண்டு தமிழக சுபமங்கள சஞ்சிகை நடத் திய ஈழத்து குறுநாவல் போட்டியில் பரிசும், பாராட்டும் பெற்ற கதையொன்று இடம்பெற்றுள்ளது.

06. அல்சேசனும் ஒரு பூனைக் குட்டியும் (1998) (சிறுகதைத் தொகுதி). தற்போது இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் BA வகுப்பிற்குரிய பாடநூலாக வைக்கப்பட்டுள்ளது.

இந்நூல் பற்றி பேராசிரியர் க. அருணாசலம் பின்வ ருமாறு குறிப்பிட்டிருந்தார். "திரு. ஞானசேகரன் அவர் கள் கதைகளின் உள்ளடக்கத்தில் மட்டுமன்றி உருவ அமைதியிலும் தீவிர கவனம் செலுத்தியுள்ளமையை அநேகமாக எல்லாக் கதைகளிலும் காணமுடிகிறது. உள்ளடக்கங்களுக்கேற்ற மிகப் பொருத்தமான தலைப் புகள், உயிர்த்துடிப்புமிக்க நடை மிகப்பொருத்தமான கதைத் திருப்பங்கள், சிந்தனையைத் தூண்டும் முடிவு கள், பண்புநலனை வெளிப்படுத்தும் பாத்திர வார்ப்புகள், உவமைப் பிரயோகங்கள், கச்சிதமான வருணனைகள் முதலிய அவரது கதைகளுக்குத் தனிச்சோபையை அளிக்கின்றன" என்றார்.

07. தி. ஞானசேகரன் சிறுகதைகள். 30 சிறுகதைகள் அடங்கிய தொகுப்பு 2005ல் வெளியானது. 2005ம் ஆண்டில் வெளிவந்த சிறுகதைத் தொகுதிக்கான நாவேந்தன் விருதினைப் பெற்றது.

08. 'புரிதலும் பகிர்தலும்' (2003) அவுஸ்திரேலிய எழுத்தாளர்களுடனான நேர்காணல் தொகுதி.

09. அவுஸ்திரேலியப் பயணக்கதை (2002) பயண இலக்கியம்



டாக்டர் ஞானசேகரன் அவர்களின் எழுத்துகள் பல வழிகளிலும் முத்திரைப் பதித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. இவரது கதைகள் சமூகமயமானவை. சமூக யதார்த்தங்களை வெளிப்படுத்தக்கூடியவை. அத்துடன், பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணக்கூடிய வகையில் கருத்துக்களை கதை வடிவிலே முன்வைத்திருப்பது ஒரு சிறப்பம்சமாகும்.

## ஞானம் சஞ்சிகை

டாக்டர் ஞானசேகரன் அவர்களின் இலக்கியப் பணிகளில் 2000ஆம் ஆண்டுக்குப் பின்பு உச்சமாகத் திகழ்வது 'ஞானம்' சஞ்சிகை என்றால் மிகையாகாது. பகிர்தலின் மூலம் விரிவும், ஆழமும் பெறுவது 'ஞானம்' எனும் பணிக்கூற்றுடன் தொடர்ந்து மாதந்தோறும் வெளிவரும் 'ஞானம்' சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் டாக்டர் ஞானசேகரன் அவர்கள். அதன் இணையாசிரியர், ஞானம் ஞானசேகரன்.

ஞானத்தின் முதலாவது இதழ் 2000.06.06இல் வெளிவந்தது. ஒரு சஞ்சிகையானது அந்த நாட்டின் இலக்கியப் பாரம்பரியங்கள், இலக்கிய உலகில் ஏற்படும் மாற்றங்கள், வளர்ச்சிப் போக்குகள், கருத்தோட்டங்கள் போன்றவற்றின் காலக் கண்ணாடியாக திகழ வேண்டும். புதிய எழுத்தாளர்கள் தோன்றி வளர வேண்டும். இக்கருத்தியலுக்கமையவே ஞானம் சஞ்சிகை யின் உள்ளடக்கங்களிலும், செயற்பாடுகளிலும் கவனம் செலத்தி வருவது அவதானிக்க முடிகின்றது.

எமது நாட்டில் சென்ற நூற்றாண்டு 60, 70கள் இலக்கிய செயற்பாடுகளில் உன்னத காலமாக விளங்கியது. முற்போக் கிலக்கியம், நற்போக்கிலக்கியம், மரபு பற்றிய சர்ச்சைகள் முன்னெடுக்கப்பட்ட காலம் அது. அக்காலகட்டத்தில் தோன்றிய சிற்றிதழ்கள் - மறுமலர்ச்சி, கலைச்செல்வி, மல்லிகை, குமரன், இளம்பிறை, சிரித்திரன், விவேகி, மரகதம், தேன் அருவி, மலர், மலைமுரசு, நதி, அலை, தீர்த்தக்கரை, அஞ்சலி, நந்தலாலா போன்றவையும் வேறும் சிலவும் இலக்கியப் பணி புரிந்தன.

எண்பதுகளில் தோன்றிய போர்ச்சூழல் காரணமாக எமது படைப்பாளிகள் பலர் நாட்டைவிட்டும் புலம்பெயர்ந்தனர். மேலும் பலர் நாட்டுக்குள்ளேயே இடம்பெயர்ந்தனர். வாழ்க்கைப் பிரச்சினைகள் பலவாயின. சுதந்திரமாக இயங்க முடியாத சங்கடம். இவை யாவும் எமது படைப்பாளிகளின் படைப்புச் செயற் பாட்டில் ஆர்வம் குறைந்த நிலைமையை தோற்றுவித்தன. வாசிப்புப் பழக்கம் இளைய தலைமுறையிடம் அருகத் தொடங்கிற்று.

ஆனாலும், இலக்கியச் செயற்பாடுகள் காலத்துக்குக் காலம் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டியது அவசியமானது. இன்று மிகவும் சிரமமான ஒரு சூழ்நிலையிலேயே நாம் இப்பணி யில் ஈடுபட்டுள்ளோம். முன்னைய இலக்கிய சஞ்சிகைகள் ஆற்றிய இலக்கியப் பணியின் தொடர்ச்சியைப் பேணி அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டிய நிலையில் உள்ளோம் என்ற உணர்வுடன் செயல்படுவது இன்றியமையாத தேவையா கின்றது. அந்த உணர்வுடனே நாம் செயல்பட்டு வருகின்றோம் என டாக்டர் ஞானசேகரன் அவர்கள் ஞானம் 100வது இதழில் குறிப்பிட்டிருந்தார்.

உண்மையிலேயே தற்போதைய காலசூழ்நிலையை பின்னணியாகக் கொண்டு நோக்குமிடத்து ஒரு இலக்கிய சஞ்சிகையை தொடர்ச்சியாக வெளியிடுவதில் உள்ள சிரமம் அனைவரும் அறிந்ததே. மாதந்தோறும் தவறாமல் ஞானம் சஞ்சிகையை வெளியிடுவதினூடாக ஞானசேகரன் ஒரு புதிய சாதனையைப் படைத்து வருகின்றார் என்றால் மிகையாகாது.

ஞானம் இலங்கையில் மாத்திரமல்லாமல் புலம்பெயர் நாடுகளிலும் முக்கியத்துவம் பெற்றுள்ள ஈழத்து தமிழிலக்கிய சஞ்சிகையாக மாறியுள்ளது. அண்மையில் நான் பிரித்தானியா சென்றிருந்த நேரத்தில் இதனை நேரடியாகக் காணக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிட்டியது. நான் எனது பயணத்தின்போது பல ஈழத்து எழுத்தாளர்களை சந்தித்தேன். அவர்கள் அனை வரும் ஞானத்தைப் பற்றி விசாரித்ததை, ஞானத்தைப் பற்றி கதைத்ததையும் என்னால் மறக்க முடியாது. புலம்பெயர்ந்த ஈழத்தவர்கள் இலக்கிய ரீதியில் ஞானம் சஞ்சிகையை இன்று நம்பகமான ஒரு சஞ்சிகையாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அவர்கள் சந்தாதாரர்களாகி ஞானத்தை நேரடியாகப் பெற்றாலும் கூட, சஞ்சிகை கைக்கு வருவதற்கு முன்பாக இணையத்தளத் தினூடாக சஞ்சிகையைப் பார்த்து அது பற்றி விமர்சித்த சந்தர்ப்பங்களும் எனக்கு ஏற்பட்டன.

ஞானம் 104 இதழ்களை விரித்துவிட்டன. ஞானத்தின் வளர்ச்சியிலும் தனிமனித முயற்சியாளராக டாக்டர் ஞான சேகரன் இருப்பதை மறப்பதற்கியலாது.

இவரின் இத்தகைய சேவைகளையும், இலக்கியப் பணிக ளையும் கருத்திற் கொண்டு அரச, அரச சார்பற்ற நிறுவனங்க ளும், அமைப்புகளும் பல்வேறு விருதுகளை வழங்கி இவரை கௌரவித்துள்ளன. அவற்றின் சிலதை கீழே குறிப்பிட்டுள்ளேன்.


இவர் 1997ஆம் ஆண்டு மத்திய மாகாண சாகித்திய விழாவில் இலக்கிய சேவைகளுக்காக வேண்டி கௌரவிக்கப் பட்டார். மேலும், ரத்னதீப பதநம 1998 ஆம் ஆண்டில் கண்டியில் ரத்னதீப விருது வழங்கி இவரை கௌரவித்தது. அத்துடன், அகில இலங்கை சமாதான நீதவானான இவருக்கு அரசு வழங்கும் அதியுயர் கௌரவமான கலாபூஷண அரச விருதும் கிடைத்துள்ளது. மிக அண்மையில் சிந்தனைவட்டம் இவருக்கு 'இதழியல்வித்தகர்' எனும் பட்டம் வழங்கி கௌரவித்தது. இவ்வாறாக பிரதேச, மாவட்ட, மாகாண, தேசிய மட்டத்தில் இவர் பல விருதுகளையும், கௌரவங்களையும் பெற்றுள்ளார்.

டாக்டர் ஞானசேகரன் அவர்களின் புகைப்படத்தை தனது முகப்பட்டையில் பிரசுரித்து 1998 அக்டோபர் கொழுந்து சஞ்சிகை கௌரவத்தை வழங்கியது. அதேபோல 1998 ஏப்ரல் அட்டைப்பட அதிதியாக மல்லிகை சஞ்சிகையும் இவரை கௌரவித்தது.

இலக்கியத்தில் பல்வேறு சாதனைகளைப் புரிந்தாலும் கர்வமின்றி பழகுவதற்கு இனிமையான சுபாவமுள்ள இவரின் முகவரி:-

தி. ஞானசேகரன்
3-பி, 46ஆவது ஒழுங்கை
வெள்ளவத்தை
கொழும்பு – 06





# லெ. முருகபூபதி



புலம்பெயர்ந்த
எழுத்தாளர் - 44

பதிவு
**327**

**எழுத்துத்துறை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த நீர்கொழும்பில் பிறந்து வளர்ந்தவரும், தற்போது புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியாவில் விக்டோரியா மாநிலத்தில் நிரந்தரமாக வசித்து வருபவருமான லெ. முருகபூபதி ஒரு சிரேஷ்ட எழுத்தாளர், ஊடகவியலாளர், பத்தி எழுத்தாளர், ஆய்வாளர், விமர்சகர், பன்னூலாசிரியர்.... இவ்வாறு அடுக்கிக் கொண்டே போகலாம். இலக்கியத்தில் பல துறைகளிலும் பாதம் பதித்து பிரபல்யம் பெற்றிருந்தாலும்கூட, முருகபூபதி ஒரு சாதாரண மனிதராகவே என்றும் தன்னைக் காட்டிக் கொள்வார். பழகுவதற்கு இனியவர். பிறருக்குதவும் தாராள மனம் படைத்தவர். ஆர்ப்பாட்டமின்றி அமைதியாக தனக்கேயுரிய பாணியில் இலக்கியம் படைத்து தமிழ் காத்து வரும் இவர் பணி காலத்தால் நிலைக்கக்கூடியது.

1951ஆம், ஆண்டில் லெட்சுமணன் தம்பதியினரின் புதல்வராக நீர்கொழும்பில் பிறந்த முருகபூபதி 1954ஆம் ஆண்டு நீர்கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட விவேகானந்தா வித்தியாலயத்

தின் (இன்றைய விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி) முதலாவது மாணவராவார். இக்கல்லூரியில் இவரின் சேர்வி லக்கம் 0001. ஆரம்பக் கல்வியை மேற்படி பாடசாலையில் ஆரம்பித்து பின் புலமைப்பரிசில் பெற்று யாழ்ப்பாண ஸ்ட்ரான்லி கல்லூரியில் (தற்போது கனகரத்தினம் மத்திய கல்லூரி) தனது இடைநிலைக் கல்வியைப் பெற்றார். மீண்டும் நீர்கொழும்பில் அல்ஹிலால் மத்திய கல்லூரியிலும் இவரின் கல்வி நடவடிக் கைகள் தொடர்ந்தன.

யாழ்ப்பாணம் ஸ்ட்ரான்லி கல்லூரியிலும் நீர்கொழும்பு அல்ஹிலால் மத்திய கல்லூரியிலும் கற்கும் காலங்களில் இவர் அதிகமாக தமிழ் நூல்களையும், தமிழ் சஞ்சிகைகளையும் வாசிக்கத் தலைப்பட்டார். அங்கு தமிழாசான்களின் வழிகாட்டல் எழுத்தின் பால் இவரின் ஆர்வத்தை அதிகரிக்கச் செய்தது.

தானும் எழுத வேண்டும் என்ற உந்துதலின் வெளிப் பாடாக 1972ஆம் ஆண்டில் இவரின் முதல் சிறுகதை "கனவுகள் ஆயிரம்" எனும் தலைப்பில் மல்லிகை இதழில் பிரசுரமாகியது. இதே காலப் பகுதியில் வீரகேசரிப் பத்திரிகையின் பிரதேச நிருபராகவும் இவர் பணியாற்றத் தொடங்கினார்.

1970களின் மத்திய பகுதியில் இவரால் எழுதப்பட்ட பல சிறுகதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள், ஆய்வுகள் என்பன வீரகேசரி, மல்லிகை, மித்திரன், பூரணி, புதுயுகம், தேசாபிமானி, கதம்பம், மாணிக்கம், தினகரன் ஆகிய தேசிய பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் பிரசுரமாகின. இக்கால கட்டங்களில் முருகபூபதி இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம், நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றம், விஜயரத்தினம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம், இலக்கிய வட்டம், வளர்மதி நூலகம் போன்ற அமைப்புகளில் அங்கத்துவம் வகித்து கலையிலக்கியப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வரலானார்.

1977ஆம் ஆண்டில் வீரகேசரிப் பத்திரிகையில் முழுநேர ஊழியராகப் பணியாற்றத் தொடங்கிய இவர், அங்கு ஆரம் பத்தில் ஒப்புநோக்காளராகவும், பின்னர் துணையாசிரியராகவும்

பணியாற்றினார். 1987ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்து செல்லும்வரை 'வீரகேசரி'யில் துணையாசி ரியராகவே சேவையாற்றினார். இக்காலகட்டங்களில் 'ரஸஞானி' என்ற புனைப்பெயரில் 'இலக்கியப்பலகணி' என்ற பகுதியில் தொடர்ந்து 'பத்தி' எழுத்துகளும், நூல், நாடக, சினிமா விமர்ச னங்களும் எழுதினார். 1984ஆம் ஆண்டில் முதல் தடவையாக தமிழகத்துக்கு பயணம் செய்து நாடு திரும்பிய பின் பயண இலக்கியக் கட்டுரைகளை எழுதினார்.

முருகபூபதி தாயகத்தில் வாழ்ந்த காலகட்டங்களிலும், புலம்பெயர்ந்த பின்பு அவுஸ்திரேலியாவில் வாழும் நிலையிலும் பல காத்திரமான நூல்களை வெளியிட்டுள்ளார். அவை பற்றி கீழே சுருக்கமாகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

சுமையின் பங்காளி (சிறுகதைத் தொகுதி)

இவரின் முதல் சிறுகதைத் தொகுதி இதுவாகும். நீர்கொ ழும்பு இலக்கிய வட்டத்தின் முதலாவது வெளியீடாக 1975ஆம் ஆண்டு இத்தொகுதி வெளிவந்தது. இலங்கையில் மேற்குக் கரையோரம் இந்து சமுத்திரத் தாயின் அரவணைப்பில் திகழும் நீர்கொழும்பு மீனவர் சமூகத்தைச் சித்திரிக்கும் கதைகளைக் கொண்ட சிறுகதைத்தொகுப்பு இது. இத்தொகுதி பற்றி பேரா சிரியர் நா. வானமாமலை மல்லிகை 1979ஆம் ஆண்டு இதழில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

> "...நீர்கொழும்பு மீனவர்களையும் அவர்களின் வாழ்க் கை முறைகளையும், பிரதேச மொழிவழக்கையும் இக் கதைகள் இனம் காட்டியுள்ளன. ராஜம் கிருஷ்ணனின் 'அலைவாய்க்கரை'யில் நாவலுக்குப் பின்னர் நான் படித்த மீனவர்கள் சம்பந்தப்பட்ட கதைகள் இவை..."

இச்சிறுகதைத் தொகுதிக்கு அரசு சாகித்திய விருது கிடைத் தது. இலங்கையின் முதலாவது ஜனாதிபதி திரு. வில்லியம்

கொபல்லாவ அவர்களிடமிருந்து தனது முதல் சிறுகதைத் தொகுதிக்கான விருதினைப் பெற்றதை இன்றும் பசுமையான நினைவாக முருகபூபதி கொண்டுள்ளார்.

**சமாந்தரங்கள் (சிறுகதைத் தொகுதி)**

முருகபூபதி அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்த பின்னர் வெளியான கதைத்தொகுதி இது. பிரிந்து வந்த தாய கத்தின் ஏக்கத்துடன் புகலிடவாழ்வின் கோலங்களை சித்திரிக் கும் இக்கதைகளினூடாக சித்தரித்திருந்தார். இச்சிறுகதைத் தொகுதி 1988ஆம் ஆண்டில் 'சென்னை தமிழ் புத்தகாலய' வெளியீடாக வெளிவந்தது. மல்லிகை சஞ்சிகையின் பிரபல எழுத்தாளர் செங்கை ஆழியான் இச்சிறுகதைத் தொகுதி பற்றி பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

> "முருகபூபதி பல சிறுகதை ஆசிரியர்களைப்போல சமூ கத்தினை உள்ளவாறு சித்திரிக்கவில்லை. உணர்ந் தவாறு சித்திரிப்பதோடு, இப்படி இருக்கும் சமூகம்.... எப்படி இருக்க வேண்டும் எனக் காட்டிச் செல்கிறார். அதனால்தான் புதிய தலைமுறை எழுத்தாளர்களில் முருகபூபதிக்குரிய இடம் முதல் ஐந்துக்குள் அமைந்து விடுவது வித்தியாசமாகிறது. மனப்புண்கள், வேகம், திருப்பம், புதர்காடுகளில்... ஆகிய சிறுகதைகள் நான் இங்கு கூறிய கருத்துக்குச் சான்றாவன."

**சமதர்மப்பூங்காவில் (பயண இலக்கியம்)**

1985ஆம் ஆண்டில் சோவியத் ரஷ்யாவில் நடைபெற்ற சர்வதேச மாணவர் இளைஞர் விழாவில் முருகபூபதி பங் கேற்றார். இவ்விழாவில் 156 நாடுகள் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அங்கிருந்து நாடு திரும்பிய இவர் 'சமதர்மப்பூங்காவில்' எனும் தலைப்பில் வீரகேசரி வார வெளி யீட்டில் சோவியத் பயணக் கட்டுரையை எழுதினார். இப் பயணக் கட்டுரை 1989ஆம் ஆண்டு நூலுருவில் வெளிவந்தது.

இது முருகபூபதியின் முதலாவது பயண இலக்கிய நூலாகும். 20ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் சோவியத் ரஷ்யாவில் ஏற்பட்ட மாற்றங்களை ஒரு பயணியின் பார்வையில் நின்று இந்நூலில் நூலாசிரியர் பதிவுசெய்திருந்தார். இந்நூல் பற்றி கௌடில்யன் தினகரன் வாரமஞ்சரியில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

"முதலாம் அத்தியாயத்தில் ஊருக்கு நல்லது சொல்வேன். எனக்குண்மை தெரிந்தது சொல்வேன்... என்ற பாரதி வரிகளுடன் கட்டுரையைத் தொடங்குகிறார். சமதர்ம சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்தி வெற்றி கண்ட மண்ணில் காலடி பதிக்கக் கிட்டிய வாய்ப்பினை எண்ணி புளகாங்கிதம் அடைந்த நிலையில் அந்த 'ஏரோ ஃபுளட்' அந்தப் பறவை எழும்போது...... சோஷலிசம் மரணத்தைப் போன்று நிச்சயமானதுதான் என்ற வாக்கு என் காதுகளில் ரீங்காரம் செய்தது என்று முடிக்கிறார்."

## நெஞ்சில் நிலைத்த நெஞ்சங்கள் (கட்டுரைத் தொகுதி)

பிரான்சிலிருந்து வெளியாகும் பாரிஸ் ஈழநாடு பத்திரிகையில் 1995ஆம் ஆண்டில் முருகபூபதி எழுதிய மறைந்த மூத்த படைப்பாளிகளைப் பற்றிய நினைவுப்'பதிவுக் கட்டுரைகளின் தொகுப்பு 'நெஞ்சில் நிலைத்த நெஞ்சங்கள்' எனும் தலைப்பில் வெளிவந்தது. இந்நூலில் இரசிகமணி கனக செந்திநாதன், கே. டானியல், மு. தளையசிங்கம், என்.எஸ்.எம். இராமையா, பேராசிரியர் கைலாசபதி, கே.ஜி. அமரதாச, எச்.எம்.பி. மொஹிதீன், க. நவசோதி, கவிஞர் ஈழவாணன், நெல்லை. க. பேரன், காவலூர் ஜெகநாதன், கலாநிதி விதாலி ஃபூர்ணீக்கா ஆகியோரைப் பற்றி இந்நூலில் எழுதப்பட்டிருந்தது. இந்நூல் அவுஸ்திரேலியா சிட்னி தமிழ் குரல் பதிப்பக வெளியீடாக 1995ஆம் ஆண்டில் வெளிவந்தது. இந்நூல் பற்றி நட்சத்திரன் செவ்விந்தியன் 'சரிநிகர்' பத்திரிகையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

*"இதுகாலவரை இவ்வாறு வந்த எழுத்துக்களிலிருந்து அல்லது மல்லிகையின் அட்டைப்படக் கட்டுரையி லிருந்து வேறுபட்டு குறித்த எழுத்தாளர்களின் மறுபக் கங்களையும் ஓரளவு எழுதியமைதான் இதன் சிறப்பு."*

பாட்டிசொன்ன கதைகள் (சிறுவர் இலக்கியம்)

பிரான்சிலிருந்து வெளியான 'தமிழன்' வார இதழில் முருகபூபதி எழுதிய உருவகக்கதைகளின் தொகுப்பு நூல் இது. 1997ஆம் ஆண்டு இலங்கை 'மல்லிகைப் பந்தல்' வெளி யீடாக இந்நூல் வெளிவந்தது. இந்நூல் தமிழ்நாட்டில் ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு சிறுவர் இலக்கிய வரிசையில் தேர்வுபெற்றுள்ளது. இந்நூல் பற்றி எஸ். கணேஷ் ஆனந்த் தினகரன் வாரமஞ்சரியில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

*"சிறுவர் இலக்கியங்கள் என்றாலே மரம், செடிகொடிகள் மிருகங்கள் யாவும் பேசத் தொடங்கிவிடும். அதற்கு இப்புத்தகமும் விதிவிலக்கல்ல. அச்சூழல் சிறுவர்களை மிகவும் கவரக்கூடியவை. அவர்களுக்கு அக்கதையைக் கேட்பதில் ஆர்வம் அதிகரிக்கின்றது. மரம், செடிகொடிகள் மீது அன்பு மேலிடுகின்றது."*

வெளிச்சம் (சிறுகதைத் தொகுதி)

இலங்கை, இங்கிலாந்து, நோர்வே, பிரான்ஸ், அவுஸ்தி ரேலியா முதலான நாடுகளிலிருந்து வெளியான இதழ்களில் பிரசுரமான புகலிட வாழ்வுக்கோலங்களைச் சித்தரிக்கும் சிறுகதைகளின் தொகுப்பாகும். புலம்பெயர்ந்தோர் இலக்கியத் தின் ஒரு நல்ல அறுவடையாக இதனைக் குறிப்பிடலாம். வெளிச்சம் 1998ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா முகுந்தன் பதிப்பக வெளியீடாக வெளிவந்தது. இந்நூல் பற்றி புலோலியூர் ஆ. இரத்தினவேலோன் ஞாயிறுதினக்குரலில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

"...அந்நிய நாட்டு வாழ்க்கைக்கோலங்களையும் இரண்டக நிலைமையின்மையினையும் அதில் நம்மவர் எதிர்நோக்கும் நெருக்கடிகள் பற்றியும் வெளிச்சம் தொகுதியின் மகுடக்கதை பேசுகின்றது.

எப்படி இந்த மாற்றம் நிகழ்ந்தது? என மூர்த்தி வானத்தையே பார்த்துக் கொண்டு மௌனமாக நிற்கிறான். வானத்தில் இன்னும் வெளிச்சம். வானத்தில் மட்டும்தான் என்ற கதையின் முடிவு வாசகர்களைச் சிந்திக்கவைக்கின்றது.

நான்காண்டுகளுக்கும் மேலாக என் ஸ்பரிசம் இன்றி எனது உடல் சுகம் கிட்டாமல் துப்பாக்கி வேட்டுக்களுக்கும் ஷெல் அடிகளுக்கும் பயந்துகொண்டு என் மனைவி செல்வங்களுடன் உயிரைப் பாதுகாக்க அங்கே போராடிக் கொண்டிருக்க, நான் இங்க சுகம் தேடுவதா? ஏன வினவும் மழை கதையில் வரும் சந்திரனும் நல்லதொரு பாத்திர வார்ப்பு...."

சந்திப்பு (நேர்காணல் தொகுப்பு நூல்)

முருகபூபதி பத்திரிகை மற்றும் சஞ்சிகைகளுக்காக சந்தித்த இலங்கை தமிழக எழுத்தாளர்கள், கலைஞர்களின் நேர்காணல் தொகுப்பு நூல் இதுவாகும். இந்நூல் 1998ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியா முகுந்தன் பதிப்பக வெளியீடாக வெளிவந்தது. இந்நூலில் கவிஞர் அம்பி, எஸ்.பொன்னுத்துரை, ஓவியர் செல்லத்துரை, அகஸ்தியர், இந்திரா பார்த்தசாரதி, பரீக்ஷா ஞானி, எஸ். வைதீஸ்வரன், சார்வாகன், அண்ணாவியார் இளைய பத்மநாதன், மாவை நித்தியானந்தன் ஆகியோரின் நேர்காணல்கள் இடம்பெற்றிருந்தன. இந்த நேர்காணல்கள் இலங்கை, இங்கிலாந்து, பிரான்ஸ், அவுஸ்திரேலியா முதலான நாடுகளில் வெளியான இதழ்களில் பிரசுரமானவையாகும். இந்நூல் பற்றி தெ. நித்தியகீர்த்தி வீரகேசரி வாரவெளியீட்டில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

"...ஒரு படைப்பாளி மற்றுமொரு படைப்பாளியைச் சந்திக்கும் போது கிடைப்பவை சுவையான தகவல்களும் ஆழமான கருத்துக்களும்தான்.

படைப்பாளியை படைப்பின் ஊடாகப் பார்த்தவர்கள் நேரடியாகக் காணும் வாய்ப்புக் கிடைக்கின்றது. முருகபூபதி கையாளும் நேர்காணல் உத்திகள் நம்முன்னே சிந்திக்க வைக்கும் கருத்துக்களை அகழ்ந்தெடுக்க உதவுகின்றன...."

இலக்கிய மடல் (கட்டுரைத் தொகுதி)

முருகபூபதியின் இலக்கியப்பிரவேச வெள்ளி விழாக்காலத்தில் அவரைப்பேட்டி கண்ட பலர் பல இதழ்களில் எழுதினர். அவற்றுள் தேர்ந்தெடுத்த நேர்காணல்களும் முருகபூபதி எழுதிய சில கட்டுரைகளும் இத்தொகுப்பு நூலில் இடம்பெற்றுள்ளன. மேலும், புலம்பெயர்ந்தோர் இலக்கியம், அவுஸ்திரேலியாவில் தமிழ் இதழ்கள் ஆகிய விரிவான ஆய்வுக்கட்டுரைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

2001ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியா முகுந்தன் பதிப்பக வெளியீடாக வெளிவந்த இந்நூல் பற்றி கலாநிதி த. கலாமணி பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

"...வெளிநாட்டு வாழ்வு வளம் நிறைந்தது என்ற எண்ணச்சூழலில் மூழ்கியிருக்கும் வாசகர்களுக்கு அவுஸ்திரேலிய வாழ்வின் ஒரு வெட்டுமுகத்தோற்றத்தை இக்கரை பச்சை வழங்குகிறது. அப்படைத் தேவைகள் பூர்த்திசெய்யப்படாத ஆயுதப் போராட்டம் தொடரும் எந்தவொரு தேசத்திலும் பாதுகாப்பும் இல்லை. மன அமைதியும் இல்லை. மாறாக, அடிப்படைத்தேவைகள் பூர்த்திசெய்யப்பட்ட எந்தவொரு தேசத்திலும் மன அமைதிக்கு மருந்து தேவைப்படுகிறது என்ற செய்தியையும் இக்கட்டுரை பூடமாக வழங்குகிறது...."

எங்கள் தேசம் (சிறுகதைகள்)

புலம்பெயர்ந்து வாழும் தமிழ்க்குழந்தைகளின் மன ஓட்டைகள், செயல்களை உளவியல் சார்ந்தது. அணுகி எழுதப் பட்ட கதைகள் இவை. குழந்தைகளின் மனமும், உலகமும் வேறு என்பதைச் சித்தரிக்கும் கதைகளைக் கொண்ட எங்கள் தேசத்தில் இடம்பெற்றுள்ள சிறுகதைகள் அனைத்தும் இலங்கை, ஐரோப்பிய இதழ்களில் பிரசுரமானவை. இந்நூல் 2000ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியா முகுந்தன் பதிப்பக வெளியீடாக வெளிவந்தது. இச்சிறுகதைத் தொகுதி குறித்து செ. யோக நாதன் அவர்கள் 'ஆதவன்' பத்திரிகையில் பின்வருமாறு எழுதி யிருந்தார்.

> "...சிறுகதைகளை மிக யதார்த்தமாகவும், மானிட இயல்புகளை உள்ளவாறே பதிவு செய்வதோடல்லாமல் அதற்கூடாக செய்தியொன்றையும் சொல்ல வேண்டு மென்ற கருத்தையுமுடையவரென்பதை ஒவ்வொரு கதைகளிலும் வெகு நுணுக்கமாகவே காணமுடிகின்றது. இவற்றோடு கதைகளில் பெரும்பாலானவற்றில் கதை யின் இருப்புத்தளச் சூழலை ஆசிரியர் வீரியமிக்க சித்திரங்களாகப் பதிவு செய்திருக்கிறாரென்பது குறிப் பிடத்தக்க சிறப்பு. கதைகளின் அடிச்சரடாகத் தெரியும் ஏக்கத்திற்கூடாக நம்பிக்கை ஒளிக்கீற்று இழைந்து தெரிவது ஆசிரியரின் எழுத்து முயற்சிக்கு சிறந்த முதிர்வினை அடையாளம் காட்டும் பண்பாகத் தெரி கிறது..."

கடிதங்கள் (கடித இலக்கியம்)

முருகபூபதி இலக்கிய உலகில் பிரவேசித்த காலம் முதல் பல எழுத்தாளர்களுடன் தொடர்ச்சியாக கடிதத் தொடர்பு களை மேற்கொண்டிருந்தார்.

இலங்கை, தமிழக, ஐரோப்பா, கனடா, அவுஸ்திரேலியா உட்பட பல நாடுகளிலிருந்தும் இவருடன் கடிதத் தொடர்புகளைப்

பேணிய சுமார் எண்பது எழுத்தாளர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்கியக்கடிதங்களும், முருகபூபதி சிலருக்கு எழுதிய கடிதங்க ளினதும் இத்தொகுப்பு நூலில் இடம்பெற்றுள்ளன. இந்நூல் 2001ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியா முகுந்தன் பதிப்பக வெளியீடாக வெளிவந்த இந்நூல் பற்றி மகேந்திராஜா பிரவீணன் 'தினகரன் வாரமஞ்சரி'யில் பின்வருமாறு எழுதி யிருந்தார்.

> "...தேடிச்சோறு நிதந்தின்னும் வேடிக்கை மனிதரைப் போல நாம் வீழ்ந்துவிடப் போவதில்லை. இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கு எம்மால் முடியும். சூழ்ந்து நிற்கின்ற துயர இருளின் மத்தியிலும், எதிர்காலத்தின் மீதான நம்பிக்கை ஒளியாகப் பிரகாசிப்பதற்கு எம்மால் முடியுமென்று இக்கடிதங்களை எழுதிய பேனாக்கள் முரசு கொட்டுகின்றன. இத்தொகுப்பு கூறும் செய்தி இதுதான்.
>
> உண்மை கொடிதே. உலகில் அதனுடனே
> போரிட்டு வாழப்புகுந்தோம், புலம்புவதோ?
> வீரிட்டலறி விழுந்து புரளுவதோ?
> பார் எட்டுத்திக்காய்
>
> ஈழத்து மகாகவியின் வீரம், இக்கடிதங்களில் எதிரொ லிக்கின்றது..."

மல்லிகை ஜீவா நினைவுகள் (கட்டுரைத் தொகுதி)

முருகபூபதியை 1972ஆம் ஆண்டு மல்லிகை இதழ் மூலம் இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் மல்லிகை அவருக்கு 75 வயது பூர்த்தியாகி பவளவிழா கொண்டாடப்பட்ட வேளையில், அவருடன் நீடித்த இலக்கிய உறவினை சான்றா தாரங்களுடன் பதிவு செய்த நூல் 'மல்லிகை ஜீவா நினைவுகள்' எனும் கட்டுரைத் தொகுப்பு நூலாகும். இந்நூல் 2001ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியா முகுந்தன் பதிப்பக வெளியீடாக வெளிவந்தது. இந்நூல் பற்றி வாசுகி ஞாயிறுதினக்குரலில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

...மல்லிகை ஜீவாவுடனான தனது 30 ஆண்டுகாலப் பழக்கத்தினையும் அதனால் தான் பெற்ற அனுபவத்தினையும் தனக்குரிய இலக்கிய நயத்துடன் வெளிப்படுத்துகிறார் ஆசிரியர். இவ்வெளிப்பாடு தகவல் தருவதாக மட்டுமல்ல அவருக்கு இலக்கியத்திலும் அதனை எழுதுவதிலுமிருந்த ஆர்வத்தினையும் சந்தர்ப்பங்கள் நேராத போது எழுந்த ஆதங்கத்தையும் காட்டுகிறது..."

எம்மவர் (எழுத்தாளர் விபரத்திரட்டு நூல்)

அவுஸ்திரேலியாவில் 2001ஆம் ஆண்டு தமிழ் எழுத்தாளர் விழாவை (Tamil Writers Festival) தொடக்கிவைத்த முருகபூபதி, அவுஸ்திரேலியாக் கண்டத்தில் வசிக்கும் தமிழ் எழுத்தாளர்கள், ஓவியக்கலைஞர்கள் பற்றிய விபரங்களைப் பதிவுசெய்து எழுதிய நூல் இதுவாகும். புலம் பெயர் ஈழத்துத் தமிழர்கள் தாம் புலம்பெயர் தேசங்களில் தாம் சார்ந்த துறைகளினூடாக தமிழ் வளர்க்க பாடுபடுகின்றார்கள். அவுஸ்திரேலியாவிலும் அத்தகைய விசாலமானோர் காணப்படுகின்றனர். அவர்களை இனங்கண்டு 'எம்மவர்' தொகுப்பில் முருகபூபதி ஆவணப்படுத்தியிருப்பது மிகவும் உயர்வானவொரு செயற்பாடாகும். இதுபோல புலம்பெயர் ஏனைய நாடுகளிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுமாயின் எம்மவர்களின் தமிழ் வளர்க்கும் பணிகளை இலகுவாக இனங்கண்டு கொள்ளக் கூடியதாக இருக்கும். இந்நூல் 2003ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியா முகுந்தன் பதிப்பக வெளியீடாக வெளிவந்தது.

பறவைகள் ( நாவல்)

தாய் நாட்டைவிட்டு உலகின் எந்தப் பாகத்திற்கு புலம் பெயர்ந்து சென்றாலும் - தாய்நாடு எவருக்கும் சொர்க்கமானதுதான். பறவைகள் உயரத்தில் வட்டமிட்டுப் பறந்தாலும் ஆகாரத்திற்காக தரைக்கு வந்துதான் தீரவேண்டும். இந்தச் சிந்தனைகளுடன் முருகபூபதி எழுதிய முதலாவது நாவல் இது. இந்நாவல் 2001ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியா முகுந்தன் பதிப்பக வெளியீடாக வெளிவந்தது. புலம்பெயர் மக்களின் உணர்வுகள் இந்நாவலில் தத்ரூபமான முறையில் சித்திரிக்கப்பட்டிருந்தன.

இந்நாவல் தமிழகத்தின் பிரபல எழுத்தாளரும், பாரதி இயல் ஆய்வாளருமான தொ.மு.சி. ரகுநாதனுக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டது. பறவைகள் நாவலுக்கு 2003ஆம் ஆண்டு இலங்கை அரசின் தேசிய சாகித்திய விருது கிடைத்தது. அப்போதைய இலங்கைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முருகபூபதிக்கு இவ்விருதை வழங்கினார்.

தமிழ்நாடு தஞ்சாவூர் பல்கலைக்கழக மாணவி ஒருவர் பறவைகள் நாவலை தமது MPhil பட்டத்திற்காக ஆய்வு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இந்நாவல் பற்றி பரிதி மகள் ஞாயிறுதினக்குரலில் பின்வருமாறு எழுதியிருந்தார்.

> "...புலம்பெயர்ந்து வாழும் குடும்ப அங்கத்தவர்களினதும் யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்து நீர் கொழும்பில் வாழமுனைகின்ற இருவரது மன அவசங்களும் பறவைகள் நாவலை நகர்த்திச் செல்கின்றன. சாதாரண ஒரு வாழ்வை வாழ்ந்து பார்க்கத் துடிக்கும் ஒரு பெண் - "எனக்கென்று ஒரு துணை – குடும்பம் - பிள்ளைகள் - கடைக்குச் செல்ல – கோயில் வழிபட – கொஞ்சிமகிழ – உறவாடி ஸ்பரிசிக்க – சண்டை பிடித்து ஊடலில் பேசாதிருக்க – ஊடல் மறைந்து நெருக்கம் அதிகரித்து பரஸ்பரம் திருப்திப்பட்டுக் கொள்ள துணையே கிடைக்காதா?" என்று ஏங்கும் ஏக்கம் எங்கள் சமூகத்தில் எத்தனை ஆயிரம் பெண்களை இன்னும் வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது. ஒரு நல்ல நாவலைப் படித்த திருப்தி பறவைகளைப் படிக்கும் ஒவ்வொருவருக்கும் ஏற்படும் என்பது உறுதியே...."

**அம்பி வாழ்வும் பணியும் (ஆய்வு நூல்)**

'ஓடிடும் தமிழா! நில் நீ ஒரு கணம் மனதைத்தட்டு
வீடு நின்னூருன் சொந்தம் விளை நிலம் நாடுவிட்டாய்
தேடியதெல்லாம் விட்டுத் திசை பல செல்லும் வேளை
பாடிய தமிழை மட்டும் பாதையில் விட்டிடாதே.'

என்று புலம்பெயர்ந்து ஓடும் தமிழர்களுக்கு உருக்கமாக வேண்டுகோள் விடுக்கும் ஈழத்தின் முன்னணி மூத்த தலைமுறை கவிஞர் அம்பி அவர்களுக்கு 75 வயது பூர்த்தியாகி பவள விழா கொண்டாடப்பட்ட வேளையில் அவரது வாழ்வையும் பணிகளையும் விரிவாக ஆய்வுசெய்து முருகபூபதி எழுதிய நூல். கவிஞர் அம்பி தமிழிலும் ஆங்கிலத்திலும் பல நூல்கள் எழுதியுள்ளார்.

ஒருவர் தமது சமுதாயத்திற்கும் தாம்சார்ந்த மொழிக் கும் மகத்தான சேவையாற்றியிருப்பாரேயானால் அவரை, இவர் வாழும்போதே பாராட்டி கௌரவிக்க வேண்டும். அத்த கைய சீரிய பணியை முருகபூபதி செய்துள்ளார். அம்பி அவர்க ளின் வாழ்வு எத்தகையது அவரது பணிகள் எவ்வாறு அமைந்தி ருந்தன என்பதை இந்நூலிலிருந்து நாம் பார்க்க முடிகின்றது. நாம் இதுவரைகாலம் பார்க்காத அறியாத பல தகவல்களை இந்நூல் எமக்குச் சொல்கிறது. இந்நூல் 2003ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியா முகுந்தன் பதிப்பக வெளியீடாக வெளிவந்தது.

**ராஜ ஸ்ரீகாந்தன் நினைவுகள் (கட்டுரைத் தொகுதி)**

சிறுகதை எழுத்தாளரும் மொழிபெயர்ப்பாளரும் பத்திரி கையாளருமான ராஜ ஸ்ரீகாந்தன், முருகபூபதியின் நீண்டகால நண்பர். எதிர்பாராதவிதமாக அவர் இறந்தார். இறுதியாக அவர் தினகரன் பத்திரிகையில் பிரதம ஆசிரியராகப் பதவி வகித்தார். 'கலாசாரம்' கதைத் தொகுப்பின் ஆசிரியர். அழகு சுப்பிரமணியத்தின் பல ஆங்கிலச் சிறுகதைகளை தமிழில் மொழிபெயர்த்து 'நீதிபதியின் மகன்' என்ற பெயரில் வெளியிட் டார். 'சூரன் சரிதை' என்ற நூலின் பதிப்பாசிரியர். இவரது மறைவையடுத்து முருகபூபதி எழுதிய நூல் இதுவாகும். இந்நூல் 2005ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியா முகுந்தன் பதிப்பக வெளியீடாக வெளிவந்தது. இந்நூல் பற்றி அன்னலக்ஷ்மி இராஜதுரை வீரகேசரி – கலைக்கேசரியில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

"...இலக்கிய உலகிலும், சொந்த வாழ்விலும் முருகபூபதியும் ராஜ ஸ்ரீகாந்தனும் மிக நெருங்கிய நண்பர்கள். நண்பனின் பிரிவுத்துயரைத்தாங்காத முருகபூபதி தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ளவும், நண்பருடனான நினைவுகளை ஏனைய இலக்கிய நெஞ்சங்களுடன் பகிர்ந்து ஆறுதலடையவும் அதேவேளை, இந்நூலினால் கிடைக்கக்கூடிய வருமானத்தை துயருற்றிருக்கும் நண்பரின் மனைவி மற்றும் இரு பெண்பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்திற்கு உதவும் முகமாகவும் இந்நூலை எழுதி வெளியிட முன்வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது..."

**கங்கை மகள் (சிறுகதைத் தொகுதி)**

முருகபூபதியின் ஐந்தாவது சிறுகதைத் தொகுதி இதுவாகும். மல்லிகைப்பந்தல் வெளியீடாக இது 2005ஆம் ஆண்டில் வெளிவந்தது. புலம்பெயர்ந்த தமிழர்களின் புகலிடச் சூழலையும் பல்தேசியக்கலாசார வாழ்வையும் சித்திரிக்கும் கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இச்சிறுகதைத் தொகுதி தொடர்பாக ரேணுகா தனஸ்கந்தா அவுஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் 'உதயம்' பத்திரிகையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

"...அவுஸ்திரேலியாவில் நம்மவரின் வாழ்க்கைமுறை அவரது சிறுகதைகளுக்கு களமாகிறது. நுளபாகம் என்ற சிறுகதை தனது சமையல் திறமைப்பற்றி திருமணத்திற்கு நிச்சயிக்கப்பட்ட பெண்ணிடம் புளுகி திருமணத்திற்குப்பின்பு நிரந்தர சமையல்காரனாகும் கணவனின் வாழ்க்கையை நகைச்சுவையுடன் சொல்கிறது. கோயில் கூட்டங்களில் சண்டை வந்தால் புதிதாக ஒரு கோயில் தோன்றும் - அவுஸ்திரேலியாவில் சைவக்கோயில்கள் புதிது புதிதாக தோன்றுவதை இப்படி நகைச்சுவையாக சொல்கிறார்...."

நினைவுக்கோலங்கள் (சிறுகதைகள்)

முருகபூபதியின் இளமைக்கால நினைவுகளையும் பால்ய பருவத்து வாழ்வுக் கோலங்களையும் சித்திரிக்கும் சிறுகதைகளின் தொகுப்பு இதுவாகும். 'கடந்து வந்த பாதையை மறப்போமேயானால் செல்லும் பாதையும் இருட்டாகி விடும்' என்ற சிந்தனைவயப்பட்டு கடந்த காலத்தை இரைமீட்டிய கதைகள். இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள 14 கதைகளில் 13 கதைகள் முன்னர் எந்த வொரு இதழ்களிலும் பிரசுரமாகாதவை என்பது குறிப்பிடத்த க்கது. இது 2006ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியா முகுந்தன் பதிப்பக வெளியீடாக வெளிவந்தது. இச்சிறுகதைத் தொகுதி பற்றி 'ஞானம்' சஞ்சிகையில் ஜெயசக்தி பத்மநாதன் பின்வரு மாறு குறிப்பிட்டிருந்தார்.

> "...இழந்துபோன தனது கடந்த கால வாழ்வின் அழகு களை மீட்டுப்பார்க்கும் நினைவுப்பதிவாக அவரது கதைகள் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. இந்நூலில் இடம் பெறும் 14 கதைகளிலும் இழையோடியிருப்பதெல்லாம் எளிமையான வாழ்வு முறை. நேர்மையும் அன்பும் ஆதரவும் கலந்த அக்கம் பக்கம் அதனூடாக வெளிப் படுத்தப்படும் தனிமனித குண வெளிப்பாடுகள்.
>
> கதைகள் இயல்பான ஓட்டத்தோடு இலகுவான நடை யில் அழகாக அமைந்துள்ளன. அந்தக் கதைகள் போகின்ற போக்கில் - சொல்லாத செய்திகள் - சிலவற்றையும் சொல்லிச் செல்கின்றன...."

முருகபூபதி தொகுப்பு நூல்கள்:-

சுயமாக பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ள முருகபூபதி அவர்கள் சில தொகுப்பு நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

**நம்மவர்**

முருகபூபதியின் இலக்கிய எழுத்துலப் பிரவேச வெள்ளி விழா 1997ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா மெல்பன் நகரில் நடைபெற்றது. இச்சந்தரப்பத்தில் மூத்த படைப்பாளிகளும், கலைஞர்களுமான எஸ்.பொன்னுத்துரை, கவிஞர் அம்பி, அண்ணாவியார் இளைய பத்மநாதன், ஓவியர் கே.ரி. செல்லத் துரை ஆகியோர் பாராட்டி விருது வழங்கி கௌரவிக்கப் பட்டனர். இவர்களைப் பற்றி கட்டுரைகள், நேர்காணல்கள் இடம்பெற்ற 'நம்மவர்' தொகுப்பு நூலை முருகபூபதி இவ் விழாவில் வெளியிட்டார்.

**உயிர்ப்பு**

அவுஸ்திரேலியாவில் முன்னர் வசித்து தற்போது இங்கு தொடர்ந்தும் எழுதிக் கொண்டிருக்கின்ற 20 சிறுகதை எழுத்தாளர்களின் தேர்ந்தெடுத்த கதைகளின் தொகுப்பு 'உயிர்ப்பு'. 2006 ஆம் ஆண்டு நடந்த எழுத்தாளர் விழாவில் வெளியிடப்பட்டது. இது அவுஸ்திரேலியா தமிழ் இலக்கியக் கலைச்சங்க வெளியீடாகும்.

**வானவில்**

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் சுமார் 31 கவிஞர்களின் கவிதைகளைக் கொண்ட தொகுப்பு 'வானவில்'. இந்நூல் 2007ஆம் ஆண்டு நடந்த ஏழாவது எழுத்தாளர் விழாவில் வெளியிடப்பட்டது. இதுவும் அவுஸ்திரேலியா தமிழ் இலக்கியக் கலைச்சங்க வெளியீடாகும்.

**முருகபூபதியின் படைப்புகள்**

முருகபூபதியின் நூல்களைப் பற்றி இலங்கைப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் புலம்பெயர் நாடுகளிலுள்ள இதழ்கள், இணையத்தளங்கள் ஆகியனவற்றில் பதிவான விமர்சனங்கள் தொகுக்கப்பட்டு இரண்டு பாகங்களில் வெளியா கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இதன் முதலாவது பாகம் முருகபூபதியின் படைப்புகள் பாகம் 01 என 1997ஆம் ஆண்டு வெளிவந்தது. 2001ஆம் ஆண்டில் முருகபூபதியின் படைப்புகள் பாகம் 02 வெளிவந்தது.

முருகபூபதியின் இலக்கியப் பயணத்தின் 2007 வரை வெளிவந்த நூல்களே மேலே தரப்பட்டுள்ளன. அவரின் இலக்கியப் பயணம் தொடர்ந்தும் சிறப்பாக நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றது. இவரின் இலக்கியப் பயணத்தில் இரண்டு தடவைகள் இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றுள்ளதோடு, இவரின் இலக்கியப் பணியை கௌரவித்து விக்டோரியா மாநில ஈழத் தமிழ்ச்சங்கம் 1998ஆம் ஆண்டு விருது வழங்கியது. 2002ஆம் ஆண்டில் விக்டோரிய டொரபின் மாநகரசபை அவுஸ்திரேலியா தினத்தன்று சிறந்த பிரஜைக்கான விருதை வழங்கி கௌரவித்தது. 2004ஆம் ஆண்டில் மெல்பன் தமிழ்ச் சங்கம் ஆறுமுக நாவலர் விருது வழங்கி கௌரவித்தது. இதேயாண்டில் இலங்கை நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி முதல் மாணவனுக்கான பொன்விழா விருதையும் வழங்கியது.

அவுஸ்திரேலியா தமிழ் அகதிகள் கழகத்தில் ஸ்தாபக உறுப்பினரும், இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் ஸ்தாபக உறுப்பினரும், அவுஸ்திரேலியா தமிழ் ஒன்றியத்தின் ஸ்தாபக உறுப்பினரும், அவுஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் ஸ்தாபக உறுப்பினருமான இவர், அவுஸ்திரேலியா தமிழ் எழுத்தாளர் விழா பிரதம அமைப்பாளராகவும் செயலாற்றியுள்ளார். தற்போது இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் நிதிச் செயலாளராகவும், அவுஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் தலைவராகவும் செயற்பட்டுவரும் இவர், அவுஸ்திரேலியா தமிழ் ஒன்றியம் வெளியிட்ட "அவுஸ்திரேலியா முரசு" காலாண்டு இதழின் ஆசிரியக் குழுவிலும் பணியாற்றியுள்ளார். அவுஸ்திரேலியாவிலிருந்து 10 ஆண்டுகளுக்கும் மேலாக வெளிவரும் 'உதயம்' மாத இதழின் ஆசிரியர் குழுவில் தற்போது பணியாற்றி வருகின்றார். இவரின் முகவரி:-

**Letchumanan Murugapoopathy**
**170, Hothlyn Drive, Craigieburne**
**Victoria – 3064**
**Australiya**
**+61-(03) 9308 1484**
**letchumanan@gmail.com**

# சக்தீ. அ. பாலஐயா



பதிவு

**328**

**எழுத்துத்துறை**

இலங்கையில் மத்திய மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட மூத்த கவிஞர்: நலிவுற்ற மக்களின் ஏக்கத்துக்காக அரைநூற்றாண்டுக்கும் மேலாக வீச்சுமிக்க தமது எழுத்துக்களாலும், வீராந்த பேச்சுக்களாலும் சிறந்த பணியாற்றி வருபவர். கைதேர்ந்த ஓவியர். பல்கலைகளிலும் ஆற்றல் வாய்ந்த கலைஞராவார். கொழும்பு நுண்கலைக் கல்லூரியில் போதனாசிரியராகப் பணிபுரிந்து சிற்பம், சித்திரம், வண்ண வேலைகள் தொடர்பான துறைகளில் பல கலைஞர்களை உருவாக்கியவர். மும்மொழி வல்லுனர். சிறந்த மொழிபெயர்ப்பாளர் என பல்துறையிலும் புகழுக்குரிய சக்தீ. அ. பாலஐயா இன்று நோய்வாய்ப்பட்ட நிலையில் இருந்தாலும் மலையக மக்கள் எழுச்சிக்கு பாடுபட்டவர்.

இலங்கையில் மத்திய மலையகத்தில் விஸ்வநாதர், இலக்குமி அம்மை தம்பதியினரின் புதல்வராக 1925ஆம் ஆண்டு ஜுலை 26 ஆந் திகதி நுவரெலியா மாவட்டத்தில் பிறந்த

பால ஐயா தனது பத்தாவது வயதிலேயே 'பாரதியின் தாக்கம்' என்னும் தலைப்பில் தனது முதல் கவிதையை எழுதினார். காந்தி பக்தராகவும் கதராடை அணிபவராகவும், இந்திய விடுதலை இயக்கத்தில் பங்கு கொண்ட தலைவர்களின் ஆற்றல், பெருமை, தியாகம் ஆகியவை பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வம் மிக்கவராகவும் அந்தப் பத்து வயதிலேயே இவர் இருந்திருக்கின்றார் என்பது ஆச்சரியத்தைத் தருகின்றது.

பத்து வயதிலேயே பாட்டெழுதத் தொடங்கினாலும் அதை அவர் ஏனோ தொடரவில்லை. ஓர் ஓவியராகவே தன்னைத் தயார்படுத்திக் கொண்டு வந்தார். ஆனாலும், இவருக்குள்ளே ஒரு கவிஞன் உருவாகிக் கொண்டே இருந்தான்.

படிப்பை முடித்துக் கொண்ட சக்தீ ஓர் ஓவியராகவே தனது வாழ்வைத் தொடங்கினார். ஒரு Commercial Artist ஆகத் தொழிலை மேற்கொண்ட இவர் ஒரு சில நூல்களுக்கும், சஞ்சிகைகளுக்கும் அட்டைப் பட ஓவியங்கள் வரைந்துள்ளார். வீரகேசரியின் ஆசிரியர் திரு. லோகநாதனின் சிறுகதைத் தொகுதி – சீ.வி. நடத்திய 'கதை' என்னும் சஞ்சிகை போன்றவைகளை சில உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

இலங்கை அரசின் நுண்கலைக் கல்லூரியில் 1943 – 1944 ஆம் ஆண்டுகளில் கலை ஆசிரியராக பயிற்சி பெற்ற இவர் ஆங்கிலக்கலை ஆசிரியராகவும், விரிவுரையாளராகவும், ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் அரசாங்கக் கலைக் கல்லூரி யில் விரிவுரையாளராகவும் 1951வரை பணிபுரிந்துள்ளார்.

'Ceylon Teachers College' மற்றும் 'Hay Wood's College Of Fine Arts' ஆகிய கலைக் கூடங்களில் ஆசிரியராகவும், விரிவுரையாளராகவும் பணியாற்றிய சக்தீயின் ஓவியக் கண்காட்சிகள் கொழும்பிலும் பிற இடங்களிலும் 1948 – 49 ஆம் ஆண்டுகளில் பிரசித்தம் பெற்றன. காலப்போக்கில் இவரது சிந்தனைகள் கவிதைக்கு வித்திட்டன. 1949க்குப் பின் வீராவேசம் கொண்ட இவருடைய கவிதைகளும், கட்டுரை இத்தியாதி

எழுத்துக்களும் வீரகேசரி, தினகரன், சுதந்திரன், ஈழநாடு போன்ற ஏடுகளில் அடிக்கடி பிரசுரம் பெற்றன. கல்கி மற்றும் சி.என். அண்ணாத்துரை அவர்களின் திராவிட நாடு போன்ற தமிழக ஏடுகளிலும் சக்தீயின் எழுத்துக்கள் இடம்பெற்றன.

ஓவியக் கலைஞர்கள் பற்றிய வரலாற்று கட்டுரைகளையும், ஓவியங்கள் கூறும் தத்துவங்கள் பற்றியும் விரிவாக பத்திரிகைகளில் எழுதியுள்ளார். வீரகேசரி பத்திரிகையில் துணை ஆசிரியராகவும் 'தமிழ் ஒலி'யின் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். இவரது சொந்த பத்திரிகையான "வளர்ச்சி" யில் 1956ம் ஆண்டில் எழுதிய எழுச்சிமிகு கட்டுரைகளை தமிழகத்தில் 'திராவிட நாடு' மறுபிரசுரஞ் செய்துள்ளது.

சமூக மறுமலர்ச்சி இயக்கம் என்பதன் ஒரு துணை விளைவாகவே ஆரம்பகால மலையக இலக்கியங்கள் தோன்றியிருக்கின்றன என்னும் உண்மை மலையக இலக்கியம் பற்றிய ஆரம்பத் தேடல்களில் ஈடுபட்டுள்ள அனைவருமே உணர்ந்துவரும் ஒரு முக்கியமான விடயமாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலக் கோப்பித் தோட்டக் குடியேற்றத்திலிருந்து; பிந்திய தேயிலைத் தோட்டக் குடியேற்றக் காலத்திலிருந்தும் இத்தென்னிந்திய மக்கள், மலையகத் தொழிலாளர்கள் பட்டதுன்ப துயரங்களும் அனுபவித்த வேதனைகளும்; பட்டாளத்துக் கட்டுப்பாடுகள் போன்ற வெள்ளைக் காரர்களின் இராணுவ அடக்கு முறைகளும் எழுத்திலடங்காதவைகள்.

தங்களின் சக்தி உணராமல்; உழைப்பின் பயன் உணராமல் சோர்ந்தும் சோம்பியும் கிடந்த இவர்களைத் தட்டி எழுப்புவதையே குறிக்கோளாகக் கொண்டதாய்க் கிளம்பியதே மலையக இலக்கியம். இவ்வெழுத்து முயற்சிகளின் முன்னோடிகளாக விளங்கும் கோ. நடேசய்யர், சி.வி. வேலுப்பிள்ளை, கே. கணேஷ், சக்தீ பாலையா போன்றவர்கள் சமகாலத்தவர்கள். இவர்களுடைய சிந்தனைகளும் ஒன்றாகவே இருந்திருக்கின்றன.

இந்த மக்களின் விழிப்பு; விடிவு; சுதந்திரச் சமத்துவம் ஆகியவைகளே இவர்களுடைய எழுத்துப் பணிகளின் முனைப்பான அம்சங்களாக இருந்தன. 'நடேசய்யரின் சாதனைகள்' என்று நிறைய விஷயங்களை தனது கட்டுரைகள் மூலம் வெளியிட்டவர் மக்கள் கவிஞர் சி.வி.

சி.வி. க்கு பரவலான அறிமுகத்தினையும் ஏகோபித்த புகழையும் கொடுத்த 'In Ceylons Tea Gardens' எனும் ஆங்கிலக் கவிதை நூலை 'தேயிலைத் தோட்டத்திலே' என்று தமிழாக்கித் தந்தவர் கவிஞர் சக்தீ.அ. பாலையா. இந்தத் தமிழாக்கம் வீரகேசரியில் தொடராகப் பிரசுரிக்கப்பட்டது. பிறகு செய்தி ரா.மு. நாகலிங்கம் அவர்களால் செய்தி பதிப்பகம் மூலம் நூலாக வெளியிடப்பட்டது. (ஆங்கில மூலம் 1954- மொழி பெயர்ப்பு 1969)

"கவிஞர் சி.வி. வேலுப்பிள்ளை அவர்களின் கவிதைத் தொகுதியைத் தமிழாக்கும்போது கவிஞரவர்களின் உள்ளத்தையும் உணர்வையும், ஏழ்மையில் வாடும் மலையத் தொழிலாளர்களின் பால் அவர் கொண்டிருக்கும் பாசமும் பரிவும் அலைத்திரல்களாக எனது சிந்தனைகளைத் தழுவித் தொடர்ந்தன....

''கவிஞரின் ஆங்கிலக் கவிதைகளைத் தமிழ்க் கவிதையாக்கும்போது அவரது மூலக் கருத்துணர்வில் கலந்திட விழைந்திருக்கின்றேன். கருத்தாழம் வழுவாதிருந்திடக் கவிஞரின் கவிதைகளில் ஊடுருவும் மலையக மக்களின் உணர்வாம் கருப் பொருளைத் தழுவியே தமிழ்க் கவிதைகளை தந்திட முயன்றிருக்கின்றேன்...." என்று இந்த நூலுக்கான முன்னுரையில் சக்தீ குறிப்பிட்டிருந்தார்.

1963ல் தினகரனின் 'கலை மண்டலம்' பகுதியில் 'மேல் நாட்டு ஓவியர்கள்' என்னும் தலைப்பில் பல ஆக்கங்களைப் படைத்துள்ளார். அதே காலகட்டத்தில் சுதந்திரனில் 'மலை நாட்டு அறிஞர்கள்' என்னும் தலைப்பில் தொடர்ந்து பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.

சக்தீ பாலையா; தனிவழிக் கவிராயர்; மலையரசன்; லக்ஷ்மி ஆகிய புனைப் பெயர்களிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. இவர் தமிழ் ஒளி (1954) வளர்ச்சி (1956) ஆகிய சஞ்சிகைகளையும் வெளியிட்டுள்ளார்.

1956ன் அரசியல் கெடுபிடிகள் பற்றி நாம் அறிந்ததே. சிங்களம் மட்டும் சட்டத்தின் மூலம் தமிழுரிமை பறிக்கப்பட்டு சிங்களப் பேரினவாதம் முனைப்புப் பெற்ற காலம் அது.

அரசின் பேரினவாதத்திற் கெதிராகவும் அரசியல்வாதிக ளையும், சிங்களத் தலைவர்களையும் நேர்மையான வழியில் நடக்கும் படியும் அறிவுறுத்துவதற்காக வென்றே சக்தீ பாலையா அவர்கள் இந்தப் பத்திரிகையைத் தொடங்கி நடத்தினார். 'வளர்ச்சி' பத்திரிகையின் அன்றைய ஆசிரியத் தலையங்கங்கள் மிகவும் காத்திரமானதாகவும், காரசாரமானதாகவும் இருந்தன. அவற்றின் முக்கியம் கருதி அறிஞர் அண்ணாவின் "திராவிட நாடு" இத்தலையங்கங்களை மீள் பிரசுரம் செய்து வந்தது.

1948ல் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தகையுடன் மலையக மக்களின் வாக்குரிமை மறுக்கப்பட்டது. இதை எதிர்த்து மலையகத் தலைவர்கள் நடத்திய சத்தியாக்கிரகத்தில் சக்தீயும் கலந்துகொண்டார்.

1956ன் சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து 1957ல் தமிழ்த் தலைவர்கள் நடத்திய எதிர்ப்புக் கூட்டங்களிலும் இவர் கலந்து கொண்டார். 'மனோதத்துவமும் கலையும், போதனா முறையும்' என்னும் பயிற்சி நூலினை 1952ஆம் ஆண்டு வெளியிட்டார்.

'சொந்த நாட்டினிலே' என்னும் தேசியப் பாடல்கள் அடங்கிய நூலினை மொழியுரிமைக்காக 1956ல் வெளியிட்டார். வீரகேசரியின் துணை ஆசிரியராகச் சில காலமும் சி.வி.யின் "மாவலி" சஞ்சிகையின் இணை ஆசிரியராகச் சிலகாலமும் பணிபுரிந்துள்ளார்.

1960களின் ஆரம்பத்தில் 'இந்திய வம்சாவழிப் பேரவை' என்னும் அமைப்பினைத் தொடங்கி மலையக மக்களின் நிலைமைகளை இந்திய இலங்கை அரசினர்களுக்கு அறிவிப்பதன் மூலம் அவர்களின் பிரச்சினைகளுக்கான விடிவுகளைத் தேட ஒரு வழி சமைத்தார்.

1981ல் பஸ்ஸிலிருந்து விழுந்து ஒரு கோர விபத்துக்குள்ளானார் சக்தீ. அது பற்றி அவர் கூறுகையில், அவரது மன உறுதியும், வாழ்வின் மீதான அவரது திடமான நம்பிக்கையும், திண்மையும் புலனாகிறது.

'நான் பஸ்ஸினடியில் கிடக்கின்றேன். நான் கிடப்பது பஸ் சாரதிக்குத் தெரியாது. இடது காலின் மேல் பஸ்ஸின் பின் சில்லு ஏறியபோது கால் எலும்புகள் கரகரவென நொறுங்கும் மெல்லிய ஓசை எனக்குத் தெளிவாகக் கேட்டது. சில்லு படிப்படியாக எனது முழங்கால், தொடை என்று ஏறி கத்த முடியவில்லை. சத்தம் வர மறுக்கிறது. அப்போது தான் யேசுநாதரின் கிருபையால் அது நடந்தது. யாரோ எனது நெஞ்சுக்குள் புகுந்து தொண்டை வழியாக வெளியேறி கத்து; கத்து; என சத்தமிட்டார்கள். கத்தினேன். பஸ்ஸின் சில்லு அசையாமல் நின்றுவிட்டது. என்னை எப்படி வெளியே எடுத்தார்கள் என்ன செய்தார்கள். ஒன்றுமே தெரியவில்லை. ஆஸ்பத்திரியில் கிடந்தேன்.

மாதக்கணக்கில் மருத்துவமனைக் கட்டில் பிறகு இரண்டு கால்களையும் முழங்காலுடன் வெட்டினால் தான் உயிர் பிழைப்பேன் என்றார்கள் டாக்டர்கள். இரண்டு கால்களையும் இழந்த பிறகு நான் எப்படி வாழ்வது. பிடிவாதமாக மறுத்து விட்டேன். மரணத்துடன் வருடக்கணக்கில் போராடி பலவிதமான சுய வைத்தியங்கள் செய்தேன்.

பிறகு மெதுவாக ஊன்று கோல்களுடன் எழுந்து நடமாடினேன் என்று கூறும் சக்தீ இப்போது ஊன்றுகோலினையும் வீசி எறிந்துவிட்டு மிகவும் சாதாரணமாக எதுவுமே நடவாதது போல் மீண்டும் தனது வேலைகள், இலக்கியக் கூட்டங்கள் என்று உலாவருகின்றார்.

இவரது கலை இலக்கியப் பணிகளுக்காக அரசாங்கம் கவிச்சுடர் பட்டமளித்துக் கௌரவித்தது (1987). தமிழ் ஒளிபட்டமும் விருதும் 1993ல் வழங்கப்பட்டது. இலங்கை கம்பன் கழகம் 1998ஆம் ஆண்டு "மூதறிஞர்" விருதளித்தது. கலாசார அமைச்சு ''கலாபூஷணம்" விருதும் வழங்கி இவரை கௌரவித்துள்ளது.

தேசிய அருங்கலைச்சபை மற்றும் அரசின் மலையகக் கலாசார மேம்பாட்டுக்குழு ஆகியவற்றின் அங்கத்தவராக இருந்து கவிஞர் சக்தீ பணியாற்றி வருகின்றார். இவர் இதுவரை எழுதியுள்ள நூல்களாவன


- மனோதத்துவமும் கலையும் போதனா முறையும் 1952
- சொந்த நாட்டிலே – தேசிய கீத நூல் 1956
  தேயிலைத் தோட்டத்திலே – மொழிபெயர்ப்புக் கவிதை நூல் 1969
- சக்தீ பாலஐயா கவிதைகள் - துரை வெளியீடு 1998

இவருடைய முகவரி:-

**SAKKTHIE BALA – IAH,**
**64 – 1/20, DAM STREET,**
**COLOMBO - 12**

சக்தீ அ. பால ஐயா அவர்கள் பற்றிய குறிப்புகள் நேரடியாக சக்தி அ. பால ஐயா அவர்களிடமிருந்து பெறப்பட்டதுடன் மேலதிக தகவல்கள் ஞானம் சஞ்சிகையில் இடம் பெற்ற குறிப்புகளைத் தழுவி யும் எழுதப்பட்டது

# திமிலைத்துமிலன்



பதிவு
**329**

**எழுத்துத்துறை**

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், மட்டக் களப்பு தேர்தல் தொகுதி, மன்முனை வடக்கு பிரதேச செயலா ளர் பிரிவில் திமிலதீவு 181 கிராமசேவகர் வசத்தில் வசித்து வரும் சின்னையா கிருஷ்ணபிள்ளை இலங்கையில் புகழ்பெற்ற மூத்த எழுத்தாளர்களுள் ஒருவராவார். கவிதைத்துறையில் திமிலைத்துமிலன், சிறுகதைத்துறையில் மாலதி, மொழியிலக்கி யத்துறையில் ஆழையடிச்சோலையான், பேய் மகன், இளமாலதி ஆகிய பெயர்களில் எழுதிவரும் கிருஷ்ணபிள்ளை ''திமிலைத்து மிலன்'' எனும் பெயரிலே இலக்கியத்துறையில் நன்கு பிரபல்ய மானவராவார். இவர் ஒரு ஓவியரும் கூட. இவரின் ஓவியங்கள் ''கிருஷ்னா'' எனும் பெயரில் இடம்பெற்று வருகின்றன.

சின்னையா, இராசம்மா தம்பதியினரின் புதல்வராக ஏறாவூரில் 1933ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 25ஆம் திகதி பிறந்த கிருஷ்ணபிள்ளை மட்டக்களப்பு மெ.த. வலையிர வுப் பாடசாலை, மட்டக்களப்பு மெதடிக்ஸ் மத்திய கல்லூரி

ஆகியவற்றின் பழைய மாணவராவார். மேலும், தொழில்சார் கல்வியினை மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் மேற்கொண் டார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டப் படிப்புப் பெற்ற இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வித் துறை டிப்ளோமா பட்டம் பெற்றுள்ளார். இவரின் அன்புப் பாரியாரின் பெயர் திலகவதியம்மா. இத்தம்பதியினருக்கு சாருலதா, வல்லவன், பத்மலதா, எழிலி, வாசவன், சுபகணே சன், யுககுஹன் ஆகிய அன்புச் செல்வங்களுளர்.

கற்கும் காலத்திலிருந்தே கவிதைத்துறையில் இவரின் ஈடுபாடு அதிகமாகக் காணப்பட்டது. குறிப்பாக [illegible] அதீத ஆர்வம் காட்டி வந்த [illegible], ஜுயலபாக கவிதைத்துறையில் [illegible] பிழையாகாது. இந்த அடிப்படையில் [illegible] கன்னிக் கவிதை 1950ஆம் ஆண்டு வீரகேசரி பத்திரிகை யில் பிரசுரமானது. கவிதையின் தலைப்பு 'திமிலத் தீவு' என்பதாகும்.

அன்றிலிருந்து இன்றுவரை 5000இற்கும் மேற்பட்ட கவிதைகளை இவர் யாத்துள்ளார் என்றால் இது மிகைப்படுத் தப்பட்ட எண்ணிக்கையாக அமையாது. அதேபோல, 50க்கும் மேற்பட்ட சிறுகதைகளையும், 100க்கும் மேற்பட்ட பல்வகை சார்ந்த கட்டுரைகளையும், ஆய்வுகளையும் இவர் எழுதியுள் ளார். இவை இலக்கியம், வரலாறு, தொழில், நேர்காணல், வாய்மொழி இலக்கியம், கல்வி, ஒப்பீட்டு அய்வு என்பன சார்ந்தவை. இவரின் இலக்கியக்காவியங்கள் பின்வரும் சஞ்சிகைகளில் தொடராக வெளிவந்துள்ளன. அவை: கொய்யாக் கனிகள் - கதம்பம், தேன்மொழி விவேகி, அத்தான் எனக்குத்தான் - அமுதம், கன்னத்தில் நீயறைந்தால் (முத்தமிழ்க் காவியம்).அதே போல **கவிதை கூறும் சிறுகதைகளாக** சிறுவர்க்கு ஏற்ற வகையில் சிறுகதைகளை கவிதை உருவில் வீரகேசரி முதலிய பத்திரிகைகள், சஞ்சிகைகளில் 30க்கும் மேல் எழுதியுள்ளார்.

இவரின் இத்தகைய ஆக்கங்கள் இலங்கையில் மட்டு மல்லாமல் தமிழ்நாட்டிலும் பிரபல்யம் பெறலாயிற்று. வீரகேசரி,

சுதந்திரன், கதம்பம், மலர், கல்கி, ஆனந்தவிகடன், தாமரை, தென்றல், கலைமகள், ஈழகேசரி, ஈழநாடு, கலைச் செல்வி போன்ற நூற்றுக்கணக்கான ஈழத்து, இந்திய தேசிய இதழ்களிலும், சஞ்சிகைகளிலும் இவரின் ஆக்கங்கள் பிரசுரமா கியுள்ளன. மேலும், இலங்கை வானொலி, இலங்கை ரூபவா ஹினி ஆகியவற்றிலும் ஒலி/ஒளிபரப்புச் செய்யப்பட்டுள்ளன.

இவரின் இலக்கியப் பணியின் முக்கிய கட்டங்களை பின்வருமாறு சுருக்கமாக தொகுத்து நோக்கலாம்.

**மேடை நாடகங்கள்:**

''முல்லைக்குமரி'', ''அழைத்தது நீதானா'', ''விதியின் பிழை'', ''டிபஸ்'', ''மலர்விழி'' போன்ற சுமார் 30க்கும் மேற் பட்ட நாடகங்களை எழுதியுள்ளார். இவற்றை அவ்வப்போது திமிலை நளினகலாமன்றமும் வேறு சில மன்றங்களும் மேடையேற்றியுள்ளன.

**வானொலி நாடகத் தொடர்:**

''முத்தொள்ளாயிரம்'', ''சாந்தினி'', ஆகியன இலங்கை வானொலியில் தொடராக ஒலிபரப்பப்பட்டன.

**தொலைக்காட்சி நாட்டிய நாடகம்:**

''நீதியின் நிழல்கள்'' ரூபவாஹினியில் ஒளிபரப்பாகியது.

**வீடியோ நாடகம்:**

''குறிஞ்சி மலர்கள்'' இன்னும் வானொலிக் கவியரங் குகள் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நடந்த கவியரங்குகள் என 200க்கும் மேல் பங்குபற்றிக் கவிதை மழை பொழிந்துள்ளனர். இத்தோடு வானொலியில் நடந்த கருத்தரங்குகளில் 20க்கும் மேல் பங்குபற்றியுள்ளார். பல்வகை சார்ந்த வானொலிப் பேச்சுக்களிலும் தனது பங்களிப்பை நல்கியுள்ளார்.

## ஓவியம்:

இவரது அடுத்த ஒரு முகம் ஓவியம் சார்ந்தது. ''கிருஷ்ணர்'' என்ற பெயரில் பல ஓவியங்கள் வரைந்துள்ளார். பல போட்டிகளில் பங்குபற்றிப் பரிசில்கள் பெற்றுள்ளார். பல பத்திரிகைகளில் சித்திரங்கள், சித்திரத் தொடர்கதைகள் வரைந்துள்ளார். ''கிராம சஞ்சிகை''யில் 200க்கும் மேற்பட்ட சித்திரங்கள் தீட்டியுள்ளார். ''பாரதி ஓவியம்'' சித்திரத் தொடராக வீரகேசரியில் வெளிவந்துள்ளது. முத்தமிழ் ஓவியம் ''மலர்'' சஞ்சிகையில் ''கன்னத்தில் நீயறைந்தால்'' என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இவரது ஓவிய, சிற்ப திறமையை வெளிக்காட்டுவனவாக 1968ஆம் ஆண்டு மட்டக்களப்பில் நடத்த ஓவிய, சிற்பக் காட்சியைக் குறிப்பிடலாம். இவர் கண்ணாடி ஓவியமாக வரைந்த ''சிவக்தி நர்த்தனம்'' முதற்பரிசு பெற்ற குறிப்பிடத்தக்கது.

## வெளியிட்ட நூல்கள்:

*1. நீராமகளிர் (காவியம்)*
*2. கொய்யாக் கனிகள் (காவியம்)*
*3. எல்லாம் எங்கள் தாயகம் (இளைஞர் இலக்கியம்)*
*4. நெஞ்சம் மலராதே (இசைப்பா)*
*5. அழகு முல்லை (கழந்தைக் கவிதை)*
*6. மஞ்சு நீ மழைமுகில் அல்ல(1ம்பாகம்) நாவல்*
*7. மஞ்சு நீ மழைமுகில் அல்ல(2ம்பாகம்) நாவல்*
*8. முத்தொள்ளாயிரம் (நாடகம்)*
*9. கவிதை கற்பித்தல் (கல்வி)*
*10. யாப்பும் அணியும் (கல்வி)*
*11. திமிலைத்துமிலன் கவிதைகள் - காதல்*
*12. திமிலைத்துமிலன் கவிதைகள் -சமூகம் (சாகித்திய மன்றப்பரிசு பெற்றது)*
*13. கருமணியிற் பாவாய் (காவியம்) அச்சில்*
*14. பாவலர் ஆகலாம் (யாப்பிலக்கணம்) கல்வி*
*15. அணில் வால் (சிறுகதை) வட. கிழ. மா. பரிசு பெற்றது*

உலகளாவிய இலக்கிய முயற்சியாக ''கலேவலா'' என்னும் பின்லாந்துக் காவியம் தமிழ்மொழியாக்கம் செய்தமையைக் குறிப்பிடலாம்.

இதுவரை இவரது கவிதை, கட்டுரை, காவியம், ஓவியம் என்பவற்றுக்குப் பரிசில்களும், சான்றிதழ்களும் கிடைக்கப் பெற்றுள்ளமை இவரது பல்துறை சார்ந்த திறமையை எடுத்துக் காட்டுகின்றன. அவை:

*01. குழந்தைக் கவிதை: ''வழிதவறிய வண்டு'' - இது சென்னை எழுத்தாளர் சங்கம் தமிழ்கூறும் நல்லுல கெங்கும் நடாத்திய போட்டியில் முதலாம் பரிசு பெற்றது*

*02. கவிதை : 1960ம் ஆண்டளவில் ஆனந்தவிகடன் நடாத்திய நடக்குத் தொழில் கவிதை என்ற போட்டியில் இவர் எழுதிய ''இழப்பு'' எனும் கவிதை பரிசு பெற்றது*

*03. வடக்கு கிழக்கு கல்வி கலாசார அமைச்சு ''மருதநிலா'' மலருக்காக நடாத்திய கவிதைப் போட்டியில் ''குருதிக் கடல்'' என்று இவர் எழுதிய கவிதைக்கு முதலாம் பரிசு கிடைத்தது.*

*04. சிறுகதை : ''கதம்பம்'' சஞ்சிகை தமிழ்கூறும் நல்லுலகெங்கும் நடாத்திய சிறுகதைப் போட்டியில் இவர் எழுதிய ''சீதா தந்த செல்வம்'' என்ற சிறுகதைக்கு பரிசு கிடைத்தது.*

*05. மேடை நாடகம் : பிரதியாக்கம் ''தேனருவி'' நடாத்திய நாடகப் பிரதியாக்கப் போட்டியில் ''முல்லைக் குமரி'' எனும் நாடகப் பிரதியாக்கத்துக்கு தங்கப்பதக்கம் பரிசாகக் கிடைத்தது. இந்நாடகம் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் மேடையேற்றப்பட்டது. அதில் பிரபல ஒளிப்பதிவாளரும், இயக்குனருமான பாலுமகேந்திரா நடித்திருந்தார் என்பதையும் குறிப்பிடலாம்.*

*இலக்கை கலைக்கழகம் நடத்திய நாடகப் போட்டியில் திமிலை நளினகலா மன்றத்தினர் நடித்த ''ஈடிபஸ்'' என்ற மனோதத்துவ வரலாற்று நாடகப் பிரதி இவருடையதாகும்.*

**பாராட்டுக்கள்:**

வாழும் காலத்திலேயே கலைஞர்கள், அறிஞர்கள், புத்திஜீவிகளைப் பாராட்ட வேண்டியது சமூகத்தின் கடனாகும். இது கலைஞர்களுக்கு ஊக்கியாக மேலும் மேலும் அம் முயற்சியில் ஈடுபடத் தூண்டும். அந்த வகையில் ''திமிலைத் துமிலன்'' நிறையவே பாராட்டுக்களையும், பட்டங்களையும் பெற்றுள்ளார். அவை:

மட்டக்களப்பு கலாசாரப் பேரவை ''கவிமணி''
இந்து இளைஞர் மன்றம் (மட்டக்களப்பு) ''கவியரசு''
மட். அசிரியர் கலாசாலை ''கவிகுவபாஸ்கரன்''
இந்து கலாசார அமைச்சு ''தமிழ் ஒளி''

**விருதுகள்:**

வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் விருது
இலங்கைக் கலைக்கழக விருது

இத்துடன் மட்டக்களப்பு சைவநெறிக்கழகம், தமிழ்க் கலாமன்றம் (மட்டக்களப்பு), வின்சன்ற் மகளிர் கல்லூரி என்பன இவரைப் பாராட்டி கௌரவித்துள்ளன. ஆயிரம் முட்டைகளை இட்டும் ஆமை அமைதியாக இருப்பது போன்று இவரும் எந்தவிதமான பந்தாவும் இல்லாமல் அடக்கமாகவும், எளிமையா கவும் இருப்பவர். எந்தவிதமான விளம்பரத்தையும் விரும்பாதவர்.

கவிதைக்கான சாகித்திய மண்டலப்பரிசு (சென்ற ஆண்டுக்கான) பெற்றவர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பி டத்தக்கது. மகாகவி. நீலவாணன், முருகையன் போன்ற கவிஞர் கள் வரிசையில் வைத்து எண்ணக்கூடியவராக இவர் விளங்கு கின்றார். 1978ஆம் ஆண்டில் ஏற்பட்ட சூறாவளியினால் இவரது ஆக்கங்கள் பல இழக்கப்பட்டுள்ளமை ஒரு சோகமான சம்பவ மாகும். இவரது அச்சுவாகனமேறாத நூல்களை அச்சிடுவ தற்கும், கட்டுரைகளைத் தொகுத்து நூலுருப்படுத்துவதற்கும் அறிஞர் பெருமக்கள் முயற்சி எடுக்க வேண்டும்.

தன்னுடைய இத்துனை வளர்ச்சிப் போக்கிற்கு மூலகாரணமாக இருந்தவர்கள் பாரம்பரிய எழுத்தாளர்களும், அவர்களது கவிதைகளுமே என்று அடக்கமாகக் கூறிவரும் இவரின் புகைப்படத்தை "ஞானம்" 102வது இதழ் முகப்பட்டையில் பிரசுரித்து இவரை கௌரவித்தது. தமிழ் வளர்க்க வேண்டும். தமிழ் தொண்டு புரிய வேண்டும் என்ற போக்கில் இன்னும் தமிழ் மொழிக்கும், தமிழிலக்கியத்துக்கும் தன்னை அர்ப்பணித்துள்ள இவரின் முகவரி:-

**112, திமிலதீவு**
**மட்டக்களப்பு, இலங்கை**
**065-2225129**

# ஏறாவூர் தாஹிர்



பதிவு
**330**

**எழுத்துத்துறை**

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், மட்டக்களப்பு தேர்தல் தொகுதி, ஏறாவூர் 06 கிராமசேவகர் பிரிவில் வசித்துவரும் சாகுல் ஹமீட் அகமட் லெப்பை அவர்கள் ஏறாவூர் தாஹிர் எனும் புனைப்பெயரால் நன்கு அறியப்பட்ட ஒரு மூத்த கவிஞரும், எழுத்தாளருமாவார்.

1947ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03ஆந் திகதி சாகுல் ஹமீட், கதீஜா உம்மா தம்பதியினரின் தலைப் புதல்வராகப் பிறந்த அகமட் லெப்பை (ஏறாவூர் தாஹிர்) ஏறாவூர் அறபா வித்தியாலயம், ஏறாவூர் அலிகார் மத்திய கல்லூரி, அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை ஆகியவற்றின் பழைய மாணவராவார். இவர் ஆசிரியராக நீண்ட காலங்கள் பணியாற்றிப் பல நல்மாணாக்கரை உருவாக்கியவர். ஹாஜராவின் அன்புக் கணவரான இவருக்கு பிர்தௌஸ், அல்பைசல், சஜ்னாவஜி, சுக்ரன் ஜெஸீல் ஆகிய நான்கு அன்புச் செல்வங்களுளர்.

'ஏறாவூர் தாஹிர்' என எல்லா இலக்கிய நெஞ்சங்களாலும் அறியப்பட்ட இவர், 1970ஆம் ஆண்டின் பின் இலக்கிய வானில் பிரகாசித்தாலும் 60இன் பிற்பகுதியிலே தினகரனில் வெளியான பாலர் கழகம் பகுதியில் தளர் நடைபோட்டு தடம் பதித்தார். தமிழறிவோடு பொது அறிவையும் இளம் பருவத்திலேயே வரித்துக் கொண்ட இவர் இன்று ஏராளமான சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் என பல இலக்கியப் படைப்புக்களின் சொந்தக்காரராகத் திகழ்கின்றார்.

கலையும், கலைசார் திறனும் கருவிலே சிலருக்கு இறை கடாட்சமாய் அமைந்துவிடுவதுண்டு. ஆம், இவரது தாய், தந்தையர் மார்க்கக் கல்வி ஞானம் தோய்ந்து கலையின் இருப்பிடமாகத் திகழ்ந்தவர்கள். கல்லூரி வாழ்க்கையில் முதன்மையுடன் விளங்கியதால் இவரை ஆசிரியர்கள் விஞ்ஞானத்துறையில் கல்வி பயிலவே ஆற்றுப்படுத்தினர். ஆனால், அவரது நாட்டமும், ஊடாட்டமும் கலைத்துறையிலேயே சங்கமித்தன. 1977 / 1978இல் அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்று வெளியேறிய இவர், தனது சேவையின் இறுதிக் காலப் பிரிவில் மட் / ஏறாவூர் றகுமானியா மகாவித்தியாலயத்தின் விஞ்ஞான ஆசிரியராகப் பணியாற்றி, அவ்வித்தியாலயத்தின் பெயரையும், புகழையும் கலை கலாசாரப் போட்டி நிகழ்வுகளில் முதன்மை பெறச் செய்தார்.

அடக்கமும், ஆற்றலும் மிக்கவரான இவர் கவிதை, கதை, கட்டுரை, நாடகம், உரையாடல் போன்ற பல்துறைகளிலும் இன்று வரை சோடைபோகாமல் பிரகாசிக்கின்றார். இவரது இத்தகைய ஆக்கங்களை தினகரன், வீரகேசரி, தினபதி, தினக்குரல், தினமுரசு, மெட்ரோ நியுஸ், சுடரொளி, புஹ்ரா, ரஹ்மத், முஸ்லிம் முரசு, தாரகை, முஸ்லிம்நேசம், வாசம், செங்கதிர், ஓலை போன்ற இலங்கையின் தேசிய பத்திரிகைகளும், இலங்கை மற்றும் இந்திய சஞ்சிகைகளும் பிரசுரித்துள்ளன. தொடர்ந்தும் பிரசுரித்து வருகின்றன.

சமுதாயப் போலிகளைச் சாடுவதும், பெண்ணியல் அடிமைத்தளைகளைக் கண்டிப்பதும் இவரது கவிதைகளின்

அடிநாதமாய் ஒலிக்கின்றன. அன்றியும் இஸ்லாமியத் தத்துவங் களையும், இலட்சியங்களையும் இவர் இலச்சினையாகப் பொறித் துள்ளார். சொல்வீச்சு, சந்தம், ஓசைநயம் எல்லாம் இவரது கவிதைகளுக்கு அணிகலன்களாய் அமைந்துள்ளன.

நூற்றுக்கணக்கான கவிதைகளைப் பிரசவித்து பிரசுரத் திற்கு வித்திட்ட தாஹிர் அவர்கள் கவிஞர் புரட்சிக் கமால் முதலான பல கவிஞர்களின் பல கவியரங்க மேடைகளில் கலந்து கலகலப்பூட்டியவர். சொற்சுவை, பொருட்சுவை, அங்க தச்சுவை அனைத்தும் இவர் யாத்த கவிதைகளில் இழை யோடியிருக்கும்.

இவர் சர்வதேச மட்டத்தில் நடைபெற்ற கட்டுரை, கவிதை, இசை ஆக்கம் முதலான பல போட்டிகளில் பணப் பரிசில்களும், விருதுகளும் பெற்றுள்ளமை வித்தகத் திறமைக் குப் போதிய சான்றுகளே. அவை வருமாறு:

1. இலங்கைத் தமிழ்ச்சங்கம், விக்டோரியா – அவுஸ் திரேலியா – முத்தமிழ் விழா – 1999 (கவிதைப் போட்டி) சர்வதேச ரீதியானது
2. கல்வியமைச்சால் 12.11.2002இல் நடாத்தப்பட்ட அரச ஊழியர்களுக்கிடையிலான பாடல் புனைவு கவிதைப் போட்டி
3. அகில இலங்கை இஸ்லாமிய கலையிலக்கியச் சம்மே ளனம் நடாத்திய கருத்துச் சுதந்திரம் தொடர்பான விமர்சனப் போட்டி.

இத்தகு ஆற்றல்மிக்கவரான இவரின் ஆரம்ப காலப் படைப்புகள் அனைத்தும் இயற்கை அனர்த்தங்களினாலும், வன்செயல், புலம்பெயர்வினாலும் அழிந்து போனமை வேதனைக் குரியதே. இவை தவிர எஞ்சிய நூற்றுக்கணக்கானவற்றுள் சிலதை மட்டும் தொகுத்து 2008ஆம் ஆண்டு மே மாதம் 20ஆந் திகதி 'கடைசி வரிகள்' எனும் முதல் கவிதைத் தொகுதியினைத் தந்துள்ளார். 173 பக்கங்களைக் கொண்ட 'கடைசி வரிகள்' கவிதைத் தொகுதியில் ஏறாவூர் தாஹிரின்

85 கவிதைகள் இடம்பிடித்துள்ளன. இந்நூல் ஏறாவூர் வரலாற்று ஆய்வு மையத்தின் வெளியீடாகும்.

அமைதியான போக்கும், விளம்பரத்தையும், புகழையும் விரும்பாத தன்மையும் இவரின் கூடப் பிறந்த இயல்புகள். மௌனமாக நின்று ஈழத்தமிழ் இலக்கியத்துறைக்கு காத்திரமான கவிச் செல்வங்களை மேலும், மேலும் பிரசவித்து வரும்

இவரின் முகவரி:-

**'ERAVUR THAHIR'**
**14, PULIYADY CROSS ROAD,**
**ERAVUR**
**(E.P)**

# கந்தையா செல்வநாயகம்



பதிவு
**331**

**கலைத்துறை**

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், கல்குடா தேர்தல் தொகுதி, கோரளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் பேய்த்தாழை கிராமசேவகர் விலாசத்தில் வசித்துவரும் கந்தையா செல்வநாயகம் எழுத்து, ஊடகம், கலை என கடந்த நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக பல் துறைகளிலும் ஈடுபாடுமிக்க ஒரு கலைஞராவார். இவரின் பெயர் கலையிலக்கியத்துறையில் 'தாழை செல்வநாயகம்' என்றே அறியப்பட்டுள்ளது.

1946ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06ஆந் திகதி கந்தையா, தங்கம்மா தம்பதியினரின் புதல்வராகப் பிறந்த செல்வநாயகம் வாழைச்சேனை இந்துக்கல்லூரி, வந்தாறுமூலை மத்தியக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார். தொழில் ரீதியாக 1967ஆம் ஆண்டு வன பரிபாலன அதிகாரியாகச் சேவையில் இணைந்து, தற்போது ஓய்வுபெற்றுள்ள இவரின் அன்புப் பாரியார் பெயர் கருணைலெட்சுமி. இத்தம்பதியினருக்கு திராவிடமலர், காவேரி, ஈவெரா, செவ்வந்தி, செந்தமிழன் ஆகிய அன்புச் செல்வங்களுளர்.

நம்மவர்களுள் எத்தனையோ திறமைசாலிகள் இருந்த போதிலும்கூட, இவர்களின் திறமைகளும், ஆற்றல்களும் சரியான முறையில் இனம் கண்டு கொள்ளப்படாமையினால் இவர்களின் சேவைகள் நாளைய சந்ததியினரின் அவதானிப்பிலிருந்து மறைந்து விடுகின்றது. இந்த அடிப்படையில் பல நல்ல தரமான கலைஞர்களையும், இலக்கியவாதிகளையும் பிற்கால சமூகம் இனம்கண்டு கொள்ளாமல் போனமை ஒரு துர்ப்பாக்கியமான நிலையே. இந்த நிலை மேலும் தொடரக் கூடாது. திறமையான வர்களை இனங்கண்டு அவர்களின் திறமைகளை ஆவணப் படுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும். இங்கு திறமை களை இனம்காட்டுவது எனும்போது பிரபல்யத்தின் அடிப்படை யில், என்பது தவறான நிலையாகும். சிலர் பிரபல்யமடைந் திருக்கலாம். சிலர் பல்வேறு காரணங்கள் நிமித்தம் பிரபல்ய மாகாமலிருக்கலாம். ஆனால், படைப்புகளில் காணப்படக்கூடிய கனதி நிலையையும், அவசியத்தையும் அளவிட வேண்டியது அவசியமானதொன்றாகும்.

1963இல் எழுத்தாளர் எஸ்.பொ.வுடன் இணைந்து வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் காப்பிய விழாவினை சிறப்பாக நடத்தியதினூடாக செல்வநாயகத்தின் கலையார்வம் வெளிப்படத் தொடங்கியது. 1964இல் விவேகானந்தசபை பரீட் சையை அகில இலங்கை ரீதியாக நடத்திய போது முதல் பரிசாக தங்கத்தை இவர் வென்றார். 1965இல் கம்பன் கலாமன்றத்தை உருவாக்கி அதன் தலைவராகவும் இயங்கி 'மூடுதிரை' நாடகத்தை எழுதி, இயக்கி நடிகராக அறிமுகமா னார். இவரின் கலைத்துறை ஈடுபாடு கன்னிப்பயணம் இங்கேயே ஆரம்பித்தது. இதைத் தொடர்ந்து உரிமைப்போர், சோக்ரடீஸ், தேர்தல் களத்தினிலே போன்ற நாடகங்களையும் எழுதியதுடன், அவற்றை இயக்கியும், நடித்தும் ஒரு நாடகக் கலைஞராக மிளிரத் தொடங்கினார். இவ்வாறாக நாடகத்துறையில் ஈடுபாட் டைக் காட்டிவந்த தாழை செல்வநாயகம் சுமார் 25 நாடகங் களுக்கு மேல் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. பிற்காலத்தில் இவரால் எழுதப்பட்ட பல நாடகங்கள் தேசிய ரீதியிலும், பிரதேச ரீதியிலும் பல பரிசில்களை வென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

2005ஆம் ஆண்டு தேசிய இலக்கியவிழாவில் நாடகப் பிரதியாக்கப் போட்டியில் இவரது நாடகம் முதலாம் பரிசினைப் பெற்றுக் கொண்டது. மேலும், இவரால் எழுதப்பட்ட நாடக மொன்று நோர்வேயில் மோல்டே தமிழ் கலாசாரப் பேரவையின் பரிசினையும் பெற்றுள்ளது. தற்போது இந்நாடகங்களை தொகுத்து நூலுருவில் வெளியிடும் நடவடிக்கையை மேற் கொண்டு வருகின்றார்.

நாடக எழுத்துக்குப் புறம்பாக சிறுகதை, கவிதை, கட்டுரை ஆகிய துறைகளிலும் இவர் ஆர்வம் காட்டி வந்தார். இந்த அடிப்படையில் இவரது முதலாவது சிறுகதை 'தாரகை' சஞ்சிகையில் 1980ஆம் ஆண்டு 'சுயமரியாதை புதைப்படுகின் றது' எனும் தலைப்பில் பிரசுரமானது. அதைத் தொடர்ந்து தாரகை, சுடர், சுதந்திரன், தினகரன், வீரகேசரி, தினக்கதிர் ஆகிய தேசிய பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் இவரின் இலக்கிய ஆக்கங்கள் இடம்பெற்று வருகின்றன. அதேபோல, தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் குமுதம், தாமரை, கணையாளி போன்ற ஏடுகளிலும் இவரது ஆக்கங்கள் இடம் பெற்றுள்ளன. சமூக உணர்வுகளின் வெளிப்பாடுகளும், சமூகத்தின் தனித்துவத்துக்காக போராடும் மனோநிலை களையும், மூடநம்பிக்கைகளை களைத்தெறிய எத்தனிக்கும் பாங்குகளையும் இவரின் கதைப் பொருள்களிலிருந்து கண்டு கொள்ளக் கூடியதாகவுள்ளது. இவர் 'ஏதிலிகள்' எனும் பெயரில் சிறுகதை நூலொன்றை எழுதிள்ளார். இச்சிறுகதை நூலை தமிழகத்தில் மணிமேகலைப் பிரசுரம் வெளியிட்டது. மேலும், இவரின் நாடகத் தொகுப்பு நூலொன்றும் தமிழ் நாட்டில் அச்சிடப்பட்டுக் கொண்டிருப்பதாக தெரியவருகின்றது.

இவரது பல சிறுகதைகள் தேசிய ரீதியிலும், பிரதேச ரீதியிலும் பரிசில்களை வென்றுள்ளன. கலாசாரத் திணைக் களத்தால் 2005 மற்றும் 2006ஆம் ஆண்டு தேசிய இலக்கிய விழாவின்போது மாவட்ட மட்டத்தில் இவரது சிறுகதைகள் முதலாம் பரிசினைப் பெற்றுக் கொண்டன. அதேபோல 2004ஆம் ஆண்டில் கட்டுரைப் போட்டியிலும் இவர் முதல் பரிசினை தட்டிக் கொண்டார்.


கலையிலக்கியத்துறையைப் போலவே இவர் ஊடகத் துறையிலும் அதிக ஆர்வம் காட்டி வந்தார். 1982ஆம் ஆண்டு முதல் 2007ஆம் ஆண்டு வரை வீரகேசரியின் கல்குடா நிருபராக இருந்து ஆயிரக்கணக்கான செய்திகளை எழுதியுள்ளார். தனிப்பட்ட காரணங்கள் நிமித்தமாக 2007ஆம் ஆண்டில் இவர் நிருபர் பதிவியிலிருந்து விலகிக் கொண்டார். கலையிலக்கியத்துறைக்கு கடந்த 40 ஆண்டுகளாக ஆற்றிய பணியினை கௌரவிக்கும் வகையில் 2007ஆம் ஆண்டு கிழக்கு மாகாண கௌரவ ஆளுநர் விருது இவருக்கு வழங்கப்பட்டது.

தனது தாய் மாமன் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர். அவர் பெயர் சுயமரியாதை நல்ல தம்பி. அவரது வீட்டில் திராவிடக் கழகப் பத்திரிகைகள் அண்ணா, பெரியார், கருணாநிதி, கல்கி போன்றோரின் நூல்கள் இருக்கும். அவற்றைப் படித்து, அவர்களின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டமையின் காரணத்தினாலேயே தான் கலையிலக்கியத்துறையில் ஈடுபட ஆரம்பித்தேன் எனக்கூறும்

இவரின் முகவரி:-

**K. SELVANAYAGAM**
**KALKUDAH ROAD**
**PETHALAI**
**VALAICHENAI**

# த. கோபாலகிருஷ்ணன்



பதிவு

**332**

**எழுத்துத்துறை**

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம் காரைதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட த. கோபாலகிருஷ்ணன் ஒரு எழுத்தாளரும், பத்திரிகையாளரும் ஆவார். மட்டக்களப் பிலிருந்து 2008 ஜனவரி மாதத்திலிருந்து **'இலட்சியம் இல்லாமல் இலக்கியம் இல்லை'** என்ற மகுடம் தாங்கி தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கும் 'கலை - இலக்கிய பண்பாட்டுப் பல்சுவைத்' திங்களிதழான **'செங்கதிர்'** சஞ்சிகை யின் ஆசிரியரான இக்கவிஞர் செங்கதிரோன் எனும் பெயரால் நன்கு அறிமுகமானவர். இவர் எழுத்துலகில் தன்னை அதிகம் விளம்பரப்படுத்திக் கொள்ளாத - அமைதியான - அடக்கமான ஆனால் ஆழ்ந்த இலக்கியவாதியும், எழுத்தாளருமாவார்.

அப்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதியில் அமைந்த கல்முனை (தற்போது அம்பாறை மாவட்டம்) வைத்தியசாலையில் 1950.12.13ல் இவர் பிறந்தார். தாய் கனகம்மா, தந்தை தம்பியப்பா. இருவரும் சுவாமி விபுலாநந்தரின் பிறப்பிட மான காரைதீவைச் சேர்ந்தவர்கள். இவரின் குழந்தைப் பராயத்திலேயே பெற்றோர்கள் குடும்பத்துடன் மட்டக்களப்பு

மாவட்டத்தின் (தற்போது அம்பாறை மாவட்டம்) தென்கோடிக் கிராமமான பொத்துவிலுக்குச் சென்று குடியேறி தங்கள் அந்திமக்காலம்வரை அங்கேயே வசித்தனர். கோபால கிருஷ்ணன் தனது ஆரம்பக் கல்வியை பொத்துவில் மெதடிஷ்த மிஸன் தமிழ்க்கலவன் பாடசாலையில் பயின்றார். இப்பாட சாலையில் தலைமையாசிரியராக இருந்தவர் இலங்கையின் ஓய்வு பெற்ற பொலிஸ் மா அதிபர் திரு. த. ஆனந்தராஜா அவர் களின் தந்தையரான அமரர். இ.பா. தங்கராசா அவர்களா வர்.

ஐந்தாம் வகுப்புவரை பொத்துவில் மெ.மி.த.க. பாடசா லையில் பயின்று பின் ஐந்தாம் வகுப்புப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததன் பெறுபேறாக மட்டக்களப்பு வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயத்தில் (தற்போது கிழக்குப் பல்கலைக்கழகக் கட்டிடத் தொகுதி) விடுதியில் தங்கியிருந்து கல்வியை க.பொ.த. உயர்தரம் (விஞ்ஞானம்) வரை பயின்றார்.

கல்லூரிக் காலத்தில் கல்லூரியை விட்டு விலகும் வரை வகுப்பில் முதல் மாணாக்கனாகவே திகழ்ந்தார். சிறுவயதி லிருந்தே நிறைந்த வாசிப்புப் பழக்கமுள்ளவர். கல்லூரிக் காலத்தில் 7ம் வகுப்பு பயிலும்போது **'கலை அமுதம்'** என்கின்ற கையெழுத்துச் சஞ்சிகையினதும், க.பொ.த. உயர்தர வகுப்பில் பயிலும்போது **'தேமதுரம்'** என்கின்ற கையெழுத்துச் சஞ்சி கையினதும் இதழாசிரியராகவிருந்து அவற்றை வெளியிட்டார். இச்சஞ்சிகைகளில் கவிதைகள், சிறுகதைகள், நாடகங்கள் எழுதினார். இவை இவரின் ஆரம்ப எழுத்துக்களாகும்.

1968இல் சப்ரகமுவ நீர்ப்பாசனப் பயிற்சிக் கலாசா லைக்கு (தொழில்நுட்பக் கல்லூரி) நீர்ப்பாசனப் பயிலுனராகச் சென்று இருவருடகாலம் ஆங்கிலமொழி மூல வதிவிடப் பயிற்சி பெற்று வெளியேறி 01.02.1971இல் இலங்கை நீர்ப்பாசனத் திணைக்களத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக நியமனம் பெற்றார்.

நீர்ப்பாசனப் பயிற்சிக் காலத்தில் **'நீர்ப்பாசனப் பயிலுநர் தமிழ்க் கலாமன்றத்தின்'** செயலாளராகப் பணிபுரிந்ததுடன், மன்றத்தின் வெளியீடான 'அருவி' (1969) எனும் சஞ்சிகையின் இதழாசிரியராகவும் இருந்தார். கல்லூரிக் காலத்தில் அவ்வப்போது கவிதைகளை ஆக்கிய இவரின் முதலாவது அச்சுவாகனம் ஏறிய **'நற்கவிதை வேண்டும்'** என்ற தலைப்பிலான கவிதை **'அருவி'** சஞ்சிகையில்தான் பிரசுரமானது. 1969லிருந்து **'சுதந்திரன்'** பத்திரிகையில் கவிதைகள் எழுதி வந்தார். இளமைக்காலத்திலிருந்தே தமிழர் உரிமை போராட்ட அரசியலில் அதிதீவிர ஈடுபாடு கொண்டிருந்த காரணத்தால் **'சுதந்திரன்'** கவிதைகள் யாவும் அதையொட்டியே அமைந்திருந்தன. 1989 வரை அகில இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழ் இளைஞர் பேரவை, தமிழர் கூட்டணி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் உறுப்பினராகவிருந்து அதிதீவிரமாகச் செயற்பட்டார்.

இவரது மூத்த சகோதரிகளின் எஸ்.எஸ்.சி. வகுப்புக்குப் பாடநூலாக அமைந்திருந்த கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை அவர்களின் **'மலரும் மாலையும்'** கவிதைத் தொகுப்பைப் படித்துத்தான் தனக்குக் கவிதையில் ஈர்ப்பு ஏற்பட்டதாகக் கூறும் இவர் பின்னர் மகாகவி பாரதி, பாரதிதாசன், காசி ஆனந்தன் கவிதைகள் கவிதை ஈடுபாட்டை வளர்த்தன என்கிறார். 1968இல் தான் படித்த உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் **'தமிழன் கனவு'** கவிதை நூல்கள் 'சுதந்திரன்' கவிதைகளுக்குத் தன்னைத் தூண்டின என்றும் கூறுகிறார்.

அதிகம் எழுதிக் குவிக்காவிட்டாலும் ஆற்றல் மிக்க கவிதைப் படைப்பாளி. **'புதுக்கவிதைப் போக்கு'** பற்றி தர்க்க ரீதியான விமர்சனங்களை முன்வைக்கும் இவரை மரபுக் கவிஞர் என்றே இனம் காண முடிகிறது. **'பூப்படையாப் பெண்கள் எல்லாம் பிள்ளை பெற வந்ததுபோல யாப்பறியாப் பேர்களெல்லாம் பாப்புனைய வந்துவிட்டார்'** என்று புதுக்கவிதைப் போக்கு பற்றி இவர் எழுதிய கவிதை வரிகள் இன்னும் இலக்கிய மேடைகளில் எடுத்தாளப்படுகின்றன.

1984 காலப்பகுதியில் வீரகேசரி **'இலக்கியச் சாரளம்'** பகுதியில் **'வேண்டாம் புதுக்கவிதைப் போக்கு'** எனும் தலைப்பில் இவர் எழுதித் தொடக்கி வைத்து பின் வாதப் பிரதிவாதங்களுடன் பல மாதங்களாக தொடர்ந்த **'கவிதைச் சமர்'** இன்றும் கவிதையுலகில் நினைவுக் கூரத்தக்கதொன்று.

இவரது முக்கியமான ஈடுபாட்டுத்துறை கவிதை. எனினும், சில சிறுகதைகளும், உருவகங்களும் எழுதியுள்ளார். இவர் ஆழமான விமர்சகரும்கூட. திறனாய்வுத்துறை கை வரப் பெற்றவர். நூல் வெளியீடு, அறிமுகங்களின் போது இவர் ஆற்றியுள்ள நயவுரைகளிலும் சில நூல்களுக்கு இவர் வழங்கியுள்ள முன்னுரைகளிலும் இவரது திறனாய்வுத் திறனை அடையாளம் காண முடிகிறது. பிரபல்யமிக்க விமர்சகர் திரு. கே.எஸ். சிவகுமாரன் அவர்களால் இவரது திறனாய்வுகள் சிலாகித்துக் கூறப்பட்ட சந்தர்ப்பங்கள் உண்டு.

1987இல் மலேசிய நாட்டுத் தலைநகரான கோலாலம் பூரில் நடைபெற்ற அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்துகொண்டு **'தமிழும் விஞ்ஞானமும்'** என்ற ஆய்வுக் கட்டுரை படித்தார்.

டொமினிக் ஜீவாவின் **'மல்லிகை'** இதழிலும் இவரது கவிதைகள் சில பிரசுரமாகியுள்ளன. 1987இல் மலேசியாவில் தமிழ்நாட்டுக் கவிஞர் சுரதா தலைமையில் **'உலகத்தமிழ் கவிஞர் பேரவை'** உருவாவதற்குக் காரணியாக விளங்கிய துடன், அதன் இலங்கைக் கிளையின் இணைப்பாளராகவும் செயற்பட்டார்.

கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் நீண்டகால உறுப்பி னரான இவர், கடந்த காலங்களில் அதன் நூலகச் செயலாளர், துணைப் பொதுச் செயலாளர், இலக்கியச் செயலாளர் ஆகிய பதவிகளில் பணிபுரிந்துள்ளார். இவர் நூலகச் செயலாளராக விருந்த காலத்திலேதான் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் சிறுவர் பகுதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. பலவருடங்கள்

தொடர்ந்து இலக்கியச் செயலாளராகவிருந்த இவர் ஆற்றிய இலக்கியப் பணிகள் கொழும்புத் தமிழ்ச்சங்க வரலாற்றில் தனி அத்தியாயமாக எழுதப்பட வேண்டியதொன்றாகும். கொழும் புத் தமிழ்ச்சங்க மாதாந்த வெளியீடான **'ஓலை'** யின் ஸ்தாபக ஆசிரியராக ஆற்றிய பணி இவரைச் சிறந்த சஞ்சிகையாளராக அடையாளம் காட்டிற்று. **'ஓலை'** வெளியிட்ட நீலாவணன் நினைவுச் சிறப்பிதழும், மகாகவி நினைவுச் சிறப்பிதழும் இவரது திறமைக்கு எடுத்துக் காட்டு.

கவிஞர் நீலாவணன் எழுதி அவரின் மரணத்தால் இடையில் நின்றுபோன **'வேளாண்மை'**க் காவியத்தின் தொடர்ச் சியை **'விளைச்சல்'** எனும் பெயரில் இப்போது 'செங்கதிர்' சஞ்சிகையில் மாதாந்தம் தொடர்ந்து எழுதி வருகிறார்.

இலங்கை வானொலியின் **'இதய சங்கம்'**, **'நாள் மகிழ் அரங்கம்'** நிகழ்ச்சிகளிலும் மற்றும் சக்தி தொலைக்காட் சியின் **'களம்'** நிகழ்ச்சியிலும், ரூபவாஹினி தொலைக்காட் சியின் **'உதயதரிசனம்'** நிகழ்ச்சியிலும் அவ்வப்போது பங்குபற்றி இலக்கிய வெளிப்பாடுகளை நிகழ்த்தியவர். 2006இல் லண்டன் **'தீபம்'** தொலைக்காட்சியின் நேரடி ஒளிபரப்பில் சுமார் ஒரு மணிநேர இலக்கியப் பேட்டி அளித்தும் உள்ளார்.

படைப்பாற்றலும், இலக்கிய ஆளுமையும், மொழியாற்ற லும் நிரம்பப் பெற்றவராகவிருந்தும் இதுவரை எந்த நூலும் வெளியிடவில்லை என்பது இவரது குறைபாடு. விருதுகளையும், பட்டங்களையும் விரும்பாதவர். புகழை நாடாதவர். விளம்பரத் தைத் தேடாதவர். ஆற்றல் மிக்க படைப்பாளியாகவும், ஆழ்ந்த புலமைமிக்க இலக்கியவாதியாகவும் இருந்த போதிலும்கூட, ஆரவாரமில்லாமல் ஆமைபோல அடக்கமாகவும், அமைதியாக வுமிருந்து காத்திரமும், கனதியும் மிக்க இலக்கியச் செயற்பாடு களை ஆற்றிவருபவர். இதுவே இவரின் தனித்துவமும் ஆளுமைச் சிறப்பும் ஆகும்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தினைச் சேர்ந்தவரா கவிருந்த போதிலும்கூட, கூடுதலாக இவரது இலக்கியச் செயற் பாடுகள் கொழும்பை மையமாகவே கொண்டிருந்தன. சிறந்த கவியரங்கக் கவிஞரான இவர் கொழும்பில் பங்கு பற்றிய, தலைமை தாங்கிய கவியரங்கங்கள் இவரால் களை கட்டும். மேலும் சிறந்த மேடைப் பேச்சாளரும்கூட.

ஈழ விடுதலைப் போராட்ட அரசியலில் ஈடுபாடுகொண்ட இவர் அதன் காரணமாக 1983இல் சிறைவாசமும் அனுபவித் தார். அம்பாறை மாவட்டத்தில் பாராளுமன்றப் பொதுத் தேர்தல் களிலும் போட்டியிட்டவர். இவரது அரசியல் ஈடுபாடு காரணமாக 1990ல் நாட்டை விட்டுச் சென்று குறுகிய கால அஞ்ஞாத வாசமும் அனுபவித்து மீண்டவர். தற்போது இவற்றிலிருந்து முற்றாக ஒதுங்கி கலையிலக்கிய பணிகளிலேயே தன்னை முழுமையாக ஈடுபடுத்தி வருகிறார். தொழில் ரீதியாக பொறியி யளாளராகவிருந்த போதிலும் கலையிலக்கிய ஈடுபாடு இவரது பிறிதோர் பரிமாணமாகும்.

11வது வயதிலேயே தந்தையை இழந்தவர். இவரது தந்தையார் ஒரு நாடக, இசைக் கலைஞர். அந்நாட்களில் கிராமங்களுக்குச் சினிமா வராத காலங்களில் கிழக்கிலங்கை யின் பல கிரமங்களில் நாடகக் கொட்டைகள் அமைத்து பல நாடகங்களை நடாத்தியவர். இவரது தந்தையார் ஆர்மோனியா வாத்தியக் கலைஞரும் கூட. இவரது தாய் மாமன்களில் ஒருவர். காரைத்தீவைச் சேர்ந்த சைவப் புலவர், பண்டிதர் திரு. வி.ரி. செல்லத்துரை அவர்கள். மற்றொரு தாய்மாமனார் திரு. வே. கனகசபை அவர்கள் சிறந்த ஓவியர். இருவரும் அதிபர்களாகவிருந்து ஓய்வுபெற்று தற்போது அமரர்களாகி விட்டனர். 'குலவிழுது கல்லாமல் பாகம் படும்' என்பதற்கிணங்க வோ என்னவோ இவரிலும் கலையிலக்கிய ஆர்வம் ஏற்பட இந்தக் குடும்பப் பின்னணியும் காரணமாக அமைந்திருக்கலாம்.

பொத்துவில் மெ.மி.த.க. பாடசாலையில் தனக்கு அரிச்சு வடி கற்பித்த 'தொட்டம்மா' என அழைக்கப்பட்ட அமரர்

திருமதி அதிகாரம் ஆசிரியை, திருமதி ஞா. வடிவேல் ஆசிரியை மற்றும் ஆரம்பக் கல்விக் காலத்தில் தமிழ்க் கல்வியூட்டிய திரு. ஜோ. பாரிசாதம் (தற்போது ஓய்வுபெற்ற அதிபர்), ஆங்கிலம் கற்பித்த அமரர் திரு. சின்னத்தம்பி ஆசிரியர், ஐந்தாம் வகுப்புப் புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டியாகவி ருந்த அமரர் திரு. செல்லத்துரை ஆசிரியர், வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயத்தில் தமிழ் கற்பித்த திரு. செல்லையா ஆசிரியர், ஆங்கிலம் கற்பித்த செல்வி. மயில்வாகனம், விஞ் ஞான பாடங்கள் கற்பித்த திரு. அருளானந்தராஜா, ஜனாப் ஷெரீப், திருமதி கணேசன், திரு. இராமதிலகம், திரு. பூபால சிங்கம், கணிதம் கற்பித்த அமரர் திரு. பாக்கியம், உடற்கல்வி ஆசிரியர் திரு. வேலுப்பிள்ளை ஆகியோரை நினைவுகூரும் இவர் தனது கலையிலக்கிய ஈடுபாட்டிற்குத் தனது தனிப்பட்ட ஆர்வமே காரணம் என்கிறார்.

இவரின் மனைவி திருமதி சுசீலா கொழும்பு றோயல் கல்லூரியில் கணித ஆசிரியையாகப் பணிபுரிகிறார். தற்போது கொழும்பில் வதியும் இவர் தொழில் நிமித்தம் மட்டக்களப்பில் தங்கியிருந்து தனது தொழில்சார் வேலைப்பளுக்களுக் கிடையிலும் 'செங்கதிர்' இதழை மாதா மாதம் வெளியிட்டு வருவதுடன், மட்டக்களப்பு புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணி மன்றம் (தலைவர்), மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர் பேரவை (உறுப்பினர்) ஆகிய அமைப்புக் களினூடாக கலையிலக்கியச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றார்.

இவரின் முகவரி
T.Gopalakrishan
19, Upstair Road
Batticaloa
T/P 077 2602634



# தில்லையடிச் செல்வன்



பதிவு
**333**

**எழுத்துத்துறை**

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், புத்தளம் தேர்தல் தொகுதி, முந்தல் பிரதேச செயலாளர் பிரிவில், ஆண்டிமுனை 194/A கிராமசேவகர் வசத்தில் வசித்துவரும் கதிரவேல் ஆசாரி பொன்னம்பலம் என்ற இயற்பெயரைக் கொண்ட தில்லையடிச் செல்வன் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக அடக்கமாக இலக்கியப் பணி செய்துவரும் ஒரு எழுத்தாளரும், கவிஞருமாவார்.

1953ஆம் ஆண்டு ஜுன் மாதம் 05ஆம் திகதி கதிரவேல் ஆசாரி, சோதிமணி தம்பதியினரின் புதல்வராகப் பிறந்த பொன்னம்பலம் புத்தளம் அரசினர் முஸ்லிம் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியையும், புத்தளம் ஸாஹிராக் கல்லூரியில் உயர்தரக் கல்வியையும் பெற்றார். தற்போது நகைத் தொழிலில் ஈடுபட்டுவரும் இவர், சுபத்திரையின் அன்புக் கணவராவார். இத்தம்பதியினருக்கு கலைவாணி, நித்தியவாணி ஆகிய இரண்டு அன்புச் செல்வங்களுளர்.

பாடசாலைக் காலத்தில் மூத்தவர்கள் படிக்கும் திராவிட இயக்கப் பத்திரிகை, சஞ்சிகைகளை தானும் படித்து அந்த எழுத்துக் களால் ஆகர்சிக்கப்பட்டு தானும் எழுத வேண்டும் என்ற தூண்டுதலினால் அன்றைய சிரித்திரன், கதம்பம் போன்ற சஞ்சிகைகளில் சிறுசிறு ஆக்கங்கள் மூலம் காலடிவைத்தார். படைப்பிலக்கிய ரீதியில் இவரது முதல் நெடுங்கவிதை 'பூமாலை' சஞ்சிகையில் 1974ஆம் ஆண்டு வெளிவந்தது. முதலாவது சிறுகதை 1977.12.25ஆம் திகதி 'பாவமன்னிப்பு' எனும் தலைப் பில் வீரகேசரி வாரவெளியீட்டில் பிரசுரமானது. இவற்றைத் தொடர்ந்து 25க்கும் மேற்பட்ட சிறுகதைகளையும், 100க்கும் மேற்பட்ட கவிதை, கட்டுரை, விமர்சனம், ஆய்வு போன்றவற் றையும் இவர் எழுதியுள்ளார். இவரது பெரும்பான்மையான ஆக்கங்கள் தினகரன் பத்திரிகையில் வந்தாலும், தினபதி, சிந்தாமணி, வீரகேசரி, குமரன், மல்லிகை, அக்னி, அபியுக்தன், மாணிக்கம், மதனன், நவமணி, வானோசை, நவயுகம், கமலம், மித்திரன், தினத்தந்தி போன்ற தேசிய பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன. மேலும், இலங்கை வானொலியில் வாலிபர் வட்டம், ஆடவர் அரங்கு போன்றவற்றில் இவரது அதிகமான ஆக்கங்கள் ஒலிபரப்பாகியுள்ளன. இலங்கை வானொலியில் பல்வேறு இளையோருக்கான நிகழ்ச்சிகளில் கவிதை, உரைநடைச் சித்திரம் எழுதியதோடு நேரடியாக குரல் கொடுத்துமுள்ளார்.

திராவிட இயக்க செயல் நெறிகளும், 1970களில் பரவியி ருந்த மாக்ஸிச கருத்து செல்வாக்குகளும் இவரது சிந்தனை யில் ஊடுறுவியதால் மானிட விடுதலைப் பற்றிய ஆக்கங்களை படைப்பதிலேயே இவர் அதிக ஆர்வம் காட்டி வந்தார் எனலாம். சம்பிரதாய கொண்டாட்டங்களையோ, மனிமனித புகழ்பாடு வதையோ, வாவண்ய உணர்வுகளையோ இவர் இன்றுவரை எழுதியதில்லை எனலாம்.

இவர் எழுதிய கன்னிக் கவிதைகளின் தொகுப்பு 'சமுதாய வீதியிலே' 1975 ஆம் ஆண்டு வெளிவந்தது. இந்த தொகுப்பின் மூலம் ஊழல்களையும், வேஷதாரிகளையும் சுட்டிக்

காட்டுகிறார் தில்லையடிச் செல்வன். இவர் இன்னும் ஆழமான உணர்வை வெளிப்படுத்துவாராயின் நல்ல எதிர்காலமுண்டு என பிரபல எழுத்தாளரும், பன்னூலாசிரியரும், இலங்கையில் முன்னணித் திறனாய்வாளருமான கே.எஸ். சிவகுமாரன் எழுதியிருந்தார்.

பல கவிஞர்கள், எழுத்தாளர்களின் சந்திப்பு, விமர்சனங்களை உள்வாங்கிக் கொள்ளும் தன்மை ஆகியவற்றால் மேலும் கூர்மையுடன் எழுத ஆரம்பித்தார். பல சஞ்சிகைகளில் வெளியான கவிதைகளைத் தொகுத்து புத்தளம் செவ்விதயங்கள் ஒன்றியம் வெளியிட்ட இவரது 'கேள்வி' 1979ஆம் ஆண்டு வெளிவந்தது.

'தோட்டாக்களைவிட பாட்டாளி மக்களின் போராட்டம் நீள் தூரம் பாயுமென' மக்கள் கவிஞன் பரிமாணன் தனது கவிதைகளில் முழங்கியதுபோல, இங்கே பாட்டாளிக் கவிஞன் தில்லையடிச் செல்வன் கேள்வியுடன் கொதித்து பெரும் வேள்வி யாகம் நடத்துகிறார்' என பின்பட்ட கவிஞன் பத்திரிகையில் எழுதிய விமர்சனம் மிகையல்ல.

மேடை நாடகத்தில் ஆர்வம் கொண்டு அரங்கேற்றிய 'அவள் ஏற்றிய தீபம்' ஓரளவு அபிமானத்தைப் பெற்றாலும், பொருளாதார நிலையினால் மேடை நாடக முயற்சியை தொடர முடியாமல், எழுத்துப் பிரதிகளாகவே இருப்பது துரதிஷ்டமே.

1979ஆம் ஆண்டு 'தம்மன்னா இலக்கிய வட்டம்' என்ற தமிழ் கலைஞர்களையும், சிங்கள கலைஞர்களையும் உள்ளடக்கிய அமைப்பு, மாகாண ரீதியில் நடாத்திய சிறுகதைப் போட்டியில் இவரது 'அவனுக்கென்று ஒரு மனம்' சிறுகதை தமிழ்ப் பிரிவில் முதல் பரிசைப் பெற்றது.

1981ஆம் ஆண்டு பாரதி நூற்றாண்டு கொண்டிடாடிய வேளையில் 'மித்திரன்' வாரமலர் நடாத்திய பாரதியாரின் ஏதோ ஒரு கவிதையின் கருவை மையமாகக் கொண்டுள்ள சிறுகதைத் தெரிவில் இவரது 'அறுவடை' சிறுகதை முதலாவதாகத் தெரிவுச் செய்து பரிசு வழங்கியது.

1988ஆம் ஆண்டு நோர்வே தமிழ்ச்சங்கம் நடாத்திய அகில உலக சிறுகதைப் போட்டியில் இவரது 'துப்பு' என்ற சிறுகதை சிறப்புச் சிறுகதையாக தெரிவாகியது. இந்துகலாசார அமைச்சு இவரது பணியைப் பாராட்டி 1998ஆம் ஆண்டு பாராட்டுப் பத்திரம் வழங்கி கௌரவித்துள்ளது.

பிரபல எழுத்தாளர்களைக் கொண்டு இயங்கும் சிந்தியா கலை இலக்கிய வட்டம் 2000ஆம் ஆண்டு 'இலக்கியச் சுடர்' என்ற பட்டத்தினை வழங்கியுள்ளது. இவரது ஆங்கில மொழியிலிருந்து மொழிபெயர்த்த ஆக்கங்கள் பலவும் பல்வேறு பத்திரிகைகளில் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.


1978 காலப்பகுதியில் 'பொன்மடல்' என்ற கவிதை – விமர்சன சஞ்சிகையினை சில காலம் நடாத்தியுள்ளதோடு, தமிழக - ஈழ கவிஞர்களின் கவிதைகளைத் தொகுத்து 'விடிவெள்ளி' என்ற தொகுப்பையும் வெளியிட்டுள்ளார். இவரது சிறுகதைத் தொகுதி இதுவரை வெளிவராத போதும், 50-60 புத்தகங்களைத் தயார் செய்து வெளியீட்டுவிழா, அறிமுகவிழா என்று நடாத்தி முடித்து புத்தகம் வெளியிட்டுள்ளேன் என்போரது கருத்துக்கு இவர் முரண்பாடு கொண்டவர்.

தற்போது பல வருடங்களாக எழுத்துத்துறையிலிருந்து விலகியிருக்கும் தில்லையடிச் செல்வன் இலக்கிய விடயங்களை மிக கூர்மையாக கவனித்து வருபவர். மீண்டும் புதிய வீரியத்துடன் எழுத வருவார் என நம்பலாம்.

இவரது தற்போதைய முகவரி:-

**K. PONNAMBALAM**
**(THILLAIYADI SELVAN)**
**"VANI VADHIYAM"**
**120, ANDIMUNAI**
**UDAPPU - 61004**

# நீலாபாலன்



பதிவு
**334**

**எழுத்துத்துறை**

கவிதை பற்றிய ஆய்வு அல்லது கவிஞர்கள் பற்றிய செய்திகள் என்று வந்தால்.. எவருக்கும் இலங்கையில் கிழக்கு மாகாணம் தான் நினைவில் வரும். அந்தளவிற்கு கவிதைக்கும், கிழக்கு மாகாணத்திற்கும் நெருக்கமான சம்பந்தமுண்டு. கிழக்கு மாகாணத்தில் கல்முனையைக் ‘கவிதைமுனை’ என்றாற்கூட மிகையில்லை. கல்முனை பல கவிஞர்களின் தாய்வீடு. அந்தக் கல்முனை தந்த அற்புதமான, ஆளுமையுள்ள, ஆர்ப்பாட்ட மில்லாத மூத்த கவிஞர்தான் “கல்முனைப் பூபால்” என்று அறிமுகமாகி இன்று விரிந்து, விகசித்து, விருட்சமாய், விழுதுகள் பரப்பி நிற்கும் கவிஞர் நீலாபாலன் அவர்கள்.

மரபுக் கவிதை, புதுக்கவிதை பற்றிய எத்தகைய ஆய்வினை மேற்கொண்டாலும் கல்முனைப் பூபால் நீலாபா லனை விடுத்து ஆய்வினை மேற்கொள்ள முடியாது. அந்தள விற்கு நல்ல பல கவிதைகளை தமிழுலகிற்குப் பங்களிப்புச் செய்திருப்பவர் நீலாபாலன்.

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கல்முனை நகரைப் பிறப்பிடமாகக் கொண்ட நீலாபாலனது இயற்பெயர் பூபாலரத்தினம். தந்தை நல்ல தம்பி, தாய் பூரணிப் பிள்ளை. இவர்கள் இருவருக்கும் ஏக புதல்வனாக கல்முனை யில் 14.04.1948ஆம் ஆண்டு பிறந்த இவருக்கு மூத்ததும், இளையதுமாக இரண்டு பெண் சகோதரிகளுண்டு. இதில் இன்னும் சுவாரசியம், முக்கியம் என்னவென்றால் இந்த இருவரை யும் திருமணம் செய்திருப்பவர்களும் இலங்கையில் புகழ்பூத்த கவிஞர்களே. அக்காவின் கணவர் கவிஞர் சடாட்சரம். தங்கை யின் கணவர் கவிஞர் கலைக்கொழுந்தன். இப்படி ஒரு கவிதைக் குடும்பத்தைச் சேர்ந்தவர் நீலாபாலன்.

நீலாபாலன், பொருளாதார வளம்மிக்க ஒரு போடியார் குடும்பத்தில் பிறந்தவர். சிறுவயதில் தந்தையாரை இழந்திருந்தா லும் தாயுடைய தந்தையாரது ஆதரவில் சகல வசதிகளோடும் வளர்ந்தவர். இவருடைய பாட்டனார் கல்முனைப் பகுதியில் மிகப் பிரபலமான சித்தாயுர்வேத வைத்தியர். நாகமணி வைத்தியர் என்று இவரது பெயரைச் சொன்னால் அனைவரும் அறிவர். அதுமட்டுமன்றி இவர் தமிழறிந்த, தமிழ்ப் புலமைமிக்க பண்டிதராகவுமிருந்ததால் இவர்களில்ல்த்தில் அடிக்கடி இலக் கியச் சந்திப்புகள், கந்தப்புராணம், மகாபாரதம் போன்ற செய் யுள் வாசிப்புகள், ஓசையுடன் படிக்கப்படுவதும், அதற்கு பதவுரை, பொழிப்புரை சொல்லப்படுவதும் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும். நீலாபாலன் பாட்டனாரின் மடியிலிருந்தபடியே ஓசையுடன் படிக்கப்படுகின்ற கவிதைகளை செவியேறலாகவே கேட்டு சுவைக்கவும், ரசிக்கவும் கற்றுக் கொண்டார்.

"இறைவ னெழிற்கதிர் மணிகளளுத்திய
தவசு நிறுத்தலுமே"... என்றும்,

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்" என்றும்

ஓசையுடன் பாடப்பட்ட கவிதா வீச்சுக்கள்தான் என்னைக் கவிஞனாக்கியது என்பதை பின்னாளில் தனது கவிதை அரங்குகளில்..

"தாய்ப்பாலோடே கலந்து
தமிழூட்டி பாவரசாய்ப் பூப்படைய வைத்த
என்தாய் பொன்னடியாம்
தாழ்ப்பணிந்தேன்"..... என்று குறிப்பிடுவதிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது.

இப்படி சின்ன வயதிலிருந்தே கவிதை இலக்கணத்தை முறைப்படிக் கற்றுக்கொண்ட நீலாபாலன், இன்றுவரை வெல்லும் கவிஞராகவே விளங்குவதற்கு இந்த அடிப்படை இலக்கிய ஞானமே காரணமாகும்.

பழகுவதற்கு இனியவராகவும், பெரிய பதவியிலிருந்தாலும் ஒரு சாதாரண மனிதராகவே தன்னைக் காட்டிக் கொள்ளும் பண்பும், பிறருக்கு உதவி செய்யும் மனமும் இவரது சிறந்த பண்புகளாகும்.

நீலாபாலன் தனது ஆரம்பம் முதல் க.பொ.த. உயர்தரம் (வணிகம்) வரையான கல்வியை கல்முனை உவெஸ்லி உயர் தர பாடசாலையிலேயே பெற்றுக் கொண்டார். சுவாமி விபுலாநந்தர், புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை ஆகியோர் கற்ற கல்முனை உவெஸ்லியே இவரையும் கவிஞராக இனங்காட்டி செம்மைப்படுத்தியது.

இவருடைய கல்லூரிக்காலம், கவித்துறையில் இவருக்கு முறையான அத்திவாரத்தையிட்ட முக்கிய காலமாகும். இக்காலத்தில்தான் வாரமலர்கள், மாத சஞ்சிகைகள் ஆகியவற்றில் இவர் முனைப்புடன் எழுத ஆரம்பித்தார். தினகரன், வீரகேசரி, தினபதி, சுதந்திரன், மித்திரன், பூரணி, கலைச்செல்வி, புதுயுகம், தேசாபிமாணி. கதம்பம், செய்தி, மாணிக்கம், வானவில், மல்லிகை, விவேகி, தேசியமுரசொலி இப்படி இலங்கையின் தேசிய பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் இவரின் ஆக்கங்களை பிரசுரித்து வந்தன. இலங்கையில் மூத்த எழுத்தாளர்கள் பலரை ஊட்டி வளர்த்த இந்த ஊடகங்கள் நீலபாலனையும் செழித்து வளர களமமைத்துக் கொடுத்தன.

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக எழுதிவருகின்ற நீலாபாலனின் கன்னிக்கவிதை 1965 தினகரன் புதன்மலரில் "அன்னைத் தமிழ்" எனும் தலைப்பில் பிரசுரமானது. அதைத் தொடர்ந்து சுதந்திரன் மாணவர் பகுதியில் "அன்னை" எனும் தலைப்பில் அடுத்த கவிதையை எழுதினார். அதைத் தொடர்ந்து தினகரன் வாரமலர், வீரகேசரி, சுதந்திரன், தினபதி, சிந்தாமணி, செய்தி, வானவில், மாணிக்கம் இப்படி இலங்கையிலிருந்து வெளியாகும் எல்லாப் பத்திரிகைகளிலும் வாரம் தவறாமல் இவருடைய கவிதைகள் கல்முனை என். பூபாலரத்தினம் என்ற பெயரிலேயே பிரசுரமாயின. தமிழ், மனிதநேயம், காதல், சாதி ஒழிப்பு சம்பந்தமான பல நல்ல மரபுக்கவிதைகளை எழுதி வெளிப்படுத்தினார். கல்லூரியில் 'அவதானிப்புக்குரியவராக' ஆசிரியப் பெருந்தகைகளால் 'கவிஞர்' என்று அடைமொழி கூறி அழைக்குமளவிற்கு இவரது கவித்துறை விசாலமாகியிருந்தது.

இந்நாட்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழர் உரிமைப் போராட்டம், சத்தியாக்கிரகம், உண்ணாவிரதமென தமிழ் உணர்ச்சி, தமிழர் எழுச்சி கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருந்தது. நீலாபாலனும் மாணவப் பருவத்திலேயே இவற்றில் அதிதீவிரமாக ஈடுபாடு காட்டினார்.

"தாய்மொழிக்கு வந்ததடா சூடு" என்றெல்லாம் உணர்ச்சிப்பொங்கும் கவிதைகள் 'சுதந்திரனில்' தொடர்ந்தெழுதினார், அப்போது சுதந்திரன் ஆசிரியராகவிருந்த மூத்த பத்திரிகையாளர் திரு.எஸ்.டி. சிவநாயகம் அவர்கள் மாணவக் கவிஞராயிருப்பது சில பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியேற்படுமென நினைத்து கல்முனை என். பூபாலரத்தினம் எனும் பெயரை, 'கல்முனைப் பூபால்' என மாற்றியதோடு, அன்றிலிருந்து கல்முனைப் பூபாலான இவர் 1968ல் சுதந்திரன் மாணவர் மன்றம் நடத்திய கவிதைப் போட்டியில் முதற்பரிசு பெற்றுக் கொண்டார்.

கல்லூரியில் "தமிழோசை" என்ற கையெழுத்துப் பத்திரிகை ஆசிரியராகவும், முத்தமிழ்மன்றத் தலைவராகவுமி ருந்திருக்கிறார். திறமைப் பேச்சாளரான இவர் பாடசாலையில் நடைபெற்ற பாரதிவிழாப் பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்றார். அதுமட்டுமன்றி கல்முனைச் சுகாதாரப் பகுதியினர் நடாத்திய கவிதை எழுதும் போட்டியில் குறிப்பிட்ட நேரத்திற்குள் கவிதையெழுதி முதலிடம் பெற்றார்.

கல்முனை எழுத்தாளர் சங்க உறுப்பினர், சோசலிச சிந்தனைக்கழக உறுப்பினர், இளைஞர் முன்னணி செயலாளர், முத்தமிழ்மன்றச் செயலாளர், கிழக்கிலங்கை கன்னித் தமிழர் இயக்க பொதுச் செயலாளர் ஆகிய பதவிகளோடு கல்முனைக் கடற்கரைக் கண்ணகி ஆலய சபை செயலாளருமாக இருந்தி ருக்கிறார்.

15 நாடகங்களுக்குமேல் எழுதி, இயக்கி, நடித்து மேடையேற்றியுள்ளார். 'நிழல்கள்', 'சந்தனைச்சிலை', 'திருப்பு முனை', 'ஆயுதம்' ஆகிய இவரது நாடகங்கள் குறிப்பிடத்தக் கவை. "மாமனார் பறந்தார்" எனும் இவரது நகைச்சுவை நாடகம் 10 நாட்கள் டிக்கட் காட்சியாக நடாத்தப்பட்டது.

கல்முனை இலக்கிய வட்டத் தலைவராயிருந்து, அப் பகுதியில் அப்போது வளர்ந்து வந்து கொண்டிருந்த பல கவிஞர்களுக்கு ஊக்கமும், ஊட்டமும் கொடுத்து, பிரசுரங்கங் களும் ஒழுங்குசெய்து அவர்களை வளர்த்தெடுத்தவராகவும் இவர் திகழ்கின்றார்.

1968ல் கல்முனையில், பொங்கலைச் சிறப்பிக்க இவர் ஒழுங்கு செய்திருந்த 'தமிழ்க் கவிதை விழா' இவரது திறமை யை பறைசாட்டியது. இந்த விழாவை தினபதியும், மித்திரனும் விசேட மலர்கள் வெளியிட்டுச் சிறப்பித்தன. மூத்த கவிஞர்கள் பலர் இந்தவிழாவிற் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இவ்விழாக் கவியரங்கில் மறைந்த கவிஞர் வி. ஆனந்தன், கல்லூரன் ஆகியோர் பங்குபற்றினர். இதுவே இவர்களது முதலாவது கவியரங்கமாகும்.

இந்தக் காலம் கல்முனைப் பூபாலுடைய கவிதா வளர்ச்சியின் உச்சக்கட்டமென்றால் அது மிகையல்ல. அதற்குக் காரணம் மூத்த கவிஞர்களான நீலாவணன், பாண்டியூரன், ஜீவாஜீவரத்தினம், மருதூர்க் கொத்தன் போன்றவர்களோடு ஒன்றிப் பழகக்கூடிய வாய்ப்பும், கவிதை சம்பந்தமான நுணுக்கங்களைக் கற்றுக்கொள்ளக் கூடிய, கலந்துரையாடக்கூடிய வசதிகளும் இவருக்குக் கிடைத்தது. "இதனால் என்னால் பண்படமுடிந்தது" என பாசத்தோடும், நேசத்தோடும் இந்நாட்களை நினைவுபடுத்துகிறார் நீலாபாலன்.

"பூபால் கவிதை புனைவான். அவன் கவிதை
சாவாத பேறுடைய தாம்"

என்று மறைந்த கவிஞர் நீலாவணன் அவர்கள் சாற்றுறுதி செய்திருப்பது இங்கு நினைவுபடுத்தத்தக்கது. நீலாபாலன் இந்த உறவு நெருக்கங்களால் 500 கவிதைகளை 1970க்கு முன்னரேயே எழுதிமுடித்துவிட்டார்.

1970களில் தமிழகத்தில் 'வானம்பாடி' என்ற கவிஞர் அமைப்பு புதிய முயற்சிகளீடுபட்டதோடு, 'வானம்பாடி' எனும் புதுக்கவிதைச் சஞ்சிகையையும் வெளியிட்டது. மானிடம் பாடப் புறப்பட்ட இந்த அமைப்பினுடைய செயற்பாடு, தாக்கம் இலங்கைக் கவிஞர்களையும் பாதித்தது. கல்முனைப் பிரதேச இளைய கவிஞர்களை இந்த அலை சிந்திக்க வைத்தது. கல்முனைப் பூபால் தனது சகாக்களை இணைத்துக் கொண்டு "கல்முனை புதிய பறவைகள் கவிதா மண்டலம்" என்றோர் அமைப்பை உருவாக்கி அதன் தலைவராகவும் செயற்பட்டார்.

"இந்த யுகத்தின் இருள்கள் இறக்க
எங்கும் இனிய வசந்தம் பிறக்க
எங்கள் உழைப்பே எருவாய் அமைக" என்ற அமைப்பின் கோட்பாட்டு வரிகள் நீலாபாலனால் எழுதப்பட்டதே.

இந்த அமைப்பினூடாக மானுடம் பாடப்பட்டது. மனித நேயம் முன்னெடுக்கப்பட்டது. பல இலக்கியச் சந்திப்புகள், கலந்துரையாடல்கள், கவிதைக் கருத்தரங்குகள், கவியரங்குகள் வாரந்தோறும் நடத்தப்பட்டன. கவிதையைப் புதிய கோணத்தில் முன்னெடுத்த அமைப்பு "புதிய பறவைகள் கவிதா மண்டலம்". இதற்கு முக்கிய ஊக்கியாயிருந்தவர் நீலாபாலன்.

எல்லோராலும் கவிதை எழுத முடியும். ஆனால், எழுதிய கவிதையை உணர்வோடு சொல்ல முடிவதில்லை. கவிதை செவிநுகர் கனிகள் அல்லது "தேன்வந்து பாயுது காதினிலே" என்ற பாரதியின் வாக்கைச் சில கவிஞர்களால் எண்பிக்க முடிவதில்லை. ஆனால், கவிதை செவிநுகர் கனிதான் என்பதை நிரூபிக்க கவிஞர்களில் முதல் வரிசைக் கவிஞர் நீலாபாலன் விளங்கினார்.

இவரது எழுத்துப் போலவே இவரது கவிதைப் பொழிவும் சிறப்பாகவே இருக்கும். வானொலியில் இடம்பெற்ற "பௌர்ணமி" கவியரங்கொன்றில் நீலாபாலனது கவிதைப் பொழிவில் லயித்துப் போன அப்போதைய இலங்கை வானொலி தமிழ்ப் பகுதிப் பிணப்பாளர் திரு.வி.என். மதியழகன் அவர்கள் 1990ல் வானொலியில் கவிதை சம்பந்தமான ஒரு நிகழ்ச்சியை நடத்தும் படி கேட்டுக் கொண்டதற்கிணங்க நீலாபாலனால் வானொலியில் ஆரம்பிக்கப்பட்டதே "கவிதைக்கலசம்" எனும் நிகழ்ச்சி. எழில் வேந்தன் தயாரிப்பில் நீலாபாலன் தொகுத்து வழங்கிய "கவிதைக் கலசம்" இலக்கிய உலகில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியாக விளங்கியது. இலங்கை பூராகவுமிருந்த இளைய கவிஞர்கள் பலரது கவிதைகளைத் திருத்தம் செய்து சங்கை யாக அரங்கேற்றி அவர்களை உற்சாகப்படுத்தி உயரத்தில் ஏற்றிவைத்தவர் இவர். இன்று பிரபலங்களால் மிளிருகிற நூற்றுக் கணக்கான கவிஞர்களைத் தூசுதட்டித் துடைத்து உருவாக்கிய பெருமை இவரைச் சாரும். 1996 வரை இவரால் நடாத்தப்பட்ட இந்நிகழ்ச்சியை இவருக்குப் பின்னர் பலர் நடத்தியிருந்தாலும் இவர் நடத்திய காலம் கவிதைப் பொற்காலமென கவிதையா ளர்கள், கவிதா ரசிகர்கள் அறிவார்கள்.

இவர், இலங்கை எழுத்தாளர்களை அறிமுகம் செய்வதற் காக வானொலியில் "முத்துப் பந்தல்" எனும் மகுடத்தில் இன்னுமொரு நிகழ்ச்சியை நடாத்தினார். சர்வானந்தா அவர்கள் இந்நிகழ்ச்சியைத் தயாரித்தளித்தார். இலைமறை காயாயிருந்த ஏறத்தாழ 37 எழுத்தாளர்கள், கவிஞர்கள், சிறுகதையாசிரி யர்கள் நீலாபாலனால் நேர்காணப்பட்டு விலாசப்படுத்தப்பட் டார்கள். 1992ல் இந்நிகழ்ச்சி பலரது வரவேற்பையும், பாராட்டை யும் பெற்றது.

இதுவரை 75 கவியரங்குகளில் பங்கேற்றுள்ள நீலாபாலன், வானொலியில் மட்டும் 12 கவியரங்குகளைத் தலைமைதாங்கி நடாத்தியுள்ளார். ஊவா மாகாணசபை, அமைச்சினுடைய சாஹித்திய விழா கவியரங்குகள் ஐந்திற்கு தலைமைதாங்கி நடாத்தியுள்ளார். 1978ல் பதுளை அல்.அதானில் நடைபெற்ற மீலாத் விழாக் கவியரங்கிற்கும் தலைமைதாங்கி நடாத்தியுள் ளார். கிழக்கிலங்கை, மன்னார், யாழ்ப்பாணம், புத்தளம், திருக்கோணமலை, பலப்பிட்டிய, கண்டி ஆகிய நகரங்களில் நடைபெற்ற கவியரங்குகள் பலதில் கலந்தும், தலைமைதாங் கியும் நடாத்தியுள்ளார். இவரது கவிதை கேட்பதற்காகவே ரசிகர்கள் திரள்வார்கள்.

இலங்கை வானொலியில் 1993ம் ஆண்டு புத்தாண்டு சிறப்புக் கவியரங்கொன்றை நடாத்தினார். மூத்த கவிஞர்கள் அம்பி, நாவற்குழியூர் நடராஜன், சில்லையூர்ச் செல்வராஜன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். மூத்த, அனுபவம் வாய்ந்தவர் களோடு பங்குபற்றியிருந்தாலும் இவரது ஆளுமை மேலோங் கிப் பளிச்சிட்டதை பலரும் பாராட்டியிருந்தார்கள். இதுவொரு வரலாறு. இலங்கை ரூபவாஹினியிலும், கவியரங்கு, இலக்கியச் சந்திபுக்களை நீலாபாலன் நடாத்தியுள்ளார். வானொலியில் முஸ்லிம், சிங்கள, கிறிஸ்தவ, இந்து கவிஞர்கள் கலந்து கொண்ட புத்தாண்டு சமாதானக் கவியரங்கொன்றை நீலாபாலன் தலைமைதாங்கி நடாத்தியுள்ளார்.

இவர் விளம்பரத்தின் மேல் விருப்பமில்லாத ஒருவர் என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

1976ம் ஆண்டு அரசாங்க உத்தியோகத்திலிருந்து விலகி, பெருந்தோட்டத்துறையில் உத்தியோகம் பெற்று, மலையகத்திலேயே திருமணமும் செய்து, முழுக்க முழுக்க மலையக வாசியாகிவிட்ட பின்னர் கல்முனைப் பூபால் என்று மிகப் பிரபலமாகியிருந்த தனது பெயரில் பிரதேசவாடை தொணிக்கின்றது என்பதால் அதை மாற்றினார்.

தன்னுடைய மனைவியின் பெயரில் முன்பாதியையும் (நீலா) தனது பெயரின் பின்பாதியையும் (பாலன்) இணைத்து நீலாபாலன் என்று பெயர் மாற்றம் செய்து கொண்டார். ஒரு கவிஞனுக்கு முகமும், முகவரியும் அவனது எழுத்துகளே என்பதற்கொப்ப இவரது எழுத்துகளே இவரை இனங்காட்டியது.

பெயர் மாற்றத்தோடு அக்கினிப் பாவலன் என்ற தலைப்பில் ஒரு கவிதை எழுதி 1976ல் சிந்தாமணிக்கு அனுப்பியிருந்தார்.

"பசியோடு உலவிடும் மனிதனின் துயரினை
பாடிடும் பாவலன் நான்
பாவையர் சதையினில் காவியம் தேடிடும்
பாவலர் வைரியும் நான்" என்றும்

"இது ஒரு புதுவிதி என ஒரு தனிவிதி
எழுதி நான் பாவிசைப்பேன்"

என்று எழுதப்பட்ட அந்தக் கவிதை மறுவாரமே பிரசுரமானதோடு, ஆசிரியர், சிவநாயகத்திடமிருந்து தொடர்ந்து எழுதும்படி கடிதமும் இவருக்கு வந்திருந்தது. அதற்குப் பின்னர் சிந்தாமணியில் தொடர்ந்து இவரது கவிதைகள் வெளியாகின. தினகரன், வீரகேசரி மற்றும் இலங்கையிலிருந்து வெளிவரும் எல்லா ஏடுகளிலும் எழுதிய இவர், இந்தியாவிலிருந்து வெளிவரும் ராணி, தீபம், ஆனந்தவிகடனிலும் கவிதைகள் எழுதியுள்ளார்.

தற்போது ஊவா இலக்கியவட்ட ஆலோசகர், ஊவா தமிழ்ச்சங்கத் தலைவர், இன்னும் பல அமைப்புகளின் காப்பாளர், இப்படி அனேக இலக்கியவியல் முயற்சிகளில் சம்பந்தப்பட்டுள்ளார் நீலாபாலன் 1996ம் ஆண்டு பண்டாரவளை இந்து

இளைஞர் மன்றத்தோடு இணைந்து கவிதைப்பெருவிழா ஒன்றை நடாத்தியுள்ளார். இலங்கை வானொலி, ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் பலர் இவ்விழாவிற் கலந்து சிறப்பித்தனர். இவ்விழாவில் 20 இலக்கியவியலாளர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.

உத்தியோக ரீதியாக பெருந்தோட்ட துறையில் 30 ஆண்டுகள் பெரிய கிளாக்கர், அதன் பின்னர் நிர்வாக அதிகாரியாக கடமையாற்றியுள்ளார். இந்த உத்தியோக உயர்வால் பல இலக்கியவியல் இழப்புகளுக்கு ஆளானார் நீலாபாலன்.

கடந்த ஏப்ரல் 2008ல் ஓய்வுபெற்றதிலிருந்து இன்றுவரை வெளிமடை கிறீன்ரீ எஸ்டேட்டின் முகாமையாளராக சேவையாற்றி வருகிறார். நீலாபாலன் அகில இலங்கை சமாதான நீதவானாகவும், ஜூரிமார்சபை, சமாதான சபை உறுப்பினராகவும் இருக்கிறார்.

நீலாபாலனது மனைவி நீலாதேவி ஒரு ஆசிரியை. இவர்களுக்கு இரண்டு ஆண் பிள்ளைகள். மூத்தவர் கிஷோத். தேயிலை உற்பத்திச்சாலை அதிகாரியாகவிருக்கிறார். இளைய மகன் மனோஜ் கணித ஆசிரியராகவிருக்கிறார். தற்போதெல்லாம் தனது மகனுடைய குழந்தை விதுர்ஷிகாவுடன் விளையாடுவதும், கவிதை, கட்டுரை, விமர்சனம் என்று எழுதுவதிலுமே பொழுது போவதாகச் சொல்லும் நீலாபாலன், இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட கவிதைகளையும், நுற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், உருவகக் கதைகள், நாடகங்கள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகளையும், விமர்சனங்களையும் எழுதியுள்ளார். இவரது புனைப்பெயர்கள் கல்முனைப் பூபால், நீலாபாலன், பாலா, எரியீட்டி, கவிவலன், கவிஞானகேசரி, கல்முனைக் கவிராயர் என்பதாகும்.

மரபுக் கவிதையா? புதுக்கவிதையா? நீலாபாலன் எழுதுவது கவிதை. சாதாரண வாசகர்களுக்கும் புரியக்கூடிய வார்த்தைகள். படிமம் என்ற பெயரில் விளக்கமில்லாத வார்த்தைச் சூத்திரங்களை இவர் எழுதுவதில்லை.

இவருடைய இலக்கிய சேவைகளைக் கருத்திற் கொண்டு பின்வரும் அமைப்புக்கள் விருதுகளையும், கௌரவங்களையும் வழங்கியுள்ளன.

- 1972ல் இளம் எழுத்தாளர்மன்றம் 'பாவரசு' பட்டம் கொடுத்தது.
- 1977ல் வெளிமடை இலக்கியவட்டம் கவிதை வித்தகன் பட்டம் கொடுத்தது
- 1991ல் ஊவா மாகாண சாஹித்திய விழாவில் 'கவிமணி' பட்டம் கிடைத்தது.
- 1993ல் நோர்வூட் இலக்கியவிழாவில் 'தமிழ்மணி' பட்டம் கிடைத்தது.
- 1996ல் பண்டாரவளை கவிதைப் பெருவிழாவில் 'கவிமாமணி' பட்டம் கிடைத்தது
- 2003ல் ஊவா சாஹித்திய விழாவில் 'கவிதைப் பரிதி' பட்டம் கிடைத்தது
- 2003ல் அகில இன நல்லுறவு ஒன்றியம் 'சாமஸ்ரீ கலைத்திலகம்' பட்டம் கிடைத்தது
- 2009ல் கலாபூஷணம் பட்டம் கிடைத்தது

இருப்பினும் நீலாபாலனது கவிதைத் தொகுப்பு இது வரை வெளிவாரமலிருப்பது பெரும் குறைபாடாகவே காணப்படு கின்றது. இலங்கையில் இதுபோல பல திறமையான எழுத்தா ளர்களின் நூல்கள் வெளிவராமலிருப்பது பெரும்குறைபாடா கவே குறிபிபிட வேண்டும். இந்தியாவைப் போல இலங்கையில் தமிழ்நூல் வெளியீட்டு வசதிகள் மிகக் குறைவு. இலங்கையில் எழுத்தாளனே வெளியீட்டாளனாகவும் மாற வேண்டிய நிலை தமிழ் நூல் வெளியீட்டு வளர்ச்சிக்கு பெரிதும் பின்னடைவை எடுத்துக் காட்டுகின்றது. அதுமட்டமன்றி வெளியிடப்படும் நூல்க ளை சந்தைப்படுத்துவதிலும் பாரிய சிக்கல்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது. இந்நிலையினால் பல திறமையான எழுத்தா ளர்கள் எந்தவித நூல்களையும் வெளியிடாமலே உள்ளதையும் இவ்விடத்தில் சுட்டிக் காட்டுதல் பொருத்த மானதாகும்.

ஆயினும் 'அலைகள்' மாணிக்க விழுதுகள் ஆகிய இரண்டு கவிதைத் தொகுதிகளை வெளியிடக்கூடிய நடவடிக்கைக ளை நீலாபாலன் மேற்கொண்டுள்ளார் என்பது மகிழ்ச்சி தரும் ஒரு செய்தியாகும்.

இன்னும் 07 தொகுதிகள் வெளியிடக்கூடியளவு கவிதைகளும், 03 தொகுதிகள் வெளியிடக்கூடியளவு கவியரங்கக் கவிதைகள், கவிதைக்கலசம் நிகழ்ச்சித் தொகுப்புகள், முத்துப் பந்தல் நிகழ்ச்சி முன்னுரைகள்; இப்படி ஏராளமான ஆக்கங்கள் பதிவுகளின்றியே முடங்கிக் கிடக்கின்றன. இவையும் விரைவில் வெளிவர .வேண்டுமென்பதே இலக்கிய ஆர்வளர்களின் எதிர் பார்ப்பாகும்.

தோட்டப் புறத்திலுள்ள எரியும் பிரச்சினைகளுக்கு நேரடியாக முகம் கொடுப்பவர் நீலாபாலன். ஆகவே அப்பிரச்சினைகளை தனது கவிதைக்குள் படம்பிடித்து அதற்கான முடிவுகளையும் தத்துவ ரீதியாக வெளிப்படுத்தும் சந்தர்ப்பம் இவருக்குக் கிடைக்கிறது. ஆகவே மலையகத்திலிருந்து வெளியான பிறருடைய கவிதைகளைவிட நீலாபாலனுடைய கவிதைகள் கவித்துவமும், தனித்துவமும் மிக்கதாக வெளிப்படுகிறது. உதாரணத்திற்கு..

"அப்பன் உரம்போட ஆயி கொழுந்தெடுப்பாள்
அதுதானே இதுவரை எம் சரித்திரம் - உடல்
ஆட உழைத்தும் என்ன... லாபங்களை ஈட்டிஎன்ன...
அடுக்களையில் படுத்திருக்கே தரித்திரம்..."

இந்த மூத்த கவிஞர் நீலாபாலனின் இலக்கிய படைப்புகள் நூலுருவாவதன் மூலம் இவரின் திறமைகள் என்றும் பதிவாக்கப்பட வேண்டும். அது தார்மீக இலக்கியக் கடமையாகும்.


இவரின் முகவரி:-

**N. POOBALARATNAM**
**NO: 65, HADDAWULA,**
**WELIMADA.**

**T/P: 057-5670990**
**Mobile: 077-6671581**

இக்கட்டுரை தட்ஸ்தமிழ் இணையத்தில் பிரசுரமானது.

# வயிரமுத்து கந்தசாமி



பதிவு
**335**

**கலைத்துறை**

வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், சாவகச்சேரி தேர்தல் தொகுதி, தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவில், இடைக்குறிச்சி, வரணி கிராமசேவகர் வசத்தில் வசித்துவரும் வயிரமுத்து கந்தசாமி மூத்த நாடகக் கலைஞரும், எழுத்தாள ருமாவார்.

1941ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 10ஆந் திகதி வயிர முத்து, இலட்சுமி தம்பதியினரின் புதல்வராக வரணியில் பிறந்த கந்தசாமி தனது ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணம், வரணி அரசினர் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையிலும், இடைநிலை, உயர்தரக் கல்வியினை யாழ்ப்பாணம், நீர்வேலித் தெற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை யாழ்ப்பாணம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, யாழ்ப்பாணம் வரணி மகாவித்தியாலயம் ஆகியவற்றிலும் பெற்றார்.

ஆசிரியர் சேவையில் இணைந்து பாடசாலை அதிபராக

ஓய்வுபெறுகையில் இவர் அதிபர் சேவை தரம் 01இல் இருந்தார். இவரின் அன்புப் பாரியார் பெயர் தெய்வானை. இத்தம்பதியி னருக்கு இன்பரதி, புனிதவித்தகன், புகழினி, நிகரில்காந், எழில் முதல்வன் ஆகிய அன்புச் செல்வங்களுளர்.

இவரின் கலைத்துறை சேவையில் நாடகத்துறையே முதன்மைப் பெற்று விளங்குகின்றது. "பாடசாலையில் கற்கும் போது ஏற்பட்ட இயல்பான ஆர்வத்தை வளர்த்துக் கொண்டமை யினாலேயே என்னால் ஒரு நாடக நடிகனாக வர முடிந்தது" எனக் குறிப்பிடும் வயிரமுத்து கந்தசாமி பெண் பாத்திரமேற்று நடிப்பதில் 1960களில் பிரதேசத்தில் முத்திரை பதித்திருந்தார்.

அக்காலகட்டங்களில் யாழ். மாவட்டத்தில் நான்கு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் இருந்தன. இந்நான்கு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும் இணைந்து 1964ம் ஆண்டில் விசால மான கலைவிழாவொன்றை நடத்தியது. கிடைக்கும் தகவல் களின் அடிப்படையில் நான்கு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் ஒன்றிணைந்து நடத்திய முதலும் கடைசியுமான கலைவிழா இதுவாகவேயாகும். இக்கலைவிழாவில் நல்லூர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் பங்களிப்பாக "எப்படி நாடகம்?" எனும் நாடகம் மேடையேற்றப்பட்டது. இந்நாடகத்தில் கந்தசாமி கதா நாயகி பாத்திரமேற்று நடித்தார். இதுவே இவர் நடித்த முதல் நாடகமாகும்.

இந்நாடகத்தில் நடித்த இவரை உண்மையில் பெண்தான் என நம்பிய மற்றைய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளின் ஆசிரிய மாணவர்கள் மேடைக்குள் வந்து தன்னுடன் கதைத்து வியந்து சென்றதை தன்வாழ்வில் இனிய அனுபவமாக இன்னும் நினைத்து மகிழ்ந்து வருகின்றார். இந்நாடகத்தில் ஒரு கட்டத்தில் இவர் ஆடிய நடனத்தைப் பார்த்த நடன விரிவுரையா ளர் உயர்திரு. வீரமணி ஐயர் அவர்கள் "யாரிடம் இந்நடனத் தைப் பயின்றீர்?" எனக்கேட்டுள்ளார். அதற்கு தன்முயற்சியா லேயே நானாகவே ஆடினேன் என்பதை இவர் கூறியதும் வியந்து பாராட்டியுள்ளார். இவரது கல்லூரி அதிபர் தொடக்கம் விரிவுரையாளர்கள் வரை எல்லோருமே இவரது நடிப்பினைப் பாராட்டி வாழ்த்தியுள்ளனர். இந்நிகழ்வானது இவரின் நடிப்பு

ஆர்வத்தை மேலும் தூண்டியது. முதல் நாடகத்தில் இவர் பாத்திரமேற்று நடித்த 'ரஜனி' எனும் பெயர் கொண்டே இவர் தொடர்ந்தும் அழைக்கப்பட்டு வந்தார்.

இதனைத் தொடர்ந்து 1965ல் நல்லூர் ஆசிரியர் கல்லூரியின் கலைவிழாவிலே "அணையா விளக்கு" எனும் நாடகத்தில் மீண்டும் கதாநாயகியாகவே நடித்துள்ளார். பாராட்டுக்கள் தொடர்ந்தன. இவர் ஆரம்பத்தில் நடித்த இரண்டு நாடகங்களுமே குடும்பக் கதையம்சங்களைக் கொண்ட நாடகங்களாகும்.

நடிப்புடன் மாத்திரம் தன்னை வரையறுத்துக் கொள்ளாமல் நாடகத்தின் ஏனைய துறைகளிலும் பங்களிப்பு வழங்க வேண்டும் என்ற ஆர்வம் இவருக்கு ஏற்பட்டது. இதன்விளைவாக இவர் எழுதி நெறிப்படுத்தி நடித்து அரங்கேற்றிய முதல் நாடகம் "ஒன்றிய உள்ளம்" என்பதாகும். புராண, இதிகாசக் கதைகளையே கருவாகக் கொண்டு இசைவடிவ நாடகங்களையும், சிந்து நடைக்கூத்தினையும் (காத்தவராயன்), நாட்டுக் கூத்துக்களையும் கண்டு வந்த வரணியூர் நாடக ரசிகர்களுக்கு இந்நாடகம் ஒரு மாறுபட்ட உணர்வினை வழங்கியது. சமூக சீர்த்திருத்த எண்ணக் கருவை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டிருந்த இந்நாடகத்திலும் இவர் கதாநாயகியாகவே நடித்தார். மேலும், இந்நாடகத்தை தனி நாடகமன்றம் அமைத்து அரங்கேற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

"பேயாட்டம்" எனும் இவரின் நாடகம் மூடநம்பிக்கைகளை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது. அறிஞர் அண்ணாவின் சாதி ஒழிப்பு, கலப்புத் திருமணம் போன்ற விடயங்களை கருப் பொருளாகக் கொண்டே இந்நாடகம் அமைந்திருந்தது. உண்மைச் சம்பவங்களையும் கலந்து எழுதப்பட்ட இந்நாடகம் 1966ல் மேடையேற்றப்பட்டது. இதுவரை கதாநாயகியாக நடித்துவந்த இவர் இந்நாடகத்தில் கதாநாயகனாக நடித்துள்ளார்.

இவரால் நெறிப்படுத்தப்பட்ட "காசியப்பன்" எனும் வரலாற்று நாடகம் 1966ல் மாத்தளை புனிததோமையர் கல்லூரி மாணவர்களால் தமிழ் மொழித்தினப் போட்டியில் மேடையேற்றப் பட்டது. பின்பு 1967ல் இவர் "அழகிய மலர்" எனும் நாடகத்தில்

கதாநாயகனாக நடித்துள்ளார். மச்சாள் மச்சானையே மணக்க வேண்டும் என்பதனாலேற்பட்ட குடும்ப முறிவினை அடிப்படை யாகக் கொண்டு இந்நாடகம் அமைந்திருந்தது.

1970ல் வவுனியா செட்டிக்குளம் மகாவித்தியாலய மாண வர்களைக் கொண்டு இவர் நெறிப்படுத்திய மற்றுமொரு நாடகம் "பாசத்தின் வெற்றி" எனும் இதிகாச நாடகம் ஆகும். இந்நாட கம் வட்டாரப் போட்டியில் 1ம் இடத்தையும், வவுனியா மாவட்டப் போட்டியில் 3ம் இடத்தையும் பெற்றது. 1971ஆம் ஆண்டு தேசிய சேமிப்பு வார விழாவுக்காக வேண்டி உதவி அரசாங்க அதிபரின் வேண்டுதலுக்கிணங்க "சேமிப்பின் சிறப்பு" எனும் நாடகத்தை எழுதி மேற்படி பாடசாலை மாணவர்களைக் கொண்டு நடிக்க வைத்தார்.

1972ஆம் ஆண்டில் இவரால் கதைவசனம் எழுதி நெறிப்படுத்தப்பட்டு மேடையேற்றப்பட்ட மற்றுமொரு நாடகம் "வசந்த வாழ்வு" என்பதாகும். "ஓதோலோ" எனும் நாடகத்தை மையக் கருவாகக் கொண்டு இந்நாடகம் அமைந்திருந்தது. இந்நாடகம் முதலில் அவரின் சொந்த ஊரிலே அரங்கேற்றம் செய்யப்பட்டது.

தொடர்ந்து 1974ஆம் ஆண்டில் தென்மராட்சி பச்சிலைப் பள்ளிப் பிரிவால் நடத்தப்பட்ட போட்டியில் இவர் எழுதி, கதாநாயகனாக நடித்து, நெறிப்படுத்திய "நாட்டுக்கு நான் என்ன செய்தேன்" எனும் நாடகம் 1ம் பரிசைப் பெற்றது. இந்நாடகம் உணவு உற்பத்தியை ஊக்குவிக்கும் கருப் பொருளை அடிப்படையா கக் கொண்டிருந்ததுடன், பல தடவைகள் மேடையேற்றப்பட்டது.

"சிந்தனைக் கதவு" வரலாற்று நாடகம் (சாம்ராட் அசோகன்) கொழும்பு தெஹிவளை தமிழ் வித்தியாலயக் கலைவிழாவுக்கு மாணவர்களை நடிக்க வைத்து 1975ல் அரங்கேற்றியுள்ளார்.

வரணியூரன் S.S. கணேசப்பிள்ளையுடன் "தாடிச் சாமியார்" எனும் வானொலி நாடகத்தில் 1976ஆம் ஆண்டில் இவர் நடித்துள்ளார்.

"தடுமாற்றம்" திரைப்படப் பாடல் வரிகளை உரையாடல்களாக்கி எழுதிய நாடகம் இது. கற்பனை கலந்த உண்மைச் சம்பவங்களைக் கொண்ட குடும்பக்கதை. இந்நாடகத்தை நெறிப்படுத்தியதோடு கதாநாயகனாகவும் நடித்துள்ளார். பெண் பாத்திரங்களுக்குப் பெண்களையே இணைந்து 1976ல் நடிக்க வைத்த முதல் நாடகமாகவும் வரணிப் பிரதேசத்தில் இந்நாடகம் அமைந்திருந்தது.

"சங்கிலியன்" சாவகச்சேரிக் கல்வி வட்டாரக் கலை விழாவிலே சாவகச்சேரியில் அரங்கேறியது. இவர் சங்கிலியாக நடித்துள்ளார். இவர் நடித்த முதல் அரச நாடகம். இதில் நடித்தவர்கள் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர் ஆவர். தோற்றம் மிக அழகாக இருப்பதாக ஒப்பனைச் செய்து முடித்தவுடன் ஒப்பனை செய்தவரே பாராட்டியுள்ளார். 1978ல் உதவி நெறியாளனாகக் கடமையாற்றியுள்ளார்.

"சிரி,சிந்தி" என்பது இவரின் நகைச்சுவை நாடகங்களில் ஒன்றாகும். கலியாணப் புரோக்கரின் நடைமுறை, எம்.பி.யின் மகன் என்ற வகையில் எந்தக் கூடாததையும் செய்யலாம். அதை யாரும் கேட்க முடியாது என்ற அதிகாரப் போக்கினை வெளிப்படுத்துவதாக அமைந்த "சிரி,சிந்தி" நாடகத்தை 1978ல் எழுதி நெறிப்படுத்தியுள்ளார்.

"உயர்வு" சிந்து நடைக்கூத்துப் பாணியிலானது. ஏழ்மைக் குடும்பமும், அக்குடும்பத்து மகனின் கல்வியின் உயர்வும், ஆசிரியையின் அலட்சியப் போக்கும் கொண்டது. 1988ல் போட்டியில் 1ம் பரிசைப் பெற்றது.

"காத்தவராயன்" சிந்து நடைக்கூத்து, இவர் நெறிப்படுத்திய முதலாவது புராண நாடகம் இதுவாகும். 30 நிமிடக் கூத்தாகவும், 15 நிமிடக்கூத்தாகவும் கதைத் தொடர் மாறாது சுருக்கி 3ம், 4ம், 5ம் வகுப்பு மாணவ மாணவியரை நடிக்க வைத்து, இந்நாடகத்தை மேடையேற்றினார். இந்நாடகம் 1989, 1990களில் 1ம் பரிசைப் பெற்றது.

"பண்டார வன்னியன்" இவர் முதலில் நெறிப்படுத்திய வரலாற்று நாடகம். வரணி வடக்கு அ.த.க. பாடசாலைக்

கலைவிழாவில் அரங்கேறியது. வரணியில் முழுக்க முதலிற் பழைய மாணவியர் நடித்த நாடகம் இதுவாகும்.

1978ஆம் ஆண்டில் "புரட்சித் தலைவன்" இவர் முதன் முதலில் எழுதி அரங்கேற்றிய கற்பனை அரச நாடகம். இவர் வில்லனாகவும், மகள் கதாநாயகியாகவும் நடித்துள்ளனர். பழைய மாணவர்களும் நடித்துள்ளனர். ஒரு திரைப்படத்தைப் பார்த்தது போன்றிருந்ததாகப் பலரும் பாராட்டினர்

இவரின் நாடகங்கள் பல தடவைகள் மேடையேற்றப்பட்டுள்ளன. நாசுக்காக சமூக சீர்த்திருத்தக் கருத்துக்களை முன் வைப்பதில் இந்நாடகங்கள் சிறப்பாக விதந்துரைக்கப்பட்டன.

இலங்கையில் மறைந்துவரும் கலைகளான நாட்டுக்கூத்து, நாட்டார் பாடல்கள் போன்றவற்றிலும் இவருக்கு ஓரளவு ஆர்வமுண்டு. 1967ஆம் ஆண்டில் "புறப்படுவீர புறப்படுவீர்" எனும் இவரின் கன்னிக் கவிதையை சங்கம் சஞ்சிகை 1967.03.01 இல் பிரசுரித்தது. இருப்பினும் இவர் அதிகமாக கவிதைத்துறையில் ஆர்வம் காட்டவில்லை. இடைக்கிடையே இவரின் சில கவிதைகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஒலிபரப்பப்பட்டுள்ளன. மேலும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் சில நேரடி நிகழ்ச்சிகளிலும் இவர் பங்கேற்றுள்ளார்.

இவரின் இத்தகைய சேவைகளைக் கருத்திற் கொண்டு இலங்கை அரசு 2008ஆம் ஆண்டில் கலைஞர்களுக்கு வழங்கும் உயர் விருதான "கலாபூஷண" விருதினை வழங்கி கௌரவித்தது. தற்போது நாடகத்துறை தொடர்பாக ஆலோசனைகளை வழங்கி அத்துறையின் உயர்ச்சிக்காக தன் வாழ்வினையே அர்ப்பணித்துவரும் இவரின் முகவரி:

**MR. V. KANTHASAMY,**
**PERIYA THAAI AGHAM,**
**EDAIKKURICHCHY,**
**VARANY.**

# செபஸ்டியாம்பிள்ளை ஞானராசா



பதிவு

**336**

**எழுத்துத்துறை**

வடமாகாணம், மன்னார் மாவட்டம், முருங்கன் - 'செம் மண்தீவு' எனும் பிரதேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு 1995 ஆம் ஆண்டிலிருந்து திருகோணமலை மாவட்டத்தில் அன்புவழி புரம் கிராமசேவகர் வசத்தில் நிரந்தரமாக வசித்துவரும் செபஸ்டியாம்பிள்ளை ஞானராசா ஒரு கவிஞரும், எழுத்தாளரு மாவார். இவர் சிறுவர் இலக்கியங்களைப் படைப்பதில் தற்போது கூடிய ஆர்வம் காட்டி வருகின்றார்.

1964ஆம் ஆண்டு மார்ச் மாதம் 03ஆந் திகதி செபஸ்டி யாம்பிள்ளை, பரமேஸ்வரி தம்பதியினரின் புதல்வராக முருங்க னில் பிறந்த 'ஞானராசா' தனது ஆரம்பக் கல்வியை மன்னார், மாவிலங்கேணி ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசா லையிலும், இடைநிலை, உயர்தரக் கல்வியினை மன்னார் முருங்கன் மகா வித்தியாலயத்திலும் கற்றார். தேசியக் கல்வி நிலையத்தில் "கல்விமாணிப் பட்டம்" பெற்றுள்ள இவர் தற்போது திருக்கோணமலை "சிவசக்தி அ.த.க. பாடசாலையில்" அதிபரா கக் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார். இவரின் அன்புப்

பாரியாரின் பெயர் சுகிலா. இவரும் ஒரு ஆசிரியையாவார். இத்தம்பதியினருக்கு ஞா. சர்வீனா, ஞா. ஜனகன் ஆகிய அன்புச் செல்வங்களுள்ளனர்.

பாடசாலையில் கற்கும் காலங்களில் இவர் அதிகமாக தமிழ் நூல்களையும், தமிழ் சஞ்சிகைகளையும் வாசிக்கத் தலைப்பட்டார். அங்கு தமிழாசான்களின் வழிகாட்டல் எழுத்தின் பால் இவரின் ஆர்வத்தை அதிகரிக்கச் செய்தது. தானும் எழுத வேண்டும் என்ற ஊந்துதலின் வெளிப்பாடாக 1982ஆம் ஆண்டில் இவரின் முதல் ஆக்கம் ''எல்லாம் தவறுதான் வாழ் வினிலே" எனும் தலைப்பில் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன ஒலிமஞ்சரியில் ஒலிபரப்பாகியது. 1983ஆம் ஆண்டில் ''புதிய உலகம்" எனும் சஞ்சிகையில் ''மீட்பு என்றும் உண்டு" எனும் தலைப்பில் பிரசுரமான கவிதை அச்சு வடிவில் வெளிவந்த முதல் கவிதையாகும்.

இதே காலப் பகுதியில் இலங்கையின் தேசிய பத்திரி கைகளுக்கும் எழுதத் தொடங்கினார். கவிதைகள், கட்டுரைகள், சிறுவர் ஆக்கங்கள் என இவரின் ஆக்க முயற்சியும் தொடர்ந்தன. இவரின் இத்தகைய ஆக்கங்கள் தினகரன், தினக்குரல், வீரகேசரி, தினமுரசு, உதயன் ஆகிய தேசியப்பத்திரிகைகளில் தொடர்ந்தும் பிரசுரமாகி வருகின்றன. மேலும் சஞ்சிகைகள், மலர்களிலும் இவர் தொடர்ந்தும் எழுதிவருகின்றார்.

1989 டிசம்பர் ''உள்ளம்" சஞ்சிகை நடத்திய அட்டைப் பட கவிதைப்போட்டியில் இவரது கவிதை பரிசு பெற்றது. 1990ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடத்திய கவிதைப்போட்டியிலும் இவரது கவிதை பரிசு பெற்றது. 1994ஆம் ஆண்டு கவிதைக்குரிய தங்கப்பதக்கத்தையும் பெற்றுக்கொண்டார்.

1987ஆம் ஆண்டில் உறவு எனும் தலைப்பில் கையெழுத்து சஞ்சிகை ஒன்றையும் இவர் வெளியிட்டுள்ளார். மேடைகளில் கவி பாடுவதில் இவர் சிறப்பு மிக்கவர். பல கவி அரங்குகளில் தலைமை ஏற்று சிறப்புற நடத்தி பிரதேச மக்களின் வரவேற்பினைப் பெற்றுள்ளார்.

அதிக எண்ணிக்கையில் எழுதாவிட்டாலும் கூட நிதானமாகவும் தரமாகவும் எழுதி வரும் ஞானராசா இதுவரை மூன்று நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.


முதல் நூல் ஒரு கவிதைத் தொகுதியாகும். ''எதிர்பார்ப்பு'' எனும் இத்தொகுதி 2001 ஆம் ஆண்டில் வெளிவந்தது.

2005 ஆம் ஆண்டில் வெளிவந்த ''பாடி மகிழ்வோம்'' எனும் நூலும், 2006 ஆம் ஆண்டில் வெளிவந்த ''சிறுவர் பா அமுதம்'' எனும் நூலும் சிறுவர் பாடல் நூல்களாகும். இந்நூல்கள் இலங்கைத்தேசிய நூலக அபிவிருத்தி சபையின் அனுசரனை யுடன் ''சர்வீனா வெளியீட்டகம்'' வெளியிட்டது.

கவிதைத்துறையில் மேலும் பல சாதனைகளைப்புரிய வேண்டும் என்று ஆர்வம் கொண்டுள்ள இந்த எழுத்தாளரின் முகவரி

**MR. S. GNANARASA,**
**993, ANPUVALIPURAM,**
**TRINCOMALEE,**

**T.P-060 2267891.**



# திருமதி அ. யோகராஜா (மண்டூர் அசோகா)



பதிவு
**337**

**எழுத்துத்துறை**

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்டூர் பிரதேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அசோகாம்பிகை யோகராஜா இலங்கையின் ஆர்ப்பாட்டமில்லாமல் இலக்கியம் படைத்துவரும் ஒரு பெண் எழுத்தாளராவார். சிறு கதை, கவிதை, நாடகம், நாவல், மெல்லிசைப் பாடல்கள், வில்லிசைப் பாடல்கள், விமர்சனக் கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகள் என இலக்கியத்தில் பல்வேறு துறைகளிலும் இவர் பங்களிப்பு நல்கி வருகின்றார்.

1949ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02ஆந் திகதி வேல். இளையதம்பி - கனகம்மா தம்பதியினரின் புதல்வியாக மட்டக் களப்பு மண்டூரில் பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை மண்டூர் அரசினர் தமிழ் பெண்கள் பாசாலையிலும், உயர்தரக் கல்வியினை மட்டக்களப்பு பட்டிருப்பு மகாவித்தியாலயத்திலும் பெற்றார். 1977ஆம் ஆண்டில் ஆசிரியர் சேவையில் இணைந்த இவருக்கு மண்டூர் மகாவித்தியாலயத்திலே முதல் நியமனம் கிடைத்தது. மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில்

பயிற்சி பெற்ற இவர் மட்டக்களப்பு பிரதேசத்தில் பல பாடசா லைகளில் பணியாற்றியுள்ளார். இறுதியாக மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தில் இவர் பணியாற்றி வந்தநேரத்தில் 2009.03.01 ஆம் திகதி ஆசிரியர் சேவையில் இருந்து ஓய்வுபெற்றார். இவரின் அன்புக் கணவர் க. யோகராஜா. இவர் இளைப்பாறிய மக்கள் வங்கி உதவி முகாமையாளராவார். இத்தம்பதியின ருக்கு இரண்டு பெண் பிள்ளைகள் உளர். மூத்த மகள் சரண்யா. இவர் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா இறுதியாண்டு மாணவியாவார். இளைய மகள் லாவண்யா மக்கள் வங்கியில் தொழில் புரிகின்றார்.

பாடசாலையில் கற்கும் காலத்திலிருந்தே இலக்கியத்தின் பால் ஆர்வம் இவருக்கு இயல்பாக ஏற்பட்டது. சிறிய வயதில் தனது சகோதரன் இ. பாக்கியராஜனுடன் இணைந்து மண்டூரில் 'வெந்நிலா' எனும் கையெழுத்துச் சஞ்சிகையை வெளியிட்டுள் ளார். தனது 14ஆவது வயதிலிருந்தே கட்டுரைகள், கவிதைகள், புதுமொழிகள், பாடல்கள் போன்றவற்றை இலங்கை வானொலி யின் சிறுவர் மலருக்கு எழுதத் தொடங்கினார். இவ்வாறான ஆக்கங்கள் வானொலியில் அடிக்கடி ஒலிபரப்பப்படலாயின. இருப்பினும் எழுத்துருவில் பிரசுரமான இவரது முதலாக்கம் 'அம்மா சிரிக்கிறாள்' எனும் தலைப்பில் தாய்நாடு சஞ்சிகையில் 1970ஆம் ஆண்டில் வெளிவந்தது. இதிலிருந்து நூற்றுக்கணக் கான சிறுகதைகளையும், கட்டுரைகளையும், கவிதைகளையும், விமர்சனங்களையும் இவர் எழுதியுள்ளார். இவரின் இத்தகைய ஆக்கங்கள் இலங்கையின் தாய்நாடு, வீரகேசரி, தினபதி, தினகரன், ஜோதி, தென்றல், ஞானம், இணைகரம், பெண், பெண்ணின் குரல், மித்திரன், தினக்குரல், களம், வயல், இருக்கிறம்.... போன்ற தேசிய பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியும், மற்றும் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகியுமுள்ளன.

ஆரம்ப காலங்களில் இவரின் இலக்கியச் சேவைகளில் அதிகமான பங்களிப்பு இலங்கை வானொலியுடனே இருந்துள் ளது. இலங்கை வானொலியில் ஆரம்பகாலத்து மெல்லிசை நிகழ்ச்சிக்கு இவர் அனேக பாடல்களை எழுதியுள்ளார். மேலும், வானொலியில் பல நாடகங்களை எழுதியுள்ளார்.

திருமதி அ. யோகராஜா 'மண்டூர் அசோகா' எனும் பெயரிலே அதிகமான ஆக்கங்களைப் படைத்துள்ளதோடு, 'மண்டூர் அசோகா' எனும் பெயரே இலக்கியத்தில் நிலைத்து முள்ளது. அதேநேரம், 'ரேவதி', 'செந்தில்பிரியா' ஆகிய பெயர்களிலும் எழுதி வந்துள்ளார்.

மண்டூர் அசோகா இதுவரை 04 புத்தகங்களை எழுதி வெளியிட்டுள்ளார். இவற்றுள் 03 சிறுகதைத் தொகுதிகளும் 01 நாவலுமாக 04 அடங்கும்.

இவரால் வெளியிடப்பட்ட நூல்களின் சுருக்க விபரங் களை பின்வருமாறு நோக்கலாம்.

**கொன்றைப்பூக்கள் (சிறுகதை) –**

இது 1976 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு தாய்நாடு பதிப்பகம் வெளியீடாக வெளிவந்தது. 176 பக்கங்களைக் கொண்ட இச்சிறுகதைத் தொகுதியில் மொத்தம் 10 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. 1976இல் கொன்றைப்பூக்கள் சிறுகதைத் தொகுதிக்கு சாகித்தியப் பரிசு கிடைத்தது

**பாதை மாறிய பயணங்கள் (நாவல்) –**

மண்டூர் அசோகாவின் முதலாவது நாவல் இதுவாகும். 1992ஆம் ஆண்டு மட்டக்களப்பு உதயம் பிரசுர வெளியீடாக வெளிவந்தது. 154 பக்கங்களைக் கொண்ட இந்நாவலில் வரட்டு கௌரவம் கொண்ட ஒரு தந்தையினால் பாதிக்கப்படும் மகளின் வாழ்க்கை நிலை அழகுற சித்தரிக்கப்பட்டுள்ளது. 1992இல் பாதை மாறிய பயணங்கள் நாவலுக்கு வடகிழக்கு மாகாண சாகித்தியப் பரிசு கிடைத்தது

**சிறகொடிந்த பறவைகள் (சிறுகதை) –**

இவரின் இரண்டாவது சிறுகதைத் தொகுதியான இச்சிறு கதைத் தொகுதி 1993ஆம் ஆண்டில் மட்டக்களப்பு உதயம் பிரசுர வெளியீடாக வெளிவந்தது. 124 பக்கங்களைக் கொண்ட இச்சிறுகதைத் தொகுதியிலும் இவரின் 10 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன.

**உறவைத் தேடி (சிறுகதை) –**

மண்டூர் அசோகாவின் நான்காவது புத்தகமும், மூன்றாவது சிறுகதைத் தொகுதியும் இதுவாகும். இச்சிறுகதைத் தொகுதியை 2002ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மீராப்பதிப்பகம் பதிப்பித்து வெளியிட்டிருந்தது. இத்தொகுதியிலும் இவரின் 10 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன.

ஆரம்ப காலங்களில் இவரால் எழுதப்பட்ட கவிதைகளையும், அண்மைக் காலத்தில் எழுத்தப்பட்ட கவிதைகளையும் தொகுத்து வெகுவிரைவில் கவிதைத் தொகுதியொன்றை வெளியிடக் கூடிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

இவர் பிரதேசத்தில் புகழ்பெற்ற ஒரு தமிழ் ஆசிரியையாவார். தான் கற்பித்த பாடசாலை மாணவர்களுக்காக வேண்டி அனேக வில்லிசைகள், நாடகங்கள் ஆகியவற்றை எழுதித் தயாரித்துள்ளார். இவரால் எழுதி தயாரிக்கப்பட்ட வில்லிசைகள், நாடகங்கள் வலய மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் பல பரிசில்களை பெற்றுள்ளன. அத்துடன், பல கவியரங்குகளில் இவர் பங்கேற்று கவி பாடியுள்ளார். மேடைகளில் பல விமர்சன உரைகளை ஆற்றியுமுள்ளார்.

பல்வேறு இலக்கியப் போட்டிகளில் கலந்துகொள்வதில் ஆர்வமிக்க இவருக்கு பல பரிசில்களும், சான்றிதழ்களும் கிடைத்துள்ளன. உதாரணமாக, வகவம் (வலம்புரி கவிதாவட்டம்) நடாத்திய கவிதைப் போட்டியில் பாராட்டுச் சான்று, மட்டக்களப்பு மாவட்டக் கலாசாரப் பேரவை நடாத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாவது பரிசு, மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலை முத்தமிழ்விழா கவிதைப் போட்டியில் முதற் பரிசு, சார்க் நாடுகளின் பெண்கள் அமைப்பினால் நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் பரிசு எனப் பெற்றுள்ளார்.


இவரின் இலக்கிய சேவைகளைக் கருத்திற் கொண்டு 1995இல் நடைபெற்ற மண்முனை வடக்கு கலாசாரப் பேரவையின் முத்தமிழ் விழாவில் பொன்னாடை போர்த்தியும், 1997இல் மண்டூர் கலையிலக்கிய அவையினர் பாராட்டு விழா நடாத்தி பொன்னாடைப் போர்த்தியும் கௌரவித்தன. மேலும், 2001இல்

தஞ்சாவூரில் இதய கீதம் இலக்கியப் பொதுநல இயக்கத்தினர் நடாத்திய உலகக் கவிஞர் விழாவில் 'தமிழருவி' எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்க அழைப்பு விடுத்தனர். இவரின் சிறுகதைகளை உயர்தர வகுப்பு மாணவர் ஒருவரும் கல்வியியல் கல்லூரி மாணவியொருவரும் தத்தமது செயல்திட்டங்களுக்காக ஆய்வு செய்துள்ளார். மேலும், கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் இரண்டு மாணவிகளுள் ஒருவர் இவரது கவிதைகளையும், மற்றவர் இவரது சிறுகதைகளையும் ஆய்வு செய்துள்ளனர்.

மண்டூர் அசோகாவின் குடும்பத்தில் இவரின் சகோதரர் இ.பாக்கியராஜன் ஒரு ஊடகவியலாளரும், எழுத்தாளருமாவார். இவரது மகள் சரண்யா கவிதைகளை எழுதுவதில் ஆர்வம் காட்டி வருபவராவார். தனது இலக்கியத்துறை வளர்ச்சிக்கு உந்து சக்திகளாக இருந்தவர்கள் என்ற அடிப்படையில் தனது பெற்றோர், சகோதரர் பாக்கியராஜன், திருவேலணை வீரசிங்கம், நா. பாலேஸ்வரி, கோப்பாய் சிவம், சௌமினி, தாமரைச் செல்வி, திரு. இரா. நாகலிங்கம் (அன்புமணி) கலாநிதி செ. யோகராஜா, புலோலியூர் இரத்தின வேலோன், பேராசிரியர் சி. மௌனகுரு ஆகியோரை அன்புடன் நினைவுகூர்ந்து வரும் இவரின் முகவரி:-

**மண்டூர் அசோகா**
**81/22, கல்லடி,**
**முதலாம் குறுக்கு,**
**மட்டக்களப்பு**

# கனிவுமதி சந்திரசேகரம்



பதிவு
**338**

**எழுத்துத்துறை**

மத்தியமாகாணம், கண்டிமாவட்டம், பாத்ததும்பறை தேர்தல் தொகுதியில், பன்விலை பிரதேச செயலாளர் பிரிவில், கோம்பறை எனும் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கனிவுமதி சந்திரசேகரம் இளைய தலைமுறையைச் சேர்ந்த நல்ல ஓவியர், கவிஞர், எழுத்தாளர், யதார்த்தவாதி, எளிமை யானவர் என இனங்காட்டலாம். இவரின் ஆக்கங்கள் "நவீன சித்தன்"எனும் பெயரிலும பிரசுரமாகி வருகின்றன.

1977ஆம் ஆண்டு டிசம்பர் 13ஆம் திகதி 'கோம்பறைக் கடைவீதியில்' சந்திரசேகரம், ஜெயலட்சுமி தம்பதியினரின் புதல்வராகப் பிறந்த கனிவுமதி கண்டி ஆகலை தமிழ் வித்தி யாலயம், கொழும்பு முகத்துவாரம் இந்துக் கல்லூரி ஆகிய வற்றின் பழைய மாணவராவார். தற்போது முழுநேர ஓவியப் பணியில் ஈடுபட்டுள்ள இவரின் அன்புப் பாரியார் பிரியவ தனி. இத்தம்பதியினருக்கு புகழேந்தி எனும் பெயரில் ஒரு மகன் உள்ளார்.

கனிவுமதி தனது 05ஆவது வயதிலிருந்து ஓவியங்கள் வரையவும் பதிமூன்று, பதினான்காவது வயதிலிருந்து கவிதைகள் எழுதவும் முற்பட்டு தொடர்ந்து இவ்விரு துறைகளிலும் தன்னை முழுதாக ஈடுபடுத்திக் கொண்டார். கவிதைக்கும், வாழ்க்கைக்கும் இடைவெளிஇன்றி கவிதையாகவே வாழ்ந்து வரும் கனிவுமதி இலங்கையில் மலையக இலக்கியத்தின் நம்பிக்கை ஒளிக்கீற்றாக தென்படுகின்றார்.

மலையகத்தின் புதிய தலைமுறையின் முக்கியமான கவிஞர் கனிவுமதி என்று பல மூத்த இலக்கியவாதிகளால் குறிப்பிட்டு பேசப்பட்டு வருபவர். தனது கவிதைகளாலும் ஓவியங்களாலும் அதிகமான வாசகர் வட்டத்தை கொண்டுள்ள கனிவுமதி பழகுவதற்கு இனியவர் மனதில் பட்டதை மனம் திறந்து கூறக்கூடிய பண்புடையவர்.

கல்லூரி காலங்களில் "தானா விசும் காற்று" என்ற கையெழுத்துச் சஞ்சிகையின் ஆசிரியராகவும் இருந்துள்ளார். "தானா வீசும் காற்று" ஒரு கவிதை இதழ். இதில் எழுதிய பல கவிதைகள் கனிவுமதியில் முதல் கவிதை நூலான "அப்புறமென்ன" வில் பிரசுரமாகி இருந்தன. கனிவுமதியின் கவிநூல் "அப்புறமென்ன"வில் உள்ள கவிதைகளை எழுதிய போது அவருக்கு வயது 15 மட்டுமே.

கல்லூரி காலங்களில் தன்னை ஒரு ஓவியராக மட்டுமே அதிகமாக அடையாளம் காட்டியுள்ளார். கல்லூரியின் மாணவர் மத்தியில் தலைசிறந்த ஓவியராக மட்டுமன்றி தலைமை ஓவியராகவும் இருந்துள்ளார். அதற்கு ஏற்ப பல அமைப்புகள் நடாத்திய ஓவியப் போட்டிகளில் பலதடவைகள் முதற் பரிசு பெற்று கல்லூரிக்கு பெறுமை சேர்த்துள்ளார். கல்லூரி படிப்பினை முடித்த கையோடு ஓவியத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள இலங்கையில் புகழ்மிக்க சிறந்த ஓவியரான திரு. மில்டன் பனார்ந்து (மாஸ்டர்ஸ்) அவர்களிடம் சுமார் 5 வருடங்கள் வர்த்தக விளம்பர ஓவிய பயிற்சி பெற்றதோடு, இலங்கையின் மிக பிரதான விளம்பர நிறுவனங்களில் ஓவியராகவும் கடமை புரிந்துள்ளார்.



தனது 18வது வயது முதல் நவீன ஓவியத்தின் பக்கம் தனது கவனத்தை குவித்த கனிவுமதிக்கு மானசீக ஓவியகுரு ஓவியர் வீரசந்தானம் அவர்கள் ஆவார். அவரது ஓவியக் கோடுகளின் பாதிப்பு கனிவுமதி நிறையவே பாதிக்க வீரசந் தானம் அவர்களின் ஓவியங்களை பார்த்து பார்த்து ஒரு ஏகலைவன் போல் நவீன ஓவியத்தினை கற்றதோடு, தனக்கென புதிய கோட்டுச்சித்திரம் வரையும் பாணியையும் உருவாக்கிக் கொண்டுள்ளார். "என் ஓவிய ஆசான் திரு. வீரசந்தானம் அவர் களை சென்னையிலுள்ள அவர் இல்லத்திற்கு சென்று சந்தித்து ஆசி பெற்றதை என் வாழ்வில் என்றும் மறக்க முடியா திருநாள்" என்கிறார் கனிவுமதி.

இலக்கியச் செம்மல் தெளிவத்தை ஜோசப் அவர்கள் கனிவுமதியின் இலக்கிய ஆசான்.இதைப்பற்றி கனிவுமதி பின் வருமாறு குறிப்பிடுகின்றார்.

"....கண்டியில் களிமண்ணாக இருந்த என்னை ஒரு

உருவம் கொடுத்து உயிர் கொடுத்தவர். அவரை சந்தித்த பின்னர் தான் தமிழ் இலக்கியத்தின் உண்மை யானபக்கங்களை தரிசிக்க முடிந்தது. எனக்கு பெருநகர் தந்த மாயைகளை எல்லாம் உடைத்து, இலக்கியத்தின் உண்மை முகங்களை வெளிச்சமிட்டுக் காட்டி எனக்கு எப்போதும் தாய் நிழலாய் இருப்பவர். அவரிடமிருந்து பெற்றுக்கொண்ட புத்தகங்கள், இலக்கிய ஆலோசனைகள் என்னை அதிகமாய் வழிநடத்தின. என் இலக்கியத்தாய் தெளிவத்தை ஜோசப் அவர்கள் ஆவார்..." என்று தனது குருவின் பெருமையை பணிவுடன் சொல்கிறார்.

அதே போல மல்லிகை ஜீவாவையும் எச்சந்தர்ப்பத்தி லும் நினைவு கூறும் இவர் ஜீவாவைப்பற்றிக் குறிப்பிடுகையில்

"..என் குரு தெளிவத்தை ஜோசப் அவர்கள் எப்படி எனக்கு ஒரு உருவம் கொடுத்து உயிர் கொடுத்தாரோ அதுபோல் என்னை இலக்கியத்தின் வீதியில் உலா வரச் செய்தவர் மல்லிகை ஜீவா அவர்கள் ஆவார். நான் 13 – 15 வயதில் எழுதிய கவிதைகளைத் தொகுத்து 16ஆவது வயதில் "அப்புறமென்ன" என்ற தலைப்பில் ஒரு நூலாக வெளியிடும் ஆசையில் கையெழுத்துப் பிரதிகளைத் தலையில் சுமந்துகொண்டு ஒவ்வொரு அச்சகமாக ஏறி இறங்கி வந்து நூல் வெளி யிடும் ஆசை கருகியது. அச்சுக்கு அச்சகங்கள் கேட்ட தொகை என்னிடம் இல்லாத காரணமும் அச்சுப் பற்றி எனக்கு அப்போது ஒன்றும் தெரியாத காலம் என் கன்னிப்படைப்பை எனது 16ஆவது வயதில் வெளிக் கொணர முடியாதபடி செய்துவிட்டது.

ஆனால், அப்போதே ஒரு முடிவில் இருந்தேன். என் வாழ்வில் தான் வெளியிடும் முதல் கவிதை நூல் இந்த "அப்புறமென்ன" கவிதைகள் அடங்கிய நூல்தான் என்று. என் நீண்ட நாள் கனவுகளை நனவாக்கியவர் டொமினிக் ஜீவா அவர்கள் ஆவார். எனது முதல் நூலே மல்லிகைப் பந்தல் வெளியீடு ஆக வெளிவந்து பலரின் கவனத்தையும், பாராட்டையும் பெற்றுக்கொ டுத்தது. என் வாழ்வில் புதிய வெளிச்சத்தை தூவியவர்

திரு. டொமினிக் ஜீவா அவர்கள். சுமார் 10 வருடங்களுக்கு மேல் என்னோடு நட்பின் அடையாளமாகவும், ஒரு தந்தையின் வழிகாட்டலாகவும் பழகிவரும் திரு. டொமினிக் ஜீவா அவர்கள் என் இலக்கிய பயணத்தின் வெற்றியை மட்டும் கொண்டாடியதோடு நின்றுவிடாது எனது தனிப்பட்ட வாழ்வில் நான் நொந்து போகும் தருணங்களில் எல்லாம் எனக்கு ஒரு தந்தையாக தாயாக இருந்து ஆறுதல் கூறி வாழ்வின் புதிய புதிய தரிசனங்களை எனக்கு வழங்கியதோடு, என் வாழ்வில் நான் கடைபிடிக்க வேண்டிய கடமைகள் எனது தொழிலில் எப்படியான புதுமைகளை செய்யலாம் என என் வளர்ச்சியில் அதிக அக்கரை காட்டியவர் திரு. டொமினிக் ஜீவா எனக்கு தாயுமாவார்" என்கிறார்.

"எனது 17வது வயதில் தான் எழுதிய கவிதைகளோடு எழுத்து சிற்பி எஸ்.டி. சிவநாயகம் அவர்களை சூடாமணி பத்திரிகை அலுவலகத்தில் வைத்து சந்தித்தேன். என்னை அன்புருக வரவேற்று மூத்த படைப்பாளிக்கு தருகிற மரியாதையுடன் பழகினார். எத்தனை பெரிய மனது அவருக்கு. திரு. எஸ்.டி. சிவநாயகம் ஐயா அவர்களை சந்தித்த பின்னே என் வாழ்வில் எனக்கு புதிய ஒரு நம்பிக்கை மலர்ந்தது. நான் கிறுக்கிய கவிதைகள் சிலவற்றை வாங்கினார். பின் அது தொடர்ந்து சூடாமணியை அலங்கரித்தது. எனது கவிதைகள் முதலில் அச்சில் காணச் செய்தவர். என் வாழ்வில் நம்பிக்கை ஒளி ஊற்றியவர் திரு. எஸ்.டி. சிவநாயகம் அவர்களாகும்" என்று சொல்லும் கனிவுமதியும் திரு. எஸ்.டி. சிவநாயகம் அவர்களால் பட்டை தீட்டப்பட்ட வைரம். கனிவுமதிக்கு கிடைத்த பல தரிசனங்கள் இன்றைய தலைமுறைக்கு கிடைக்காத பெரும் பாக்கியமே! மறைந்த மலையகத்தின் மூத்த கவிஞர்கள் மலைத்தம்பி, குறிஞ்சித் தென்னவன் போன்றவர்களோடு எல்லாம் நன்கு பழகிய இளம் கவிஞர். தனது 15ஆவது வயதிலேயே இவர்கள் இருவருடன் தனது கவிதைகளைக் காட்டி அவர்களின் ஆசிகளைப் பெற்றவர்.

கனிவுமதி மற்ற படைப்பாளிகளை பாராட்டும் விதமும், தனித்துவமே! எந்த படைப்பாளியின் எழுத்துக்கள் பத்திரிகையில் வெளிவந்திருந்தாலும் உடனே சம்பந்தப்பட்ட எழுத்தினை

எழுதிய படைப்பாளிக்கு தொலைபேசி எடுத்து அந்த படைப்பு குறித்தும் படைப்பாளியின் எழுத்தின் அழகு குறித்தும் பாராட்டும் உயர்ந்த குணம் இக்காலத்தில் கனிவுமதியிடம் அதிகமாக உள்ளது என பல படைப்பாளிகள் குறிப்பிட்டு சொல்கிறார்கள்.

கனிவுமதி இலங்கையிலுள்ள 20க்கும் மேற்பட்ட இசைப் பாடல்கள் எழுதியுள்ளார். இவரை பாடலாசிரியராக அறிமுகப்படுத்தியவர் இசையமைப்பாளர் திரு.பி.எஸ். ஷாஜஹான் அவர்களாகும். கனிவுமதிக்கு பல அமைப்புகளிடமிருந்து ஸ்ரீகவி, மக்கள் கவி, மக்கள் தென்றல், கலைத்தென்றல், கவிக்குயில் போன்ற பட்டங்களும், கௌரவங்களும் கிடைத்துள்ளன. 2007 ஆம் ஆண்டு இலங்கை கம்பன் கழகம் வருடந்தோறும் வழங்கும் பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்களால் நிறுவிய ஏற்ற மிகு 'இளைஞர் விருது' எனக்கு கிடைத்த மிகவும் சிறந்த விருதாகும் என்று கூறுகிறார் கனிவுமதி.

**கவிஞர் கனிவுமதியின் வெளிவந்த நூல்கள்:**

| | |
|---|---|
| அப்புறமென்ன - | 2003ஆம் ஆண்டு மல்லிகைப் பந்தல் வெளியீடாக வெளிவந்தது. |
| கட்டாந்தரை - | 2006, 2007ஆம் ஆண்டுகளில் மத்திய மாகாண சாகித்திய விருது பெற்றது. |

மேற் குறிப்பிட்ட இரண்டும் கவிதைத் தொகுதிகளாகும். மேலும் சில நூல்கள் வெளிவரக்காத்திருக்கின்றன.

*தொட்டில் மண்.*
*பெறட்டுக்களம்.*
*எல்லார்க்கும் பெய்யும் மழை.*

இம் மூன்று தொகுதிகளும் அச்சில் இருக்கின்றன.

கனிவுமதியின் தற்போதைய இலக்கிய முயற்சியாக மேச்சல் நிலம் என்கிற ஒரு நாவலை எழுதி வருகின்றார். ஓவிய முயற்சியாக இலங்கையின் மூத்த இலக்கியப் படைப்பாளிகள்







100 பேரின் உருவங்களை அடுப்புக்கறியில் வரைந்து கொண்டிருக்கிறார். இவை கனிவுமதி எழுத்திலும், ஓவியத்திலும் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டுள்ளார் என்பதை நமக்கு வெளிச்சமிட்டுக் காட்டுகிறது.

தற்போது இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் நேத்ரா தொலைக்காட்சியில் சனிக்கிழமை தோறும் ‘பட்டாம் பூச்சி’ நிகழ்ச்சியில் மாணாக்கள் ஓவியம் வரைவது தொடர்பான விளக்கங்களை வழங்கி வருகின்றார்.

மேலும் இலங்கையில் பாடசாலையை அழகுபடுத்தும் திட்டத்தின் கீழ் இன்று பல பாடசாலைகளில் பல காட்சிகளை சுவர்களில் வரைந்து வருகின்றார். கேகாலை மாவட்டத்தில் தெரணியகலை தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள ஸ்ரீகதிரேசன் தமிழ் மகாவித்தியாலயத்தில் நூலக கட்டிடத் தொகுதியில் படைப்பாளி எட்டுப் பேரின் உருவங்களை சுவர் ஓவியங்களாக இவர் படைத்துள்ளார். இந்த எட்டுப் பேரும் இலங்கையைச் சேர்ந்த எழுத்தாளர்கள். இலங்கை மண்ணில் பாடசாலைக் கட்டிடமொன்றில் சுவர் ஓவியமாக ஈழத்து எழுத்தாளர்களை அலங்கரிக்கச் செய்திருப்பது கனிவுமதியின் ஒரு மகத்தான கலைத்துறை முயற்சியாகும். ஸ்ரீகதிரேசன் தமிழ் மகாவித்தியாலய நூலக கட்டிடத் தொகுதியில் கனிவுமதியினால் வரையப்பட்ட சுவரோவியங்கள் கீழே தரப்பட்டுள்ளன.










கவிமணி சி.வி.வேலுப்பிள்ளை




கலாபூஷணம் புன்னியாமீன்



கவிஞர் குறிஞ்சித்தென்னவன்



மார்டின் விக்ரமசிங்க




புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன்

இவரின் முகவரி

**KHANIVU MATHY**
**15, ZAVIA LANE,**
**MATTAKULIYA,**
**COLOMBO-15**

**TEL - 0776701566**
**Email - khanivumathy@gmail.com**

# முருகப்பன் கணகதிப்பிள்ளை (மூனாக்கானா)



பதிவு
**339**

**எழுத்துத்துறை**

கிழக்கு மாகாணம், மட்டகளப்பு மாவட்டத்தில் ஆரையம் பதியைப் பிறப்பிடமாகக் கொண்ட முருகப்பன் கணகதிப்பிள்ளை இலங்கையில் சமகாலத்தில் வாழக்கூடிய ஒரு மூத்த எழுத்தாள ரும், கலைஞரும், கவிஞருமாவார். மூனாக்கானா எனும் பெய ரில் நன்கு அறியப்பட்ட இவர் மட்டக்களப்பு கிராமிய மண் வாசனையுடன் கூடிய படைப்புகளைப் படைத்து இலக்கிய நெஞ்சங்களில் ஒரு தனியிடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளார்.

1924ஆம் ஆண்டு ஜனவரி 22ஆம் திகதி மட்டக்களப்பு ஆரையம்பதியில் முருகன், தங்கம்மா தம்பதியினரின் புதல்வரா கப் பிறந்த கணகதிப்பிள்ளை அவர்கள் 1940ஆம் ஆண்டு சிரேஸ்ட பாடசாலை தராதரப் பரீட்சையில் சித்தியடைந்து 1947-1948ஆம் ஆண்டுகளில் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை யில் ஆசிரியப் பயிற்சிபெற்றார். 1949ஆம் ஆண்டில் கண்டி ரம்புக்கல அரசினர் தமிழ் பாடசாலையில் ஆசிரியராகத் தன் பணியை ஆரம்பித்து தனது 57ஆவது வயதில் அதாவது 1981.09.04

ஆம் திகதி ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வுபெற்றார். ஓய்வு பெறும்போது இவர் பணியாற்றிய பாடசாலை மட்டக்களப்பு கோவில் வித்தியாலயமாகும். 1954ஆம் ஆண்டில் சின்னப் பிள்ளை என்பவரை கரம்பிடித்து இல்லற வாழ்க்கையில் இணைந்த இவருக்கு சந்திரகுமாரன், சந்திரகுமாரி, சூரியகுமாரன், சூரிய குமாரி ஆகிய நான்கு அன்புச் செல்வங்களுளர்.

1940களிலிருந்து கவிதை மூலமும், 1948களிலிருந்து கலைகள் மூலமும், 1990களிலிருந்து ஆய்வு கட்டுரைகள் மூலமும் தமிமிழலக்கிய வளர்ச்சிக்குத் தொண்டாற்றியுள்ளார். கூத்து, நாடகம், வில்லுப்பாட்டு, கிராமிய நடனங்கள் போன்றவற் றிலும் தடம் பதித்துள்ளார். மேலும், வைத்தியம், சோதிடம், மந்திரம் போன்ற கலைகளிலும் ஓரளவு ஈடுபாடுண்டு. இவரின் கலைப் படைப்புக்களிலே மட்டக்களப்பு கிராமிய மண்வாசனை வீசும். நகைச்சுவை, கற்பனை, நையாண்டி என்பன மேலோங்கிக் காணப்படும்.

எழுத்துருவில் வெளிவந்த இவரது நூற்றுக்கணக்கான ஆக்கங்கள் இலங்கையின் முக்கிய தேசிய பத்திரிகைகளான தினகரன், வீரகேசரி, சுதந்திரன், தினக்குரல், தினமுரசு, பாரதி போன்றவற்றிலும் பல சஞ்சிகைகள், விழாமலர்களிலும் பிரசுர மாகியுள்ளன. மேலும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சேவைகளிலும் ஒலிபரப்பாகியுள்ளன.

1940களிலிருந்து இன்றுவரை நூற்றுக்கணக்கான தலைப் புகளில் இவர் கவிதைகளை எழுதியுள்ளார். 1947, 1948 களில் தினகரன் வாரமஞ்சரியில் பல வாரங்கள் தொடராக வெளிவந்த "புழுகுப் புராணம்", "காலாகோலம்" உட்பட ஏராளமான கவிதைப் பதிவுகளை 1978ஆம் ஆண்டில் வீசிய சூறாவளி யில் இழந்துவிட்டதாக ஆதங்கப்படும் இவர் 1990களின் பின்னர் எழுதிய கவிதைகளையே நூலாக வெளியிடக்கூடிய வாய்ப் பினைப் பெற்றார். இயற்கை அனர்த்தங்கள், கலவரங்கள், யுத்தங்கள் போன்றன இது போன்ற பல எழுத்தாளர்களின் ஆக்கங்களை விழுங்கிவிட்டமை வேதனைக்குரிய விடயமே.

இவரால் எழுதப்பட்ட கவிதைகளுள் தமிழ் தந்த புலவர் மணி, சம்மந்தி போன்ற கவிதைகள் அகில இலங்கை ரீதியில் முதல் பரிசு பெற்ற கவிதைகளாகும். இலங்கை ஒலிபரப்புக்

கூட்டுத்தாபன தேசிய சேவையின் "கவிதைக் கலசம்" நிகழ்ச்சியில் ஒலிபரப்பான சம்மந்தி, முதுசமான முதியோர், அன்னை ஒரு தெய்வம் போன்ற கவிதைகள் நேயர்கள் மத்தியில் பெரிதும் வரவேற்பினைப் பெற்றன. இதில் "கடவுளும், நானும்" எனும் கவிதை நேயர்களின் வேண்டுகோள்படி மறுவொலிப்பரப்பும் செய்யப்பட்டது. மாமான் கேசவர் மீது பாடப்பட்ட "தீர்த்தக் கரையினிலே" எனும் கவிதை தனக்கு மனநிறைவைத் தந்த கவிதைகளிலொன்று என்று இவர் கூறுகின்றார். நகைச்சுவைக் கவிதைகளிலே "எம்.பி.க்கு காவடி தம்பி" என்ற கவிதை பலராலும் பாராட்டப்பட்ட கவிதையாகும். இவற்றைவிட வரவேற்புக் கவிதைகள், திருமண வாழ்த்துக் கவிதைகள், பிரியாவிடைக் கவிதைகள், அஞ்சலிக் கவிதைகள், பாடசாலை கீதங்கள் என பல்வேறு கவிதைகளையும் இவர் எழுதியுள்ளார்.

கவிதைக்குப் புறம்பாக கலைத்துறை சார்ந்த பல துறைகளிலும் இவர் முத்திரை பதித்துள்ளார். குறிப்பாக நாட்டார் கூத்துகளை இங்கு குறிப்பிடலாம். கூத்து, இது இலங்கையில் அருகிவரும் ஒரு கலையாகும். குறிப்பாக நவீன இலத்திரனியல் ஊடக வளர்ச்சியினூடாக நாட்டார் கூத்துகள் இன்று அருகிவிட்டன.

மூனாக்கானாவின் கூத்துகளைப் பற்றி நோக்கும்போது இத்திகாசங்கள், காப்பியங்கள், புராணங்கள் என்பவற்றிலுள்ள கதைகளையே இரவு முழுக்க நாட்டார் கூத்துகளில் ஆடி வந்ததால் மக்களுக்கு ஓர் அலுப்பு ஏற்பட்ட நிலையில் இந்த மரபை மாற்றி போடியார், தெய்வானை போன்ற பாத்திரங்களை கொண்டு மட்டக்களப்பு கிராமிய மண்வாசனையுடன் கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலம் ஆடக்கூடிய சமூகக் கூத்தையாக்கி 1948ஆம் ஆண்டு ஆசிரியர் கலாசாலை மாணவர்களைக் கொண்டு அரங்கேற்றினார். லட்சுமி கலியாணம் எனும் இந்த நாட்டார்கூத்து நாட்டார்கூத்துத்துறையில் இவரின் கன்னிக் கூத்தாகும். இக்கூத்து திருகோணமலை தொடக்கம் பொத்துவில் வரையுள்ள பல கிராமங்களில் ஆடப்பட்டுள்ளது. இக்கூத்திற்கு கிடைத்த வரவேற்பு காரணமாக பரிசாரி மகன் (1972), சூறாவளிக் கூத்து (1980), அண்ணனும், தங்கையும் (2004) எனப் பலக் கூத்துக்களை பின்னாள் இவர் ஆக்கியுள்ளார்.

இதில் பரிசாரி மகன் என்ற கூத்து கொழும்பு லயனல் வென்ட் கலையரங்கில் மேடையேற்றப்பட்டது. இலங்கை ஒலிபரப்

புக் கூட்டுத்தாபனத்தால் ஆரையம் பதியில் ஒலிப்பதிவு செய்யப் பட்டு இலங்கை வானொலியிலும் பல தடவை ஒலிபரப்பாகியது. இதில் மூனாக்கானா அருட்சுணன் பாத்திரமேற்று நடித்துள்ள மையும் குறிப்பிடத்தக்கது. இதைவிட அலங்கார ரூபன் தென்மோடிக் கூடத்தில் அலங்கார ரூபனாகவும், பரிசாரி மகன் எனும் வடமோடிச் சமூக கூடத்தில் சாஸ்திரியாகவும் இவர் ஆடியுள்ளார்.

நாட்டார்கூத்துடன் மாத்திரம் தன்னை வரையறுத்துக் கொள்ளாமல் நாடகத்துறையிலும், வில்லுப் பாட்டுத்துறையிலும், கிராமிய நடனத்துறையிலும் இவர் தனது திறமையை வெளிப்படுத்தினார். நாடகத்துறையில் இருவேகா, எல்லோரும் ஓரினம், கடிதம் வந்தது, அப்பனைத் திருத்திய மகன், யமலோகத்தில், சம்பந்தி, இலங்கோ, துரவு போன்ற பல நாடகங்களை இவர் ஆக்கியுள்ளார். இந்நாடகளினூடாக இவர் ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தினார். இதில் சில நாடகங்கள் மாகாண, மாவட்ட பரிசில்களையும் வென்றுள்ளன.

அதேபோல வில்லுப்பாட்டு கலையிலும் இவரின் தனித்துவ முத்திரையை காணக்கூடியதாகவுள்ளது. குடிகேடு, ஒன்றே இனம், கதிராமன் புத்திரன் போன்ற வில்லுப்பாட்டுகளை இவர் எழுதியுள்ளார். கதிராமன் புத்திரன் என்ற வில்லுப்பாட்டை இவரே பல ஊர் விழாக்களில் நடாத்தியுமுள்ளார். குடிகேடு எனும் வில்லுப்பாட்டு திருமலையில் நடந்த தமிழ்த்தின இறுதிப் போட்டியில் இரண்டாவது பரிசை பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

இன்று கிராமிய நடனங்களும் அருகிவரும் ஒரு கலையாகும். கிராமிய நடனங்கள் என்று கூறும்போது இலங்கையில் கிழக்கு மாகாணமே முதன்மைப்படுத்தப்படும். கிழக்கு மாகாணத்தின் கிராமிய நடனங்கள் தனித்தன்மை கொண்டவையாக திகழ்வதற்கு மண்வாசனை ஒரு மூல காரணமெனலாம். மட்டக்களப்பு மண்வாசனை வீசும் பல கிராமிய நடனங்களை ஆக்கி மூனாக்கானா அரங்கேற்றியுள்ளார். சுதந்திரத் தொழிலே வேண்டும் என்ற கிராமிய நடனம் 1978ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழ்த்தின இறுதிப் போட்டியில் இரண்டாவது இடத்தைப் பெற்றது. இவற்றைவிட சீரழியும் சின்னவயது, புதுமைப் பெண், கிழவனும்- கிழவியும் போன்ற கிராமிய நடனங்களையும் இவர் ஆக்கி அரங்கேற்றியுள்ளதுடன், அவை மக்கள் மத்தியில் பெரிதும் வரவேற்கப்பட்டதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

1940களிலிருந்து எழுத்துத்துறையில் ஈடுபட்டுவரும் மூனாக்கானா இதுவரை இரண்டு நூல்களை மாத்திரமே எழுதி வெளியிட்டுள்ளார். 1976ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் வீசிய பாரிய சூறாவளியினால் தனது ஆக்கங்கள் அனைத்தையும் இழந்துவிட்ட இவர் தனது பழைய ஆக்கங்கள் யாரிடமாவது இருக்குமாயின் அவற்றின் புகைப்படப் பிரதிகளை வேண்டிநிற்கின்றார். அத்துடன், அவற்றுக்கு சன்மானம் வழங்கவும் இவர் ஆயத்தமாகவிருக்கின்றார்.

பத்திரிகைகளில் வெளிவந்த ஆய்வுக் கட்டுரைகளை தொகுத்த இவரின் முதலாவது நூலினை 2002ஆம் ஆண்டில் "இலக்கிய நெஞ்சம்" எனும் பெயரில் மட்டக்களப்பு அன்பு வெளியீட்டு நிறுவனம் வெளியிட்டது. 1990ஆம் ஆண்டின் பின்பு இவரால் எழுதப்பட்ட கவிதைகள் தொகுக்கப்பட்டு "கவிதை நெஞ்சம்" எனும் பெயரில் இரண்டாவது நூல் 2007ஆம் ஆண்டில் வெளிவந்தது. இக்கவி நூலையும் அன்பு வெளியீட்டு நிறுவனமே வெளியிட்டது.

எழுத்து மற்றும் அருகிவரும் கலைகளில் இவர் ஆற்றிய சேவைகளைக் கருத்திற் கொண்டு 1987ஆம் ஆண்டில் மட்டக்களப்பு கலாசாரப் பேரவை 'கலைமணி" எனும் பட்டத்தையும், 1996ஆம் ஆண்டு ஆசிரியர் கலாசாலை பொன்விழாக்குழு "மக்கள் கவிமணி" எனும் பட்டத்தையும், மட்டக்களப்பு கல்வித் திணைக்கள பண்பாட்டுப் பிரிவு 2000ஆம் ஆண்டில் "கலையரசு" எனும் பட்டத்தையும், கிழக்குப் பல்கலைக் கழகம் "தலைக்கோல்" விருதினையும் வழங்கி கௌரவித்துள்ளன. இதேநேரம், ஸ்ரீலங்கா அரசு கலைஞர்களுக்கு வழங்கும் உயரிய விருதான "கலாபூஷணம்" விருதினை 1995 மே மாதம் 22ஆம் திகதி இவருக்கு வழங்கி கௌரவித்துள்ளது. வயதால் முதிர்ந்தாலும் கர்வம் காட்டாது அமைதியான, அடக்கமான சுபாவம் கொண்ட மூனாக்கானாவின் முகவரி:-

**M. KANAPATHIPILAI (Moonakana),**
**Kanthasamy Kovilady,**
**Arayampathy – 03**
**Tel: 065 2245663 - 065 2247053**

# அமரர் கனகசபை சிவகுருநாதன்



பதிவு
**340**

**எழுத்துத்துறை**

இலங்கையில் வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டத்தில் புலோப்பளையினைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் கனக சபை சிவகுருநாதன் 'கசின்' எனும் பெயரால் நன்கு அறியப் பட்ட பல்துறை எழுத்தாளரும், சமூக சேவையாளருமாவார்.

1920ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் திகதி புலோப்பளையில் கனகசபை சேதுப்பிள்ளை தம்பதியினருக்கு மகனாகப் பிறந்த இவர் க.வன்னியசிங்கம், பெ.நாகமுத்து, வ.சரஸ்வதி, பா. அன்னலட்சுமி ஆகியோரின் சகோதரராவார். சிவகுருநாதன் அவர்கள் தனது ஆரம்ப, இடைநிலைக் கல்வியினை உசன் இராமநாதன் கல்லூரி, அச்சுவேலி மத்திய மகாவித்தி யாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகியவற்றில் பெற்றார். 1940 ஆம் ஆண்டு திருநெல்வேலி ஆசிரியர் கலா சாலையில் ஆசிரியர் பயிற்சிக்காக சேர்ந்தார். அங்கு பண்டித மணி, சி.கணபதிப் பிள்ளை அவர்களின் வழிகாட்டலில் தமிழை நன்கு கற்றறிந்து 1943ஆம் ஆண்டு ஆசிரியராக வெளியேறி வவுனியாவில் கடமையாற்றினார்.

1950ஆம் ஆண்டில் பண்டிதர் பரீட்சை எழுதி அதில் சித்தியடைந்தார். அதன் பின்னர் செட்டிக்குளம், மன்னார், மத்து கம, கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் ஆசிரியப் பணி தொடர்ந்தது. அப்பகுதிகளில் அவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் இன்று உயர் பதவிகளில் இருப்பது அவரது சேவைக்கு எடுத்துக் காட்டாகும். 1971ஆம் ஆண்டு தொடக்கம் 1978ஆம் ஆண்டு சேவையிலிருந்து இளைப்பாறும்வரை உடுத்துறை மகாவித்தியா லயத்தின் அதிபராகக் கடமையாற்றினார். அக்காலப் பகுதியில் உடுத்துறை மகாவித்தியாலயம் பரீட்சைகளில் நல்ல பெறுபேற் றைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

'கசின்' சிவகுருநாதன் அவர்கள் சமூகப்பணி, இலக்கி யப்பணி எனப் பல்வேறு துறைகளில் எமது சமூகத்திற்கு தொண்டாற் றினார். சாவகச்சேரி, சரசாலையில் வசிக்கும்போது இராமாவில் பிள்ளையார் கோவில் திருப்பணி, மட்டுவில் அம்மன் கோவில் திருப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அவர் வாழ்ந்த "நிதானபுரி" இல்லம் என்றும் அவ்வூர் மக்களால் நிறைந்து இருக்கும். இவரது சோதிடப் புலமையே இதற்குக் காரணமாகும். எதுவித பலனையும் எதிர்பாராது இல்லம் வரும் சகலருக்கும் விவாகப் பொருத்தம், பலன் சொல்வார். அந்தப் பணி பிற்காலத் தில் பம்பலப்பிட்டி அரச தொடர்மாடியில் வாழ்ந்த போதும் தொடர்ந்தது.

அதிபர் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் தொண் ணூறுகளில் சில வருடங்கள் மன்னார் கேதீஸ்வரக் கோவலில் நிர்வாகப் பொறுப்பை ஏற்று திறன்பட நடத்தினார். இலங்கை இராணுவம் திருக்கேதீஸ்வரத்தை முற்றுகையிட்டபோது கோயி லில் கடமை புரிந்த ஊழியர்கள் எல்லோரும் வெளியேறி விட்ட நிலையில் கோவிலைப் பூட்டி இறுதியாக அங்கி ருந்து வெளியேறியவர் சிவகுருநாதன் ஆவார். இறுதிக் காலத்தில் பம்பலப்பிட்டியில் வாழ்ந்தபோது கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அங்கு பால பண்டித வகுப்பு களில் இலவசமாக விரிவுரையாற்றினார். அவ்வகுப்புகளில் அரச சேவையில் பணியாற்றிய பலர் மாணவர்களாக விளங்கி னார்கள். 1963ஆம் ஆண்டு கொழும்பில் கடமையாற்றியபோது இலங்கை கலைஇலக்கிய பேரவையின் தலைவராக விளங் கினார்.

இவர் தலைவராக இருந்தபோது இலக்கியப் பேரவை பல இலக்கிய விழாக்களையும் இலக்கியக் கலந்துரை யாடல் களையும் நடாத்தியமை குறிப்பிடத்தக்கது.

“கசின்” சிவகுருநாதனுடைய வாழ்க்கையில் அவர் ஆற்றிய ஆக்க இலக்கியப் பணி மிக உயர்ந்த இடத்தை வகிக்கின்றது. இவர் 1946ஆம் ஆண்டில் இலக்கியத்துறையில் காலடியெடுத்து வைத்துள்ளார். இவரின் கன்னியாக்கத்தை ஈழகேசரி பிரசுரித்துள்ளது. ஈழகேசரி உருவாக்கிய எழுத்தாளர் களில் ஒருவர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

“கசின்” எனும் புனைப்பெயரில் முன்னைய இலக்கியத் தலை முறையினருக்கு நன்கு அறிமுகமான சிவகுருநாதன் ஆரம்ப காலங்களில் ஈழத்தில் அனைத்து பத்திரிகைகளிலும் நூற்றுக்கணக்கான ஆக்கங்களை எழுதியுள்ளார். சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள் என முத்துறையிலும் “கசின்” அகலமா கவும், ஆழமாகவும் பாதம் பதித்திருந்தார்.

பண்டிதமணி கலாநிதி சி. கனபதிப்பிள்ளை அவர்களை என்றும் நினைவுகூர்ந்து வந்த இவரின் எழுத்துக்களில் பண்டித மணியின் சாயல்களை காணக்கூடியதாக இருக்கும். நகைச் சுவையுடன் எழுதி வந்த இவர் ‘ஆனந்த விகடன்’ ஆசிரியர் தேவன் அவர்களை ஆக்க, இலக்கிய கர்த்தா என்ற வகையில் மானசீகமாக நேசித்து வந்தார்.

“கசின்” முதலில் ஒரு கட்டுரை ஆசிரியராகவே எழுத் துத்துறையில் பிரவேசித்துள்ளார். இலக்கியம் என்றால் என்ன?, தமிழ் ஆசிரியர் வரலாறு, பாட்டியின் ஆராய்ச்சி ஆகிய கட்டுரைகள் ஈழகேசரியில் வெளிவந்த நேரத்தில் இவருக்குப் பெரும் வரவேற் பினை பெற்றுக் கொடுத்துள்ளன. பின்னர் நாவலாசிரியராகவும், சிறுகதையாசிரியராதவும் பரிணமித்த போதிலும்கூட, இவர் கட்டுரைகள் எழுதுவதை நிறுத்திக் கொள்ளவில்லை. இலக்கியம் தொடர்பாகவும், கல்வியியல் தொடர்பாகவும் பல கட்டுரைகளை இவர் எழுதியுள்ளார். அக்கால கட்டத்தில் கல்வி வெள்ளை அறிக்கை பற்றி சிந்தாமணியில் இவர் எழுதிய கட்டுரை கல்விமான்களிடையே பெரும் வரவேற்பினைப் பெற்றது. ஆய்வுக் கட்டுரைகளை “சட்டம்பியார்” என்ற புனைப் பெயரில் எழுதுவதை இவர் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

1947ஆம் ஆண்டில் கசினின் முதலாவது ஆக்க இலக்கியமான "வண்டியில் வளர்ந்த கதை" தொடர் நாவலாக ஈழகேசரியில் பிரசுரமானது. அந்நாவலில் அவர் கையாண்ட உத்தி காலத்தின் புதுமையானதாக சித்திரிக்கப்பட்டது. புகையிரதத்தில் சந்திக்கும் இருவர் ஒருவரை ஒருவர் அறிய முடியாமல் காதல் கடிதங்களை பத்திரிகை மூலம் பரிமாறிக் கொள்கின்றனர். கடிதம் மூலம் நாவலை வளர்த்து செல்வது ஒரு புதிய பரிணாமமாக இருந்தது.

இவர் பிற்காலத்தில் எழுதிய நாவல்களிலும் கடிதங்கள் மூலம் கதையை வளர்த்து செல்கின்ற பாணி நிறையவே காணப்பட்டதை அவதானிக்க முடிகின்றது. சகட யோகம், இராசமணிச் சகோதரிகள், இதய ஊற்று, தேடிவந்த செல்வம், கற்பகம், நிதானபுரி, சொந்தக்காரன், கண்டெடுத்த கடிதங்கள் என பல நாவல்களை இவர் எழுதியுள்ளார். இதன் மூலமாக ஈழத்து இலக்கியவானில் இவர் தனியிடம் பிடித்திருந்தார்.

நாவல் இலக்கியத்தைப் போலவே சிறுகதை இலக்கியத்திலும் இவர் புதுமைகளை சாதித்துள்ளார். மணியோசை, நூலும் நூற்கயிறும், இது காதலல்ல, பச்சைக் கிளி, பஞ்சும், நெருப்பும், சிலந்திவளை, தமிழன்தான், வனசஞ்சாரம், குந்து மாணிக்கம் என்பன இவரின் சிறுகதைகளுள் சிலவாகும். ஈழத் தமிழர்களின் பழக்க வழக்கங்கள், பேச்சுமுறை போன்றவற்றை இவரின் சிறுகதைகளில் நிறையவே காண முடிந்தது. மண்வாசனை ததும்ப எழுதுவதில் "கசின்" தனித்துவமிக்கவராக விளங்கினார். நேர்மையான போக்கும், விசால உள்ளமும், நடுநிலைக் கொள்கையும் உடையவர்களிடமிருந்து தான் சிறந்த இலக்கியங்கள் தோன்ற முடியும்' என்ற கருத்தில் "கசின்" பிடிவாதமாக இருந்தார். இலங்கையின் அனைத்து தேசிய பத்திரிகைகளிலும் போல இவரின் ஆக்கங்கள் பிரசுரமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


இவரது இலக்கியச் சேவையைப் பாராட்டி 1994ஆம் ஆண்டு இலக்கியப் பேரவை யாழ் மண்ணில் விழா எடுத்து மூத்த எழுத்தா ளரான இவரைக் கௌரவித்தது. இவரது தமிழ்ப் புலமையைப் பாராட்டி கொழும்பு தமிழ்ச்சங்கம் 1999ஆம்

ஆண்டு நடாத்திய புலவர், வித்துவான்கள் மாநாட்டில் இவருக்கு "இயற்றமிழ் வித்தகர்" என பட்டமளித்து கௌரவித்தது. 2000ஆம் ஆண்டு இவரது இலக்கியப் பணிக்காக இலங்கை அரச கலா சாரத் திணைக்களம் "கலாபூஷணம்" விருது வழங்கி கௌரவித்தது.

1944ஆம் ஆண்டு சரசாலை கணக்கர் கனகசபை செல்லம்மா தம்பதியினரின் மகளான இராசம்மாவை கரம்பிடித்து இல்லற வாழ்க்கையில் பிரவேசித்த இவருக்கு ஐந்து பிள்ளைகள் உளர். அவர்களில் மூவர் ஆண்பிள்ளைகள். இருவர் பெண்பிள்ளைகள். மூத்த மகள் புஷ்பராணி. மூத்த மகன் புஷ்பநாதன். அடுத்த பிள்ளைகள் செல்வராணி, சபாநாதன், கேதீஸ்வரநாதன் ஆகியோராவர்.

2003ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் 13ஆம் திகதி இவர் எம்மைவிட்டு பிரிந்தாலும் இவரின் சமூக மற்றும் இலக்கிய சேவைகள் எம்மைவிட்டுப் பிரியாது. இவரின் பல படைப்புகள் நூலுருப் பெறாமல் இருக்கின்றன என அறிய முடிகின்றது. இருப்பினும் இவரது நூலுருவான சில படைப்புகளின் விபரம் வருமாறு:

## நிதானபுரி




கசின் எழுதிய நான்கு குறுநாவல்களின் தொகுதி இதுவாகும். இத்தொகுதியில் நிதானபுரி, கற்பகம், சொந்தக்கால், தேடிவந்த செல்வம் ஆகிய நான்கு குறுநாவல்கள் இடம்பெற்றுள்ளன. இத்தொகுதியின் முதற்பதிப்பு 1995ம் ஆண்டு டிசம்பரில் கொழும்பு சிற்றிசன் பிரின்டர்ஸ்ஸில் அச்சிடப்பட்டு சீ.சபாநாதன் அவர்களினால் வெளியிடப்பட்டது. இப்புத்தகம் 150 பக்கங்களைக் கொண்டது.




## காதலும் கடிதமும்.

இந்நூலில் வண்டியில் வளர்ந்த கதை, கண்டெடுத்த கடிதங்கள் ஆகிய இரண்டு கதைகள் பிரசுரமாகியுள்ளன. இவ்விரு கதைகளும் முறையே ஈழகேசரி, வீரகேசரியில் பிரசுரமானவையாகும். இத்தொகுதியின் முதற்பதிப்பு 1995ம் ஆண்டில் கொழும்பு சிற்றிசன் பிரின்டர்ஸ்ஸில் அச்சிடப்பட்டு சீ.சபாநாதன் அவர்களினால் வெளியிடப்பட்டது.

## கசின் சிறுகதைகள்.





இந்நூல் யாழ். இலக்கியவட்டம் வெளியிடாக 1999 ஏப்ரல் மாதம் முதலாம் பதிப்பு வெளிவந்தது. இந்நூலினை பொ. ஆனந்த லிங்கம் என்பவர் தொகுத்திருந்தார். இந்நூலின் விலை 125 ரூபாவாகும். இந்நூலில் கசின் அவர்களினால் எழுதப்பட்ட 15 சிறுகதைகள் சேர்க்கப்பட்டுள் ளன.150 பக்கங்களைக் கொண்ட இத்தொகுதிக்கு கலாநிதி க. குணராசா அணிந் துரை வழங்கியிருந்தார்.




## குமாரி இரஞ்சிதம்.

இந்நூல் கல்ஹின்னை தமிழ் மன்றத்தின் 95வது வெளியிடாக முதற்பதிப்பு 2000ம் ஆண்டில் செப்டம்பர் மாதம் வெளிவந்தது. இது ஒரு நாவலாகும்.




## சகடயோகம்.


இந்நூல் பம்பலப்பிட்டி சந்ரா வெளியீடாக முதற்பதிப்பு 2001ம் ஆண்டு ஜுன் மாதம் வெளிவந்தது. இதுவும் ஒரு நாவலாகும்.




## கசின் நினைவலைகள்.

இந்நூல் கசின் அவர்களின் வாழ்க்கைச் சுவடும் இலக்கியப் பதிவும்கொண்டதாக அமைந்துள்ளது. இந்நூலை பொ. ஆனந்தலிங்கம் தொகுத்துள்ளார்.

# கண்டாவளைக் கவிராயர் (சி.கு. இராசையா)



பதிவு
**341**

**எழுத்துத்துறை**

வடமாகாணம், கிளிநொச்சி மாவட்டம், வன்னி தேர்தல் தொகுதி, கண்டாவளை பிரதேச செயலாளர் வசத்தில் 'முரசு மோட்டை' கிராமசேவகர் பிரிவைப் பிறப்பிடமாகக் கொண்ட சித்தர் குமாரவேலு இராசையா அவர்கள் 'கண்டாவளைக் கவிராயர்' எனும் பெயரில் பிரபல்யம் அடைந்துள்ள ஒரு மூத்த கவிஞராவார்.

1928 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி சித்தர் குமாரவேலு, குமாரவேலு சின்னப்பிள்ளை தம்பதியினரின் புதல்வனாகப் பிறந்த இவர், ஆரம்ப கல்வியைக் கண்டாவளை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு வரை கற்றார். அதற்குமேல் அங்கு வகுப்பு இல்லை. இதனால் வரணி சென்று சிலகாலம் கற்று, 1942ல் ஆங்கிலம் கற்க விரும்பிக் கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் சேர்ந்து சிரேஸ்ட தராரதரப் பரீட்சை வரை கற்றார். அங்கு பரீட்சைக்கு அனுமதி கிடைக்காமையால் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் சேர்ந்து படித்து பொது தராதர வகுப்பில் சித்தியடைந்தார். இவர் யாழ்ப்பாணம்' ஆரிய திராவிட பாசா விருத்திச் சபையினர் நடாத்திய பாலபண்டிதர், பண்டிதர் வகுப்புகளிலும், ஏழாலை பண்டிதர் மு. கந்தையா

அவர்கள் நடாத்திய சைவசித்தாந்த வகுப்புகளிலும் சேர்ந்து படித்துமுள்ளார். ஆனால் பரீட்சைகளுக்குத் தோற்றவில்லை. இவரின் சகோதரர் தம்பிராசா, சகோதரி பராசக்தி. இவர்கள் தற்போது அமரத்துவம் அடைந்து விட்டனர்.

பாடசாலைப் படிப்பை முடித்து 1952ல் வீடு திரும்பிய இவர் தனது பிதாவின் விவசாயத் தொழிலில் ஈடுபட்டதோடு சமூகசேவையிலும் ஈடுபட்டார். கரைச்சிக்கிராம சபை அங்கத்த வராக பன்றிசுட்டான் பகுதிக்குத் தெரிவு செய்யப்பட்டுச் சிலகா லம் பணியாற்றினார். அச்சபையின் தலைவரின் ஊழல் தொடர் பான சில பிரச்சினைகளால் வாக்குவாதப்பட்டுக் சபையிலி ருந்து வெளியேறினார். பின் சபைக் கூட்டங்களுக்குச் செல்ல வில்லை. உள்ளூர் ஆட்சி லிகிதர் பரீட்சையில் இவர் சித்தியெய்தி இருந்தார். ஆனால், வயது விண்ணப்பத்தில் கேட்கப்பட்டதை விடக் கூட இருந்ததால் அதற்காக அறிவிக்கப்பட்ட யுத்த கால அபாய அறிவிப்புச் சேவைப் பத்திரம் இணைப்க் கப்பட்டிருந்தும் அது முழுநேரச் சேவை அல்ல என நிராகரிக் கப்பட்டதால் அப்பதவி கிடைக்கவில்லை.

1956ல் ஊரியான் கிராம அதிகாரியாக நியமனம் பெற்று 1963 வரை கிராம அதிகாரியாகவும், அப்பதவி கிராம சேவை நிலதாரியாக மாற்றப்பட்ட 1963ல் இருந்து கிராம சேவை நிலதாரியாகவும் 1986 வரை 30 வருடங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் கடமை புரிந்து மக்களின் நன்மதிப்பைப் பெற்றார். மேற்படி பதவியின் துணையோடு ஊரில் இணக்க சபைகளை ஏற்படுத்தி தான் கடமையாற்றிய பகுதிகளில் மக்களின் பிணக்கு களைத் தீர்த்து வைத்ததோடு இரணைமடு கனகாம்பிகை அம்பாறை நிர்வாக சபைக் காரியதரிசியாகப் பணியாற்றி ஆலயம் வளர்ச்சி பெற உழைத்தார்.

அரச உத்தியோகம் கிடைக்குமுன் கண்டாவளைப் பகுதி கூட்டுறவுச் சங்கங்களில் கௌரவ அங்கத்தவராக இருந்து அச்சங்கங்கள் விருத்தியடைய முன்னின்று உழைத்தார். இவர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, உண்மை நெறிவழி நடக்கும் இலட்சியம் கொண்ட ஓர் இறைபக்தராக காணப்பட்டார். இவரின் அன்புப் பாரியார் பார்வதிப்பிள்ளை. இத்தம்பதியினருக்கு

அனந்த சேகரன், ஆனந்த குமாரி, செல்வ நாயகி, அனந்த குமார், அனந்த நீலா, அனந்த ஆயிலியன் ஆகிய அன்புச் செல்வங்கள் உள்.

எழுத்துத்துறையின் இவரின் ஈடுபாட்டை அவதானிக்கு மிடத்து பத்திரிகை ஒன்றில் இவரின் முதல் ஆக்கம் 1953 ஆம் ஆண்டு "ஐக்கியத் தீபம்" எனும் பத்திரிகையில் வெளி வந்துள்ளது. இதைத் தொடர்ந்து நூற்றுக் கணக்கான கவிதைகள், கட்டுரைகள், பக்திப் பாடல்கள் (பதிகங்கள்) போன்றவற்றை இவர் எழுதியுள்ளார். இத்தகைய ஆக்கங்கள் ஐக்கிய தீபம், ஈழநாடு, வீரகேசரி, சைவ நீதி, தினக்குரல் போன்ற பத்திரிகை களிலும் பல சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன.

1978ம் ஆண்டு கோணகுள விநாயகர் மேல் பதிகம்பாடி ஆலய மணவாளக் கோலவிழாவில் அரங்கேற்றச் சென்ற சமயம் விழாவில் இருந்த ஒருவர் பதிகத்தைப் பார்த்துவிட்டு அச்சபையில் இது ஒரு பாடலா? இதில் இலக்கண இலக்கியம் அமையவில்லை. இது அரங்கேற்றத்துக்கு ஏற்றதல்ல என்றுள் ளார்.



இதனால் மனமுடைந்த கவிராயரின் அரங்கேற்றம் தடைப்பட்டுள்ளது. இது இவரின் முதல் அரங்கேற்ற அனுபவம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த சம்பவத்தையடுத்து அப்பாடல்களையே இலக்கண அமைவாகப்பாடும் ஆற்றலை பயிற்சியின் மூலம் வளர்த்துக் கொண்டார். அதன் பின் பல தனிப் பாடல்கள், பதிகங்கள், திருவூஞ்சல்கள், திருப்பள்ளி எழுச்சி, ஊழுறு பதிகங்கள், விலை யறு பதிகங்கள் என நூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட பாடல்கள் பாடியுள்ளார்.

இலங்கை இந்திய தல யாத்திரையில் 30 தலங்கள் தரிசித்து பாடித்துதித்த பாடல்கள் 'கோபுரவாயில்' என்னும் தலைப்பில் நூல் வடிவம் பெற்றது. இந்து கலாசாரப் பிரிவினர் சிறந்த சமய நூலென பரிசளித்துக் கௌரவித்தனர். கந்தகோட்ட மான்மியம் என்னும் காவியம் பக்கம் 180 நூலாக வெளியிடப் பட்டு 2000ம் ஆண்டில் சாகித்திய மண்டல விருதும் பணப்பரி சையும் பெற்றது.

1987 கரைச்சிப்பள்ளு என்னும் நூல் வெளியிடப்பட்டு பாராட்டைப் பெற்றது. மேலும் 30க்கு மேற்பட்ட பக்திப் பாடல்கள் நூலாக வெளிவந்தன.

கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் 'கவி உழவன்' எனப் பாராட்டியுள்ளதோடு தமிழறிஞர் கலாநிதி பண்டிதர் க. சச்சிதானந்தன் அவர்கள் (அவரது பாடசாலைத் தமிழ் ஆசிரியர்) கந்தகோட்ட மான்மியம் சிறப்புரையில் 'இராசையா தெய்வீக வரகவி இறையருள்வழி நின்று பாடுபவர். அவரது கவிதையின் ஆன்ம தெய்வீகம் எம்மோராற் புரிந்து கொள்ள முடியாதது. அருட்கவிகளுக்குக் குறிப்புக் கூற மானிடக் கவிகளுக்கு அச்சமே ஏற்படும்' எனக் குறிப்பிடுகிறார். இவரின் சில நூல்கள் டில்லியிலுள்ள ஐக்கிய நாடுகள் நூலக காங்கிரஸ் சபைத் தனது யாழ்ப்பாணப் பிரதிநிதி மூலம் பெற்று மேற்படி வாசிகசாலையில் வைத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.




இவரது கரைச்சிப்பள்ளு எனும் நூலில் கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலய அதிபர் சிவஞானம் ஸ்ரீதரன் கண்டாவளைக் கவிராயரைக் குறிப்பிடும் பொழுது தமிழ்ப் பற்றும், சமயப் பற்றும் கொண்ட இவர் ஆயிரத்துக்கும் மேலான நூல்களை யாத்துள்ளார். முப்பதுக்கும் மேலான நூல்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளார்". என்று குறிப்பிட்டிருந்தார்.

ஆனாலும் வடபுலத்தில் இடம் பெற்ற யுத்தம் காரணமாக தனது நிரந்தர இருப்பிடமான கிளிநொச்சி முரசு மோட்டை என்ற இடத்திலிருந்து உடுத்த உடையுடன் வெளியேறி வந்து தற்போது வவுனியாவில் தங்கியிருக்கும் இவர் தனது ஆக்கப் பிரதி நூல்கள் எவற்றையும் எடுக்க முடியாது போனதை இட்டு மனம் வருந்துகின்றார்.

தற்போதைய நிலையில் அவரிடம் இருந்து அது பற்றி முழுமையான தகவல்களைப் பெற முடியாமலும் உள்ளது. இருப்பினும் இவர் கோணகுள விநாயகமாலை, இரணை மடுப்பதிகம், கிளிநொச்சி முருகன் திருவூஞ்சல், முரசு மோட்டை முருகன் திருவூஞ்சல், முரசு மொட்டை குளக்கட்டு விநாயகர் பதிகம், முரசு மோட்டை ஊற்று விநாயகர் திருவூஞ்சல், 5ஆம் வாய்க்கால் விநாயகர் திருவூஞ்சல், பரந்தன் சோடத் தொழிற்

சாலை விநாயகர் திருவூஞ்சல் போன்ற வெளியீடுகளின் விபரங் களை அறிய முடிகின்றது.

இவரின் இத்தகைய சேவைகளை கௌரவித்து அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கிய சில விருதுகளையும் பட்டங்களையும் பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

1986ல் தேசிய விருதும் கவிமணி பட்டமும்,
2000ல் கோபுரவாயில் என்னும் நூலுக்கு பணப்பரிசும் சான்றிதழும்,
2000ல் கந்தகோட்ட மான்மியம் என்னும் 180 பக்கங் களைக் கொண்ட காவியத்திற்கு அகில இலங்கை சாகித்திய விருதும் பணப்பரிசும்,
2002ல் கலாபூஷண விருது,

வவுனியா இலக்கிய வட்டத்தினர் 2007ல் இவரைக் கௌரவித்து 'இலக்கியச் செல்வர்' என்ற பட்டம் வழங்கினர்.

மேலும் பல உள்ளூர் மன்றங்கள் இவரைக் கௌரவித்து தெய்வீகப்புலவர், வரகவி எனப் பாராட்டியுள்ளமையும் குறிப்பிடத் தக்கதாகும்.

இவரின் நிரந்தர முகவரி ''அமுத சுரபி, முரசு மோட்டை" என்பதாகும். தற்போதைய இவரின் தற்போதைய முகவரி:

**S.K. Rasiah**
**11A, Eight Aria**
**Viyasar veethy**
**Thonikkal**
**Vavuniya.**

# அ. அந்தோனிமுத்து



பதிவு
**342**

**கலைத்துறை**

வடமாகாணம் மன்னார் மாவட்டத்தில் விடத்தல் தீவு பிரதேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அடைக்கலம் அந்தோனிமுத்து ஒரு கலைஞரும், கவிஞரும் ஆவார். 1940 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி அடைக்கலம் - லூர்த்தம்மா தம்பதியினரின் புதல்வனாக பிறந்த இவர் சிறு வயது முதல் கலையார்வம் மிக்கவராக தன்னை வெளிக்காட்டி வருகின்றார். இவரின் தந்தை அடைக்கலம் அவர்கள் சிறந்த நாட்டுக் கூத்துக் கலைஞராவார். அதேவழியில் இவரும் நாட்டார் கூத்துக் கலையில் சிறு வயது முதலே ஈடுபாடு மிக்கவராக காணப்பட்டு வருகின்றார்.

வட மாகாணத்தில் தனித்துவம் பெற்று விளங்கிய நாட்டார் கூத்து இன்று அருகி வரும் கலைகளுள் ஒன்றாகவே காணப்படுகிறது. நாட்டார் கூத்தை மேலெழுந்த வாரியான கலை வடிமாக மாத்திரம் கூறி விட முடியாது. கூத்தின் கலை நயமும் உள்ளார்த்தமான கருத்து வெளிப்பாடுகளும் இக்கலை வடிவின் முக்கிய வெளிப்பாடுகளாகும். கடந்த சில தசாப்தங்களாக வடக்கில் ஏற்பட்டு வந்த அசாமான்னிய சூழ்நிலை

இக்கலையை நீண்ட இடைவெளிக்கு கொண்டு விட்டது என்னவோ உண்மைதான். ஆனாலும் இக்கலை அழிந்து விடக்கூடாது. இக்கலையினை பாதுகாக்க வேண்டிய கடமை அத்துறையில் ஈடுபட்டு வந்த முதியோரின் கடமையாகின்றது.

அந்தோனிமுத்து தனது சொந்த இடமாகக் கொண்ட விடத்தல்தீவு ரோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலையின் பழைய மாணவராவார். தனது 18ஆவது வயதில் தொண்டர் அடிப்படையில் ஆசிரியர் பணியை ஆரம்பித்தார். 1962இல் அரசாங்க ஆசிரியராக நியமனம் பெற்ற இவர் 1966இல் யாழ் / கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து பயிற்சி பெற்று 1968 ஆம் ஆண்டில் பயிற்சி பெற்ற ஆசிரியராக வெளியேறினார்.

நுவரெலியாவில் உள்ள பரிசுத்த திரித்துவக் கல்லூரியிலும், பின்னர் மன்னார் மாவட்டத்தின் கஷ்டப் பிரதேசங்களான தேவன்பிட்டி, விடத்தல் தீவு, பெரியமடு, தட்சணாமருதமடு ஆகிய இடங்களில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றினார். 1975ஆம் ஆண்டு அதிபர் பரீட்சையில் சித்தியடைந்து அதிபராகப் பதவி உயர்வு பெற்றார். அதன்பின் மன்/ கட்கிடந்தகுளம், விடத்தல் தீவு, தாழ்வுபாடு, ஆண்டாங்குளம் ஆகிய இடங்களில் அதிபராகக் கடமையாற்றியதுடன், பெரிய பண்டிவிரிச்சான் பாடசாலையை தலைமைப் பாடசாலையாகக் கொண்டு அதற்குற் பட்ட பத்துப் பாடசாலைகளை உள்ளடக்கி கொத்தணி அதிபராகவும் செயற்பட்டார்.

சுட்டெரிக்கும் வெயிலிலும் சோவெனப் பொழியும் மழையிலும் துவிச்சக்கர வண்டி மிதித்தோடி அல்லும் பகலும் அயராது பணியாற்றினார். இவர் அப்பிரதேச பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் மனதை என்றும் விட்டகலாதவராக நின்று தனக்கென நிலையான ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டவராவார். சிறுவர் கல்விச் செயற்பாடுகளில் ஆர்வமுடன் செயற்பட்டார்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் முன்பள்ளி கல்வித்

திட்ட சிறப்புச் சான்றிதழை 1983இல் பெற்றுக் கொண்ட இவர் சிறுவர் நல உளவியல் நன்கறிந்தவர். பாடல்கள் இயற்றியும் தானே இசையமைத்தும், மாணவர்களுக்கும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கும் பாடி மகிழ்வித்தவர். ஆசிரிய ஆலோசகர், மாவட்ட இணைப்பாளர் போன்ற பதவிகளை வகித்துள்ளார்.

1997 தொடக்கம் 2000ஆம் ஆண்டுவரை மன்னார் மாவட்ட ஆரம்பக் கல்வித்துறை உதவிக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வந்துள்ளார். இக்காலகட்டத்தில் 1997இல் அரசினால் முன்வைக்கப்பட்ட புதிய கல்விச் சீர்த்திருத்த பணியையும் இவர் முன்னெடுத்து ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கு உதவியுள்ளார். முப்பத்தெட்டு வருடங்கள் கல்விப் பணியில் சேவையாற்றி 2000ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

கல்விப் பணி ஒருபுறமிருக்க, கலைப்பணியும், சமூக சேவைகளும் ஆற்றி தான் சார்ந்த மண்ணையும், மக்களையும் கௌரவப்படுத்தியுள்ளார். மன்னார் துயர் துடைப்பு, மறுவாழ்வுச் சங்க மடுப்பிரதேச தலைவராகவும் மன்னார் மாவட்ட கலை இலக்கியப் பேரவைத் தலைவராகவும் திருமறைக் கலாமன்ற உறுப்பினராகவும் இருந்துள்ளார். முதியோர் நலன்புரிச் சங்கத் தில் இணைந்து முதியோர் நலனில் கூடிய கவனம் செலுத்தி யுள்ளார். அத்துடன், கத்தோலிக்க பொதுநிலையினர் பேரவைத் தலைவராகவும், மன்னார் வாழ்வுதயச் செயற்பாட்டாளராகவும் செயற்பட்டுள்ளார். மாணவப் பருவம் தொடக்கம் பல நாடகங் களில் பாத்திரமேற்று நடித்தார். கலைப் பாரம்பரிய குடும்பத்தில் பிறந்த இவர், தமது தந்தையார் அரங்கேற்றிய நாட்டுக் கூத்துக்கள் நாடகங்களில் நடித்துள்ளார். 18 வயது தொடக்கம் ஆசிரியர் பணிக்காக தாம் சென்ற இடமெல்லாம் முழு இரவு கலை விழாக்களை நடத்தினார். தமிழ் மொழி விழாக்களில் தமது மாணவர்களைப் பங்கேற்கச் செய்து மாவட்ட, மாகாணப் போட்டிகளில் பரிசில்கள் பெற வழிவகுத்தார்.

விடத்தல்தீவில் முத்தமிழ் கலாமன்றத்தை உருவாக்கி அதன் மூலம் பல கலைநிகழ்வுகளை மேடையேற்றினார். நினைத்தவுடன் கவிபுனையும் திறன்பெற்றவராகவும் திகழ்ந்தார். வாழ்த்துப்பாமாலை, வரவேற்புப்பா, பிரிவுபசார நிகழ்வுகள் போன்ற இன்னோரன்ன நிகழ்வுகளில் ‘மன்னார் அமுது” என்ற பெயரில் ஆக்கங்களை எழுதியுள்ளார்.

மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கச் சங்கீதம், மன்/ ஆண்டாங் குளம் றோ.க. பாடசாலைக்கீதம், மன்/ பெரிய பண்டிவிரிச் சான் மகாவித்தியாலயப் பாடசாலை கீதம், விடத்தல்தீவில் மரியன்னைப் பெயரில் பாடப்படும் "*அடைக்கல மாதாவே உமது புகழ்...*" என்ற இவரின் படைப்புகள் இன்றும் நிலைத்து நின்று இவரது புகழைப் பறைசாற்றுகிறது.


1998ஆம் ஆண்டு 'பாலர் கவிதைகள் ஐம்பது' எனும் சிறுவர் பாடல் நூல் இவரால் எழுதி வெளியிடப்பட்டது. உயர்தர வகுப்புகளுக்கு தமிழ்ப்பாடம் கற்பித்து மாணவர்கள் சிறப்புச் சித்தி பெறவும் வழி காட்டியுள்ளார். இவரது படைப்புக்களாக இதுவரை வெளிவந்தவை

**பாலர் கவிதைகள் ஐம்பது,**
**மலரத்துடிக்கும் அரும்புகள்,**
**சிலுவைப்பாதை சிந்தனைகள்.**

இவர் இன, மத, நல்லிணக்கம் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபட்டு உறவுப் பரிமாண நிகழ்வுகள் மூலம் சகல இன மக்களுடனும் மனிதநேய நல்லிணக்கத் தொடர்புகளை வளர்த்து வருகின்றார். சிறுவர்களோடு ஆடிப்பாடி அகமகிழ்ந்து சிறுவர் நலனோம்பும் திட்டங்களை ஏற்படுத்தி தனது செயற்பாட்டுத் திறனை வெளிக் கொண்டு வந்துள்ளார். இவருடைய சேவைக்காக 2007ஆம் ஆண்டு "கலாபூசணம்" விருதும் இவருக்கு கிடைத்துள்ளது. 2000ஆம் ஆண்டில் அரச சேவையில் இருந்து இளைப்பாறிய அந்தோனிமுத்து தற்போது திருகோணமலை விசேட கல்வி பிரிவில் சேவையாற்றி வருகின்றார். இவரின் முகவரி:

**MR. A. ANTHONIMUTHU (BESU)**
**9, CENTRAL ROAD ,**
**ORR'S HILL,**
**TRINCOMALEE**
**T/P: 0715862544**

# மொஹம்மது நிசார்



பதிவு
**343**

**எழுத்துத்துறை**

சப்ரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டத்தில் மாவனல்லை பிரதேச செயலாளர் பிரிவில் மகவத்தை கிராமசேவகர் வசத்தில் வசித்துவரும் ஹாமிது லெப்பே மொஹம்மது நிசார் ஒரு எழுத்தாளராவார். எச்.எல்.எம். நிசார், உடுநுவரை நிசார், உ. நிசார் ஆகிய புனைப்பெயர்களில் எழுதிவரும் இவர், சிறுவர் இலக்கியங்களைப் படைப்பதில் முக்கியத்துவம் பெற்று வருகின்றார்.

1948ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த உடுநுவரை முருதகஹமுல எனுமிடத்தில் இ. ஹாமிது லெப்பே செ. ஹவ்வா உம்மா தம்பதியினரின் புதல்வராகப் பிறந்த இவர், உடுநுவரை டி.பி. விஜயதுங்க தேசிய பாடசாலை, கம்பளை சாஹிரா தேசிய பாடசாலை, கம்பளை விக்கிரமபாகு தேசிய பாடசாலை ஆகியவற்றின் பழைய மாணவராவார். இவரின் அன்புப் பாரியார் எம்.ஆர்.எஸ். முபீதா. இவரும் ஒரு ஓய்வுபெற்ற கணித ஆசிரியையே. இத் தம்பதியினருக்கு அஹமட் ரிஸ்னி, பாத்திமா முபீனா, ரிஸ்னியா, பாத்திமா சம்ரா ஆகிய அன்புச் செல்வங்களுளர்.

கற்கும் காலத்திலிருந்தே வாசிப்புத்துறையிலும், இலக்கியத் துறையிலும் ஆர்வமிக்கவராகக் காணப்பட்ட இவரின் கன்னியாக்கம் 1979ஆம் ஆண்டு தினகரன் வாரமஞ்சரியில் "உலக சாதனை" எனும் பெயரில் பிரசுரமானது.

அதிலிருந்து நூற்றுக்கணக்கான சிறுகதைகள், சிறுவர் கதைகள், கவிதைகள் போன்றவற்றை இவர் எழுதியுள்ளார். இவரின் இத்தகைய ஆக்கங்கள் தினகரன், தினக்குரல், சுடரொளி, நவமணி, தினபதி, சிந்தாமணி போன்ற தேசிய பத்திரிகைகளிலும் பல்வேறு சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன. அத்துடன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சில நிகழ்ச்சிகளிலும் ஒலிபரப்பாகியுள்ளன. இதுவரை இவர் ஆறு புத்தகங்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

01. கனவுப் பூக்கள்
02. ஓயாத அலைகள்
03. நட்சத்திரப் பூக்கள்
04. வெந்நிலா
05. மலரும் மொட்டுக்கள்
06. சிறிகு விரி

ஆகியனவே இவரால் எழுதப்பட்ட நூல்களாகும். மேலே குறிப்பிட்ட முதல் இரு நூல்களும் கவிதை நூல்களாகும். அடுத்த நான்கு நூல்களும் சிறுவர்களை மையமாக வைத்து சிறுவர்களுக்காக எழுதப்பட்ட சிறுவர் பாடல்களாகும். மேற்குறிப்பிட்ட நூல்கள் முறையே 2005, 2007, 2006, 2007, 2007, 2008 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்தவையாகும்.

இவர் பழகுவதற்கு இனியமையானவர். அமைதியானவர். தனது சுபாவத்தினைப் போலவே அமைதியான முறையில் இலக்கியம் படைத்து வருபவர். இவரின் இத்தகைய சேவைகளைக் கருத்திற் கொண்டு இலங்கை கலைத்துறையின் முன்னேற்றத்தின் பொருத்து பங்காற்றிய மிகச் சிறந்த சேவைக்கான உபகாரமாக கலாசார


அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும் "கலாபூஷண" விருது 2008ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்றது. தொடர்ந்தும் ஆடம்பரமின்றி அமைதியாகப் பணியாற்றிவரும்

இவரின் முகவரி:

**H.L.M. NISAR,**
**70/3, NEW KANDY ROAD ,**
**MAWANALLA**



# சோமநாதர் இராசேந்திரம் ("தாமரைத் தீவான்")



பதிவு

**344**

**எழுத்துத்துறை**


கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், மூதூர் தேர்தல் தொகுதியில் ஈச்சத்தீவு கிராமசேவகர் வசத்தைச் சேர்ந்த சோமநாதர் இராசேந்திரம் இலங்கையில் முதுபெரும் எழுத்தாளர்களுள் ஒருவராவார். இராசேந்திரம் 'தாமரைத் தீவான்' எனும் பெயரால் வாசகர் மத்தியில் நன்கு அறிமுகமான வராவார். இவர், கோலேந்தி, எறிகோலன், சுதந்திரன், அகதிக்கவிராயர், சாப்பாட்டுக்கவிராயர், மலைப்புலவர் போன்ற புனைப் பெயர்களிலும் எழுதி வருகின்றார்.

1932ஆம் ஆண்டு ஜுலை 24ஆம் திகதி சோநாதர் - முத்துப் பிள்ளைத் தம்பதியினரின் புதல்வராக தாமரைவில் பிறந்த இராசேந்திரம் திருகோணமலை தாமரைவில் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையிலும், திருகோணமலை மூதூர் அந்தோனியர் றோமன் கத்தோலிக்க தமிழ் பாடசாலை யிலும் கல்வி பெற்று அப்போதைய சி.பா.த.ப. பரீட்சையில் தேறி 1955 ஜனவரி 03ஆம் திகதி ஆசிரியத் தொழில் இணைந்தார். இவரின் முதல் நியமனம் திருகோணமலை

யோசப் கல்லூரியாக இருந்தது. 1972ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27ஆம் திகதி அதிபர் தரத்துக்குப் பதவியுயர்வு பெற்ற இவர், 1987ஆம் ஆண்டு ஜுலை 24ஆம் திகதி ஓய்வுபெற்றார். இவரது மனைவியின் பெயர் வ. தவமதி. இத்தம்பதியினருக்கு அன்பழகன், அன்னாதுரை, நெடுஞ்செழியன், சிற்றரசி, தமிழரசி ஆகிய ஐந்து அன்புச் செல்வங்களுளர்.

பாடசாலையில் கற்கும் காலங்களிலிருந்தே வாசிப்புத்துறையில் இவர் அதிக ஆர்வம் காட்டி வந்தார். அக்கால கட்டங்களில் இந்தியாவிலிருந்து வெளிவந்த அனேக சஞ்சிகைகளை விடாது வாசிப்பதை இவர் தனது பொழுதுபோக்காகக் கொண்டிருந்தார். 1952களிலிருந்தே ஏதாவது எழுத வேண்டும் என்ற ஆர்வத்தில் அவ்வப்போது எழுதி வந்தார். இந்நிலையில் இவரது முதல் ஆக்கம் 'சுதந்திரன்' பத்திரிகையில் 1956ஆம் ஆண்டு "வெள்ளைப் பூனை" எனும் தலைப்பில் பிரசுரமானது. அதிலிருந்து ஐந்து தசாப்த காலங்களுக்கும் மேலாக எழுதிவரும் தாமரைத் தீவான் கவிதை, கட்டுரை, உரையாடல், வில்லுப்பாட்டு என 500க்கும் மேற்பட்ட ஆக்கங்களை எழுதியுள்ளார். இவரின் இத்தகைய ஆக்கங்கள் சுதந்திரன், வீரகேசரி, சுடர், சிந்தாமணி, சூடாமணி, தினமுரசு, தினகரன், தினக்கதிர், சர்வதேச தமிழர், தமிழ் உலகம், ஓலை, நேயம், சிவநெறி, தாகம், கவிதையுறவு, தமிழ் பாவை, மில்க்வைட், ஈச்சம்பழம், கேணிச்சுடர் உள்ளிட்ட தேசிய பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன. தாமரைத் தீவான் இதுவரை 12 நூல்களை எழுதிவெளியிட்டுள்ளார். அவை:

பிள்ளைமொழி (1992),
கீறல்கள் (1992),
கட்டுரைப்பத்து (1997),
போரும் பெயர்வும் (1999),
ஐம்பாலைம்பது (2001),
வள்ளுவர் அந்தாதி (2002),
முப்பத்திரண்டு (2004),
சிறு விருந்து (2004),
சோமம் (2005),
எண் பா நூறு (2005),
ஐந்தொகை (2005),
இணைப்பு (2008).



மேற்குறிப்பிட்ட 12 நூல்களுள் அனேகமான நூல்கள் தமிழ் இலக்கி யத்தை அடிப்படையாகக் கொண்டவை. அத்துடன், மும்மறை, பத்துப்பத்து, நீத்தார் பெருமை, மொழி நூறு, அன்பளிப்பு, போர் நாற்பது ஆகிய ஆறு நூல்களையும் வெளியிட ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றார்.


தாமரைத் தீவானின் எழுத்துக்கள் கனதிமிக்கவை; இலக்கிய நயம் பொருந்தியவை. இவரின் கீறல்கள் புத்தகம் வடகிழக்கு மாகாண சபையின் விருதினைப் பெற்றது (1992). கடந்த 4 தசாப்தங்களுக்கும் மேலாக தாமரைத்தீவான் எனும் புனைப்பெயரில் ஆக்க இலக்கியத் துறைக்கு பெரும் பணியாற்றி வரும் இவரது சேவையைப் பாராட்டி 2001.10.01ஆம் திகதி திருகோணமலையில் இடம்பெற்ற இலக்கியவிழாவில் வடகிழக்கு மாகாண ஆளுனர் விருது வழங்கி, கௌரவிக்கப்பட்டார்.

இலங்கையில் கலைத்துறையின் மேம்பாட்டிற்கு ஆற்றிய மேலான சேவையினை பாராட்டும் வண்ணம் ஸ்ரீலங்கா அரசினால் வழங்கப்படுகின்ற 2004ஆம் ஆண்டுக்கான கலாபூஷண விருது 2005ஆம் ஆண்டு ஜனவரி 25ஆம் திகதி இவருக்கு வழங்கப்பட்டது. 2007ஆம் ஆண்டு பிரதேச சாகித்திய விழாவின்போது இவரின் இலக்கியத்துறையின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினைக் கருத்திற் கொண்டு 2007.11.05ஆம் திகதி கௌரவிக்கப்பட்டார்.

இலக்கியத்துறையில் கிண்ணியா எழுத்தாளர் சங்கத்தின் செயலாளராக இவர் பணியாற்றி வருகின்றார். அத்துடன், தாகம் கலை இலக்கிய ஒன்றியத்தின் உறுப்பினராகவும் இவர் உள்ளார். தனது இலக்கியத்துறை ஈடுபாட்டுக்குக் காரணகர்த்தாக்கள் என்ற அடிப்படையில் கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆகியோரை இன்றும் நினைவு கூர்ந்துவரும் இவரின் முகவரி:

**MR. S. RAJENDRAM,**
**EACHANTIVU,**
***KINNIYA***

# பெரியதம்பி ஐங்கரன்



பதிவு
**345**

**எழுத்துத்துறை**

வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டத்தில் புலோலியை பிறப்பிடமாகக் கொண்ட பெரிய தம்பி ஐங்கரன் ஆழமான சமூக நோக்குடன் எழுதிவரும் வளர்ந்துவரும் ஒரு கவிஞராவார். ஆழமான கருத்துக்களை மிகவும் எளிமையாக எடுத்துக் கூறுவதினூடாக ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் இவர் ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக மிளிர்ந்து வருகின்றார் என்றால் அது மிகைப்படுத்தப்பட்ட கருத்தாக மாட்டாது.

பெரியதம்பி, ஜெயமணிதேவி தம்பதியினரின் புதல்வராக 1981ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி பிறந்த ஐங்கரன் தனது ஆரம்பக் கல்வியையும், உயர்தரக் கல்வியை யும் யாழ்ப்பாணம் புற்றளை மகாவித்தியாலயத்தில் பெற்றார். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்றுள்ள இவர், ஒரு ஆசிரியராவார். இவரின் அன்புப் பாரியார் சுலோஜனா. இத்தம்பதியினருக்கு ஐஸ்வர்ஜா என்ற அன்புச் செல்வம் ஒன்று உள்ளது.

யாழ்ப்பாணத்தில் சிறப்பாக இயங்கிவரும் அகில இலங்கை இளங்கோ கழகத்தில் சிறு வயதிலிருந்தே இணைந்து செயற்பட்டு வந்தமையால் இவரது இலக்கியத் தாகம் சீரிய முறையில் நெறிப்படுத்தப்பட்டது. வாசிப்புத்துறையிலும் அதிக ஆர்வம் காட்டி வரும் ஐங்கரனின் கன்னியாக்கம் 2000ஆம் ஆண்டில் இலங்கையில் தலை சிறந்த இலக்கிய சஞ்சிகையான 'ஞானத்தில்' 'கண்கொத்திப் பாம்பு' எனும் தலைப்பில் பிரசுரமானது. அதிலிருந்து நூற்றுக்கணக்கான கவிதைகளை இவர் எழுதியுள்ளார். அவை ஞானம், நீங்களும் எழுதலாம், ஜீவநதி, தினக்குரல், வலம்புரி, மல்லிகை, கலையமுதம், உதயன், சுடரொளி, சங்குநாதம் ஆகிய தேசிய பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன.

ஐங்கரன் இதுவரை மூன்று கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். இவரது முதலாவது கவிதைத் தொகுதி "எனக்கு மரணம் இல்லை" எனும் தலைப்பில் 2004ஆம் ஆண்டு ஜுலை மாதம் வெளிவந்தது. இக்கவிதைத் தொகுதியினை யாழ்ப்பாணம் தென் புலோலி அகில இலங்கை இளங்கோ கழகம் வெளியிட்டிருந்தது. பருத்தித்துறை எஸ்.பி.எம். ஓப்செட் அச்சகத்தில் அச்சாகியிருந்த இப்புத்தகம் 112 பக்கங்களைக் கொண்டது. இப்புத்தகத்தின் முகப்பு ஓவியத்தை கோ. கோலிரதன் அழகுற வரைந்திருந்தார். ஐங்கரனின் ஆரம்பகால கவிதைகள் இத்தொகுதியில் இடம் பெற்றிருந்தன.

இதனைத் தொடர்ந்து 2007ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இவரின் இரண்டாவது கவிதைத் தொகுதியான "ஞானக்கண்" வெளிவந்தது. 120 பக்கங்களைக் கொண்டு புலோலி குளோபல் கணனிப் பதிப்பகத்தில் அச்சாகியிருந்த இக்கவிதைத் தொகுதியின் முகப்பட்டையை க. நிமலதாஸ் வடிவமைத்திருந்தார். தென் புலோலி அகில இலங்கை இளங்கோ கழகம் "ஞானக்கண்" தொகுதியை வெளியிட்டிருந்தது. "உலக இலக்கியங்களில் எல்லாம் சிறப்பித்துப் பேசப்படும் குறியீடு, படிமம் என்பவற்றையும் புதுக்கவிதையின் நுட்பங்கள், உத்திகள் ஆகியவற்றையும் இந்நூலில் பரிசோதித்துப் பார்த்துள்ளேன்" என்று பெரிய ஐங்கரன் குறிப்பிட்டுள்ளார்.

இவரது மூன்றாவது கவிதைத் தொகுதி "வானவில்" ஆகும். இக்கவிதைத் தொகுதியும் 2007ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் வெளிவந்தது. இத்தொகுதி பற்றி 2008 ஏப்ரல் ஞானம் இதழில் வெளிவந்த நூல் மதிப்புரை கீழே தரப்பட்டுள்ளது.

*கவிஞர் ஐங்கரன் எழுத்துலகில் ஏற்கனவே அறிமுகமானவர். வீச்சான கவிதைகள் மூலம் தன்னை இனம் காட்டிக் கொண்டவர். 'வானவில்' என்ற தலைப்பில் வெளிவரும் இக்கவிதைத் தொகுதியில் அனைத்தும் 'கைகூ' கவிதைகளே. ஈழத்தில் இதற்கு முன்னரும் சில படைப்பாளிகள் 'கைகூ' கவிதைகளை வெளிக் கொணர்ந்துள்ளனர். ஆவர்களில் சு. முரளிதரன், பாலரஞ்சனி, சர்மா போன்றவர்களைக் குறிப்பிடலாம். புதுக்கவிதை, 'கைகூ' என்பன தோன்றிய வரலாற்றையும் அதன் படிமங்களையும் கவிஞர் தன்னுரையில் எடுத்துக் கூறியுள்ளார். ந. பிச்சமூர்த்தி, அப்துல் ரஹ்மான் போன்றோரின் துணிச்சலான முயற்சிகளையும் சொல்லி யாப்பானிய 'கைகூ' வின் இலக்க ணங்கள் மீறியும் கவிதைகளை இயற்றலாம் என்றும் எழுதுவோர்க்கு மனத்தைரியத்தைக் கொடுத்துள்ளார். எண்பத் தெட்டு பக்கங்களைக் கொண்ட இக்கவிதை நூல் பல அரிய செய்திகளை முன்வைத்துச் சிந்தனையைத் தூண்டுகின்றது. கவிஞரின் பன்முகப்பட்ட பார்வையின் ஊடாகக் கிடைத்த அனுபவங்களைக் கவிதைகளாக வடித்துள்ளார். சுதந்திரம், சமூகம். ஊழல், அபகரிப்பு, அறியாமை, அரசியல், வறுமை, ஆக்கிரமிப்பு, கண்ணி வெடி, இயற்கை, மரங்கள், பறவைகள், விலங்குகள் போன்ற பலவற்றை தனது கவிதையில் கொண்டு வந்துள்ளார்.*

*மதுபோதையில்,*
*தலைவர் உரையாற்றினார்,*
*மது விலக்குப் பற்றி*

*தலைவர்களின் பொய் முகங்களை இக்கவிதை மூலம் விளக்கினார். நாட்டில் எங்கும் ஊழல் அதிகார துஸ்பிரயோகம் இவற்றைச் சாடும் கவிஞர் வாக்கு வருமாறு*

"ஏ" எலியே!
ஏழைகளின் நிவாரணத்தை,
நீயுமா திருடுகிறாய்"

இதன் மூலம் ஏழைமக்களுக்கு சேர வேண்டியதை, பண்டகசாலை அதிகாரிகள், முகாமையாளர்கள் கொள்ளையடிப்பதைக் கண்டிருக்கிறார்.

"வைத்தியர்,
வேலைப் புறக்கணிப்பு,
நோயாளி மரணம்"

வைத்தியர்கள் உயிருடன் விளையாடும் போக்கை கண்டனம் செய்கிறார்.

"சுதந்திர தினத்தில்,
சுதந்திர கீதம் பாடுகிறான்,
சுதந்திரம் இல்லாதவன்"

நடைமுறைக் காட்சியை நம்முன் கொண்டு வருகிறார் கவிஞர். ஓவ்வொரு கட்சிக்கும் கொடியுண்டு. ஆனால் மக்கள் ஆடையில்லாமல் தவிக்கிறார்கள்.

'தாலி வரம் கேட்டாள்,
கடவுளிடமல்ல
திருடனிடம்" என்ற கவிதை மூலம் நாளாந்த வாழ்க்கையில் நடக்கும் நிகழ்வுகள் சித்திரிக்கப்படுகின்றன.

'புத்தன் எறிந்த வாளை –
புன்னகையோடு ஏற்றுக் கொண்டது –
தேசியக் கொடி'

இந்த கவிதைக்கு ஓவியர் நிமலதாஸ் அட்டைப்படம் கீறியுள்ளார். ஒரு கொடிக்குள் எத்தனை வாள்கள். அதன் கீழ் தலைகள், முண்டங்கள், கையின் முத்திரை காட்டவில்லை. பெருவிரல் மடிந்து நான்கு விரல்கள் உயர்ந்துள்ளன. பஞ்சமகா பாவங்களில் நான்கு உயர்ந்து நிற்கின்றவா? புனிதரின் ஒரு கண்ணைக் காணோம் மறைத்துக் கொண்டோரோ? சிந்தனையைத் தூண்டும் அற்புத நவீன சித்திரம், எண்பது பக்கங்களில் மும்மூன்று அடிகளைக் கொண்ட 240 கவிதைகள் உள்ளன. சுவைத்து மகிழலாம் எனப்பட்டிருந்தது.


ஈழத்தில் புதுக்கவிதை (ஆய்வுநூல்), புதுக்கவிதையில் நளன் சரித்திரம் (நைடதத்தை மூலமாகக் கொண்டது), திருவாசகத்தில் நாய் (திருவாசகம் பற்றிய இலக்கியக் கட்டுரை கள்) ஆகிய நூல்களை வெகுவிரைவில் இவர் வெளிக்கொணர வுள்ளார் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியே.

2007ஆம் ஆண்டிலிருந்து புலோலி அகில இலங்கை இளங்கோ கழகத்தில் செயலாளராக பணியாற்றிவரும் இவர், இளங்கோ கழகத்தினால் மேடையேற்றப்பட்ட பட்டிமன்றம், கவியரங்கம், வழக்காடுமன்றம், பிரசங்கம், வில்லிசை, நாடகம், போன்றவற்றிலும் பங்கேற்றுள்ளார். அக்கழகத்தினால் மேடையேற்றப்பட்ட திருவிளையாடல்கள், பாஞ்சாளிசபதம், சத்தியவான் சாதித்தவை, அரிச்சந்திரா, கோவலன் கண்ணகி (இசை நாடகம்), காத்தவராயர் (சிந்து நடைக்கூத்து) ஆகிய நாடகங்களில் முக்கிய பாத்திரங்கள் ஏற்று நடித்துள்ளார். அனேகமான சந்தர்ப்பங்களில் பெண்பாத்திரங்களில் இவர் நடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தன்னுடைய கலை இலக்கிய ஈடுபாட்டிற்கு காரணகர்த்தாக்கள் என்ற அடிப்படையில் தனது பெற்றோரையும், மனைவி சுலோஜனாவையும் இசை நாடக சக்கரவர்த்தி கே.பி. பரராசாசிங்கம் அவர்களையும், பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களான ப. ரதீஸ், செ. சுதர்சன் ஆகியோரையும் புலோலி அகில இலங்கை இளங்கோ கழக நண்பர்களையும் அன்புடன் நினைவு கூர்ந்து வரும் இவரின் நிரந்தர முகவரி: பெரிய ஐங்கரன், புலோலி தெற்கு, புலோலி, யாழ்ப்பாணம் என்பதாகும். தொழில் நிமித்தமாக இவரது தற்காலிக முகவரி:



**MR. P. AINKARAM**
**DEPT.OF LAND**
**ADMINISTRATION (NP)**
**VAROTHAYANAGAR,**
**KANNIYA ROAD**
**TRINCOMALEE.**

# இளையதம்பி நடராசா



பதிவு
**346**

**எழுத்துத்துறை**

வடமாகாணம், கிளிநொச்சி மாவட்டம், கிளிநொச்சி தேர்தல் தொகுதியில், திருநகர் கிழக்கு கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த இளைய தம்பி நடராசா ஒரு முதிர்ந்த எழுத்தாளராவார். அண்மையில் வன்னியில் இடம்பெற்ற யுத்த அவலங்களுக்கு முன்பு நடராசா அவர்களுடன் தொடர்புகொண்டு அவர் பற்றிய விபரங்களை நேரடியாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. அவர் மூலமாகப் பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டே இது எழுதப்பட்டதாகும்.

1939ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி இளையதம்பி, பார்வதி தம்பதியினரின் புதல்வராக பரவிப்பஞ் சானில் பிறந்த நடராசா கிளிவெட்டி மத்திய கல்லூரியில் 09 ஆம் தரம் வரை கல்வி கற்றுள்ளார். பின்பு கட்டடத் தொழிலை தனது ஜீவனோபாயத் தொழிலாக மேற்கொண்டு வந்த இவர், செல்லம்மாவின் அன்புக் கணவராவார். இத்தம்பதியினருக்கு பவானந்தா, சண்முகானந்தா, சிவானந்தா, பவானந்தி, பவா நந்தினி, சண்முகானந்தினி, யோகானந்தி ஆகிய ஏழு அன்புச் செல்வங்களுளர்.

தனது இளம் பராயத்திலிருந்தே இலக்கியத்துறையின் மீது இவருக்கு ஆர்வம் இயல்பாக ஏற்பட்டது. 1957ஆம் ஆண்டில் சில பத்திரிகைகளுக்கு தனது ஆக்கங்களை எழுதி அனுப்பி னார். ஆனால், அக்காலகட்டங்களில் அவை பத்திரிகைகளில் பிரசுரமாகவில்லை. இருப்பினும், தனது விடாமுயற்சியினால் 1968ஆம் ஆண்டு இவரது கன்னிக் கதை "வாடா மல்லிகை" எனும் தலைப்பில் "தினபதி'ப் பத்திரிகையில் பிரசுரமானது. இதே காலப்பகுதியில் தினபதியின் ஆசிரியராக இருந்த எஸ்.டி. சிவநாயகம் ஐயா அவர்கள் இவரின் எழுத்தாற்றலை இனங் கண்டு கொண்டு இவரின் கதைகளை தொடர்ச்சியாகப் பிரசுரித் துள்ளார். இதேகாலகட்டத்தில் 'சுதந்திரன்' பத்திரிகை ஆசிரியர் கோவை மகேசன் அவர்களும் இவரின் ஆக்கங்களுக்கு ஊக்கமளித்துப் பிரசுரித்துள்ளார்.

இந்த அடிப்படையில் தனது இலக்கியத்தின் உந்துசக்தி கள் என்ற வகையில் இருவரையும் இன்றும் அன்புடன் நினைவு கூர்ந்து வருகின்றார். மேலும், க. இரத்தினசிங்கம் இவரின் படைப்பு களைப் படித்து இவரைத் தொடர்ந்தும் எழுதும்படி ஆலோசனைக ளையும், திருத்தங்களையும் வழங்கி இவரை நெறிப்படுத்தியுள் ளார். அந்தவகையில் தன்னால் ஒரு எழுத்தாளனாக வருவதற் கான வாய்ப்பினை உருவாக்கித் தந்தவர் என்று க. இரத்தின சிங்கம் அவர்களை மிகவும் பயபக்தியுடன் நினைவுகூர்வதில் பெருமிதமடைகின்றார்.

1968ஆம் ஆண்டுக்கு முன்பு தன்னுடைய இலக்கியப் பணிகள் பற்றி நடராசா குறிப்பிடுகையில், அதுவொரு வேதனைமிக்க காலகட்டம். என்னால் அனுப்பப்படும் ஆக்கங்கள் சில சந்தர்ப்பங்களில் பிரசுரமாகாமல் எனக்கே திரும்பி வந்து விடும். அச்சந்தர்ப்பங்களில் மனதுக்குள் ஏற்படும் வேதனையை வார்த்தையில் குறிப்பிட முடியாது. அதற்காக நான் சோர்ந்துவிட வுமில்லை. என் ஆக்கங்களில் நான் விடும் தவறுகள் என்ன? என்பதை துருவித்துருவி மீளாய்வு செய்வேன். திரும்பிய அந்த ஆக்கங்களை பிரபலம் பெற்ற எழுத்தாளர்களிடம் கொண்டு போய் காட்டி அவர்களின் ஆலோசனைகளைப் பெற்று வருவேன். எப்படியும் என் ஆக்கம் பிரசுரமாக வேண்டும் என்ற வெறி என் மனதுக்குள் ஊடுருவியது. தொடர்ந்தும் எழுதிவந்ததுடன், என் வாசிப்பு வேகத்தையும் அதிகரித்துக் கொண்டேன். என் முயற்சிக்குக் கிடைத்த வெற்றியாகவே என் எழுத்துத்துறையின்

வளர்ச்சியை நான் கருதுகின்றேன் என்று கூறும் நடராசா 1968ஆம் ஆண்டின் பின்பு பூண்டுலோயாவிலிருந்து வெளிவந்த "வெற்றிமணி" சஞ்சிகையில் "பசுவும் கயிறும்", "முதலாளியும் தொழிலாளியும்", "இதயக் கோவிலும் இறைவழிபாடுகளும்", "தாயும் சேய்களும்", "திருவள்ளுவரும் திருக்குரலும்" போன்ற தலைப்புகளிலாலான தத்துவக் கட்டுரைகளை எழுதியமையிட்டு மன நிறைவு கொள்கின்றார். இக்காலகட்டங்களில் நடராசா இ.என். ராசா, திருநகர் நடராசன் ஆகிய பெயர்களிலும் எழுதிவந்தார்.

நடராசா அவர்கள் இதுவரை 75க்கும் மேற்பட்ட சிறுகதைகளையும், 200க்கும் மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவரின் இத்தகைய ஆக்கங்கள் தினபதி, சிந்தாமணி, வீரகேசரி, மித்திரன், ராதா போன்ற பத்திரிகைகளிலும், பல்வேறு சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன. திருகோணமலை இலக்கிய ஒன்றியம் இவரது 30 சிறுகதைகளைத் தொகுத்து "மண்ணின் வேர்கள்" எனும் தலைப்பில் 2006இல் வெளியிட்டது. பின்பு இடைக்கிடையே வீரகேசரி, தினக்குரல், மல்லிகை போன்ற பத்திரிகைகளில் இவர் எழுதிவந்தார். 2008 ஆம் ஆண்டு இவரது நேர்காணல் ஒன்று 'ஐ' தொலைக் காட்சியிலும் ஒளிபரப்பாகியது.

வடபுலத்து யுத்த நிலைகளினால் பெருமளவிற்கு மனோ ரீதியாக தாக்கங்களுக்குட்பட்டிருந்தார். மானுடத்தை அதிகமாக நேசித்த நடராசா யுத்த இழப்புகள் கண்டு பெரிதும் மனம் நொந்தார். தான் வாழும் சமூகத்தைப் பற்றியும், சமூகத்தில் புரையோடிப் போயுள்ள மூடநம்பிக்கைகள், அவலங்கள் போன்ற வற்றை இலக்கிய மாக்குவதில் இவர் பெருமளவிற்கு வெற்றி கொண்டுள்ளார் என்றே எண்ணத் தோன்றுகின்றது. இன்று கிளிநொச்சியில் மக்களே இல்லை. இவர்கள் இடம் பெயர்ந்து எந்த முகாம்களில் இருக்கின்றார்கள் என்ற பூரண விபரம் தெரியாது. இருப்பினும், இவரின் நிரந்தர முகவரி வருமாறு:

**E-NADA RAJAH,**
**761, THIRU NAGAR NORTH,**
**KILINOCHCHI.**

# எஸ்.எம். ஹனிபா



பதிவு
**347**

**எழுத்துத்துறை**

இலங்கையில் சிரேஷ்ட எழுத்தாளரும், ஊடகவியலாளரும், வெளியீட்டாளரும், பன்னூலாசிரியருமான சட்டத்தரணி அல்ஹாஜ் எஸ்.எம். ஹனிபா அவர்கள் கடந்த 2009.05.29ஆம் திகதி இறையடியெய்தி விட்டார். இலங்கையில் முன்னணி தமிழ் நூல் பதிபகங்களில் ஒன்றான கல்ஹின்னை தமிழ்மன்றத்தின் ஸ்தாபகரும், உரிமையாளருமான இவர், 100க்கும் அதிகமான நூல்களை வெளியிட்டுள்ளார். அன்னாரின் மறைவுச் செய்தி மூன்று தினங்கள் கடந்தே எனக்குத் தெரியவந்தது. தலைநகரிலுள்ள எமது எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், நண்பர்கள் சிறிய சிறிய விடயங்களுக்குக்கூட கடிதம் என்றும், மின்னஞ்சல் என்றும், SMS என்றும் தொடர்புகொண்டாலும் கூட, இது போன்ற விடயங்களை அறிவிக்காமை வேதனைக்குரிய ஒரு விடயமே.


இவ்விடத்தில் ஒரு சிறிய விடயத்தை மனந்திறந்து குறிப்பிடல் வேண்டும். ஒரு எழுத்தாளன் என்ற அடிப்படையில் இன்று நான் 150 புத்தகங்களை எழுதி வெளியிட்டாலும்கூட ஏதோ ஒரு வகையில் புத்தக வெளியீட்டில் எனக்கு உத்வேகத்தைத் தந்தவர்

அல்ஹாஜ் எஸ்.எம். ஹனிபா அவர்களே. 1979ஆம் ஆண்டில் என் முதல் சிறுகதைத் தொகுதி "தேவைகள்" எனும் தலைப்பில் வெளிவந்த பின்பு சுமார் ஏழாண்டுகள் எந்தவொரு புத்தகத்தை யும் நான் வெளியிடவில்லை. அதற்குரிய வசதிகளும் என்னிடம் இருக்கவில்லை.

இந்நிலையில் அப்போதைய மாளிகாவத்தை வை.எம். எம்.ஏ. யின் செயலாளர் நாயகம் அஸ்ரப் ஹாசிம் அவர்களினால் எஸ்.எம். ஹனிபாவிடம் நான் அறிமுகம் செய்து வைக்கப்பட்டேன். எமது முதல் அறிமுகத்துடனே எனது இரண்டாவது நூலான "நிழலின் அருமை"யை கல்ஹின்னை தமிழ்மன்றத்தின் 28ஆவது வெளியீடாக வெளியிட அல்ஹாஜ் எஸ்.எம். ஹனிபா ஒப்புக் கொண்டார். 1986 மார்ச்சில் அப்புத்தகம் வெளிவந்தது.

அவரின் சுறுசுறுப்பும், பழகும் சுபாவமும், விருந்தோம்பும் பண்பும், அவரின் தமிழ் இலக்கியப் பணிகளும் என்னை வெகுவா கக் கவர்ந்ததினால் அவரைப் பற்றிய ஓர் ஆய்வினை மேற் கொள்ள நான் முடிவெடுத்தேன். இதன் விளைவாக 1987ஆம் ஆண்டு "இலக்கிய உலா", "இலக்கிய விருந்து" ஆகிய 02 நூல்களை நான் எழுதினேன். "இலக்கிய உலா" அல்ஹாஜ் எஸ்.எம். ஹனிபா அவர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு களை உள்ளடக்கியது. இந்நூலின் முதலாவது பதிப்பு 1987ஆம் ஆண்டு மே மாதம் வெளிவந்தது. சென்னை மில்லத் பப்ளிகே ஷன்ஸ் இந்நூலை வெளியிட்டது. "இலக்கிய விருந்து" அது காலம்வரை தமிழ்மன்றம் வெளியிட்ட 30 நூல்களைப் பற்றிய ஆய்வு நூலாக அமைந்தது. இந்நூல் கல்ஹின்னை தமிழ்மன்றத் தின் 30ஆவது வெளியீடாக 1977 ஏப்ரல் மாதம் வெளிவந்தது. இதேகாலகட்டத்தில் இந்தியா அல்பாசி பப்ளிசர்ஸ் வெளியீடாக எனது "அடிவானத்து ஒளிர்வுகள்" நாவல் வெளிவரவும் பூரண ஒத்துழைப்பினை அல்ஹாஜ் எஸ்.எம். ஹனிபா அவர்களே வழங்கினார். அத்துடன் மேற்படி மூன்று புத்தகங்களையும் கொழும்பு ரன்முத்து ஹோட்டலில் வெளியிடுவதற்கான ஏற்பாடு களையும் செய்து தந்தார். இவ்விழாவில் முன்னால் அமைச்சர் செல்லையா இராசதுறை, முன்னால் சபாநாயகர் அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் மற்றும் அப்போதைய வீரகேசரி பிரதம ஆசிரியர், இ.ஒ.கூ. தமிழ் சேவைப் பணிப்பாளர் ஆகியோர்

கலந்து கொண்டனர். ஞாபகர்த்தமான அவ்விழா புகைப்படங்கள் சில கீழே இணைக்கப்பட்டுள்ளன.





இவ்வாறாக இரண்டாண்டுகளுக்குள் என்னுடைய 04 புத்தகங்கள் அச்சாவதற்கு ஒத்துழைத்ததுடன், அச்சீட்டுத்துறையிலும், வெளியீட்டுத்துறையிலும் பல்வேறுபட்ட நுணுக்கங்களை எனக்கு அவர் போதித்தமையினாலேயே பிற்காலத்தில் என்னால் சுயமாக 150 புத்தகங்களை எழுதி வெளியிடவும், அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி எனது சிந்தனைவட்டத்தின் மூலம் 300க்கும் மேற்பட்ட புத்தகங்களை வெளியிடவும் முடிந்தது.

எம்மைவிட்டுப் பிரிந்தாலும் இலங்கை தமிழ் இலக்கியத்துக்கும், இலக்கியவாதிகளுக்கும் அல்ஹாஜ் எஸ்.எம். ஹனிபா அவர்களினால் வழங்கிய ஒத்துழைப்பும், வழிகாட்டலும் என்றும் நிலைத்திருக்கும். இச்சந்தர்ப்பத்தில் அன்னாருக்கு ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் சுவனபதி கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்வதுடன், இவர்கள் நம்மவர்கள் தொடரில் அவர் பற்றிய விசேட குறிப்புகளை இணைத்துக் கொள்கின்றேன்.

மத்திய மலைநாட்டின் தலைநகர் கண்டிக்கு அண்மையில் அமைந்துள்ள எழில் கொஞ்சும் முஸ்லிம் கிராமங்களுள் ஒன்றான கல்ஹின்னையைப் பிறப்பிடமாகக் கொண்டவரே எஸ்.எம். ஹனிபா அவர்கள். இவர் 1927ஆம் ஆண்டு ஜுலை மாதம் 24ஆம் திகதி செய்யது ஹாஜியார், சபியா உம்மா தம்பதியினரின் ஏக புதல்வராக கல்ஹின்னையில் பிறந்தார்.

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பகால கட்டங்களிலே கிராமப் புறங்களின் கல்வி நிலை மிகவும் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. காரணம் கல்வியைப் பெற்றுக்கொள்ளக் கூடிய பாடசாலைகள் இக்கிராமங்களில் இன்மையே. பொதுவாக தமது பிள்ளைகளை உலகளாவிய கல்வியைக் கற்பதற்கு முன்பு மார்க்க அறிவினை வழங்குவதற்கு இக்காலப் பெற்றோர் கூடிய ஆர்வம் காட்டுவர். இந்த அடிப்படையில் எஸ்.எம். ஹனிபா அவர்கள் தனது நான்கரை வயதிலே திருக்குர்ஆனையும், மார்க்கக்கல்வியையும் கற்றுக் கொள்ளத் தூண்டப்பட்டார். இரண்டாண்டுகளுக்குள் திருக்குர்ஆனின் 30 பாகங்களையும் ஓதி முடித்ததுடன், மார்க்க அடிப்படை தொடர்பாகவும் கற்றுத் தேர்ந்தார்.

இந்நிலையில் 1934ம் ஆண்டு ஜுன் 01ம் திகதி கல்ஹின்னை கிராமத்தின் கமாலியா முஸ்லிம் பாடசாலை எனும் பெயரில் ஒரு பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையே தற்போதைய கல்ஹின்னை அல்மனார் தேசிய பாடசாலையாகும். இப்பாடசாலையின் ஆரம்ப தினத்தின் 21ஆவது மாணவராக சேர்ந்த ஹனிபா 5ம் வகுப்பு வரை இப்பாடசாலையிலேயே தமிழ்மொழி மூலமாக கற்றார். பின்பு 1939ஆம் ஆண்டில் மாத்தளை விஜய கல்லூரியில் ஆங்கிலமொழி மூலம் கற்க தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்பு மாத்தளை சென். தோமஸ் கல்லூரியிலும், கட்டுகஸ் தோட்டை புனித அந்தோனியர் கல்லூரியிலும், கொழும்பு ஸாஹிராக் கல்லூரியிலும் இவர் இடைநிலைக் கல்வி, உயர் தரக் கல்வியைப் பெற்றார். பின்பு சட்டக் கல்லூரியில் இணைந்து சட்டத்தரணியானார்.

இவர் 1956ஆம் ஆண்டில் கொழும்பு டென்காம் பாடசாலையில் (தற்போது மாளிகாவத்தை தாருஸ்ஸலாம் மு.மகாவித்தியாலயம்) ஆசிரியர் சேவையில் இணைந்தார். இருப்பினும் இரண்டாண்டுக்குள் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தினகரன் பத்திரிகையின் உதவியாசிரியர் பதவி கிடைத்தமையினால்

ஆசிரியர் தொழிலில் இவர் நீடிக்கவில்லை.

1958ஆம் ஆண்டில் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் பிரதான நாழிதலான தினகரன் பத்திரிகையில் உதவியாசிரியராக சேவையில் இணைந்தார். தினகரன் உலக செய்திகள் பக்கத்தை இவரே பொறுப்பாக நின்று நடத்திவந்தார். இதைத் தொடர்ந்து தினகரன் பத்திரிகையின் 'திங்கள் விருந்து' எனும் சஞ்சிகைப் பக்கத்தையும் பொறுப்பாக நின்று நடத்தினார்.

இக்காலகட்டத்தில் தினகரன் பிரதம ஆசிரியராக இருந்த கலாநிதி க. கைலாசபதி அவர்களின் விசுவாசத்துக்குரிய ஒருவாரா கவும் காணப்பட்ட எஸ்.எம். ஹனிபா சுமார் 6 ஆண்டுகள் தினகரன் ஆசிரியர் பீடத்தில் உதவியாசிரியராகப் பணியாற்றி னார்.

பின்பு தினகரனின் சகோதர பத்திரிகையான சிலோன் ஒப்சேவரில் துணையாசிரியர் பதவிக்கு நியமனம் பெற்று உள்நாட்டு, வெளிநாட்டு செய்திகளை அழகுற தொகுத்தளித் தார். சுமார் 1 வருட காலத்துக்குள் சிலோன் டெய்லி நிவுஸ் பத்திரிகையில் உதவியாசிரியாராக இணைந்து 3 ஆண்டு காலம் பணியாற்றினார். இக்கட்டத்தில் தனக்கு இந்தோனேசியாவில் மார்க்கக் கல்வி கற்பதற்கான புலமைப்பரிசில் ஒன்று கிடைத் தமையினால் லேக்ஹவுஸிலிருந்து 1968 ஜுன் மாதம் இராஜி னாமாச் செய்தார்.

பின்பு 1971ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தின் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்திப் பகுதியில் சிரேஷ்ட உதவியாசிரியராக நியமனம் பெற்றார். இவரின் கடமையுணர் வும், தொழில் நுணுக்கமும் ஒன்றிணைந்து இவரை பொறுப்பா சிரியர் பதவி உயர்வுபெற வழிவகுத்தது. 1977ஆம் ஆண்டில் தன் சுயவிருப்பின் பெயரில் இவர் இப்பதவியிலிருந்தும் இராஜினா மாச் செய்தார்.

பள்ளிப் பராயத்திலிருந்தே தமிழை நேசிக்கவும், தமிழை வளர்க்கவும் பழகிக் கொண்ட எஸ்.எம். ஹனிபா அவர்கள் கற்கும் காலத்திலே ஓர் இலக்கிய சஞ்சிகை, ஒரு கல்லூரி சஞ்சிகை, இரண்டு இயக்க சஞ்சிகைகள், பல்கலைக்கழக சஞ்சிகை

யொன்று என மொத்தம் 5 சஞ்சிகைகளில் ஆசிரியராகக் கடமை யாற்றியுள்ளார். இதே காலப்பகுதியில் வேறு 3 பல்கலைக்கழக சஞ்சிகைகளுக்கும் இவர் முழுப்பொறுப்பாக நின்று வெளிக்கொணர்ந் துள்ளார்.

இவரது 21வது வயதிலிருந்து நான்கு ஆண்டுகளுக்குள் இவர் ஆசிரியராக நின்று பணியாற்றிய சஞ்சிகைகளை எடுத்துநோக்குமிடத்து சமுதாயம் எனும் இலக்கிய சஞ்சிகை இவருடைய சொந்த வெளியீடாகவும் தரமான இலக்கிய சஞ்சிகையாகவும் மிளிர்ந்ததை அவதானிக்கலாம்.

100க்கணக்கான இலக்கிய ஆக்கங்களையும், கட்டுரைக ளையும் தேசிய பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும், வானொலி யிலும் எழுதியுள்ள இவர், சுமார் 15 நூல்களுக்கு மேல் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலக்கிய வானில் இவரால் சமர்ப்பிக்கப்பட்ட நூல்களில் உலகம் புகழும் உத்தம தூதர், துஆவின் சிறப்பு, உத்தமர் உவைஸ், THE GRADE SON ஆகியன குறிப்பிடத்தக்கது. பாரதி நூற்றாண்டின் போது மகாகவி பாரதி நூலினை சிங்களத்தில் வெளியிட்டார். அதேபோல உத்தும் நபி துமானோ, உவைஸ் சிரித்த ஆகிய நூல்களை சிங்களத்தி லும் எழுதி வெளியிட்டார். இஸ்லாமிய இலக்கிய வளர்ச்சி எனும் நூல் அறிஞர்களால் விதந்துரைக்கப்பட்டுள்ளதாகும். இவர் கடைசியாக எழுதி வெளியிட்ட நூல் 'அன்னை சோனியா காந்தி' என்பதாகும்.

கல்ஹின்னை தமிழ்மன்றம் எனும் முத்திரையில் அல்ஹாஜ் எஸ்.எம். ஹனிபா அவர்கள் 100க்கும் மேற்பட்ட புத்தகங்களை ஈழத்துத் தமிழ்த் தாயின் மடியில் தவழ விட்டுள் ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவரது வெளியீட்டுப் பணிகளை அவதானிக்கும்போது இன, மத, பேதங்களுக்கு அப்பாற்பட்டிருப்பதை அவதானிக்கலாம். அதேநேரம், வளர்ந்த எழுத்தாளர்கள், கல்விமான்கள் என்ற

வட்டத்துக்குள் தமது வெளியீட்டினைச் சுருக்கிக் கொள்ளாமல் வளர்ந்துவரும் எழுத்தாளர்களுக்கும், அறிமுக எழுத்தாளர்களுக் கும் களமமைத்துக் கொடுத்துள்ளதை விசேட பண்பாக சுட்டிக் காட்ட வேண்டும். இவர் மூலமாக பல எழுத்தாளர்கள் உருவாக்கப்பட்டுள்ளார்கள் என்பதே உண்மை. தமிழ்மன்றம் பல நூல்களை வெளியிட்ட போதிலும்கூட, சில நூல்களை மாத்திரம் கீழே உதாரணப்படுத்தியுள்ளேன்.

- தமிழ் இலக்கியத்துக்கு முஸ்லிம்கள் ஆற்றிய பங்கு (ஆங்கிலம்). இந்நூல் 1953ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வெளிவந்தது. இந்நூலின் நூலாசிரியர் கலாநிதி எம்.எம். உவைஸ் ஆவார். இதுவே தமிழ்மன்றத்தின் முதல் நூலாகும்.

- இலக்கியத்தென்றல். (தமிழ் இலக்கிய வரலாறு) கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களினால் எழுதப்பட்ட இந்நூல் 1953ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வெளிவந்தது.

- தமிழர் சால்பு. (சங்ககால இலக்கியம் பற்றியது) இந் நூலினையும் கலாநிதி சு. வித்தியானந்தன் எழுதியுள் ளார். 323 பக்கங்களைக் கொண்ட இந்நூலின் 01ஆம் பதிப்பு 1954ஆம் ஆண்டு அக்டோபரில் வெளிவந்தது.

- துணைவேந்தர் வித்தி. இந்நூலை பேராசிரியர் கலாநிதி அ.சன்முகதாஸ் எழுதியுள்ள இந்நூலின் முதற்பகுதி 1984 மே மாதம் வெளிவந்தது.

- என் சரிதை. கவிஞர் அப்துல்காதர் லெவ்வை அவர்களி னால் எழுதப்பட்ட வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள். இந்நூல் 1983 ஜனவரியில் வெளிவந்தது. இதேயாண்டு இந்தியாவில் பிரபல எழுத்தாளர் ஜே.எம். சாலியின் "சாயல்" எனும் சிறுகதைத் தொகுதியை தமிழ்மன்றம் வெளியிட்டது.

- 1984 ஜனவரியில் கவிமணி எம்.ஸி. சுபைர் அவர்களின் "எங்கள் தாய்நாடு" எனும் புத்தகத்தை வெளியிட்ட தமிழ்மன்றம் இதேயாண்டில் கவியரசு எம்.எச்.எம். ஹலீம் தீனின் "காலத்தின் கோலங்கள்" எனும் நூலினையும் வெளியிட்டது. 1985ஆம் ஆண்டு மார்ச்சில் புலவர்மணி அ.மு. சரீபுத்தீனின் "கனிந்த காதல்" நூல் வெளிவந்தது.


எஸ்.எம். ஹனிபா அவர்கள் 1965ஆம் ஆண்டில் "நூருல் அம்பேரியாவை தனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டார்.

தமிழன்பர் ஹனிபாவின் இலக்கிய சேவைகளை பாராட்டி பல அமைப்புகள் கௌரவம் அளித்துள்ளன. பல விருது களை வழங்கியுள்ளன. ஹனிபா மறைந்தாலும் அவரால் ஆற்றப்பட்ட சேவைகள் நீண்ட காலங்களுக்கு நிலைத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.






# ஆனந்தன் மோகனதாஸ்



பதிவு
**348**

**எழுத்துத்துறை**

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், அப்புத்தளை தேர்தல் தொகுதியில் பிட்டரத்மலை கிராமசேவகர் வசத்தைச் சேர்ந்த ஆனந்த மோகனதாஸ் ஒரு எழுத்தாளரும், நாடகக் கலைஞருமாவார்.

1959ஆம் ஆண்டு ஜுன் மாதம் 13ஆந் திகதி எம். ஆனந்தன், சத்தியபாமா தம்பதியினரின் புதல்வராக ஹல்தும் முள்ளையில் பிறந்த மோகனதாஸ் மாத்தளை சங்கமித்தை மகளிர் வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்றார். பின்பு இடைநிலை, உயர்தரக் கல்வியினை மாத்தளை இந்து மகாவித்தியாலயம், மாத்தளை ஸாஹிராக் கல்லூரி ஆகிய வற்றில் பயின்றார். கணித, விஞ்ஞான பயிற்றப்பட்ட ஆசிரியரான இவர் தேசிய தொலைக் கல்வி நிறுவனத்தில் பயிற்சி பெற்றவர். தற்போது பண்டாரவளை புனித தோமயர் கல்லூரியில் ஆசிரிய ராக சேவையாற்றிக் கொண்டிருக்கின்றார். இவரின் அன்புப் பாரியார் லோகம்பாள். இத்தம்பதியினருக்கு ரமேஷ், தினேஷ், திவியா ஆகிய மூன்று அன்புச் செல்வங்கள் உளர்.

பாடசாலையில் கற்கும் காலங்களில் நாடகத்துறையிலும், சங்கீதத்துறையிலும் இவருக்கு ஆர்வம் அதிகம். கற்கும் காலங்களில் பாடல்கள் எழுதக்கூடிய ஆற்றல் பெற்றிருந்த இவர் அவற்றை இசையுடன் சேர்த்து பாடக்கூடியவராகவும் இருந்தார்.

அதேநேரம், மேடை நாடகங்கள் நடித்தும், வில்லுப் பாட்டு, நாட்டுக் கூத்துகள் போன்றவற்றில் அரங்கேற்றியுமுள்ளார். பின்பு பிரதேச ரீதியாக சில கலை இலக்கிய மன்றங்களுடன் இணைந்து அம்மன்றங்களால் தயாரிக்கப்பட்ட நாடகங்களில் இவரது பங்களிப்பினையும் வழங்கியுள்ளார். தொழில் ரீதியாக ஆசிரியர் பணியில் இணைந்த பின்பு தனது மாணவர்களை மையமாகக் கொண்டு இத்துறையினை அவர் வளர்த்துக் கொண்டார். நாடகங்கள் எழுதல், தயாரித்தல், நெறிப்படுத்தல் போன்ற பல்வேறு துறைகளிலும் இவரது சேவையாற்றல் மிளிர்ந்தது. அதுமட்டுமல்லாமல் பல்வேறுபட்ட நாட்டுக் கூத்துக்களையும், வில்லுப்பாட்டு நிழ்ச்சிகளையும் இவர் தயாரித்து வழங்கியுள்ளார்.

இவரால் தயாரித்து மேடையேற்றப்பட்ட முதல் நாடகம் "எண்ணங்கள் மாறுமா?" என்பதாகும். 1990ஆம் ஆண்டில் இந்நாடகம் மேடையேற்றப்பட்டுள்ளதுடன், தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் பரிசில்களையும் வென்றுள்ளது. இதுவரை முப்பதுக்கும் மேற்பட்ட நாடகங்களைத் தயாரித்து, நெறிப்படுத்தி இவர் மேடையேற்றியுள்ளார். அவற்றுள் "ஊர்வலங்கள் ஓயுமா", "விடிஞ்சிருச்சி", "விழுதுகள் வேறாகுமா" போன்றன குறிப்பிடத் தக்கவை. பிரதேசத்தில் ஸ்ரீவராத்திரி உற்சவங்களின்போது இவர் சில நாடகங்களை மேடையேற்றியுள்ளார். ஸ்ரீதேவி கருமாரியம்மன் தேவஸ்தானத்தில் நடைபெற்ற சமய நிகழ்ச்சிகளில் சிறப்பு நிகழ்ச்சிகளைத் தயாரித்தளித்துள்ளார். ஸ்ரீவராத்திரி நாடகங்களில் உண்மையின் வழியிலே, மானத்தின் முடிவுகள் போன்றன அமோக வரவேற்பினைப் பெற்றன. மேலும், பல்வேறுபட்ட சமய நிகழ்ச்சிகளிலும் இவரின் கலைத்துறை வெளிப்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தான் வாழும்

மலையக சூழ்நிலையை வைத்து மலையகத்தில் தொழிற் சங்கங்களிடையேயும், அரசியல்வாதிகளிடையேயும் காணப்படக்கூடிய ஊழல்களை தனது கலைப்படைப்புகளி னூடாக வெளிச்சத்துக்குக் கொண்டு வருவதிலும், அவற்றை நயமுற முன்வைப்பதிலும் இவர் திறமை பெற்றவர்.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் 1991ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான அகில இலங்கை கலாசாரப் போட்டியில் புதிய பாடல் குழு பிரிவில் இவரது குழு முதலாம் இடத்திலே பெற்றுக் கொண்டது.

1991ஆம் ஆண்டின் பிரதேச இளைஞர் கழக கலாசாரப் போட்டியில் அறிவிப்புத்துறையில் இவர் முதலாம் பரிசினைப் பெற்றுள்ளார். மேலும், தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் 1991ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடை யிலான அகில இலங்கை கலாசாரப் போட்டியில் கிராமிய பாடல் குழு நிகழ்ச்சியிலும் சிறப்புப் பரிசினை வென்றுள்ளார். அத்துடன், இதேயாண்டில் குழு நாடகப் பிரிவில் சிறந்த தயாரிப் பாளருக்கான முதலாமிடத்தினையும், குழு நாடகப் பிரிவில் சிறந்த இசைக்கான விருதினையும் இவர் பெற்றுள்ளார்.

1991ஆம் ஆண்டு தைப்பொங்கல் விழாவின்போது இளந்தளிர் இளைஞர் கழகத்தினால் நடாத்தப்பட்ட கலாசாரப் போட்டியில் தனி நடிப்பு பிரிவில் இவர் மூன்றாமிடத்தைப் பெற்றார். அப்புத்தளை காந்தி இளைஞர் கழகத்தினூடாக இவர் பல்வேறுபட்ட கலாசார நிகழ்ச்சிகளை முன் நின்று நடத்தியுள்ளார்.

இந்து சமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச் சும், ஊவா மாகாண இந்து கலாசார கூட்டுறவு வர்த்தக சுற்றுலா பெருந்தோட்டத்துறை தமிழ் கல்வி சேவைகள் அமைச் சும் இணைந்து 1994ஆம் ஆண்டு ஜுலை மாதம் பதுளை நகரில் நடாத்திய தமிழ் சாஹித்திய விழாவில் இவரது நாடகத் துறை பணிக்காக வேண்டி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத் தக்கது.


நாடகத்துறையைப் போலவே எழுத்துத்துறையிலும் இவருக்கு ஈடுபாடுண்டு. 1985ஆம் ஆண்டு 'சிந்தாமணி'யில் "சந்தாப் பணங்களில் வாழும் தொழிற்சங்கங்கள்" எனும் ஆக்கத்தை எழுதி எழுத்துத்துறையில் அறிமுகமானார். இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் போன்றவற்றை இவர் எழுதியுள்ளார். இவரின் இத்தகைய ஆக்கங்கள் இலங்கையின் தேசிய பத்திரிகைகளான தினக்குரல், வீரகேசரி, சுடரொளி போன்றவற்றில் அவ்வப்போது பிரசுரமாகி வருகின்றன.

1995ஆம் ஆண்டு ஊவா மாகாண இந்து கலாசார அமைச்சு நடத்திய தமிழ் சாஹித்திய விழாவில் இவரது சிறுகதை இரண்டாம் இடத்தைப் பெற்றது. இதுவரை இவரின் நூலொன்றும் வெளிவரவில்லை. இருப்பினும் தன்னால் எழுதப் பட்ட கவிதைகளைத் தொகுத்து நூலொன்றை வெளியிடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார். நாடகங்களைப் போலவே இவரின் இலக்கிய படைப்புகளிலும் மலையக மண் வாசனையையும், மலையக மக்களின் பிரச்சினைகளையும் காணமுடியும்.

தொடர்ந்தும் கலை இலக்கியத் துறையில் ஈடுபாட்டினை வெளிப்படுத்திவரும் இவரின் முகவரி:-

**ANANTH MOHANATHS (J.P)**
**MOGE ILLAM,**
**PITARATHMALE U.D,**
**HAPUTALE.**

# எஸ்.எல்.எம் மஹ்ரூப்



பதிவு

**349**

**எழுத்துத்துறை**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், உடுநுவர தேர்தல் தொகுதியில் எலதத்த மேற்கு கிராமசேவகர் வசத்தைச் சேர்ந்த எஸ்.எல்.எம் மஹ்ரூப் 'மணிக்குரல்' வளர்த்தெடுத்த எழுத்தாளர்களுள் ஒருவராவார்.1960களில் கவிஞர் காலஞ்சென்ற எம். சி. எம். சுபைர் அவர்களை ஆசிரியராகக் கொண்டு மலையகத்தில் வெளிவந்த மணிக்குரல் எத்தனையோ எழுத்தாளர்களை உருவாக்கியுள்ளது. இந்த எழுத்தாளர்கள் படைப்பிலக்கியத் துறையிலும் ஆய்வுத்துறையிலும் பல்வேறு சாதனைகளைப் படைத்துள்ளனர்.

1942ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11ஆந் திகதி சின்ன லெப்பை அப்துல் சமத், சுலைஹா உம்மா தம்பதியினரின் புதல்வராக தவுலகலயில் பிறந்த முகமத் மஹ்ரூப் ஹந்தெஸ்ஸ அல்மனார் தேசிய கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்றார். பின்பு இடைநிலை, உயர்தரக் கல்வியினை கம்பளை சாஹிரா கல்லூரியில் பயின்று கொழும்பு இலங்கைப்பல்கலைக் கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்றார். பின்பு பட்டதாரி ஆசிரியராக 1968ஆம் ஆண்டில் நியமனம் பெற்ற இவர் தேசிய

கல்வி நிறுவனத்தில் கல்வி டிப்ளோமா பட்டம் பெற்றார். இலங்கையின் பல பாகங்களிலும் ஆசிரியராகச் சேவையாற்றி பின்பு அதிபர் சேவையில் இணைந்து அதிபராகவும் பணியாற்றியுள்ளார். அத்துடன் மத்திய மாகாண விவசாய கமநல அபிவிருத்தி அமைச்சின் இணைப்பாளராகவும் பணியாற்றி 2002ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார். இவரின் அன்புப் பாரியார் மெஹ்ரூன்னிசா. இத்தம்பதியினருக்கு பாத்திமா மெஹ்ரூசியா, வசிம் அக்ரம், மின்னதுல் நுஸ்கியா, அம்ஜத்கான் ஆகிய 4 அன்புச் செல்வங்களுளர்.

பாடசாலையில் கற்கும் காலங்களில் இருந்தே இலக்கியத்துறையிலும், வாசிப்புத்துறையிலும் இவருக்கு அதிக ஆர்வம் காணப்பட்டது.அக்காலகட்டங்களில் இந்தியாவில் இருந்து வெளிவரும் ஆனந்த விகடன், குமுதம், கலைமகள், கல்கி போன்ற சஞ்சிகைகளை இடைவிடாது வாசிக்கும் பழக்கம் இருந்தது. இந்த ஆர்வத்தின் விளைவாக கற்கும் காலங்களிலே சிறிய கதைகளையும் பாடல்களையும் எழுத ஆரம்பித்தார். இருப்பினும் இத்துறையில் இவரை ஊக்குவித்து வழிநடத்தக் கூடிய ஒருவரும் இருக்கவில்லை. இந்நிலையில் தனது இயற்கையான ஆற்றலை வெளிப்படுத்தக்கூடிய வகையில் கொல்லிப்பிசாசு எனும் தலைப்பில் சிறிய ஆக்கம் ஒன்றை எழுதி மணிக்குரலுக்கு அனுப்பி வைத்துள்ளார். இந்தக்கதை 1965ஆம் ஆண்டில் மணிக்குரலில் பிரசுரமானது. இதைத் தொடர்ந்து மேலும் பல ஆக்கங்கள் மணிக்குரலிலும் தினகரன் சிறுவர் மலரிலும் பிரசுரமாகின.

பின்பு தொழில் ரீதியான நெருக்கடிகள் ஏற்பட்டதினாலும் குடும்ப வாழ்வில் சுமைகள் காரணமாகவும் படைப்பிலக்கியத் துறையில் இவர் ஈடுபடவில்லை இருப்பினும் கல்வி சார் ஆக்கங்கள், பொதுஅறிவு சார் ஆக்கங்கள், அரசியல் பொருளாதாரம் தொடர்பான கட்டுரைகள் போன்றவற்றை நூற்றுக்கு மேல் எழுதியுள்ளார். இவரின் இத்தகைய ஆக்கங்கள் தினகரன், தினபதி, சிந்தாமணி, வீரகேசரி போன்ற பத்திரிகைகளில் அவ்வப்போது பிரசுரமாகியுள்ளன.

இதுவரை எஸ். எல். எம் மஹ்ரூப் அவர்கள் 13 நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இந்தப் 13 நூல்களில் அனேகமானவை பொதுஅறிவு சார் நூல்களாகும். இவரது நூல்கள் பல பதிப்புகளைக் கண்டுள்ளன.

இவர் எழுதியுள்ள நூல்கள் வருமாறு:

01. அறிந்தவற்றை அளந்து கொள்ள பொதுஅறிவுச்சுடர்(1992)
02. பொது அறிவுச்சுடர் (1993)
03. புதிய பொதுஅறிவுச்சுடர் (1995)
04. சுடர் வினாத் தொகுதி (1997)
05. ஓவியக்கலைச் சுடா (1998, 2000, 2003)
06. பொது அறிவுச் சுடரின் கரண்ட் எப்பயார்ஸ் (1999)
07. புதிய பொது அறிவுச்சுடர் (2003)
08. பொது அறிவுச் சுடரில் கரண்ட் எப்பயார்ஸ் (2005)
09. நவீன பொது அறிவுக் களஞ்சியம் (2006)
10. பொது அறிவுக் களஞ்சியம் (2006)
11. நவீன பொது அறிவுச்சுடர் (2007)
12. புதிய திருத்திய ஓவியக்கலைச் சுடர்




இவரின் இத்தகைய சேவைகளைக் கருத்திற் கொண்டு 1999ம் ஆண்டு மத்திய மாகாண சபையின் இஸ்லாமிய சாகித்திய விழாவில் கலைச்சுடர் ஆளுநர் விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

2009ம் ஆண்டு ஸ்ரீலங்கா அரசு இவருக்கு கலாபூஷணம் விருது வழங்கி கௌரவித்தது.

இவரின் முகவரி.

S.L.M. Maharoof
132.Daulagla
Dumppallanga.
Handessa. - 20480
T.P. 0812 316484

# செல்லத்தம்பி மகேஸ்



பதிவு

**350**

**எழுத்துத்துறை**

இலங்கையில் வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், ஊகாவற்துறை தேர்தல் தொகுதியில் நெடுந்தீவு கிழக்கு கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த செல்லத்தம்பி மகேஸ் ஒரு கவிஞரும், எழுத்தாளருமாவார். இவர் நெடுந்தீவு மகேஸ், செ. மகேந்திரன், வேதா மகேஸ், செல்ல மகேந்திரன், உமாபாரதி, மாவுறையூரான், மாவுறையூர் மகேந்திரன் போன்ற புனைப் பெயர்களில் எழுதிவருகின்றார்.

1943ஆம் ஆண்டு ஜுலை மாதம் 30ஆம் திகதி நெடுந்தீவைச் சேர்ந்த தில்லையம்பலம் செல்லத்தம்பி, செல்லத்தம்பி நாகம்மாள் தம்பதியினரின் புதல்வராகப் பிறந்த மகேஸ் நெடுந்தீவு அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை, நெடுந்தீவு மகா வித்தியாலயம் ஆகியவற்றில் தனது பாடசாலைக் கல்வியினைத் தொடர்ந்தார். ஆசிரியராக நியமனம் பெற்று யாழ்ப்பாணம் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்ற இவர், ஆசிரியராகவும், ஆசிரிய ஆலோசகராகவும், உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் தனது சேவையினை மேற்கொண்டு 2003ஆம் ஆண்டில் ஓய்வுபெற்றார்.

ஆரம்பக் கல்வித்துறையில் இவர் மிகவும் ஈடுபாடு கொண்டுள்ளமையினால் தற்போது வடக்கு கிழக்கு மாகாணங்களில் அடிப்படைக் கல்வித்துறை அலகில் ஆரம்பக் கல்வி பாடநிபுணராக கடமை வகிக்கின்றார். ஆரம்பக் கல்வி ஆசிரியர்களின் வாண்மை விருத்திற்கான பயிற்சிகளையும், வழிகாட்டல்களையும் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றார்.

தொழில் நிமித்தமாக தற்போது திருகோணமலையில் வசித்துவரும் இவர், சோமசுந்தரம் வேதநாயகியின் அன்புக் கணவராவார். இவரும் இளைப்பாரிய ஆசிரியையாவார். இத் தம்பதியினருக்கு மைதிலி தேவராஜா, மகேஸ் பார்திபன், மகேஸ் பிரதீபன், கேமமால்தி பொன்னம்பலம், மா. உமாபாரதி ஆகிய அன்புச் செல்வங்களுளர்.

தான் கற்கும் காலத்திலிருந்தே எழுத்துத்துறையில் ஆர்வம் காட்டிவந்த இவரின் கன்னிக் கவிதை "சிங்காரச் சிட்டை" எனும் தலைப்பில் 1960ஆம் ஆண்டு ஈழநாட்டில் பிரசுரமானது. ஆரம்ப காலங்களில் கவிதைகள் எழுதுவதிலே அதிகளவு ஆர்வத்தைக் காட்டி வந்தார். 1960ஆம் ஆண்டுகளின் முன்னரைப் பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட இவரது கவிதைகள் இலங்கையிலிருந்து வெளிவரும் தேசிய பத்திரிகைகளிலும், நாளிதழ்களிலும், சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன.

1968, 1969 காலப் பகுதியில் தினபதி நாளிதழ் "தினம் ஒரு கதை" எனும் தலைப்பின் கீழ் இளம் எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தி வந்தது. 1969ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தினபதி "தினம் ஒரு கதை"க் களத்தில் இவரது "ஊமை" எனும் சிறுகதை பிரசுரமானது.

இதைத் தொடர்ந்து சிறுகதைத் துறையிலும் கூடிய ஆர்வத்தைக் காட்டி வந்தார். இவ்வாறாக 500க்கும் மேற்பட்ட கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் என்பன இவரால் எழுதி பிரசுரமாகியுள்ளன. இவரின் இத்தகைய ஆக்கங்கள் தினபதி, வீரகேசரி, ஈழநாடு, நவமணி, தினக்குரல் போன்ற தேசிய

பத்திரிகைகளிலும், பிரதேச சஞ்சிகைகளிலும், நினைவு மலர் களிலும் அவ்வப்போது வெளிவந்துள்ளன. இன்னும் தொடர்ந்தும் இவர் எழுதிவருகின்றார்.

1990ஆம் ஆண்டில் "கலையாகும் கடதாசி" எனும் செயல் நூலொன்றினை சிறுவர்களின் ஆக்கத்திறனை விருத்தி செய்யும் நோக்கில் இவர் எழுதி வெளியிட்டார். இவரது 02வது நூல் "மனிதத்தைத் தேடி" எனும் தலைப்பிலான கவிதை நூலாகும். இந்நூல் 2003ஆம் ஆண்டில் வெளிவந்தது. இந்நூ லின் முகவுரையில் நெடுந்தீவு மகேஸ் பின்வருமாறு குறிப்பிட்டி ருந்தார்.

"கவிதை ஓர் ஆயுதம் என்பதை நான் உணர்ந்து கொண்டபோது அதன் வலிமையை நான் பெற்றுக் கொண்டேன். கவிதை என்னுள் உயிர்ப்போடு விளைந்தபோது துயரங்களை மறந்தேன். தொடரும் வெற்றிகளுக்கு வலிமை சேர்த்தேன். பத்திரி கைகள் என் கவிதைகளைப் பிரசுரித்தபோது நான் மகிழ்ந்திருந் தேன். காலத்திற்குக் காலம் என் கவிதைகள் அரங்கேறியபோது நான் ஆனந்தித்தேன். இன்று புத்தகம் போட அவற்றைத் தேடியபோது கண்டடையாது ஏமாந்தேன். உள்ளம் நொந்தேன். நான் சேர்த்து வைத்த அக்கவிதைச் செல்வம் போரினாலும், இடப்பெயர்வு களாலும் அழிந்து போனதை எண்ணி வேதனைப்பட்டேன்.

புத்தகம் போடுதல் என்பது எத்துனை கடினமானது என்பதை எண்ணி எண்ணியே இத்தனை நாட்களும் அதற்கென முயலாதிருந்தமையால் ஏற்பட்ட இழப்பு மிகப் பெரிதானபோது என் வேதனை எல்லை கடந்தது. எங்கெங்கோ தேடி எனது ஆக்கங்கள் சிலவற்றைக் கண்டெடுத்தபோது "புத்தகம் போடு" என்று என்னை ஊக்கிய என் நண்பர், எழுத்தாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர் ந. அனந்தராஜ் அவர்களை என்னால் மறக்க முடியாது.ஏனெனில் இப்புத்தகத்துள்ளும் அவரின் ஆளுமை மிகு தோற்றம் பொலிந்து தெரிவதாக உணருகிறேன்.

நெடுந்தீவு மகேஸின் இத்தகைய ஆதங்கம் அவருக்கு மட்டும் உரித்தான தல்ல. இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவிய

லாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு தொடர்பாக கடந்த எட்டாண் டுகளாக பல்வேறு மட்டங்களிலான ஆய்வுகளை நான் நிகழ்த்தி வருவதிலிருந்து எமது பல எழுத்தாளர்கள் தமது பிரசுர படைப் புகளை இழந்திருக்கும் வேதனை நிலையை நன்கு அவதானிக்க முடிந்தது.

குறிப்பாக சூறாவளி, சுனாமி, வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்கள் வடக்கு, கிழக்கில் ஏற்பட்டுவந்த முப்பதாண்டு கால யுத்த நிலைமைகள், இதனால் ஏற்பட்ட இடப்பெயர்வுகள் எழுத்தாளர்களின் அத்திவாரத்தையே தகர்த்துவிட்டது என்றாலும் பிழையாகாது. இது விடயமாக நான் பல இடங்களில் எழுத் தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரங்கள் பதிவாக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றி குறிப்பிட்டுள்ளேன். தற்போதைய நிலை குறிப்பாக வடபுலத்தை பொறுத்தமட்டில் இது மிகமிக முக்கியமானதும், அவசியமானதும் ஒன்றாகும்.

நெடுந்தீவு மகேஸ் தற்போது "தாரணி ஓர் ஆச்சரியக் குறி" எனும் சிறுகதைத் தொகுதியினை ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கான நோக்கில் அச்சிட்டுள்ளார்.

இவரது சிறுகதைகளில் சமகால நிகழ்வுகள் படம் பிடித்துக் காட்டப்படுவதுடன், தான் எடுத்துக் கொண்ட விடயத்தை கருத்துச் செறிவுடையதாக எழுதவேண்டும் என்பதில் இவர் கூடிய கரிசனை காட்டி வருவதை அவதானிக்க முடிகின் றது.

ஆரம்ப வகுப்பு மாணவர்களின் மொழித்திறனை வளப் படுத்தும் பல்வேறு கற்பித்தல் உக்திகளை இவர் அறிமுகம் செய்து வருகின்றார். இதன் காரணமாக புலம்பெயர்ந்த தமிழ் மாணவர்களின் கற்றல் தொடர்பில் ஜேர்மனி, நோர்வே, டென் மார்க், பிரான்ஸ், ஒல்லாந்து, இத்தாலி ஆகிய நாடுகளில் தமிழ் கற்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மகேஸ் பழக இனியவர். மிகுந்த பண்பாளர். போதனை யோடு அமையாது சாதனையிலும் வெளிப்படுத்தி மகிழ்வு கொள்பவர். இவரால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் மிகுந்த அவதானத்துடன் திட்டமிடப்படுபவை. ஆழ்ந்த ஈடுபாட்டுடன் அவற்றில் ஒன்றிக் கலந்து அனுபவத்தையும் உழைத்து வெளியிடுவதால் இவரின் படைப்புகளில் ஒரு பூரணத்துவத்தைக் காணமுடிகின்றது. இந்த அடிப்படையிலேயே "மனிதத்தைத்தேடி" எனும் சிறுகதைத் தொகுப்பு 2003ஆம் ஆண்டில் வடக்கு, கிழக்கு கலாசார அமைச்சின் இலக்கிய விருதினைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

தனது இலக்கியத்துறைக்கு காரணமாக இருந்தவர்கள் என்ற வகையில் திரு. எஸ். சுபாரத்தினம், சசிபாரதி (ஈழநாடு வாரமலர் ஆசிரியர்), திரு. எஸ்.டி. சிவநாயகம் (தினபதி, சிந்தாமணி முன்னாள் ஆசிரியர்), திரு. கே.ஏ. சுப்பிரமணியம் (இடதுசாரி முன்னணி உறுப்பினர்) காரைநகர் ஆகியோரை இன்றும் அன்புடன் நினைவு கூர்ந்துவரும் இவரின் நிரந்தர முகவரி: 249/1, நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் ஆகும். தொழில் நிமித்தமான இவரது தற்காலிக முகவரி:

**S. MAHESH,**
**9/33, VIHARA ROAD ,**
**TRINCOMALEE.**



*பின்னிணைப்பு*

# அரசியலால் பந்தாடப்பட்ட இலக்கியவிழா.

## - த. ஜெயபாலன் -

சிந்தனைவட்டத்தின் 300வது நூலும், கலாபூஷணம் புன்னியாமீனின் 150வது நூலுமான "இவர்கள் நம்மவர்கள் - பாகம் 04" வெளியீட்டுவிழாவும், திருமதி மஸீதா புன்னியாமீனின் "மூடுதிரை" சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவும், மூத்த எழுத்தாளர்கள் கௌரவிப்பு விழாவும் என முப்பெரும் விழா 2008.12.28 ஆந் திகதி உடத்தலவின்னை, க. ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரியில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியான வேளையில் சில அரசியல் காரணங்கள் நிமித்தமாக கல்லூரி அதிபரின் வேண்டுகோளின் படி இவ்விழாவினை உடத்தலவின்னை க. ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் நடத்த முடியாமல் போனது. இது குறித்து 2008.12.27ஆந் திகதி: பிரித்தானியாவிலிருந்து இயங்கும் தேசம்நெற் இணையத்தளத்தில் திரு. த. ஜெயபாலன் அவர்களால் எழுதப்பட்ட கட்டுரையும், அக்கட்டுரைக் குறித்து பின்னூட்டமாக வெளிவந்த குறிப்புகளும் இத்துடன் ஒரு பதிவுக்காக இணைக்கப்படுகின்றன. இக்கட்டுரை பல சர்வதேச இணையங்களில் மறுபிரசுரமாகியமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் தமிழ்மொழி நூல்கள் ஒப்பீட்டளவில் வெளி வருவது மிகவும் குறைவு. குறிப்பாக இலங்கையில் யுத்த சூழ்நிலை கள் காணப்படும் நிலையில் தமிழ்மொழி மூல நூல்கள் வெளிவரு வதற்கான சூழ்நிலைகளும் மிகவும் குறைவு. இந்நிலையில் பல் வேறுபட்ட பிரச்சினைகளுக்கும், சவால்களுக்கும் மத்தியில் சிந்தனை வட்டம் 300 நூல்களை வெளியிட்டுள்ளது. சிந்தனைவட்டத்தின் இந்த 300வது நூலினை வெளியிடுவதற்காக செய்யப்பட்டிருந்த ஏற்பாட்டு நடவடிக்கைகளை அரசியல் பந்தாடிய நிகழ்வொன்று இடம் பெற்றுள்ளது.

சிந்தனைவட்டத்தின் 300வது நூலும், எழுத்தாளர் பீ.எம். புன்னியாமீனால் எழுதப்பட்ட 150வது நூலுமான ''இவர்கள் நம்ம வர்கள்'' பாகம் 04 எனும் நூலின் வெளியீட்டுவிழா அவரின் பிறந்த கமான உடத்தலவின்னை மடிகே எனும் கிராமத்தில் ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரி அஷ்ரப் ஞாபகார்த்த கேட்போர் கூடத் தில் 28.12.2008 நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள் ளப்பட்டு இருந்தது. இதற்கான ஏற்பாடுகள் சுமார் இரு மாத காலங்களாக மிகவும் திட்டமிடப்பட்டு பிரமாண்டமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வந்த நேரத்தில் கடந்த (2008.டிசம்பர்) 21இல் திடீர் என இவ்விழாவினை ஒத்திப் போடும்படி கல்லூரி அதிபர் திரு எம்.ஜீ. நிலாப்தீன் அவர்கள் கேட்டிருக்கின்றார். காரணம் உல்லாசப் பிரயாணத்துறை பிரதி அமைச்சர் பைஸர் முஸ்தபாவின் திடீர் கூட்டமொன்றை அதே மண்டபத்தில் நடத்த வேண்டியிருப் பதாலேயே ஏற்கனவே திட்டமிடப்பட்டு ஒழுங்குசெய்யப்பட்டிருந்த இலக்கிய கூட்டத்தைப் பின்போடுமாறு கேட்கப்பட்டிருக்கின்றது. இதனால் விழா ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்த சிந்தனை வட்டத்தினர் பல்வேறு சிரமங்களுக்கு உட்பட்டுள்ளனர்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் தமிழ்மொழி மூலமாக 300வது நூல் வெளியிடப்படுவதென்பது முக்கியத்துவம்மிக்க ஒரு விடயம். மேலும், ஒரு எழுத்தாளன் தனது நூலை வெளியிடுவதென்பது ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கும் மகிழ்ச்சிக்கு உரியது. இவை எதனையும் கருத்திற்கொள்ளாது இந்த விழாவினை குழப்பும் முகமாக அமைச்சர் பைஸர் முஸ்தபாவின் கூட்டத்துக்கு முன்னு ரிமை வழங்கப்பட்ட நிகழ்வு வன்மையான கண்டனத்திற்குரியது.

இவ்விழா நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு கிராமத்திலாகும். மத்திய மாகாண சபை கலைக்கப்பட்டு மத்திய மாகாண சபைக்கான நியமனப்பத்திரங்கள் இம்மாதம் (2008.டிசம்பர்) 24ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் ஒரு நிலையிலேயே இத்தகைய ஒரு நிகழ்வு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அரசியல் அடிப்படையில் அமைந்த திட்டமிட்ட ஒரு நடவடிக்கையாகவே இது பார்க்கப்பட வேண்டியுள்ளது.

அழைப்பிதழ்களும் அனுப்பப்பட்ட நிலையில் தனது ஆரம்ப ஏற்பாடுகள் முழுவதையும் மாற்றியமைத்து இவ்விழா 28.12.2008இல் வத்தேகெதர முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இவ்விழாவில் 'ஞாயிறு தினக்குரல்' பத்திரிகையின் ஆசிரியர் திருவாளர் பாரதி இராஜநாயகம் பிரதம அதிதியாக கலந்துகொள்ளவுள்ளார். மத்திய வங்கியின் ஓய்வு பெற்ற உத்தியோகஸ்தரும், உளவளத் துணையாளரும், உளவியலாளருமான அல்ஹாஜ் யூ.எல். நௌபர் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி விழாவில் ஞானம் பத்திரிகையின் ஆசிரியர் திருவாளர் ஞானசேகரன், மூத்த எழுத்தாளரும், பன்னூலாசிரியருமான மட்டக்களப்பைச் சேர்ந்த இராசையா நாகலிங்கம் (அன்புமணி), மட்டக்களப்பு ஏறாவூரைச் சேர்ந்த பிரபல எழுத்தாளரும், கவிஞருமான அனலக்தர், இலங்கையில் பிரபலமான தமிழ், சிங்கள மொழிபெயர்ப்பாளரும், கல்விமானும், சுமார் 20 நூல்களை தமிழிலிருந்து சிங்களத்திற்கும், சிங்களத்திலிருந்து தமிழிற்கும் மொழிபெயர்த்த மடுளுகிரிய விஜயரத்ன மற்றும் மூத்த ஆசிரியர் ஐ. ஹாஜிதீன் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இவ்விழாவில் எந்தவொரு அரசியல்வாதியும் அழைக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வெளியீட்டு விழாவில் ஏற்பட்ட குழப்பம் தொடர்பாக எழுத்தாளர் பி.எம். புன்னியாமீன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"...இலங்கையைப் பொறுத்தமட்டில் 300 தமிழ் நூல்களை வெளியிடுவதும், தனிப்பட்ட முறையில் 150 நூல்களை எழுதி

வெளியிடுவதும் ஒரு சாதனைக்குரிய விடயமாக இருந்த போதிலும் கூட, சாதாரண மக்களின் பார்வையில் இது ஒரு வெறும் எண்ணிக் கை மாத்திரம் தான் என்பதை நன்கு உணர்த்துவதைப் போல 300வது நூல் வெளியீட்டு விழா நிகழ்வுகள் அமைந்துவிட்டமை மன வேதனையைத் தருகின்றது. ஒரு காலத்தில் சிந்தனை வட்டப் பதிவுகள் பற்றியும், எனது நூல்கள் பற்றியும் ஆய்வுக்குட்படுத்தும் ஆய்வாளர்களுக்கு இக்குறிப்புகள் பயனுள்ளமையாக அமையலாம் என்பதால் இவ்விபரங்கள் தரப்படுகின்றன.

சிந்தனைவட்டத்தின் இந்த 300வது நூலான தனிப்பட்ட முறையில் என்னால் எழுதப்பட்ட 150வது நூலையும், என் மனைவி திருமதி மஸீதா புன்னியாமீனால் எழுதப்பட்ட ''மூடுதிரை'' சிறுக தைத் தொகுதியினையும் 2008 நவம்பர் 11ஆந் திகதி வெளியிடு வதற்காக நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தேன். தவிர்க்க முடியாத காரணங்களினாலும், குறிப்பாக நாட்டின் பாதுகாப்பு காரணங்களினால் அத்திகதியை பின்போட வேண்டி ஏற்பட்டது.

ஆரம்பத்தில் இவ்விரு நூல்களையும் கண்டி ஸ்ரீபுஸ்பதான மண்டபத்தில் வெளியிடுவதற்கான ஏற்பாடுகளே மேற்கொள்ளப்பட் டன. ஆனால், என்னுடைய உடத்தலவின்னை கிராமத்தைச் சேர்ந்த சில நண்பர்களினது அன்பான வேண்டுகோளுக்கிணங்க இதற்கு முந்திய இலக்கியக் கூட்டங்களில் போன்று, இம்முறையும் இன்னும் சில பிரபலமான இலக்கியவாதிகளிடையே உடத்தலவின்னைக் கிராமத்தின் பெயரையும், புகழையும் இனம் காட்ட, உடத்தல வின்னைக் கிராமத்திலேயே இந்நூல்களை வெளியிட வேண்டும் என்ற முடிவில், இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொண்டேன்.

2008 நவம்பர் மாதம் 16ஆந் திகதி உடத்தலவின்னை க. ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரி அதிபருடன் தொடர்பு கொண்டு அதற்கான உத்தியோகபூர்வ அனுமதியையும் பெற்று இவ் விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்துவந்தேன். என் மனைவி மஸீதா புன்னியாமீன் உடத்தலவின்னை க. ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரியில் கற்பிப்பவர். கல்லூரி முன்னேற் றம் கருதிய பல செயற்பாடுகளில் முன்னின்று ஒத்துழைப்பவர். எனவே, விழாவை கண்டியில் நடத்துவதைவிட தான் கற்பிக்கும் பாடசாலையில் நடைபெறுவதையே பெரிதும் விரும்பினார்.

சிந்தனைவட்டத்தின் 200வது புத்தக வெளியீட்டின்போது ஹோட்டல் அமைப்பில் மண்டபத்தை ஒழுங்கு செய்து முழு நாள் விழாவாக அவ்விழாவினை நான் மேற்கொண்டேன். அதேபோன்ற அமைப்பினை இவ்விழாவிலும் நிகழ்த்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தேன். விழாபற்றி தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் செய்திகளும் வெளிவந்தன. இவ்விழாவில் இலங்கையில் பிரபல்யமிக்க சில பிரமுகர்களை கௌரவிக்கவும் திட்டமிட்டிருந் தேன். இவ்வாறு சகல ஏற்பாடுகளும் நிறைவடைந்த தருணத்தில் கடந்த 2008.12.19ஆந் திகதி வெள்ளிக்கிழமை இரவு உடத்தலவின் னையில் செயற்பட்டுவரும் ஐக்கிய சகோதரத்துவக் கூட்டமைப்பு (UBA) பிரதிநிதி ஒருவர் என்னை சந்தித்தார்.

எமது கிராமத்தின் முன்னேற்றம் கருதி உடத்தலவின்னை யில் செயற்பட்டுவரும் ஐக்கிய சகோதரத்துவக் கூட்டமைப்பு (UBA) பைஸர் முஸ்தபா பவுன்டேஷனுடன் இணைந்து உடத்தலவின்னை யில் தொழில்நுட்பப் பயிற்சி நிலையமொன்றை திறக்க இருப்ப தாகவும், அத்திறப்புவிழா முடிந்த பின்புகூட்டத்தை உடத்தல வின்னை க. ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரி மண்டபத்திலே நடத்த திடீர் ஏற்பாடு செய்துள்ளதாகவும் கௌரவ உல்லாசப் பிரயாணத்துறை பிரதியமைச்சர் பைஸர் முஸ்தபா அவர்கள் இவ்விழாவில் கலந்து கொள்வதினால் ஏற்கனவே ஒழுங்கு செய்யப் பட்டிருந்த சிந்தனை வட்டத்தின் 300வது நூல் வெளியீட்டு விழா வையும், மஸீதா புன்னியாமீனின் மூடுதிரை சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா மற்றும் முக்கிய பிரமுகர்களின் கௌரவிப்பு நிகழ்வையும் பிற்போடுமாறு ஐக்கிய சகோதரத்துவக் கூட்டமைப்பு (UBA) விரும்புவதாகவும் அவர் என்னிடம் கூறினார்.

உடத்தலவின்னை ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரி அதிபர் ஏற்கனவே 2008.12.05ஆந் திகதி பாடசாலை காலைக் கூட்டத்தில் தனது கல்லூரி ஆசிரியை மஸீதா புன்னியாமீனின் நூல் வெளியீட்டு விழா பற்றி மாணவர்களுக்கு அறிவித்தல் விடுத்த தையும், விழா தொடர்பான சகல ஏற்பாடுகளை நிறைவு செய்திருந்ததையும் ஆதாரபூர்வமாக அவருக்கு எடுத்துக் காட்டிய துடன் சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளமையினால் எனக்கு விழாவை பின்போட முடியாதென்றும் கிராமத்தின் முன்னேற்றம்

கருதிய எந்த நடவடிக்கைக்கும் நான் தடைக்கல்லாக இருக்க மாட்டேன் என்றும் அவ்வாறே அவசியம் தேவைப்படின் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளை மாற்றம் செய்யாது இடத்தை மாற்றிக் கொள்வதாகவும் நான் அவரிடம் எடுத்துக் கூறினேன். இலக்கிய வரலாற்று முக்கியத்துவமிக்க ஒரு நிகழ்வு இது என்றும், இவ்விழா வுக்கான அனைத்துப் பிரமுகர்களுக்கும், ஊடகங்களுக்கும் அழைப்பிதழ் அனுப்பப்பட்டு விட்டதாகவும் அவரிடம் கூறினேன். பின்பு இது விடயமாக கல்லூரி அதிபருடன் தொடர்பு கொண்ட போது அதிபர் அவர்கள் என்னுடைய நிகழ்வு ஏற்கனவே திட்டமிடப் பட்டிருந்தமையினால் அதில் மாற்றம் செய்யத் தேவையில்லை யென குறிப்பிட்டார்.

2008.12.21ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 8.45 மணிய ளவில் கல்லூரி அதிபர் என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஐக்கிய சகோதரத்துவ கூட்டமைப்பின் சில முக்கியஸ் தர்கள் அமைச்சர் பைஸர் முஸ்தபாவின் விழா பாடசாலையி லேயே நடைபெற வேண்டுமெனவும், கல்லூரி மண்டபத்தைத் தராவிட்டால் அமைச்சர் பைஸர் முஸ்தபாவின் கூட்டத்தை பாதை யில் நடத்துவதற்கு முடிவு செய்திருப்பதாகவும் தெரிவித்தார். அவ்வாறு நடைபெறும் பட்சத்தில் தனக்கும், தனது கல்லூரிக்கும் இழுக்கு ஏற்படும் என கருதுவதாக அவர் கருத்துக்களிலிருந்து எனக்குப் புலப்பட்டது.

இதனால் என்னுடைய சகல ஏற்பாடுகளையும் மாற்றி எனது கிராமத்தை அண்மித்த வத்தேகெதர கிராமத்தில் இந்த விழா வினை நடத்த வேண்டியேற்பட்டது.

என்னால் எழுதப்பட்ட 100வது புத்தகம் ஜெர்மனி - பேர்க் நகரில் தமிழ் எழுத்தாளர் சங்கத்தினரால் மிகப் பிரமாண்டமான முறையில் வெளியிட்டு வைக்கப்பட்டது. ஆனால், என்னுடைய 150வது நூலை எனது சொந்த செலவில் எனது கிராமத்தில் வெளியிட ஆசைப்பட்டு, சகல ஏற்பாடுகளையும் புரிந்த பின்பும் அதற்கான வாய்ப்பு கிட்டாமை உண்மையிலேயே மன வேதனைப்படக்கூடிய ஒரு விடயமே..” என எழுத்தாளர் பீ.எம். புன்னியாமீன் வேதனையு டன் தன் உணர்வைப் பகிர்ந்து கொண்டார். மேலும் கருத்துத்

தெரிவித்த அவர் ''...தற்போது 300, 150 என்பது என்னைப் பொறுத்த மட்டில் ஒரு இலக்கமாக மாத்திரமே தென்படுகின்றது. இதில் சந்தோஷப்படவோ, சாதனையாக குறிப்பிட்டுக் கூறக் கூடியதா கவோ ஒன்றுமில்லை..." எனவும் குறிப்பிட்டார்.

உண்மையிலேயே அரசியல் அடிப்படையில் அதிலும் குறிப் பாக இது தேர்தல் காலமாகையால் இது திட்டமிட்ட நடவடிக்கை என்றே வெளிப்படையாக எனக்குத் தோன்றுகின்றது. அழைப்பிதழ் களும் அனுப்பப்பட்ட நிலையில் தனது ஆரம்ப ஏற்பாடுகள் முழுவதையும் மாற்றியமைத்து இவ்விழா 28.12.2008இல் வத்தே கெதர முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மூலம்: www.thesamnet.co.uk ( Dec 27. 2008)

இக்கட்டுரை தொடர்பாக 18 பின்னூட்டங்கள் (Comments) தேசம்நெற் இல் பிரசுரமாகியிருந்தன. அச்சு ஊடகங்களைவிட இணைய ஊடகங்களில் ஒரு செய்திக்கான வாசகர் கருத்துகள் பின்னூட்டமாக இடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். இக்கட் டுரை தொடர்பான பின்னூட்டங்கள் இணையத்தில் பிரசுரமான வாறே கீழே தொகுத்துத் தரப்பட்டுள்ளன. பின்னூட்டங்களில் குறிப் பிடப்படும் நேரம் லண்டன் நேரம் என்பதை கவனத்திற் கொள்ளவும்.

1. **M.W.A. Rishab on December 27, 2008 1:23 pm**

Dear Sirs
Iam also from Udatalawinna. but live at Colombo due to employments.

The above said news (Related book launch) is one of the sad news i am being of this village citizen. I convey my deep sympathies in this regard to Mr. Puniyameen

Thanks
M.W.A. Rishab, Executive Officer
National Transport Commission

2. **iqbal on December 27, 2008 5:46 pm**

புன்னியாமீன் அவர்கள் பல்வேறு நெருடிக்களுக்கு மத்தியிலும் தன்னால் இயன்ற இலக்கியப் பணி செய்து வருகின்றார். அதுமட்டுமல்ல தமிழ் - முஸ்லிம் ஐக்கியத்திற்கும் அவருடைய பங்களிப்புகள் குறிப்பிடத்தக்கவை. அப்படிப்பட்டவருக்கு ஏன் இப்படி செய்கிறார்கள் என்று புரியவில்லை. அவருக்கு ஆதரவாக தேசம்நெட் குரல் கொடுத்திருப்பது வரவேற்கத்தக்கது.

3. **மௌலவி எஸ்.எம். ரமீஸ்தீன் on December 29, 2008 3.54 am**

28.12.2008இல் வத்தேகெதர முஸ்லிம் வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்ற சிந்தனைவட்டத்தின் 300வது நூல் வெளியீடும், புன்னியாமீன் 150வது நூல் வெளியீடும், திருமதி மஸீதா புன்னியாமீனின் 'முடுதிரை' சிறுகதைத் தொகுதி நூல் வெளியீடும், கௌரவிப்பு நிகழ்வும் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. கலாபூஷணம் புன்னியாமீன் அவர்கள் உடத்தலவின்னை மடிகே கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். உடத்தலவின்னை எனும் கிராமத்தின் புகழை தேசிய ரீதியில் மாத்திரமல்ல, சர்வதேச ரீதியிலும் பரப்ப காரணமாக இருந்தவர். இலங்கை தமிழிலக்கிய உலகிற்கு சுயமாக 150 நூல்களை தந்து ஒரு தனித்துவமான சாதனையைப் படைத்தவர். இவரின் இத்தகு சேவைகளுக்கு எமது கிராமத்தின் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

4. **அருட்செல்வன் on December 29, 2008 3.59 am**

பல்வேறுபட்ட தடைகளின் மத்தியிலும், பிரச்சினைகள் மத்தியிலும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சிந்தனைவட்டத்தின் 300வது நூல் வெளியீடும், புன்னியாமீன் 150வது நூல் வெளியீடும், திருமதி மஸீதா புன்னியாமீனின் 'முடுதிரை' சிறுகதைத் தொகுதி நூல் வெளியீடும், கௌரவிப்பு நிகழ்வும் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு 300க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் கலந்துகொண்டனர். குறிப்பாக தூர இடங்களிலிருந்து பல பார்வையாளர்களும், ஊடகவியலாளர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. இலக்கியக் கூட்டங்களுக்கு இத்தகைய மக்கள் கூட்டம் வருவது மிகவும் அரிது.

புன்னியாமீனின் பிறந்த இடமான உடத்தலவின்னையில் மறுக்கப்பட்ட இந்த இலக்கிய விழா அண்மைக் கிராம மான வத்தேகெதர எனும் கிராமத்தில் நடத்தப்பட்டது. குறுகிய காலத்துக்குள் இடம் மாற்றம் செய்யப்பட்ட இடத்தில் புதிய சூழலில் வெகு விமரிசையாக நடைபெற் றமை அனைவரையும் ஆச்சரியப்படுத்தியது. இவ்விழாவில் டாக்டர் ஞானசேகரன் அவர்களுக்கு ''இதழியல் வித்தகர்'', திருவாளர் இரா. நாகலிங்கம் (அன்பு மணி) அவர்களுக்கு ''எழுத்தியல் வித்தகர்'', திருவாளர் ரி. மீராலெவ்வை (அனலக் தர்) அவர்களுக்கு ''கவிப் புனல்'', திருவாளர் மடுளுகிரிய விஜயரத்ன அவர்களுக்கு ''பன்மொழி வித்தகர்'' எனும் கௌரவப்பட்டமும், திருவாளர் ஐ. ஹாஜிதீன் அவர்களுக்கு ''ஆசிரியச் செம்மல்'' ஆகிய பட்டங்கள் வழங்கி கௌர விக்கப்பட்டனர். ஏனைய கௌரவங்களைப் போலல்லாமல் மேடையில் எட்டுப் பிரமுகர்களும் விருது, பட்டம், பொன்னா டை, பதக்கம், அன்பளிப்புகள் என ஒவ்வொரு அதிதியையும் கௌரவித்தமை உயரிய கௌரவப்பாட்டின் வெளிப்பாடாக விருந்தது. இது தொடர்பாக தேசம்நெற் சார்பாக கௌர விக்கப்பட்ட அன்புமணி அவர்களிடம் வினவிய போது ''தன்னுடைய வாழ்நாளின் இது போன்ற மனதுக்கினிய கௌரவிப்பு நிகழ்வொன்றையும் தான் காணவில்லை'' எனத் தெரிவித்தார்.

இந்த அடிப்படையில் இதுவொரு வெற்றிவிழாவாகவே அமைந்ததென்றால் மிகையாகாது.

5. **பரீட் காத்தான்குடி on December 29, 2008 7.10am**

கிழக்கிலங்கையில் முஸ்லிம் சமூகத்தினரின் அரசியல் தலைமைத்துவம் இன்று சின்னாபின்னமான நிலையிலேயே காணப்படுகின்றது. எம்.எச்.எம். அஷ்ரபின் தலைமைத்துவத் தையடுத்து படிப்படியாக முஸ்லிம் காங்கிரஸைப் பற்றியும் மக்கள் நம்பிக்கையிழந்த வண்ணம் இருக்கின்றார்கள். இதற்கு முக்கிய காரணம் முஸ்லிம் தலைமைத்துவங்களில் காணப்படக்கூடிய சுயநலப் போக்கே.

இந்நிலையில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த படித்த வாலிபர்கள் மத்தியில் பைஸர் முஸ்தபாவைப் பற்றி ஒரு நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. ஏனெனில், அவரின் நிதானமான அணுகுமுறைகளும், அவரின் ஆளுமையும் இந்த நிலையை உருவாக்கியிருக்கலாம். பைஸர் முஸ்தபாவை ஒரு கட்சியின் பிரதிநிதியாக நோக்காமல் முஸ்லிம் சமூகத் தின் ஒரு தலைமைத்துவமாக நோக்கக் கூடிய நிலை படிப்படியாக படித்த வாலிபர்கள் மத்தியில் ஏற்பட்டு வந்தமை ஓர் இயல்பான உறவின் வெளிப்பாடாக இருந்தது என்றால் பிழையாகாது.

இப்படிப்பட்ட நிலையில் தான் கூட்டமொன்றுக்காக ஏற்க னவே திட்டமிட்ட ஒரு இலக்கிய கூட்டத்தை நிறுத்த முற்பட்ட செயற்பாடு உண்மையிலேயே அவரும் சுய நலப் போக்குமிக்கவரே என்பதை எடுத்துக்காட்டுகின்றது. இந்த அடிப்படையில் பைஸர் முஸ்தபாவும் ஏனைய முஸ்லிம் அரசியல்வாதிகளைப் போலவே நடந்து கொண்டமை வேதனையைத் தருகின்றது. ஆக, முஸ் லிம்களைப் பொறுத்தமட்டில் எதிர்காலத்தில் அரசியல் தலைமைத்துவம் என்பது சுயநலமிக்க தலைமைத்து வங்களாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

6. **Kamal on December 29, 2008 11:18 am**

இலங்கை இராணுவம் புலிகளை நோக்கி முன்னேற தெற்குப் பகுதியில் தமிழர் மீதான புறக்கணிப்புகள் இனதுவேசங்கள் பல கோணங்களிலும் வெளிப்படுகின் றது. அரசாங்க உத்தியோகங்களில் உள்ளவர்களுக்கு கிடைக்கவிருந்த பதவி உயர்வுகள் திட்டமிட்டு தவிர்க் கப்பட்டு சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. சம்பள உயர்வுகள் கூட இனி கிடைக்கச் சந்தரப்பமில்லை என்கிறார்கள். இப்படியானதொரு காலகட்டத்தில் நடை பெறவிருந்த நூல் வெளியீட்டு விழாவும் தடைப்பட்ட போது காரணங்கள் இது போன்றதோ என எண்ணினேன். எனினும் இவ்விலக்கிய விழா சிறப்பாக நிறைவு பெற்ற செய்தி மனநிறைவைத் தருகின்றது. புன்னியாமீனுக்கு எமது வாழ்த்துக்கள்.

7. அருட்செல்வன் on December 30, 2008 2:06 am

கடந்த 28ஆம் திகதி உடத்தலவின்னை மடிகே கிராமத்தில் நடைபெற ஏற்பாடு செய்திருந்த புன்னியாமீனின் இலக்கிய விழாவை கிராமத்தின் அபிவிருத்தி எனும் நோக்கில் (யு.பி.ஏ) நிறுத்த ஏற்பாடு செய்தது. ஆனால், நிறுத்தப்பட்ட இலக்கிய விழா அண்மைய கிராமத்தில் வெகு விமரிசை யாக நடைபெற்றது. இலக்கிய கூட்டம் நடைபெறவிருந்த நேரத்தில் சடுதியாக ஏற்பாடு செய்யப்பட்ட பைஸர் முஸ்தபாவின் கூட்டத்தில் பைஸர் முஸ்தபா நிகழ்த்திய பிரதான உரையின் சாரம் வருமாறு:

''மத்திய மாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம்கள் தமது எதிர்காலத்தைக் கவனத்தில் கொண்டு வாக்களிக்க வேண்டும். எதிர்க்கட்சிகளுக்கு வாக்களிப்பதன் மூலம் இன்றைய அரசை மாற்றிவிட முடியாது. ஆளும் கட்சிக்கு வாக்களித்தால் மாத்திரமே அபிவிருத்திப் பணிகளையும், கல்வித்துறையையும் அபிவிருத்தி செய்ய முடியும். எனவே, முஸ்லிம்கள் அரசுடன் இணைந்து, ஆதரவளித்து தங்க ளது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்..''

8. பரீட் காத்தான்குடி on December 30, 2008 10:31am

//மத்திய மாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம்கள் தமது எதிர்காலத்தைக் கவனத்தில் கொண்டு வாக்களிக்க வேண்டும். எதிர்க்கட்சிகளுக்கு வாக்களிப்பதன் மூலம் இன்றைய அரசை மாற்றிவிட முடியாது. ஆளும் கட்சிக்கு வாக்களித்தால் மாத்திரமே அபிவிருத்தி பணிகளையும், கல்வித்துறையையும் அபிவிருத்தி செய்ய முடியும்.//
இது அரசியல் அல்லாமல் வேறு என்ன?

9. பாத்திமா on December 30, 2008 3:16 am

சிந்தனைவட்டத்தின் 300வது நூலும், எழுத்தாளர் பி.எம். புன்னியாமீனால் எழுதப்பட்ட 150வது நூலுமான 'இவர்கள்

நம்மவர்கள் 04 உடத்தலவின்னைக் கிராமத்தில் வெளியிட இடம் வழங்கப்படாமை வேதனையே. இருப்பினும், அண்மைக் கிராமத்திற்கு மாற்றப்பட்ட விழாவிற்கு ஊரவர் களும், ஆசிரியர்களும், பெரியார்களும் கலந்து சிறப்பித் தமை ஆசிரியர்களான புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன் ஆகியோரின் சேவைகளுக்கு கிடைத்த வெற்றியாகவே கருத வேண்டியுள்ளது. இவர்களது இலக்கியப் பயணம் தொடர பழைய மாணவிகளான நாம் வாழ்த்துகிறோம்.

10. சந்திரன் கௌரி - on December 31, 2008 2.25am

சிந்தனைவட்டத்தின் 300வது நூல் வெளியீடும், பி.எம். புன்னியாமீனால் எழுதப்பட்ட 150வது நூலுமான 'இவர்கள் நம்மவர்கள்' பாகம் 04 நூலின் வெளியீட்டு விழாவும், திருமதி மஸீதா புன்னியாமீனின் 'மூடுதிரை' எனும் சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டுவிழாவும், கௌரவிப்பு நிகழ்வு சிறப்பாக நடைபெற்றதாக தேசம் நெற் மூலமாகவும், ஏனைய ஊடகங்கள் மூலமாகவும் அறிந்தேன். உண்மையிலேயே மகிழ்ச்சி. எமது ஆசிரி யப் பெருந்தகை புன்னியாமீன் சேவைகளுக்கு எமது வாழ்த்துக்களும், பாராட்டுக்களும்.

நான் கொழும்பு ரத்மலான பகுதியில் தற்போது சட்டத் தரணியாக பணியாற்றி வருகின்றேன். புன்னியாமீன் Sir ரிடம் 1996ஆம் ஆண்டு கொழும்பு EPI கல்வி நிறுவனத்தில் நான் கற்றுள்ளேன். அக்காலகட்டங்களில் அரசியல் பாடம் போதிப்பதில் இலங்கையிலேயே முன்னணி ஆசிரியராக இவர் விளங்கினார். அவரிடம் கற்ற நூற்றுக்கணக்கானது என்பதைவிட ஆயிரக்கணக் கான மாணவர்கள் இன்று சமூகத்தின் உயர்வான நிலையில் இருக்கின்றார்கள். சட்டக் கல்லூரியில் என்னுடன் கற்ற மாணவர்களுள் அவரின் மூன்று மாணவர் இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. 2007ஆம் ஆண்டில் நான் லண்டனிலிருந்த நேரத்தில் புன்னியாமீன் Sir லண்டன் வந்திருந்தார். தமிழ் - முஸ்லிம் இன

உறவு தொடர்பான தேசம் ஏற்பாடு செய்த மகாநாட்டில் கலந்துகொள்வதற்காகவே வந்ததாக அறிந்தேன். அக்கூட்டத்தில் என்னால் கலந்துகொள்ள முடியவில்லை. இருப்பினும் ஹரேயில் அவரது மாணவர்கள் 26 பேர் அவரை சந்தித்து கௌரவித்த ஒன்றுகூடலின்போது என்னால் கலந்துகொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது.

உண்மையிலேயே புன்னியாமீன் Sir இனால் நெறிப்படுத் தப்பட்ட மாணவர்கள் என்று கூறிக்கொள்வதில் பெருமித மடைகின்றோம். அவர் கற்பித்த நேரங்களில் தனது கிராமத்தைப் பற்றி மிகப் பெருமையாகக் கதைப்பார். கிராமத்தின் நண்பர்களைப் பற்றி கதைப்பார். அவ்வாறு கதைத்த புன்னியாமீன் Sir க்கு அவரது கிராமத்தவர்கள் ஏன் இவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. உண்மையிலேயே இலங்கையைப் பொறுத்த வரையில் 150 நூல்கள் எழுதுவதென்பது இலேசான காரியமல்ல. நான் நினைக்கின்றேன். அவர் பாடநூல்க ளை எழுதியிருந்தாலும்கூட பாடநூல்களுக்குப் புறம்பாக இலக்கியம், ஆய்வுகள் என்றடிப்படையில் 70 நூல்களுக்கு மேல் எழுதியிருக்க வேண்டும். நாங்கள் கற்கும் காலத்தில் இந்தியாவில் பதிப்பிக்கப்பட்ட யாரோ எவரோ எம்மை ஆள.... எனும் சிறுகதைத் தொகுதியொன்றை அவரின் கையொப்பமிட்டு தந்தார். அப்புத்தகம் இன்னும் என்னிடம் மிகவும் பாதுகாப்பாக இருக்கின்றது.

வகுப்புகள் நடைபெறும் காலகட்டத்தில் கொட்டாஞ்சேனை யிலும், வெள்ளவத்தையிலும் ஏனைய கல்வி நிறுவனங் களின் தாக்குதல்களுக்குட்பட்ட சம்பவங்கள் எனக்கு நன்றாகத் தெரியும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலெல்லாம் அவர் சாதுர்யமாக பிரச்சினையை எதிர் நோக்கியதனால் நாளுக்குநாள் மாணவர்களின் தொகை அதிகரித்ததே தவிர குறையவில்லை. அதேநேரம், எந்தப் பிரச்சினையையும் சாதுர்யமாக எதிர்நோக்கும் அவர் எந்தப் பிரச்சினையையும் வெளிப்படுத்திக் கொள்ள மாட்டார். அவரின் இத்தகைய

போக்குகளே அவரின் வெற்றிற்குக் காரணமென கருதுகின் றேன்.

தொடரட்டும் அவர் பணிகள்.....
- சந்திரன் கௌரி -

11. **சந்திரன் கௌரி - on December 31, 2008 5.35am**

புன்னியாமீன் ஆசிரியருடைய 150வது நூல் அறிமுக விழாவினை அவரது பழைய மாணவர்களான நாம் வெகுவிரைவில் கொழும்பில் நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

12. **ashroffali on December 31, 2008 5.48am**

பீ.எம். புன்னியாமீனுக்கு நேர்ந்த அசௌகரியம் மன வருத்தத்துக்குரியதுதான். ஆனாலும் அதற்கு கொடுக் கப்படும் பிரபலம் தேவையற்றது என்பதே எனது கருத் தாகும். ஏனெனில், பிரதியமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிந்தே அவ்வாறு நடந்திருக்க மாட்டார். அடுத்தவர் மனம் புண்படாமல் நடக்கும் பக்குவம் உள்ள கண்ணிய மான ஒரு மனிதர் தான் அவர். எனவே, புன்னியாமீன் அவர்கள் இந்த விடயம் தொடர்பில் நேரடியாகவே பிரதியமைச்சர் அவர்களுடன் தொடர்பு கொண்டு கதைத்திருந்தால் பெருந்தன்மையுடன் இப்பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட்டிருக்கும்....

அடுத்ததாக அரசாங்கப் பாடசாலையொன்றில் கல்வி சம்பந்தப்படாத நிகழ்வுகளை நடாத்துவதாயின் வலயக் கல்விப்பணிப்பாளர் அல்லது அதற்கு மேல் தரத்தில் உள்ள அதிகாரிகளின் எழுத்து மூல அனுமதி பெற்றி ருக்க வேண்டும். அதற்குப் பதிலாக வெறுமனே அதிபரி டம் வாய்மூல அனுமதியைப் பெற்றால் மாத்திரம் போதுமானது என்று கருதினால் அது தவறு......அப்படியி ருக்க தமது பக்கத் தவறை ஏற்றுக்கொள்ள மறுப்பது நல்லவர்க்கு அழகல்ல.

மற்றபடி அரசாங்கப் பாடசாலைகளில் அமைச்சர்கள் கலந்து கொள்ளும் வைபவங்களுக்கே முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்பது சுற்று நிருப விதியா கும். அதைப் பற்றி ஏற்பாட்டாளர்கள் தெரியாதிருப்பின் யார் தவறு?

அந்த வகையில் நடந்திருப்பது தெரியாத்தனமாக நடந்த ஒரு சம்பவம் மட்டுமே. இரு பக்கத்திலும் தவறுகள் இருக்கவே செய்கின்றன. அப்படியான நிலையில் ஒரு பக்க நியாயத்தை மட்டும் வைத்துக்கொண்டு அதற்கு இவ்வளவு பிரபலம் கொடுக்கத் தேவையில்லை என்பதே எனது கருத்தாகும். என் கருத்து யார் மனதையாவது நோகடிக்குமாயின் அது குறித்து மன்னிப்பையும் வேண்டிக் கொள்கின்றேன்.

13. **மாற்று கருத்து தோழன் on December 31, 2008 6.41pm**

“ஆளும் கட்சிக்கு வாக்களித்தால் மாத்திரமே அபிவிருத்தி பணிகளையும் கல்வித் துறைறையும் அபிவிருத்தி செய்ய முடியும்.” எம்.எச்.எம். அஷ்ரப் காட்டிய பிழைப் பிற்கான வழியை பைஸர் முஸ்தபா தொடர்கிறார். ஆயுளுக்கும் அமைச்சராக இருக்கும் அரசியல்வாதி ஆறுமுகம் தொண்டமானிற்கே அல்வா கொடுத்தவரிடம் மிச்சத்தை கேட்கணுமா? சிறிலங்கா அரசயந்திரத்தின் நிர்வாக நடைமுறை அவலத்தை அப்பட்டமாய் சொல்லி அதை நியாயப்படுத்தி வாக்கு கேட்கும்.... பைஸர் முஸ்தபாவிடம் இதைவிட வேறு எதை எதிர் பார்க்க முடியும். சலுகை பெறுவதற்கு எதையும் செய்யக் கூடியவர்கள்!

14. **பரீட் - காத்தான்குடி on January 1, 2009 2.45am**


பின்னூட்டம் இடப்பட்டிருந்த ஒரு அன்பர் குறிப்பிட்டி ருந்தார். இதற்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் தேவையற்றது என்றடிப்படையில். குறிப்பிட்ட அன்பர்

ஓர் புலம்பெயர்ந்தவராக இருக்கலாம் என கருதுகிறேன். 'தேசம்நெற்' இல் இவரின் பல பின்னூட்டல்களை நான் படித்துள்ளேன்.


நாங்கள் இலங்கையைச் சேர்ந்தவர்கள். இலக்கிய ரீதியில் புன்னியாமீனின் செயற்பாடுகள் தமிழிலக்கியத்துறையைப் பொறுத்தமட்டில் தேவையற்றது என்று கருத முடியாது. ஏனெனில், நான் அறிந்த வரையிலும் எமது பல்கலைக்கழக ஆய்வுகளின் அடிப்படையிலும் 150 தமிழ்மொழி மூலமான நூல்களை எழுதியுள்ள ஒரே எழுத்தாளர் புன்னியாமீன் அவர்களேயாவார். இந்த அடிப்படையில் அவருக்கு ஏற்படக்கூடிய ஒரு பாதிப்பு தேவையற்றது என கொள்ள முடியாது. சிலநேரங்களில் அந்த அன்பர் குறிப்பிட்டதைப்போல புலம்பெயர் நாடுகளில் தமிழ்மொழி மூலமாக 150 நூல்களை எழுதியவர்கள் இருக்கிறார்களோ யான் அறியேன்.

இவ்விடத்தில் மேலும் ஒரு விடயத்தை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். நாங்கள் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக தேசம்நெற் ஐப் படித்து வருகின்றோம். அது மாத்திமல்ல, பல்கலைக்கழக மட்டத்தில் தேசம்நெற் பற்றி எமது சக மாணவர்கள் மத்தியில் பிரசாரங்களை மேற்கொண்டு இந்த நெற் ஐ வாசிக்கத் தூண்டிவருகின்றோம். எனவே, ஐக்கிய இராச்சியத்திலிருந்து இந்த நெற் செயற்பட்டாலும் இலங்கையிலும் இன்று நெற் வாசகர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இது தொடர்பாக சில மாதங்களுக்கு முன்பு ஒரு பின்னூட்டலில் நான் குறிப்பிட்டிருந்தேன். எனவே, இலங்கையைச் சேர்ந்த ஒருவரின் செய்திக்கு முக்கியத்துவம் கொடுப்பது தேவையற்ற விடயமென கருத முடியாது என்பதே என் தாழ்மையான அபிப்பிராயமாகும்.

- முஹம்மட் பரீட் -
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை



விழாவில் அதிதியாகக் கலந்து கொண்ட முன்னால் பாததும்பர பிரதேச சபையின் உபதலைவர் ஜனாப் எம்.எச்.எம் நசீம்தீன எழுத்தாளர் அன்புமணி அவர்களுக்கு அன்பளிப்பு வழங்கி கௌரவித்த போது....




விழாவில் தனது ஆசான் அல்ஹாஜ் ஐ.ஹாஜிதீன் அவர்களை கலாபூஷணம் புன்னியாமீன் கௌரவித்த போது.......


15. **சந்திரன் கௌரி - on January 1, 2009 4.30am**

பின்னூட்டமிட்ட ashroffali குறிப்பிட்டிருந்த ஒரு விடயத்திற்கு ஒரு சிறிய விளக்கம் தர வேண்டும். அதாவது அரசியல்வாதிகளுக்கு பாடசாலை மண்டபத்தில் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்பது பாடசாலை மையப் படுத்தப்பட்ட பாடசாலை விழாக்களுக்கே. அது தவிர, ஒரு அரசியல்வாதிக்கு பாடசாலையை மேடையாகப் பயன்படுத்த எந்த சுற்றறிக்கையுமில்லை. செய்திகளில் நான் அறிந்தபடி பாடசாலைக்கு வெளியே நடைபெற்ற ஒரு திறப்பு விழாவை முடித்த பின்பு கூட்டம் மாத்திரம் தான் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றுள்ளது. அடுத்து, மத்திய மாகாணசபைக்கு நியமனப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ள காலகட்டத்தில் இந்த விழா நடைபெற்றுள்ளது. இந்த விழாவில் அமைச்சர் மூலமாக பேசப்பட்ட பிரதான விடயத்தை 'தேசம்நெற்' இல் அருட்செல்வன் என்பவர் குறிப்பிட்டிருந்தார். மறுநாள் இலங்கையிலிருந்து வெளிவரும் அரசாங்க ஊடகங்களும், ஏனைய பத்திரிகைகளும் செய்தி வெளியிட்டிருந்தன. அச்செய்தியில் பைஸர் முஸ்தபாவின் அரசியல் உரை மாத்திரம் தான் இடம்பெற்றிருந்தது. இச்செய்திகளைப் பார்க்கும்போது நிச்சயமாக அக்கூட்டம் அரசியல் கூட்டம் என்பதில் எவ்விதமான சந்தேகமுமேயில்லை. எனவே, அரசியல் கூட்டமொன்றை பாடசாலையில் நடத்துவது தவறு என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

மேலும் இவ்விழா பற்றிய செய்திகளை நெற் இலும், இலங்கை ஊடகங்களிலும் நான் படித்த நேரத்தில் புன்னியாமீன் ஆசிரியரின் விழா என்பதைவிட திருமதி மஸீதா புன்னியாமீன் ஆசிரியையின் நூல் வெளியீடே முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, இவர் இதே பாடசாலையில் நீண்டகாலமாக கற்பிப்பதினால் இவரின் நூல் வெளியீடு பாடசாலை செயற்பாடுகளுடன் இணைந்த தொன்றாகவே கருத வேண்டியுள்ளது. இந்த அடிப்படையில் பாடசாலை காலைக்கூட்டத்தில் கூட இது கல்லூரி




விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஞாயிறு தினக்குரல் ஆசிரியர் திரு.ராஜபாரதி அவர்கள் கவிஞர் அனலக்தர் அவர்களுக்கு பதக்கம் அணிவித்த போது....




விழாவில் கலந்து கொண்ட பிரமுகர்கள் இடமிருந்து வலமாக திருவாளர்கள் என்.ஏ. ரசீட், யு.எல்.எம் நௌபர், எம்.எச்.எம் நசீம்தீன், மலிக், ஏ.ஆர்.எம் உவைஸ், ஏ.எம். வைஸ், இஸ்கந்தர், இராஜ பாரதி

அதிபரினூடாக அறிவிக்கப்பட்டிருப்பதினால் நிச்சயமாக பாடசாலை இணைசெயற்பாடாகவே கொள்ள வேண்டும். புதிய கல்வித்திட்டத்தின் கீழ் மாணவர் புறக்கிருத்திய ஊக்குவிப்பு வழிமுறைகளில் இத்தகைய செயற் பாடுகளும் இணைந்தவையே!


16. **புன்னியாமீன் on January 1, 2009 6.05am**

நான் சார்ந்த ஒரு இலக்கிய செய்தியை முக்கியத்துவம் கொடுத்து தேசம்நெற் இல் பிரசுரித்தமைக்கு தேசம்நெற் ஆசிரியர் த. ஜெயபாலன் அவர்களுக்கும், ஆசிரியர் குழுவிற்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


1. சகோதரர் அஷ்ரப் அலி தெரிவித்த கருத்துக்கு நன்றி. இதனைப் பதிலாகவன்றி ஒரு சிறு விளக்கமாக தருகின் றேன். விழா நடத்துவதற்கு மண்டப அனுமதி சட்ட ரீதியாக ஒரு மாதத்துக்கு முன்பே பெறப்பட்டது.

2. என் மாணவன் சந்திரன் கௌரிதரனின் பின்னூட்டல் செய்திகளுக்கு நன்றி. பொதுவாக என்னுடைய நூல்க ளுக்கு நான் வெளியீட்டுவிழா வைப்பதை விரும்புவதில் லை. சிந்தனைவட்ட வெளியீடுகள் என்றடிப்படையில் 100, 200, 300 ஆகிய வெளியீடுகளுக்கு விழா வைக்கப் பட்டுள்ளது. இதுவரை என்னுடைய எந்தவொரு நூலுக் கும் அறிமுக விழாக்கள் வைக்கவுமில்லை. வைப்பதை நான் விரும்புவதுமில்லை. எனவே, என் புத்தக அறிமுக விழாவினை கொழும்பில் நடத்த திட்டமிட்ட தங்களுக்கு மீண்டும் என் நன்றிகள். ஆனால், அறிமுக விழாவினை நான் விரும்பவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கின் றேன். இது குறித்து என்னைத் தவறாக எண்ண வேண்டாம்.

**மிக்கநன்றி**
**பீ.எம். புன்னியாமீன்**



விழாவில் அதிதியாகக் கலந்து கொண்ட அக்குரணை தேசிய பாடசாலை அதிபர் அல்ஹாஜ் ஏ.ஆர்.எம்.உவைஸ் அவர்கள் திரு. அன்புமணி அவர்களுக்கு சான்றிதழ் வழங்கி கௌரவித்த போது....



விழாவில் அதிதியாகக் கலந்து கொண்ட பாத்ததும்பரை பிரதேச சபையின் உபதலைவர் ஜனாப்.எம்.ஆர்.எம்.மலிக் அவர்கள் திரு. அன்புமணி அவர்களை கௌரவித்த போது....

17. **ashroffali on January 2, 2009 5.15am**


என் பின்னூட்டம் தொடர்பான கருத்துகளுக்கு நன்றி. அரசியல்வாதிகள் எங்கு போனாலும் அரசியல் தான் பேசுவார்கள். அது பாடசாலையாக இருந்தாலும் பாலர் பள்ளியாக இருந்தாலும் அரசியல் பற்றிப் பேசுவது அவர்களுக்கு வாடிக்கையான விடயமாகும். எனவே, பிரதியமைச்சர் பைஸர் முஸ்தபா அரசியல் ரீதியான கருத்துக்களைத் தெரிவித்தார் என்பதற்காக அதனை அரசியல் விழாவாக மட்டும் கருத முடியாது.

தொழில்நுட்பப் பயிற்சி நிலையமொன்றை திறக்க இருப் பதாகவும், அத்திறப்புவிழா முடிந்த பின்பு கூட்டத்தை உடத்தலவின்னை க. ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரி மண்டபத்திலே நடத்த திடீர் ஏற்பாடு செய்துள் ளதாகவும் கௌரவ உல்லாசப் பிரயாணத்துறை பிரதிய மைச்சர் பைஸர் முஸ்தபா அவர்கள் இவ்விழாவில் கலந்து கொள்வதினால் ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட் டிருந்த சிந்தனைவட்டத்தின் 300வது நூல் வெளியீட்டு விழாவையும், மஸீதா புன்னியாமீனின் மூடுதிரை சிறு கதைத் தொகுதி வெளியீட்டு விழா மற்றும் முக்கிய பிரமுகர்களின் கௌரவிப்பு நிகழ்வையும் பிற்போடுமாறு ஐக்கிய சகோதரத்துவக் கூட்டமைப்பு (UBA) விரும்பு வதாகவும் அவர் என்னிடம் கூறினார்.

குறித்த செய்தியை வாசித்திருந்தால் எனது பின்னூட்டம் சரியானது என்பதை எவரும் ஏற்றுக் கொண்டிருப்பார் கள். ஆக, பிரதேசத்தின் முன்னேற்றம் கருதிய ஒரு நிகழ்வு அதுவும் தொழில்பயிற்சி நிலையமொன்றின் திறப்பு விழா சடுதியில் ஏற்பாடு செய்யக்கூடிய விடய மல்ல. திறப்புவிழா என்பதால் அது ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்டிருக்க வேண்டும். அதன் திறப்புவிழா மத்திய மாகாண சபைத் தேர்தல் வேட்பு மனுக் கோரப்பட்ட காலத்தில் நடைபெற்றது என்ற ஒரே காரணத்துக்காக அதனை அரசியல் விழாவாக சித்தரித்து விட முடியாது.




விழாவின் தலைவர் அல்ஹாஜ் யூ.எல்.எம். நௌபர் அவர்கள் எழுத்தாளர் மடுளுகிரியே விஜேயரத்ன அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்த போது....



விழாவில் அதிதியாகக் கலந்து கொண்ட அதிபர் அல்ஹாஜ இஸ்கந்தர் அவர்கள் அல்ஹாஜ் ஐ.ஹாஜிதீன் அவர்களுக்கு அன்பளிப்பு வழங்கி கௌரவித்த போது....

அத்துடன், நான் பிரதியமைச்சர் பைஸர் முஸ்தபாவுடன் நெருங்கிய வட்டாரங்களைத் தொடர்பு கொண்டு விசாரித்த போது மரியாதைக்குரிய புன்னியாமீன் அவர்களின் விழா அங்கு நடைபெற ஏற்பாடாகியிருந்தமை தொடர்பில் அவர் அறிந்திருக்கவில்லை என்றே தெரியவந்தது. தவிரவும் திறந்து வைக்கப்பட்ட தொழில்பயிற்சி நிலையத்தினை அண்டிய இடத்தில் கூட்டமொன்றை நடாத்துவதற்கான வசதிகளும், சூழலும் காணப்படாத காரணத்தினாலேயே பாடசாலை மண்டபம் தேர்ந்தெடுக்கப்பட்டதாம். அத்துடன் விழா ஏற்பாட்டாளர் அது பற்றி கண்ணியமான முறையில் மதிப்பிற்குரிய புன்னியாமீன் அவர்களைத் தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்ததுடன், மனவருத்தத்தையும் தெரிவித்துள்ளார். எனவே இது வேண்டுமென்றே நடைபெற்ற ஒரு விடயமல்ல. அதனாற் தான் இதற்கு இவ்வளவு முக்கியத்துவம் அளிக்கத் தேவையில்லை என்று குறிப்பிட்டிருந்தேன்.

மற்றபடி மதிப்பிற்குரிய புன்னியாமீன் அவர்கள் மீது எக்கச்சக்கமான மரியாதை எனக்குள் உண்டு. என் பாலர் பருவம் தொட்டு அவரைப் பற்றி நான் நிறைய அறிந்துள்ளேன். என்னைப் பொறுதட்தவரை அவரை ஒரு நடமாடும் பல்கலைக்கழகமாகவே மதித்துக் கொண்டிருக்கின்றேன். அதற்கு மேலாக அவர் அண்மைய காலங்களில் தினக்குரல் மற்றும் நவமணி பத்திரிகைகளில் இலக்கியவாதிகள் தொடர்பில் தொடராக எழுதிய விடயங்கள் ஒரு பல்கலைக்கழக ஆய்வுக்குச் சமமானதாக தரம் வாய்ந்தவையாக இருந்தன. எனவே அவரது திறமை மற்றும் புலமை என்பவற்றை நான் குறைத்து மதிப்பிட்டு எனது பின்னூட்டத்தை இட்டதாக எவரும் கருதினால் அது தவறாகும். மேலும் நான் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தது போல மரியாதைக்குரிய புன்னியாமீன் அவர்கள் இந்த விடயம் தொடர்பில் நேரடியாக பிரதியமைச்சர் பைஸர் முஸ்தபாவுடன் கதைத்திருந்தால் நடந்த அசௌகரியத்தைத் தவிர்த்திருக்கலாம். மத்திய மாகா




விழாவில் அதிதியாகக் கலந்து கொண்ட சட்டத்தரணி ஏ.எம். வைஸ் அவர்கள் கவிஞர் அனல் அக்தர் அவர்களுக்கு பதக்கம் அணிவித்து கௌரவித்த போது....



விழாவில் திருவாளர் மடுளுகிரிய விஜேயரத்ன அவர்களுக்கு சிந்தனை வட்ட விருது வழங்கி கௌரவித்த போது....

ணத்தின் ஒரு முக்கியத்துமிக்க புத்திஜீவியை சங்கடப்ப டுத்த அவர் ஒரு போதும் விரும்பமாட்டார்.

தவிரவும் நண்பர் பரீத்

நான் ஒன்றும் புலம்பெயர்ந்தவன் அல்ல. இலங்கையில் கொழும்பில் வாழ்ந்து கொண்டிருப்பவன். ஊடகத்துறை யுடன் தொடர்புள்ளவன். பதினான்கு வருட ஊடக பங்களிப்பைக் கொண்டவன். ஊடகத்துறையினர் மத்தியில் நன்கு அறியப்பட்டனவன். இலக்கியப் பங்களிப்புகளையும் நிறையவே செய்துள்ளேன். ஆயினும் எனது தற்போதைய தொழில் காரணமாக எனது தனிப்பட்ட முன்னேற்றம் கருதிய செயற்பாடுகளை விட்டு ஒதுங்கியிருக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறேன். மற்றபடி நானும் இலங்கை யில் வசிக்கும் பலராலும் அறியப்பட்ட ஒருவன் தான்.

18. புன்னியாமீன் **0n January 4, 2009 4.16 am**

பின்னூட்டத்தினூடாக நல்ல தெளிவான கருத்துகளை யும் விளக்கங்களையும் தெரிவித்த ashroffali க்கு என் மனமார்ந்த நன்றிகள். பொதுவாக அரசியல் காலமொன் றில் எத்தகைய நியாயங்களைக் கூறினாலும் அவை இரண்டாம்பட்சம் என்பதை ஒரு ஊடகவியலாளர் நன்கு தெரிந்தவர் என்றடிப்படையிலும் குறிப்பாக இலங்கை அரசியலை நன்கு தெரிந்தவர் என்றடிப்படையிலும் நீங்கள் தெளிவாகப் புரிந்து வைத்திருப்பீர்கள்.

பின்னூட்டத்தில் குறிப்பிட்ட கருத்துக்களை நான் முழு மையாக ஏற்றுக் கொள்கின்றேன். பிரதியமைச்சர் பைஸர் முஸ்தபாவின் தையல் பயிற்சி நிலையமொன்று (கட்டிட மல்ல - வாடகைக்குப் பெறப்பட்ட இடத்தில் அமைக்கப் பட்ட பயிற்சி நிலையம்) திறப்பது தொடர்பாக பல தடவைகள் வேறு வேறு திகதிகள் அறிவிக்கப் பட்டன. இறுதியாக அவர்கள் தீர்மானித்த திகதி 28ஆந் திகதி யாகும்.



விழாவில் கௌரவிக்கப்பட்ட பிரமுகர்களுடன் சிந்தனை வட்ட பணிப்பாளர்கள் புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன் ஆகியோர்.



விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஞாயிறு தினக்குரல் ஆசிரியர் திரு. இராஜபாரதி அவர்கள ஞானம் ஆசிரியர் டாக்டர். ஞானசேகரன் அவர்களுக்கு சிந்தனைவட்ட நினைவுக் கேடயத்தை வழங்கிய போது....

இந்த விடயத்தில் அமைச்சர் பைஸர் முஸ்தபாவின் இணைப்பாளர் ஒருவரே நேரடியாக தொடர்புபட்டிருந்தார். அவரிடம் எமது கிராமத்தைச் சேர்ந்த பலர் எனது விழா பற்றி குறிப்பிட்ட போதிலும்கூட, அதனைப் பொறுட் படுத்தாது அமைச்சரின் விழாவிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார். விழா ஏற்பாடுகள் தொடர்பாக நான் அச்சிட்ட அழைப்பிதழ்கள், சட்டரீதியாக பெறப்பட்ட அங்கீகாரக் கடிதங்கள், ஊடகங்களில் பிரசுர மான செய்திகள், விசேட பிரதிநிதிகளுக்கு அனுப்பப்பட்ட கடிதப்பிரதிகளை சம்பந்தப்பட்டவர்களிடம் நேரடியாகக் காட்டி குறைந்தபட்சம் விழாவினை காலைநேரத்திலாவது வைத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டபோதிலும்கூட, அமைச்சருக்கு வேறு நேரமில்லை என்றும் குறிப்பிட்ட அமைச்சரின் இணைப்பாளர் மூலமாகவே என் சார்ந்தவர் களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பைஸர் முஸ்த பாவின் இணைப்பாளருக்கு எடுத்துக் கூறப்பட்ட இவ்விடயங் கள் அமைச்சருக்குத் தெரியாமலிருக்கும் என்று என்னால் எதிர்பார்க்க முடியவில்லை.

எப்படியோ நடப்பவையெல்லாம் நன்மைக்கென்பார்கள். எனது விழாவினை ஆறு தினங்களுக்குள் ஒழுங்குசெய்த அண்மைக் கிராமமான வத்தேகெதரையைச் சேர்ந்த வை.எம்.எம்.ஏ., அஹதிய்யா போன்ற இயக்கங்களும், பள்ளி பரிபாலனசபையினரும் வழங்கிய பூரண ஒத்து ழைப்பினால் மிக சிறப்பான முறையில் புதிய இடத்தில் விழாவினை நடத்தி முடிக்க முடிந்தது. மண்டபத்தில் போடப்பட்டிருந்த ஆசனங்கள் போதாத நிலையில் என் னுடைய பல அபிமானிகள் வெளியில் நின்று கொண்டி ருந்து கூட்டத்தை அவதானித்தனர். ''எந்த விடயத்தைப் பொறுத்தவரையிலும் நோக்கம் நேர்மையாக இருப்பின் அவை பிழைபோகாது'' என்று அறிந்திருக்கின்றோம். அந்த அடிப்படையில் எனது விழா விடயமும் அமைந்து விட்டது.

**- புன்னியாமீன் -**

**19. Anonymous on January 8, 2009 7:4am**

தற்போது புலம்பெயர்ந்து டென்மார்க்கில் வசித்துவரும் நான் அண்மையில் கொழும்பு சென்ற நேரம் புன்னியாமீ னின் இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு 12 பாகங்களையும் வாங்கிப் பார்த்திருக்கின்றேன். மேலும், விபரத்திரட்டு எழுதப்பட்டு வரும் இவர்கள் நம்மவர்கள் தொடரை தினக்குரலிலும் பார்த்து வருகின்றேன்.

புன்னியாமீனினால் எழுதப்பட்டு வரும் இத்தொடர் உண் மையிலேயே பாராட்டுக்குரியதே. எம்மவர்களால்கூட இதுவரை சிந்திக்கப்படாத தொடர் முயற்சி. இலங்கையில் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரங்களை ஆவணப்படுத்தும் முயற்சியை நான் அறிந்த வகையில் விரிவான முறையில் இதுவரை யாரும் இது போல தொடரவில்லை என்றே நினைக்கின்றேன்.

இவரின் இம்முயற்சிகளில் இலங்கை வாழும் எழுத்தா ளர்கள் மாத்திரமல்ல, புலம்பெயர்ந்து வாழும் எழுத்தா ளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரங்க ளும் பதிவாக்கப்படுகின்றன. இந்த அடிப்படையில் இத் தொடரின் 14வது புத்தகம் புன்னியாமீனின் 150வது புத்தக மாக வெளிவந்திருப்பது குறித்து எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**20. NAJIMILAHI on January 11, 2009 5:01am**

இன்று அரசியல் விளையாட்டுக்கு மைதானமில்லாமல் போயிற்று அமைச்சர் பைஸர் முஸ்தபா புன்னியாமீன் அவர்களின் இலக்கிய மேடையில் அரசியல் விளையாடி ருக்கிறார். மூன்றாம் உலக நாடுகளில் ஜனநாயக அரசியல் சிதைக்கப்பட்டுள்ளது. அதுவும் இலங்கையில் ஒரு படி மேலே சென்றுள்ளது. இதானல்தான் இன்று இலங்கையில் அணையாத தீயாக இனங்கள் மீதான பிரச்சினை நீட்டுகொண்டு செல்கிறது.

## 21. கம்பளை - ஐப்பார் on January 13, 2009 6.58am

மத்திய மாகாணசபையில் திரு. புன்னியாமீன் அவர்கள் முஸ்லிம் கல்வி, கலாசார அமைச்சின் இணைப்பதிகாரியாக பணியாற்றிய காலத்தில் அவருடன் மிகவும் நெருக்கமாக நின்று செயலாற்றியவன் என்ற வகையில் சில குறிப்புகளை முன்வைக்கலாம் என எண்ணுகிறேன். புன்னியாமீன் அவர்கள் அமைச்சில் பணயாற்றும்போது தனது கிராமத்துப் பாடசாலையான க. ஜாமியுல்அஸ்ஹர் மத்திய கல்லூரிக்கு நியாயமான சேவைகளை ஆற்றினார். நான் அறிந்த வரை மத்திய மாகாண கல்வி அமைச்சினூடாக மாத்திரம் 1999, 2000, 2001 ஆம் ஆண்டுகளில் சுமார் 1 மில்லியனுக்கும் மேற்பட்ட பெறுமதியான வளங்களை அப்பாடசாலைக்குப் பெற்றுக் கொடுத்தார். மாகாண கல்வியமைச்சினூடாக இது வொரு பெரிய தொகையாகும். அத்துடன், அப்பாடசா லைக்கு அமைச்சினூடாக கணினி இயந்திரங்களையும் பெற்றுக் கொடுத்து கணினி கல்வி அறிமுகத்துக்கும் காரணமாக திகழ்ந்தார். க. ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரியில் நடைபெற்ற கணினிக்கூட விழாவிற்கு நானும் சென்றிருந்தேன்.

மேலும், நான் தெரிந்தவரை இவர் குறிப்பிட்ட பாடசா லையின் பழைய மாணவர். அப்பாடசாலையில் ஆசிரிய ராகவும், பகுதித் தலைவராகவும், பிரதி அதிபராகவும், அதிபராகவும் கடமையாற்றியவர். அக்கல்லூரியில் கற்பிக் கும் காலத்திலேயே புன்னியாமீன் அவர்கள் அமைச்சுக்கு இணைக்கப்பட்டார். புன்னியாமீன் அவர்களின் கையொப்பத் துடன் மத்திய மாகாண முஸ்லிம் கல்வியமைச்சினால் வழங்கப்பட்ட வளங்கள் தொடர்பான பதிவுகள் தற்போது மத்திய மாகாண கல்வியமைச்சில் உண்டு.

இக்கருத்துக்களை ஏன் குறிப்பிடுகின்றேன் என்றால் கிராமத்தின் அபிவிருத்திற்கும், கிராமப் பாடசாலை அபிவிருத்திற்கும் அவர் கணிசமான பங்களிப்பினை வழங்கியதை நாம் கண்ணூடாகக் கண்டவர்கள். இப்ப டிப்பட்ட நிலையில் அவரின் கிராமத்தைச் சேர்ந்த பாடசாலையில் அவரின் முக்கியத்துவமிக்க ஒரு விழா


விற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு பின் இடைநிறுத்தப்பட்ட சம்பவமானது என்னுள் ஓர் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இவ்வளவு குறுகிய காலத்துக்குள் புன்னியாமீனால் ஆற்றப்பட்ட சேவைகளை அவரின் கிராமத்துப் பாடசாலை மறந்துவிட்டது என்பதே அந்த அதிர்ச்சிக்குக் காரணம்.

இது குறித்து பிரதியமைச்சர் பைஸர் முஸ்தபா அவர் களின் செயலாளருடன் நான் தொடர்புகொண்டு கதைத்த நேரத்தில் இப்படிப்பட்ட ஒரு இலக்கியவிழா ஏற்பாடு செய்யப்பட்டமை அமைச்சருக்குத் தெரியாது எனவும், திகதி குறித்து கிராமத்தைச் சேர்ந்தவர்கள் (இவ்விடத் தில் பெயரைக் குறிப்பிடவில்லை) அழைத்தமையினா லேயே அமைச்சர் விழாவில் கலந்து கொண்டதாகவும் கூறினார். எனவே, இவ்விழா இடைநிறுத்தப்பட்டதற்கு அரசியல் காரணிகள் மாத்திரமல்ல, வேறு காரணிகளும் இருப்பதாகவே எனக்குத் தோன்றுகின்றது. எவ்வாறாயினும் திரு. புன்னியாமீன் அவர்கள் மூலமாக அவரின் பாடசாலைக் குக் கிடைக்கும் நற்பெயரையும் குறிப்பிட்டவர்கள் சிந்தித் திருந்தால் இது போன்ற ஒரு நிலை உருவாகியிருக்க மாட்டாது என்றே நம்புகின்றேன். அதேநேரம், விழா நடைபெற சில தினங்களுக்கு முன்பாக இப்பிரச்சினை அமைச்சருக்குத் தெரியவந்துள்ளதாகவும் எனக்கு தெரியக் கிடைத்தது.

**21. மிப்ரா on January 14, 2009 8.18am**

இவர்கள் நம்மவர்கள்' பாகம் 04 எனும் நூலின் வெளியீட்டு விழாவும், ஆசிரியை மஸீதா புன்னியாமீனின் 'மூடுதிரை' சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டுவிழாவும், கௌரவிப்பு நிகழ்வும் பெருந்திரளான பார்வையாளர்கள் முன்னிலை யில் வத்தேகெதர மு.வி. நடைபெற்று முடிந்தது. இந்த விழா ஆரம்பத்தில் உடத்தலவின்னை மடிகே எனும் கிராமத்தில் ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரி அஷ்ரப் ஞாபகார்த்த கேட்போர் கூடத்தில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தது. ஆனாலும் சில திட்டமிட்ட சதிகளினால் இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டது.

ஆனால், இந்த இடமாற்றம் தொடர்பாக கூட்டத்தில் ஒரு இடத்திலாவது பிரஸ்தாபிக்கப்படாமல் இருந்தது எழுத்தாளர் பி.எம். புன்னியாமீனின் பெருந்தன்மைக்கு எடுத்துக் காட்டென கூட்டத்தில் சமுகமளித்த பலர் கதைத்துக் கொண்டனர்.மஸீதா புன்னியாமீன் ஆசிரியை உடத்தலவின்னை ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரியில் பத்து ஆண்டுகளுக்கு மேலாக கற்பிப்பவர். நானும் அவரின் மாணவிகளுள் ஒருவர். கல்லூரியின் வளர்ச்சிக்காக இரவு பகலாக பாடுபடுபவர். கற்பித்தலுக்கு புறம்பாக பல புறக் கிருத்தியங்களிலும் முழுமையாக ஈடுபடுபவர். என்னைப் போல நூற்றுக்கணக்கான மாணவிகளின் இதயங்களை வென்றவர். இவரின் விழா இவர் கற்பிக்கும் பாடசாலையில் மறுக்கப்பட்டமை அனைவருக்கும் வேதனையே..



*நோக்கங்கள் புனிதமாக இருப்பின்*
*சாதனைகளுக்கு*
*சவால்கள் தடையல்ல.*



ISBN:978-955-1779-17-7